இலங்கை மன்னன்

# இராவணன் திராவிடன்



கலாபூசணம் இரா.சுப்பிரமணியம் JP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மன்னன்

# இராவணன் திராவிடன்

கலாபூசணம் இரா.சுப்பிரமணியம் JP

17/2/2019

வெளியீடு : சமூக மேம்பாட்டு அமைப்பு - வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | இலங்கை மன்னன் இராவணன் திராவிடன் இலங்கையின் முதல் மன்னன் |
| நூலாசிரியர் | : | கலாபூஷணம். இரா. சுப்பிரமணியம் (சமாதன நீதிமான்) |
| முகவரி | : | கணேசபுரம், வவுனியா, இலங்கை. |
| தொடர்பு இல. | : | +94 771322232 |
| பக்கங்கள் | : | 200 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| முதற்பதிப்பு | : | டிசம்பர் 2018 |
| அட்டைப்படம் | : | இராமநாதன் பிரேமா - யாழ் பல்கலைக்கழகம், மாத்தளை. |
| வெளியீடு | : | சமூக மேம்பாட்டு அமைப்பு, வவுனியா. |
| விலை | : | ரூபா 400.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலை என் பெற்றோர்கள்

தந்தை - இராசலிங்கம் இராமசாமி

தாய் - பாலமுத்து பாக்கியம்

இருவருக்கும் காணிக்கையாக்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1 . என்னுரை | 05 |
| 2 . வாழ்த்துரைகள் | 11 |
| 3 . உலக அமைதி | 17 |
| 4 . வரலாற்றுக்கு முன்னர் இந்தியக்காட்சி | 44 |
| 5. மன்னன் இராவணன் | 59 |
| 6. தென்னாட்சி தமிழன் | 103 |
| 7. யாழ்ப்பாணத் தொன்மையும், ஆட்சியும் | 121 |
| 8. வன்னி வாழ்வும், வரலாறும் | 134 |
| 9. இலங்கையின் கடைசி தமிழ் மன்னன் | 172 |
| 10 . பொலனறுவைத் தமிழர் வரலாறு | 176 |
| 11 . அமரர் பண்டாரநாயக்கா | 180 |
| 12. புதிய பார்வையில் இலங்கை வரலாறு | 183 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

தமிழகம் தமிழர் தம் தாயகம் என வரலாற்றுச் சான்றுகள் நிறுவுகின்றன. P.D சினிவாஸ்ஐயங்கார் தமிழர் பூர்வீகம் தென்னிந்திய மண்ணுக்குரியவரே என்கிறார். இது குறித்து விரிவாக ஆராய்ந்து நூல் எழுதியுள்ளார். கு .ப.அரவாணன் தமிழ் மக்கள் வட இந்தியாவிலிருந்தோ வடமேற்கு இந்தியாவிற்கு அப்பால் உள்ள ஆரிய பகுதியிலிருந்தோ வந்தவர் என்று ஊகிப்பதற்கு சான்றுகள் எதுவும் இல்லை என ஆய்வில் துணிந்து கூறுகின்றார். இராமாயணம் காலத்தில் இராவணன் இலங்கைத்தீவில் சிவ பக்தனாக திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை தரிசித்தான் என்பது வரலாறு 5000 ஆண்டுகளுக்கு முன் சிந்து வெளிநாகரிகம் தோன்றி செழித்து வளர்ந்தது என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். தற்போதய தென்கிழக்காசியாவே இலேமோரியா என வழங்கப்படுகின்றன.

திரு வயவர்யோவான் என்ற மேலை நாட்டு அறிஞர் கூறுகின்றார். The Lost of Le அரசயை தொல்காப்பியர் காலம் வடவேங்கடம் தென்குமரி தமிழ் கூறும் நல்லுலகம் ஆயிடைத் என்று தொல்காப்பியர் வரலாறு பண்டைய தமிழர் தலை, இடை, கடை என முச்சங்கங்களாக கண்டு தமிழை வளர்த்தனர் என்பது வரலாறு. இறையனார் களவியல் உரை கண்ட நக்கீரர் தம் உரையில் முச்சங்க வரலாற்றை தெளிவு பட குறிப்பிடுகின்றார். தமிழ் நூல்கள் காலத்தால் முற்பட்டவை மிகப் பழமையானது. தொல்காப்பியம் தொல் எனும் அடையே அதன் பழமைக்குச் சான்று அது ஒரு இலக்கண நூலாகும். பழந்தமிழ் இலக்கியங்கள் வாழ்வின் நோக்கங்களை நன்கு சித்தரிக்கின்றன. இதனையே பொய்யாமொழிப்புலவர் என்ற சிறப்பை பெற்ற திருவள்ளுவர் "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பைத்தரும்" சேர மன்னன் தமிழைப் போற்றி பல புலவர்களைப் பாராட்டினார் என்று சோழ மன்னர் வரலாறு கூறுகின்றது.

நெடுஞ்சேரலாதன் அவன் மகன் செங்குட்டுவன் தமிழர் வீரத்தினை இகழ்ந்துரைத்தால் கனகவிசயர் என்னும் வடபுல மன்னரை போரால் வென்று அவர் தலையில் கல் சுமத்தி கொணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தினித்தெய்வம் கண்ணகிக்கு ஆலயம் அமைத்தார். கரிகாலச் சோழன் இமயத்தில் புலிக்கொடி நாட்டி புகழ் படைத்தான். பிற்கால சோழமன்னன் கி.பி. 11ஆம் நூற்றாண்டு கங்கை கொண்டான் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான். இந்தியா முழுவதும் தமிழ் கொடி பறந்தது என்பதை வரலாறு சுவடுகளில் அறிந்து கொள்ளமுடியும்.

1500 ஆண்டுகளுக்கு பின்னர் வந்த ஆரியர்களால் மொழிக்கலப்பு நிகழ்ந்தது. அதனால் தெலுங்கு, துளவம், கன்னடம், மலையாளம் என்று பிரிந்தது. நிலம் சுருங்கியது தொழில் ரீதியான சாதிகள் உருவாகின. ஒற்றுமை நீங்கின உயர்வு தாழ்ந்தன வடபுலமும் தென்புலமும் பிரிக்கப்பட்டு வட புலத்தின் வரலாற்றில் வாழ்த்தி வணங்கும் நிலை தமிழர்கள் கைக் கொண்டனர். தமிழ் நாட்டு வரலாறு சங்க காலம் சங்ககால வாழ்க்கை முறை இந்திய வரலாற்றுக்கு தென்னகமே மணிமுடி என்ற கருத்து வலிமை பெற்று வருகின்றன.

சிந்து வெளி நாகரிகமே பழந் திராவிட நாகரிகம். இந்த நாகரிகத்தைப் பற்றி மும்பை துர்ய சவேரியார் கல்லூரி வரலாற்றுத்துறை தலைவர் திருத் தந்தை ஈராசு ஆராய்ந்து "எழுத்தோவியம்" என்னும் நூலில் எடுத்துக் காட்டுகின்றார். குமரி கண்டத்தில் உயர்ந்த நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்த்து வாழ்வை உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்தவர்கள் தமிழர்களே தென்னகத்தின் தமிழர்களே உலக பழங்குடி மக்கள் என்று வரலாற்று ஆராட்சியாளர்கள் முன்வைக்கப்பட்ட சான்றுகள். பண்டைய தமிழகம் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்னும் பகுதிகளாக கொண்டிருந்தன. புலிக் கொடி சோழருக்கம் பாண்டியருக்கு மீன் கொடியும் சேரருக்கு பனம் பூ கொடியும் அடையாள சின்னங்கள் முடியுடைய மூவேந்தரும் செங்கோலாட்சி புரிந்து வந்தனர். சேரருக்கு முசறி துறைமுகம், பாண்டியருக் கொற்கை துறைமுகமும் சோழரது புகார் துறைமுகமும் சிறந்த துறைமுகங்களாக திகழ்ந்தன.

உலகில் இன்று நிலவிவரும் கேள்வி தமிழ் பேரரசு எங்கே என்று தமிழினத்தின் கேள்வி அப்போது இருந்த உலகமே வேறு. அன்று ஆசியாவிலேயே இந்தியாவின் நிலை மிக பிரசித்தி பெற்ற காலம். கம்பரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிழில் தன்மொழி மீது பற்றுக்கொண்டு இராமாயணத்தை பாடினார். கம்பர் உலகறிந்த படைப்பாளி. நாம் இராவணனது இராச்சியத்தின் சிறப்பான ஆட்சி முறையை பற்றி வாழ்த்துக்கள் கூற கடமைப்பட்டுள்ளோம். சங்ககாலத்திற்கு முன்னால் சரித்திர காலத்திற்கும் முன்னால் மனித நாகரிகம் தோன்றிய காலம் முதல் பின்னால் நடந்ததை சுற்றிப் பார்க்கத் தயாராகுங்கள் சமயம், பண்பாடு, தத்துவம், சடங்குகள் யாவும் பரிதாபகரமான நிலை இன்று சமூகத்தில் காணப்படுகின்றது.

உலகப் படைப்பின் வரலாற்றை கடவுள் விண்ணுலகம் யாவற்றையும் அதிலுள்ள ஜீவராசிகளையும் மனிதனையும் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று நாம் அறிந்துள்ளோம்.

உலகம் தோன்றியது, மனிதன் பிறந்தது, மதங்கள் வளர்ந்தது, போர்கள் மூண்டது என வரலாற்றை தெரிந்து கொள்ளலாம். நந்த மன்னருடன் நடந்த யுத்தத்தில் லட்சக்கணக்கான வீரர்களும் பத்தாயிரம் யானைகளும் பல்லாயிரக்கணக்கான குதிரை வீரர்களும் கொல்லப்பட்டதாக ஒரு பௌத்த நூல் தெரிவிக்கிறது. சாணக்கியர் அமைதியடைந்தது நந்த வம்சம் பூண்டோடு அழிந்த பிறகு தான் சந்திரகுப்த மௌரியரின் சாம்ராஜ்ஜியம் என்று நாம் அறிந்திருக்கின்றோம். இந்திய துணைக்கண்டத்தின் ஒரு மாபெரும் இதிகாசம் நீங்கள் படித்த இராமாயணம் மொழிபெயர்க்கப்பட்டு கம்ப இராமயணமாக மாறி தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றுக்கொண்ட காவியமாகும். இராவணனுடைய நல்லாட்சியை எடுத்துக்கூறி ஆசிர்வதிக்க ஆர்வம் கொள்ளவில்லை இது மன வருத்தத்திற்குரிய விடயமாகும். நுணுக்கமாக அலச ஆரம்பித்தால் உலக வரலாறு மிக மிக விஸ்தீரமானது. நான் வரலாற்றுப் பேராசிரியரும் இல்ல என்னுடைய படிப்பும் ஆழமானதும் அல்ல. கன்னா பின்னா வென்று கிடைத்த புத்தகங்களையெல்லாம் படிக்கிறவன் நான்.

சரித்திரம் என்றால் என்ன கூட்டமாக மனிதர்களின் அனுபவங்கள் தான் தனிமனிதர் அனுபவங்கள் கூட சரித்திரம் தான். இயேசுபிரான் புத்தபிரான் காந்திஜீ போன்றவர்கள் வரலாறும் ஓர் சரித்திரம் தான். தமிழ் மன்னனுக்கு தன்மானம் இல்லை என்று நினைப்பது தவறு. இராவணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் சிவபக்தன். அவன் ஆட்சியில் இலங்கை நாடு சிறப்புற இருந்ததாக வரலாறும் உண்டு. ஏன் வாழ்மீகி இராமாயணத்தில் கூறுகிறார்.

இலங்கை திரு நாட்டின் சமயம், பண்பாடு, தத்துவம், கலைகள் யாவற்றிற்கும் மன்னன் இராவணன் உரிய இடம் வகிக்கிறான். அது தான் திரிகோணமலை ஆலயம். மேலும் இந்நூலை அழகுற வடிவமைத்த அச்சுக்கலையகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றி. வாழ்த்துரைகள் வழங்கிய அறிஞர் பெருமக்களுக்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கம்.

கலாபூஷணம் இரா. சுப்பிரமணியம்
சமாதான நீதிவான்.
கணேசபுரம், வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை - அன்னை பூமி

அடங்கா பற்றுக்கொண்ட அஞ்சா நெஞ்சும்
நிறைந்த வன்னி பூமி
அரசர் பலர் தமிழ் வளர்த்த புண்ணிய பூமி
தென்னை, மா, பலா, வாழை, கமுகு, அரிசி,
குரக்கன் பூத்து நின்ற பூமி
வீரம் விதைத்து வித்தை பல கற்ற பூமி

சோழர் ஆட்சியின் துணைக் கொண்டு
தமிழர்கள் சிறப்போடு வாழ்ந்த பூமி
கலை கலாசாரத்தின் மீது கண் இமைபோல்
காத்து வாழ்ந்த பூமி
இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் வளர்த்த பூமி
உப்பிட்டது கடல் உணவிட்டது அன்னை பூமி
வளம் முள்ள இந்த புண்ணிய பூமி
இன்று தலை குனிந்து வாழும் நிலை
ஏற்பட்டுவிட்டது எமது பூமியில்
அரசர் பலர் ஆண்ட பூமி அன்னை
தமிழ் ஆட்சி செய்த பூமி
பெண்ணை தாயாக போற்றும் பூமி
பெரும் நில பரப்பை கொண்ட பூமி எம் அன்னை பூமி
வாழ வாழ்த்துக்கள் வழி வைக்க நல்ல
திட்டங்கள் தீட்டுங்கள்
துன்புற்று வாழ் தமிழ் மக்களின் துயர் துடைக்க
இப் பூமி வெற்றி பெற வாழ்த்துக்கள்
உலக பெருங்காடு ஒன்றல்ல பல மரங்கள்
சந்தன மரம் தான் தமிழ். தமிழ் மணக்கும்
இழந்து விட்ட இன்பங்களை பெற இப் பூமியில்
பாடுபட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி வழி தேடிஆற்றுங்கள் நல்லபணி அகத்தியர். வளர்த்த தமிழ்
ஐயன் திருவள்ளுவர் இயற்றிய குறள் வழி நடக்க
அகநானூறு புறநானூறு ஆற்றிய தமிழ் பணியை
இளைய தலை முறைக்கு எடுத்துரையுங்கள்
வளர்க தமிழ் வாழ்க உலக தமிழ் வளர்வதற்கு
வாழ்த்துவதற்கு இதயம் உண்டு
வாழ்க தமிழ்.

கலாபூஷணம் இரா.சுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் வரலாறுகள் படைக்கப்பட வேண்டும்

வரலாறுகளை ஆவணப்படுத்த மறந்ததினால் உரிமை இழந்த இனங்கள் வரிசையிலே தமிழினமும் இன்று சேர்ந்து கொண்டுள்ளமை துரதிஷ்டவசமான ஒரு நிகழ்வு எனலாம். ஆனால் உலகு தோன்றிய காலத்திலேயே தமிழினமும் தோன்றிவிட்டது என்பதனை இன்றைய ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன. பழைமையிலான "கொண்ட்வானா" கண்டத்தில் இருந்து பிரிந்து உருவாகிய கண்டமே "குமரிக் கண்டம்". இதுவே தமிழரின் ஆதித் தாயகமென காணக் கிடக்கிறது.

ஒரு இனத்திற்கு அவ்வின வரலாறே முதுகெலும்பு ஆகும். அது இல்லாவிடத்து அவ்வினம் நெளிந்து வளைந்து இரண்டாந்தரப் பிரஜையாக அடங்கி நிற்க வேண்டிய நிலையே ஏற்படுகிறது. தமிழனத்துக்கு பெருமையுடைய நீண்ட வரலாறு இருந்தும் ஆவண வடிவிலே அது இல்லாததால் இன்று கூனிக் குறுகி நிற்கின்றது. இந்நிலை மாறவேண்டுமாயின் தமிழர் வரலாறுகள் படைக்கப்பட வேண்டும். அந்நோக்கில் ஒரு சிறு முயற்சியே கலாபூசணம் இரா.சுப்பிரமணியம் அவர்களின் இந்நூல் முயற்சியாகும்.

"இலங்கை மன்னன் இராவணன் திராவிடன்" என்ற உண்மை வரலாற்றை நூல் உருவில் படைத்திருக்கின்றார். கி.மு.3084 ஆம் ஆண்டு காலப் பகுதியில் திருகோணமலையில் இருந்து ஆட்சி செய்தவராக இராவணனை ஆராய்வுக் குறிப்புக்கள் காட்டுவதாக அறிகிறோம். கி.பி 7ம் நூற்றாண்டுகளில் தேவாரங்களில் 300க்கும் மேற்பட்ட இடங்களில் இராவணன் புகழப்பட்டிருக்கின்றார். இலங்கையில் முதல் வேந்தனாகவும், சிறந்த சிவ பக்தனாகவும், புஜபல பராக்கிரமசாலியாகவும், நால்வகைப் படைக்கு அதிபதியாகவும், அறுபத்து நான்கு கலைகளையும் அறிந்தவராகவும் இவர் புகழப்பட்டிருக்கின்றார்.

இத்தகைச் சிறப்புடைய இராவணன் திராவிட இனத்தின்
முன்னோடி என்பது திராவிடர் ஆகிய எமக்கெல்லாம் பெருமையே. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை எமது சமூகம் கொண்டாட மறுப்பது எம்மையே நாம் அறியாது வாழ்கின்றோம் என்பதற்கு சாட்சியாக அமைகிறது.

ஆரியர்மாயையால் கம்பர் இராமயண காவியத்தை யாத்ததன் விளைவினால் இக்கதி ஏற்பட்டுள்ளது. உண்மையில் இராமனுக்கு சரி நிகரான வீரமே இராவணன் எனலாம். இத்தகைய வேந்தனின் வரலாறுகளை ஆராய முனைந்த ஆசிரியர் திராவிட இனத்தின் தொன்மை, யுகங்களின் வரலாறு, உலக பிரளய வரலாறு, ஆரியர் வருகை, மனித வரலாற்றின் பரிமாற்றம், தமிழின் தொன்மைக்கான ஆதாரங்கள், மாகாணங்களின் வாழ்க்கை வரலாறுகள், ஆகியவற்றை ஆராய்வு ரீதியில் முன்வைக்கின்றார்.

இவற்றோடு அமையாது ஈழத்தின் அரசியல் வரலாற்றில் தமிழர்களின் வகிபாககம் மற்றும் யாழ்ப்பாணம், வன்னி போன்ற இடங்களின் தோற்ற வரலாறுகள் ஆகியவற்றையும் ஆதார பூர்வமாக நிறுவி நிற்கிறார்.

நீண்ட அரசியல் அனுபவமும், ஆழ்ந்த வரலாற்று அனுபவமும் கொண்ட அன்னாரின் எழுத்துப் பணிகள் சிறப்புற்றுப் பயன் விளைக்க வாழ்த்தி அமைகிறேன்.

தமிழ் அருள் செல்வர் க. உதயராசா
பிரதேச செயலாளர்,
வவுனியா மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை வழங்குவதைப் பெரும்பேறாகக் கருதுகிறேன்.

இலங்கை மன்னன் இராவணன் இலங்கைத் தீவில் தனித்துவமான மொழி, கலை, கலாசாரம் சொந்த ஆட்சி, அதிகாரம் கொண்டிருந்த காலத்தில் சிறப்பாக ஆட்சி செய்த மன்னன் ஆவான். இவருடைய வரலாற்றைக் கலாபூசணம் இரா.சுப்பிரமணியம் அவர்கள் நூலாக்கி வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைவதோடு அவரை நான் பாராட்டுகிறேன்.

இலங்கை வேந்தன் இராவணன் ஈழத்திரு நாட்டில் பல சிவாலயங்களை உருவாக்கி மக்களை வழிபடச்செய்தார் என்பது வரலாறு. எமது ஈழமண் எமக்கென அமைந்த பாரம்பரிய பிரதேசம் என்பதை உணர்வு பூர்வமான உண்மையாக விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழ்ப்பற்றும், தமிழ் தேசிய உணர்வும் உள்ள ஒரு இனமாக இத் தீவில் நாம் வாழ வேண்டும் என்பதே எனது அவா.

இந்நூல் சிறப்பாக வெளி வந்து தமிழ் கூறும் நல்லுலகெங்கும் வாழும் தமிழ் நெஞ்சங்களின் கரங்களில் தவழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துரை வழங்குவதைப் பெரும்பேறாகக் கருதுகிறேன்.

மாண்புமிகு. எஸ்.என்.ஜி.நாதன்
சமாதான நீதவான்
முன்னாள் நகரபிதா - வவுனியா
ஓய்வு நிலை காவற்துறை அதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது தமிழர் சந்ததியின் வீரவரலாற்றுக் காவியம்

"கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்ற குறளுக்கேற்ப

பூவுலகில் மலர்கின்ற பூக்கள் எல்லாம் மணம் பரப்புவதில்லை. மல்லிகையின் மணம் எம்மை ஈர்க்கும். அதுபோல் அண்ணன் இரா.சுப்பிரமணியம் அவர்கள் ஏற்கனவே எழுதியுள்ள தமிழ் திருநாட்டின் விடுதலைக்கு எழுச்சி தந்த எம்மவர் மனதில் பதிந்த தந்தை செல்வா அவர்களுக்கு எழுதிய நூல் முதல் சமர்ப்பணம். அதே போல் விடுதலைக்கு வேங்கையாய் தமிழினத்தின் தளபதியாய் வந்துதித்த தளபதி அமிர்தலிங்கம் அவர்களின் வரலாற்று நூல் இரண்டாவது சமர்ப்பணம். உலக யுத்த நிகழ்வுகள் நிகழ்ந்த பேரழிவும் அதன் தாக்கத்தையும் பற்றிய நூல்.

இன்று கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன் 2ம் இராஜசிங்கன் மதுரையைச் சேர்ந்த (தமிழனாகிய கன்னுச்சாமி) ஆட்சியாளர் வீர வரலாற்று நூல் இப்போது வெளிவருவது மிகவும் மகிழ்ச்சியைத் தரும் செய்தி மட்டுமல்ல எமது தமிழர் சந்ததியின் வீரவரலாற்றுக் காவியம் எம்மையும் பெருமைப்படுத்தும் நிகழ்வாகும்.

பிலிமத்தலாவையில் காட்டிக் கொடுக்கப்பட்ட இழிவு வரலாறும் இதில் அடங்கும். கன்னுச்சாமியின் குடும்பத்திற்கு 1972 குடியரசு ஆகும் மட்டும் மாதாந்தம் ஒரு தொகைப்பணம் அவரது மனைவிக்கு இலங்கை அரசால் அனுப்பப்பட்டதாகப் பத்திரிகையில் படித்தேன். இது போதாது மானத் தமிழனுக்கு கௌரவிற்கும் முகமாக அவரது சந்ததியின் குடும்ப அங்கத்தவர்களை வரவழைத்து கௌரவப்படுத்துவது இலங்கை மக்களின் கடமைப்பாடு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் இரா.சுப்பிரமணியம் அவர்களின் இவ் வரலாற்று நூல் சரித்திரம் பெறும். இன்னும் பல அரிய நூல்கள் வெளிவர ஆண்டவனின் அருள் கிடைக்க வேண்டுகின்றேன்.

மு.பெரியண்ணன்
அகில இலங்கை சமாதான நீதிவான்
தோனிக்கல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
குழுத்தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூல் இளம் சமுதாயத்திற்குப் பேருதவியாக இருக்கும்

இலங்கை மன்னன் இராவணன் வரலாற்றுக்காலத்துக்கு முன்பாக இலங்கைத்திருநாட்டில் சிறப்பாக ஆட்சி செய்தான். அவர் ஆட்சி செய்த காலத்தில் இலங்கையில் பல சிவாலயங்களை உருவாக்கினார். இவருடைய ஆட்சியின் சிறப்பை இந்திய வரலாற்றுகள் அழிக்கப்பட்டு அவர் ஒரு கொடுரமானவன் என்பதை சித்தரித்தார்கள். இன்றும் கூட இந்தியாவில் உத்திர பிரதேசத்தின் மேலவை உறுப்பினர் குக்கர் நாவற் என்பவர் அனுமான் இந்து அல்ல என்று கூறுகிறார்.

அதே போல் உத்திரப் பிரதேச முதல்வர் திரு யோகித் ஆதித்தனர் என்பவர் அனுமன் இந்து அல்ல என்று கூறுகிறார். இதே போல் இராவணனை ஒரு கொடுங்கோல் ஆட்சியாளன் என்று வர்ணிக்கப்படுகிறது. இராவணன் அப்படிப்பட்டவன் அல்ல என்று கலாபூசணம் இரா. சுப்பிரமணியம் அவர்கள் இந்நூலில் கூறுகிறார். இலங்கை மன்னன் இராவணன் திராவிடன் எனும் நூல் இளம் சமுதாயத்திற்கு பேர் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இலங்கையில் கடைசி மன்னன் கன்னுச்சாமி என்பதைக் கூட நாம் அறியாதவர்களாக இருக்கின்றோம். இந்நூல் வெளியிடுவதற்கு மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மென்மேலும் இவ்வாறான பல நூல்களை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

R,N.S மணி(சுபத்திரா மணியன்)
எழுத்தாளர் முன்னால் வீரகேசரி
வவுனியா மாவட்ட நிருபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. உலக அமைதி

கருணைக் கடலான கடவுளே, நீர் எல்லா மனித குலத்தையும் ஒரே தாய் தந்தை மூலம் உற்பத்தி செய்திருக்கிறாய். எல்லா மனிதர்களும் ஒரே வீட்டின், ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களாக இருந்து வாழவேண்டும் என்றே நீ அவர்களைப் படைத்தாய். உன் சந்நிதானத்தில் எல்லோரும் உன் சேவகர்கள் எல்லோரும் உன் திருவடியையே சார்ந்திருப்பவர் ஆவர். உன் குழந்தைகள் உன்னுடைய அருளென்னும் போஜன தலத்தில் ஒன்றாகக் கூடியுள்ளனர். உன்னுடைய பரிபாலனம் என்னும் ஒளியினுல் பிரகாசிக்கின்றனர். பரமாத்மாவே! நீயே எல்லாரையும் காத்தருள்கிறாய். நீயே எல்லோரையும் உன்னுடைய கிருபையினுள் ஆட்கொள்கிறாய். நீயே எல்லோருக்கும் உயிர்ப்பிச்சை அளிக்கிறாய். ஒவ்வொரு தாழ்மையுள்ளவனையும் தகுதியுள்ளவனாக ஆக்குகிறாய். கெட்டிக்காரன் ஆக்குகிறாய். மற்றும் மனித குலத்தை உன்னுடைய அருள் என்னும் கடலில் மூழ்கச் செய்கிறாய்.

உதாரண குருவே! நீ ஒவ்வொரு தேசத்திலும் உள்ள உன் அடியார்களை ஒன்றாக்கி விடு. வெவ்வேறு மதங்களை ஒன்றாக இணைத்து விடு. எல்லா தேசங்களையும் ஒரே தேசமாக்கி விடு. அவை ஒவ்வொன்றும் தங்கள் ஒரே குடும்பத்தினரைப் போன்று எண்ணி எல்லோரையும் தன் சொந்த நாட்டினராகப் பாவிக்கட்டும். மனித குலம் அன்பும் சிநேகமும் கொண்டு ஒன்றுபட்டுக் கூடி வாழட்டும்.ஈஸ்வரனே!

மனித குலத்தின் கொடி உயர்ந்து பறக்கட்டும். பரமேஸ்வரா! மகத்தான அமைதி எங்கும் நிலவட்டும். எங்கள் இருதயங்களை உருக்கி ஒரே இதயமாக்கி விடு. தயாளனே! உன்னுடைய அன்பின் மணம் எங்கள் மனத்தில் மணக்கட்டும்! உன் வழிகாட்டும் ஒளியினுல் எங்கள் கண்கள் ஒளிரட்டும். உன் மொழிகளின் இனிய ஆலாபனை எங்கள் காதுகளில் இனிமையாக ஒலிக்கட்டும். உன் திருவருளில் எங்களைக் காத்தருள்வாயாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயே சர்வசக்திசாலி, நீயே மகா பலசாலி, நீயே எல்லாப் பாவங்களையும் மன்னிக்க கூடியவர். அதோ நீ தான் மனித குலத்தின் குறைகளைப் பார்த்தும் பாராமலும் இருக்கிறாய். பவித்திரமான இராஜ்யத்தில் ஒரு புதிய ஓடை இருக்கிறது. அதன் நாற்புறமும் உயர்ந்த ராஜ்ய வாசிகளும், சுவர்க்கத்தின் அமரர்களும் சுற்றி வருகிறார்கள். நீங்களும் இந்த உயர்ந்த பதவியை அடைய முயற்சி செய்யுங்கள். அதன் மூலம் நீங்கள் இந்த மலர்களின் அன்பு மணத்தை நுகர்ந்து இந்தச் சிறந்த இரகசியத்தை அறிந்து கொள்ளுங்கள்."

"எந்த உண்மையும் மற்றோர் உண்மையைக் கண்டிக்க முடியாது. எந்த விளக்கின் ஒளியாக இருந்தாலும் ஒளி ஒளி தான்: எந்தத் தோட்டத்தில் மலர்ந்ததாக இருந்தாலும் ரோஜா என்றும் எப்போதும் அழகான மலர்தான். கிழக்கில் ஒளிர்ந்தாலும், மேற்கில் தோன்றினிலும் நட்சத்திரங்கள் ஒரே மாதிரியாகத்தான். ஒளிர்கின்றன. பாரபட்சத்தை விட்டுவிடு. அப்போது தான் உண்மை என்னும் ஆதவனை நீ காண முடியும். அது ஆகாசத்தின் எந்த பாகத்தில் உதயமானதாக இருந்தால் என்ன!"

## கலியுகத்தின் முடிவு

இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலம். அப்போது கலியுகத்தின் முடிவு நெருங்கி விட்டது என்ற விஷயம் சர்ச்சை செய்யப்பட்டது. கலியுக முடிவு பற்றிய குறிப்பு சாஸ்திரங்களில் ஆங்காங்கே இருந்தது. ஆனால் தற்போது நடைமுறையும் வருடங்களின் படி இல்லாமல் சில சோதிட சாஸ்திரக் கணக்குப்படியும் சில கிரஹங்கள், நட்க்ஷத்திரங்களின் விசேக்ஷ அமைப்புப் படியும் இருந்தது. இவையெல்லாம் சாதாரண மக்களின் அறிவுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.

தற்போதுள்ள கணிப்பின் படி கலியுகத்தின் காலவரையறை 4 லட்சத்து 32 ஆயிரம் வருடங்கள் என்று சொல்லப்படுகிறது. அதனால் அநேகம் இந்திய மக்கள் இப்போது தான் கலியுகத்தின் முதல் கால் பாகம் நடக்கிறது என்றும் அது முடிவடைவதற்கு இன்னும் லட்சக்கணக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாங்கள் பாக்கி இருக்கின்றன என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் தான் தேசத்தில் சமூகம், நிதி, தர்மம் எல்லாம் இனாமாகிக் கொண்டே இருந்தும், கலியுக முடிவில் இன்னும் பயங்கரமான நிலைமை ஏற்படும் என்றும் கற்பனை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். கலியுகத்தின் முடிவு கல்கி அவதாரத்தினுடன் அறியாமையால் இணைக்கப்படுகிறது. திரேதா யுகத்தின் முடிவில் ஸ்ரீ ராமரும், துவாபர யுக முடிவில் ஸ்ரீகிருஷ்ணரும் அதே போல் கலியுக முடிவில் விஷ்ணுவின் பத்தாவது அவதாரமான (கல்கி-விஷ்ணுயசா) வும் தோன்றுவார்கள் என்று நாம் சாஸ்திரங்களில் படித்திருக்கிறோம். அதனால் கலியுகம் இவ்வளவு நீண்ட காலமாக இருப்பதால் கல்கி அவதாரத்தைப் பற்றியே சர்ச்சையை இதுவரை அரிதாகி முக்கியமும் இல்லாததாக இருந்தது.

கலியுகத்தின் காலவரை இவ்வளவு நீண்ட காலமாகச் சொல்லப்படுவதன் காரணம் என்ன? சமஸ்கிருதப் புத்தகங்களைச் சாமான்ய ஜனங்கள் புரிந்து கொள்வதற்காக உரை எழுதியவர்கள் தங்களுடைய சமான்ய அறிவுக்கு எட்டிய படி சுலோகங்களுக்குப்பொருள் எழுதியதால் தான் காரணம் என்று தெரிகிறது. கலியுகத்தின் காலவரையைப் பற்றிச் சொல்லும் அநேக சுலோகங்களில் முதல் வரியில் நான்கு யுகங்களின் காலவரையும் இரண்டாவது அடியில் இதன் பிளவு எண் கணக்கும் சொல்லப்படுகின்றன. இதில் எண் கிரமம் நான்காவது மூன்றாவது இரண்டாவது முதல் என்று எழுதி இருப்பதை உரை எழுதுபவர்கள் எண்களின் குறிப்பைத் தவறாக வரிசைப்படுத்தி விட்டார்கள்.

ஆனால் கணிதத்தில் உள்ள ஒரு சாதாரண விதி சோதிடர்களும் கணிதக்காரர்களும் நன்றாக அறிவார்கள். அதாவது (அங்கானும் வாமதோ கதி) சுலோகங்களில் எண் குறிப்பு வரும் போது எதிர்மாறாகக் கொள்ள வேண்டும். இந்த விதியை ஏற்காததனால் உரைகாரர்கள் இரு பெரிய தவறு செய்து விட்டார்கள். அவர்கள் முதலாவது 4 (சத்வாரி நாலாவது) பார்த்து சத்ய யுக வருடங்களின் மதிப்பு 4-க்கு 4000 என்று நினைத்து விட்டார்கள். அதே போல் கலியுக வருடங்களின் மதிப்பு கடைசியில் ஒரு இருபதை 1000 வருடங்கள் என்று கணக்கிட்டு விட்டார்கள். இந்த மாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுக சந்தியா சந்தியாசம் வருடங்கள் சேர்ந்து 1200 என்று பிரசித்தமாகி விட்டது. பின்னால் வந்தவர்கள். கலியுகம் 1200 வருடங்கள் தான் என்றால் கலியுகம் பகவான் புத்தரின் அவதாரத்திற்கு 1100 வருடங்களுக்கு முன்பே முடிந்திருக்க வேண்டுமே என்று நினைத்தார்கள்.

புராணம் முதலிய சாஸ்திரங்களின் கூற்றுப்படி பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பரலோகம் சென்ற பிறகே கலியுகம் ஆரம்பம் என்றும் புத்தர் பகவான் கல்கி இருவருடைய அவதாரமும் கலியுகத்திலேயே நடக்கின்றன என்றும் தெரிய வருகிறது.

அதனால் வித்வான்கள் "திவ்ய-வருடம்" என்றும் எழுதியிருப்பதை நினைத்து இந்த வருடங்களின் கணக்கை தேவ வருடம் என்று எண்ணி 1200x360=4,32,000 வருடங்கள் கலியுகம் என்றும் கணக்கிட்டு விட்டார்கள். ஸ்ரீமத் பாகவதம் முதலிய புராணங்களின் உரையைப்பார்த்து கலியுகத்தின் காலம் 4,32,000 என்றே இந்து ஜனங்கள் திடமாக நம்பினார்கள். அதனால் அவர்கள் கல்கி அவதாரத்தின் வெளிப்படும் காலம் இன்னும் ஏறக் குறைய 4,27,000 வருடங்கள் உள்ளன என்றே நினைத்தார்கள்.கலியுக சந்திப்பின் போது அவதரித்த பிரசித்தமான மகான்களால் கூட ஜனங்களின் இந்த எண்ணத்தை அகற்ற முடியவில்லை விரைவிலே கலியுகம் முடிந்து சத்தியயுகம் ஆரம்பிக்கப் போகின்றது என்று கூறும் போது தான் நாட்டில் இது பற்றிய சர்ச்சை மிகவும் தீவிரமாக எழுந்தது விபரம் தெரிந்த வரையில் முதல் முதலாக இந்த சர்ச்சை தில்லி அருகில் உள்ள குட்காவ் என்ற இடத்தில் எழுந்தது.

இந்த சமயம் அவ்விடம் உள்ள ஒரு சிவ பக்தன் வித்துவான் பண்டிட் ராஜநாரயணன் கூஷிட்ஸாஸ்த்திரி என்பவர் வெளியிட்டார். அவருடைய "சேதாவணி" (எச்சரிக்கை!) என்ற புத்தகம் கி.பி 1924ம் வருடம் வெளியிடப்பட்டது அதன் அவதாரிகையில் "பக்தியோகத்தில" சாதனையால் அவருக்கு மூன்று முறை கலியுகத்தில் முடிவு நெருங்கி விட்டது என்றும் கல்கி அவதாரம் எங்கோ நடந்திருக்கின்றது என்றும் தமக்கு தோன்றியதாக எழுதியிருக்கிறார். சாஸ்திரங்களின் உரைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுக காலவரை 4இ32இ000 வருடங்கள் என்று இருந்ததால் அவர் இது சம்பந்தமான சாஸ்திரங்களையெல்லாம் படிக்க ஆரம்பித்தார். படித்த பிறகு தான் அவருக்கு கலியுகத்தின் காலவரை கணக்கில் பெருந் தவறு நடந்திருக்கிறது என்பது தெரிய வந்திருக்கிறது.

இந்த தவறின் பலன் கலியுகத்தின் காலவரை 4800 என்பதற்கு பதிலாக 4இ32இ000 என்ற அதை விட எத்தனையோ மடங்கு அதிகமாக கணக்கிடப்பட்டுள்ளது. இதை மறுப்பதற்காக அவர் மேற்கூறிய புத்தகம் வெளியிட்டார். அந்த புத்தகம் ஹிந்தியில் 8 முறை பதிப்பிக்கப்பட்டது. மேலும் 10 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. புத்தகத்தை பிரசாரம் செய்வதற்காக அவர் பல முறை வட இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தார். அப்போது அவருக்கு பல உயர்ந்த வித்துவான்களிடம் இது சம்பந்தமான சாஸ்திர அர்த்தங்கள் விளங்கின. ஸ்ரீமத்பாகவதம் விஷ்ணுபுராணம் மற்றும் மகாபாரதம் முதலிய நூல்களில் கலியுகம் முடியும் போது இருக்கும்

கிரகங்களின் விசேஷ அமைப்பின் விளக்கம் வருமாறு :- சந்திரன், சூரியன், குரு இந்த மூன்று கிரஹங்களும் சமமான அம்சத்தில் பூச நட்சத்திரத்தில் ஒரே ராசியில் கூடுகின்றனவோ அப்பொழுதுதான் கருதயுகம்(சத்யயுகம்) ஆரம்பமாகும். பஞ்சாங்கம் கணிப்பவர்கள் விக்ரம வருடம் 2000-த்தின் பஞ்சாங்கம் கணித்த போது சிராவண அமாவாஸ்யையில் அன்று 17 நாழிகை 53 வினாடிகளுக்கு அதற்கு சரியான ஆங்கிலத் தேதி 1 ஆகஸ்ட் 1943ம் வருடம் மத்யாணம் 12 மணிக்கு மேற்சொன்ன கிரஹச்சேர்க்கை உண்டானதை அறிந்தார்கள்.

அதனால் இந்த சர்ச்சை இன்னும் தீவிரம் ஆயிற்று ஹிந்து ஜனங்கள் பகவானுடைய கல்கி அவதாரம் சம்பந்தமான கற்பனைகளால், பக்தி பாவத்தில் மூழ்கி பகவந்நாம சங்கீர்த்தனம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். நாட்டில், அந்தச் சமயம் நாற்புறமும் முன்பின்னறியாத கஷ்டங்கள் வியாபித்திருந்தன. சாமான்ய ஜனங்கள், கோர தரித்திரம், வைசூரி, பஞ்சம், பசி முதலியவைகளாலும், அச் சமயத்தில் நடந்த மகாயுத்தத்தின் கொடுமையினுலும் பீடிக்கப்பட்டிருந்தார்கள். பிரளய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலன்றி மற்றெப்பொழுதும் காணப்படாத இயற்கை விளைவுகள் தோன்றின. அவற்றை இதற்கு முன் யாரும் கேட்டதுமில்லை கண்டதுமில்லை. காலச் சூரியன் சுழல்வது போல் காட்சி தருவது.

சூரியனில் பயங்கர வெடிப்புக்களினால் புகை போல் காணப்படுவது, சத்தமழை பொழிவது, எங்கிருந்தோ திடீரென்று கல்மழை பொழிவது.பயங்கர எரிநட்சத்திரம் வீழ்வது, பரவியகால பூகம்பம், பயங்கரமான புயல், சுழல்காற்று, நெருப்பு மழை, அதிக மழையினுல் பயங்கர வெள்ளத்தினுள் நாசம் முதலிய சம்பவங்களைப் பற்றிய செய்திகளால் அக்காலத்தில் பத்திரிகைகள் நிரப்பப்பட்டிருந்தன. யுத்தத்தின் பயங்கரகளினுள் ஜனங்கள் மிகவும் பயந்திருந்தார்கள். சரித்திரத்திலேயே கண்டிராதபடி, ஜர்மனியர்கள் அணுகுண்டு மழை பொழிந்து ஜப்பானைச் சாம்பலாக்கிது.

இந்தச் சமயத்தில் நடந்த மிக முக்கிய சம்பவம் ஆகும். இந்தச் சில வருடங்களில் ஏற்பட்ட, ஏற்பட்டுள்ள மரணம் சரித்திரத்திலேயே எப்போதும் நடந்ததில்லை. பல கணக்குகளின் படி, இரண்டாவது உலகயுத்தம் நடந்த இந்தச் சில வருடங்களில் தான் உலகில் உள்ள மனிதர்களில் ஏழு கோடி ஜனாங்கள், இயற்கையின் கொடுமையாலும்,யுத்தத்தின் பயங்கரத்தாலும் மடிந்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. சில சாஸ்திரங்களில் கலியுகத்தில் ஏற்படக்கூடிய ஜ்னாங்களின் அழிவைப்பற்றி நிறையக் கூறப்பட்டுள்ளன.

ஒரு புறம் இவ்விதப் பிரளயகாலத்தைப் போன்ற அழிவு ஏற்பட்டிருக்க, மறுபுறம் விஞ்ஞானம் தன்னுடைய நவீனக் கண்டுபிடிப்புக்களினுல் முன்னேற்றத்தில் ஒவ்வொரு படிக்கல் நாட்டிக் கொண்டே சென்றது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே தந்தி, டெலிபோன், கம்பியில்லாத் தந்தி டெலிவிஷன் முதலிய செய்திப் போக்குவரத்துக்களின் மூலம் உலகிலுள்ள மக்களின் ஒரு தொடர்பு முன்னேறிக் கொண்டு வர ஆரம்பித்தது. ஆகாய விமானங்கள், மோட்டார் படகுகள், வேகமாக விரையும் ரயில்கள், மோட்டார் முதலிய போக்குவரத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவுச்சாதனங்கள் உலகத்தைச் சுருங்கச் செய்து விட்டன.

மருத்துவத்துறையிலும், சுகாதாரத்துறையிலும் ஏற்பட்டப் புதிய புதிய கண்டு பிடிப்புக்களினுல் வைசூரி முதலிய கொடிய நோய்களை முறியடிப்பதில் வெற்றி கண்டார்கள். விவசாயத்துறையிலும், தொழிற்துறையிலும் செய்யப்பட்ட புதிய கண்டு பிடிப்புகளினுள் தானியங்களும், தினசரி உபயோகப் பொருள்களும் பெருவாரியாக உற்பத்தி செய்யப்பட்டு மக்கள், பஞ்சம், பசி இவற்றிலிருந்து நிவாரணம் அடைந்தார்கள். கட்டுக்கடங்காத இயற்கையை வெல்வதில் கூட மனிதன் நாள் தோறும் முன்னேற்றம் அடைந்தான்.

வருடந்தோறும் பயங்கர வெள்ளத்தினுல் பயிர்கள் நாசம் செய்து வந்த நதிகளிலெல்லாம் பயிர்களை நாசம் செய்து வந்த நதிகளிலெல்லாம் அணைகள் கட்டப்பட்டு அந்தத் தண்ணீர், விளைச்சலுக்கும், மின்சாரத்துக்கும் பயன்படுத்தப்பட்டது. இந்தக் காலம், இந்து சாஸ்திரங்களில் மட்டுமில்லாமல் உலகின் அநேக நூல்களினுலும் குறிக்கப்பட்டுள்ளது. வட இந்தியர்களுக்கு பக்த சூரதாஸருடைய இந்த பிரஸித்தமான பதங்கள் ஞாபகம் இருக்கலாம்.

"ஏக் ஸஹஸ நௌ ஸௌ ஊபர் ஐஸௌ
யோக் பரை".

விக்ரம ஸம்வத்ஸரத்தின் பிரகாரம் 1901 லேயே சங்கராந்தி காலத்தின் ஆரம்பம் ஆகிவிட்டது. இந்தச் சமயத்தில் தான் உலகம் முழுவதும் சமூக, அரசியல் புரட்சி, 1857 வருடத்திய கலகம், பல பெரிய பெரிய சாம்ராஜ்யங்களின் வீழ்ச்சி, உலகத்தை வென்ற சக்கரவர்த்திகளுள் தோல்வியும், பெரும் வீரர்களான தானத் தலைவர்களின் தோல்வியும் சரித்திரத்திலேயே கண்டிராத அபூர்வ விஷயமாகும்.

இதே சமயம் தான் கி.பி. 1844 ம் ஆண்டு ஒரு அபூர்வமான வால் நடசத்திரம் உதயமானது. இதைத்தான் யேசுகிருஸ்துவின் பிறப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது தோன்றிய வால்நட்சத்திரம் என்று பைபிளில் கூறப்பட்டிருக்கிறது. இந்த வால்நடசத்திரத்தின் வர்ணனை, அமெரிக்கக் கலையகராதியில் (American Encyclopedia) காணப்படுகிறது. இந்த நட்சத்திரம் 1844 லிருந்து 1852 வரை தன்னுடைய அற்புத ஒளியினுல் உலகம் முழுவதையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டுப் பிறகுத் திடீரென்று மறைந்துவிட்டது.

உலகத்தின் கைவிட்டு எண்ணக் கூடிய சிலருக்கே இந்த ஆச்சரியமான சம்பவத்தின் மூலகாரணம் விளங்கும். 2000 விக்ரம ஆண்டு கலியுகம் முடிந்தது என்பதை அறிந்ததும் போலி அவதாரங்களைப் பற்றிய சர்ச்சை எழுந்தது சகஜமானதே சில சுயநல ஏமாற்றுக்காரர்கள் சாதாரண மக்களின் பக்தியைத் தவறாக உபயோகித்துக் கொண்டு ஏமாற்ற ஆரம்பித்தார்கள். அந்தக் காலத்துப் பத்திரிகைகளில் இந்த மாதிரி ஏமாற்றுக்காரர்களைப் பற்றிய செய்திகள் வெளிவந்துள்ளன. போலி அவதாரங்களையும் இவர்களின் பொய் சாமர்த்தியங்களைப் பற்றியும் உண்டாகும் சர்ச்சை அந்தக் காலத்தில் ரொம்ப சாதாரணமாக நடைபெற்று வந்தது. விதம்

விதமான துண்டு பத்திரிகைகள் விநியோகித்தும், படங்கள் பிரசுரித்தும் மாயா ஜாலங்கள் செய்து வந்தனர். அவதாரத்தின் வெளிப்படும் சமயத்தை யாரும் வெளியிடாததாலும், போலி அவதாரங்களின் உண்மை சுரூபம் கலைந்து விட்டதாலும் ஜனங்கள் மெல்ல மெல்ல இந்த விஷயத்தை உதாசீனப்படுத்த ஆரம்பித்தார்கள். இனிமேல் கல்கி அவதாரம் எங்கே ஏற்படப்போகிறது என்று எண்ண ஆரம்பித்தனர். இப்போது தான் கலியுகத்தின் முதல் பாகம் நடக்கிறது. மெல்ல மெல்ல மனிதர்கள் அவதார விக்ஷயத்தையே மறக்க ஆரம்பித்தனர்.

கி.பி. 1963ம் வருடம் ஜீலை மாதம், ஒரு பிரசித்தி பெற்ற கல்விமான் மூலமாக எனக்கு நாம் நீண்ட நாள்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர் வந்து விட்டார் என்ற செய்தி கிடைத்தது.

கி.பி. 1943 வருடத்துச் சர்ச்சைகள் மறுபடியும் புதிதாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளம்பின. அவர் ஹிந்துக்களின், கல்கி அவதாரம் மட்டுமல்ல அதனுள் கிறிஸ்தவர்களின் யேசுவினுடைய மறு அவதாரம், ஜர்மனியர்களின் யஹோவா, பார்ஸியர்களின் ஹூ வைராம் பௌத்தர்களின் மைத்ரேய இமிதபா, இஸ்லாமியத்தை நிலை நிறுத்தும் அய்யம் எல்லோரும் அவராகத்தான் இருக்க வேண்டும் என்ற விஷயமும் எனக்கு முதன் முதலாக அவர் மூலமாகத்தான் தெரிய வந்தது. உலகில் உள்ள எல்லா தர்ம சாஸ்த்ரங்களும், மகான்களும், சாதுக்களும் கூறிய வாக்கியங்களும் உபதேசங்களும் கடவுளின் அம்சம் கொண்ட அவதாரத்தைப் பற்றித்தான் கூறுகின்றன. அதுவே எல்லா தருமங்களின் எதிர்பார்ப்பு ஆகும். அதுவே இந்த அகில உலகமாகிய படகின் ஆதாரமாகும். ஹிந்தி தர்மத்தின் எதிர்காலத்தைப் பற்றி தான் அக்டோபர் 1964 வரை ரொம்பவும் குறைவாகவே அறிந்திருந்தேன்.

அப்போது தான் பண்டிட் ராஜநாராயண் அவர்களின் (மசதாவணி எச்சரிக்கை) புத்தகம் எனக்குத் தற்செயலாகக் கிடைத்தது. அதைப் பிடித்த பிறகுதான் நான் தெய்வீகத் தூண்டுதலால் முன்னேற ஆரம்பித்தேன். நான் ஒரு காரிருளில் முன்னேறலானேன். ஆனால், எனக்கு ஆச்சரியவசமாக இந்தக் காரிருளிலும் ஓர் ஒளியின் கிரணம் வழி காட்டியது.

பல வருடங்களாக நான் தேடிக் கண்டுபிடித்த விஷயங்களை வாசகர்கள் முன்னால் வைக்குன்றேன். இந்த ரகஸ்யம் எளிதாகப் புரியாது என்று மகாகவி துளசிதாஸ் அவர்கள் உத்ரகாண்டத்தில் ஸ்பக்ஷ்டமாகக் கூறியுள்ளார். "யஹ் ரஹஸ்ய ரகுநாத் கரி போகி நஜானே கோய்ஜோ ஜானஹி ரகுபதிக்குபா, ஸபருநஹீம் மோஹ்ன ஹேஜி" பொருள் :- ரகுநாதரின் இந்த அவதார ரகஸ்யத்தை யாரும் எளிதில் அறிந்து கொள்ள முடியாது. அந்த ரகுபதியின் அருளால் இதை அறிந்து கொள்வார்களேயானுல் அவர்களுக்குக் கனவில் கூட மோகம் ஏற்படாது. பிரபுவின் எல்லையில்லா அபாரக் குவையினுல், விஷ்ணுவினுடைய பரம புண்யமான திவ்ய அவதாரம் வெளிப்படும் அந்த மகத்தான தருணம் வந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் புத்தகத்தின் முதல் பகுதியில் கலியுகத்தின் காலவரை, அதன் முடிவு பற்றிய விக்ஷயம் விவாதிக்கபபடடுள்ளது. அதன் பிறகு மற்ற தர்மசாஸ்த்ராங்களில் கூறியுள்ள யுகமாற்றங்களைப் பற்றிய யூகங்களும், கல்கி அவதாரம் வெளியாகும்சமயம், இடம் முதலிய விக்ஷயாங்களின் ஆழ்ந்த விவாதம் வாசகர்களின் பார்வைக்காகவும், தீர்மானத்திற்கும் விடப்பட்டுள்ளது. எந்த எந்தப் புத்தகங்களிலிருந்து மேற் கோள்கள் காட்டப்பட்டுள்ளனவோ, அந்த அந்தப் புத்தகங்களின் அட்டவணை இந்தப் புத்தகத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப்புத்தகங்களின் ஆசிரியர்களும், பிரசுரகர்த்தாக்களும் என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

விசேஷமாக இது சம்பந்தமார்ந்தமாக "யதாவனி" புத்தகத்தை வெளியிடப்பட் ஸ்ரீராமகிருக்ஷ்ணகுப்தா அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன், அவர் தாம் எனக்கு இந்தப் புத்தகத்திலிருந்து சில மகத்வபூர்ண விஷயங்களை உபயோகப்படுத்திக் கொள்ள அனுமதி வழக்கறிஞர். அநேக அறிக்கைகளும், சில மகத்தான வழிமுறைகளும் தந்து உதவிய டா.எச் எம் முஜே, அவர்கள் ஸ்ரீ நாதுலால் அவர்கள், வானப்ரஸ்தி எடிட்டர் அவர்கள் ஸ்ரீநாதுலால் அவர்கள், வானப்ரஸ்தி எடிட்டர் "அபா" பண்டிட் பைகுலால் பட்ட சாஸ்த்ரி (கோடா) அவர்களுக்கும் நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

இது விக்ஷயமாக என்னுடைய அநேக அன்பர்களும் நண்பர்களும் எனக்கு ஊக்கமும், நல்வாழ்த்தும் அளித்துள்ளார்கள். இடம் பற்றாக்குறையால் அவர்கள் எல்லோருடைய பெயர்களையும் இவ்விடம் குறிப்பிட முடியவில்லை. ஆனாலும், சிலரின் பெயர்களைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அவர்கள் தந்தைக்கொப்பான ஸ்ரீசத்ய பக்த அவர்கள் (காயத்ரி, தபோபூமி, மதுரா) ஆசார்ய டாக்டர் பூதேவ மிஸ்ர அவர்கள் (காயத்ரி, தபோபூமி, மதுரா) ஆசார்ய டாக்டர் பூதேவ மிஸ்ர அவர்கள் (ஆக்ரா), அன்பர் அமரர் ஸ்ரீசங்கர்லால் (கோடா) அவர்கள் (இவர் தான் இந்தப் புத்தகத்தை எழுதிக் கொண்டிருந்த போது இதன் வெற்றிகரமாக பிராத்தனை செய்து கொண்டிருந்தவர்) ஸ்ரீ கே.எச் வஜதீ, ஸ்ரீ துக்ஷ்யந்த குமார் அவர்கள் (இவர் புத்தகம் எழுதுவதற்கும் வெளியிடுவதற்கும் அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்தார்) ஸ்ரீ ராம் பூபால் த்ரிபாடி (இவர் எப்பொழுதும் அன்பும் ஆசியும் கொடுத்து வந்தார்) முதலியவர்கள் ஆவார்கள்.

என் உறவினர் ஸ்ரீ ரமணீக்க்ஷா, சகோதிரி ஜேனு ஸொராவ், மற்றும் பம்பாயைச் சேர்ந்த பஹாயி உலகமதத் திருச்சபைக்கும் நான் மிகவும் கடன்பட்டிருக்கின்றேன்.

கல்கி

பிகாஸ் நாராயணன் MA


பல்கலைக்கழகம் ஆந்த்ரா

19-12-1972



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பத்து ஆண்டுகள் இதன் ஆட்சி தான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை வெறிகொண்ட மூர்க்க மனிதர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை வெறிகொண்ட மூர்க்க மனிதர்கள்

சுருக்கமாக உலக வரலாற்றில் அப்போது இருந்த உலகமே வேறு அன்று ஆசியாவிலேயே இந்தியா கிடையாது. ஆபிரிக்கா, அரேபியா, இந்தியா, ஆஸ்திரேலியா, அண்டார்ட்டிக்கா, தென் அமெரிக்கா இவையெல்லாம் ஒரே கண்டமாக இணைந்திருந்த உலகம் இந்த கண்டதிற்கு தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கோண்ட்வானா லேண்ட் என்று பெயரிட்டிருக்கிறார்கள். கி.மு என்று பின்நோக்கி போனால் மனிதனும் குரங்குகளும் நம் முன்னோர் தான் Commom ancestor என்பது தெரிய வருகிறது அந்த முன்னோரிடமிருந்து இரு கிளைகள் பிரிகின்றன. ஒன்று குரங்கு வகைகள் இன்னொன்று மனித வகைகள். உலகின் மனித இனம் தோன்றும் முன்பே நாங்கள் தோன்றியவர்கள். ஒரு பெரிய ஆச்சரியம் உலகெங்கும் "செல்வதற்கு தடையாக கடல் வழிமறிக்கவில்லை.

ஜயா வால்மீகி இராமயணமத்தில் தெய்வங்களின் வருகையை சாதாரண மனிதர்கள் அறிய மாட்டார்கள். மானிடக் கண்களுக்கு அவர்கள் புலப்படுவதில்லை. சிவ பக்தி உள்ள ராஜாவான இராவணனுக்கு எதிராகவும் நாங்கள் போருக்கு போகவில்லை என்பது தான் உண்மை. சோலைக்குள் புகும்போது அவன் அணிந்த மலையில் உள்ள பூக்களில் படியும் தேனை வண்டுகள் உறிஞ்சிக் குடித்து மகிழ்ந்த நாடு நம் ஈழ நாடு. இப்படி பட்ட மன்னர் இராவனணிடம் நாங்கள் ஏன் போர் செய்ய வேண்டும். இந்த உண்மையை


"எப் பொருள் எத்தன்மைத்து ஆயினும்
அப் பொருள் மெய்ப்பொருள் காண்ப அறிவு" (குறள்)

பொருள் :

எப்பொருள் எத்தன்மையை தாய்த்தோன்றினாலும் அந்த தோற்றத்தை மட்டும் கண்டு மயங்காமல் அப்பொருளின் உண்மையான இயல்பை அறிவது மெய்யுணர்வாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குறிப்பு : ஏழ்தெங்க நாட்டிலிருந்து குமரிமலைத் தொடர்வரை 700 காவதம் (சற்றொப்ப 7000 கல்) குமரிக்கண்டம் பரந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சான்று : தமிழ்நாட்டு வரலாறு - சங்ககாலம் (வாழ்வியல்), ப.472



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் இராசேந்திர சோழன் கடாரப் படையெடுப்பில் வென்ற இடங்கள்





சான்று : பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தென்னிந்திய அரசுகள் (கி.பி. 800 - 1200)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மலேசிய மாநிலங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலாயா, வட சுமத்திராத் தமிழர்களின் பயண வழி





சான்று : வடசுமத்திராவில் தமிழர்களின், முனைவர் அ.வீரமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தகடு 4. அரப்பா 1946 : இடுகாடு 37 இல் உள்ள புதைப்புக்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகடு 7. அரப்பா 1946 : வண்ணக் கூலங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழி சமஸ்கிருதத்திலிருந்து தோன்றவில்லை. திராவிட மொழிகளில் மிக நீண்ட இலக்கிய மரபைக் கொண்டது. தமிழ் இலக்கியங்களில் சில பல்லாயிரம் ஆண்டுகள் பழமையானவை என்று கூறப்படுகின்றன. கண்டெடுக்கப்பட்டுள்ள தமிழ் ஆக்கங்கள் கி.மு 300ம் ஆண்டைச் சேர்ந்த பிராமிய எழுத்துக்களில் எழுதப்பெற்றவை ஆகும். பனையோலைகளில் எழுதப்பட்டு திரும்பத் திரும்ப பிரதி பண்ணுவது மூலம் பாதுகாக்கப்பட்டு வந்த மொழி எமது தமிழ் மொழி. பண்டையகாலம் கி.மு 200 தொடக்கம் கி.பி 700 வரை மத்திய காலம் பெருமளவு வட மொழிச்சொற்கள் கலந்து விட்டன. தமிழின் எழுத்து முறை என்பது அதனுடைய விசேடமான தனித்துவத்தை எடுத்தியம்பி நிற்கின்றது. தமிழ் நாட்டை எல்லையாக கொண்ட கேரள மாநில மக்களால் பேசப்படும் மலையாள சொற்கள் வசன அமைப்பு ஆகிய அம்சங்களில தமிழ் இசை நெருக்கமான ஒத்துள்ள ஒரு மொழியாகும்.

தமிழ் மொழி சமஸ்கிரதத்தில் ' இருந்து தோன்றவில்லை. திராவிட மொழிகளில் மிக நீண்ட இலக்கிய மரபைக்கொண்டது. தமிழ் இலக்கியங்களில் சில பல்லாயிரம் ஆண்டுகள் பழமையானவை என்று கூறப்படுகின்றன. கண்டெடுக்கப்படுகின்ற தமிழ் ஆக்கங்கள் கி.மு 300ம் ஆண்டைச் சேர்ந்த பிராமிய எழுத்துக்களில் எழுதப்பெற்றவை ஆகும். பனை ஓலைகளில் எழுதப்பட்டு திரும்பத்திரும்ப பிரதிபன்னுவதன் மூலம் பாதுகாக்கப்பட்டு வந்த மொழி எமது தமிழ் மொழி. பண்டைய காலம் கி.மு 200 தொடக்கம் - கி. பி 700 வரை மத்திய காலம் பெருமளவு வடமொழிச்சொற்கள் கலந்துவிட்டன. தமிழின் எழுத்து முறை என்பது அதனுடைய விசேடமான தனித்துவத்தை எடுத்துதியம்பி நிற்கின்றது. தமிழ் நாட்டை எல்லையாக கொண்ட கேரள மாநில மக்களால் பேசப்படும் மலையால சொற்கள் வசன அமைப்பு ஆகிய அம்சங்களில் தமிழிசை நெருக்கமான ஒத்துள்ள ஒரு மொழி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராதன நாகரீகம்

எமக்கு தெரிந்த பழம் பெரும் நாகரீகங்கள் பண்டைய எழிச்சி மற்றும் மெசப்பத்தோனியா ஹரப்பா. திராவிட நாகரீகம் இருந்துள்ளது இந்து சமயத்தில் சிந்து நதி புனிதநதியாக கருதப்படுகிறது. சிந்து நதி ஓரமாக ஹரப்பா குடியேற்றங்கள் எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அதி நவீன நகரங்கள் கடல் தொடர்புள்ள வர்த்தக பாதைகள் கை வேலை மற்றும் கலைப்பொருட்கள் ஆகியன மனித நாகரீக வளர்ச்சியை காட்டின. இன்றைய ஆபிரிக்கா, இந்தியா, தென்கிழக்காசியா, ஆஸ்திரேலியா ஆகியவற்றை உள்ளடக்கிய நிலப்பகுதியே பண்டு இலெமூரியா என வழங்கப்பட்டது. இதனையே குமரிக்கண்டம் என்று இலங்கையில் முதல் மனிதன் பிறந்தான் என்பர் மேலைய நாட்டு அறிஞர். (இஸ்காட்)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மொழிக்கெல்லாம் அன்னையாக நம் தமிழ் மொழி இலக்கணமா இலக்கியமா அல்லது எண்ணங்களையும் ஏடல்களையும் பரிமாறிக்கொள்ள கருவியோ இவற்றில் எதுவும் இல்லை. மொழி எனப்படுவது ஓர் இனத்தின் அடையாளம் பண்பாடு வாழ்வியல் வரலாறு தமிழில் கடந்து வந்த பாதை கரடு முரடானது கல்லும் முல்லும் நிறைந்தது.

DON'T KEEP YOUR MIND AS A ROCK
OPEN FOR NEW IDEAS
YOUR MIND IS THE BEST MASTER
TO LEAD YOUR LIFE.

ஆண்டாண்டு காலமாய் நாட்டை ஆழ்ந்து வரும் தமிழர் தென்பாங்கு இசை எழுப்பி சிந்து கவி பாடும் தமிழ் நம் தமிழ். பல்வேறு தடுப்புச்சுவர்களையும் உடைத்தெறிந்து வெற்றிப்பெற்ற ஒரே மொழி நம் தாய் தமிழ் மொழியே உன் தாய் மொழி தமிழை காக்க உனக்கும் பாங்கு உண்டு.

### இலக்கியங்கள்

உள்ளத்தை உயர்த்துகின்ற படிகள் வாழ்க்கை உணர்வுகளை நெறிப்படுத்தும் படைகள் கால வெள்ளத்தை வென்று நிற்க்கும் களங்கள் கல்வி வித்தைகளை வெளிப்படுத்தும் களங்கள் மாற்றார் கள்ளத்தை காரிருளை வெளிச்ச வீச்சால் களைத்து வரும் ஒளி வாரம் உணர்வுத்தோப்பு செல்லத் தேன் ஊறி வரும் இலக்கியத்தமிழர் சொர்க்கத்தை சொல்லுகிறேன். இன்னும் சொல்லுவேன் இலக்கியங்களில் மிகச் சரியாய் எழுந்து நின்றாள் எதிர் நீக்கும் படைக்கருவி எதுவும் இல்லை. இலக்கியங்கள் இல்லை எனும் நிலைமை வந்தால் எண்ணங்கள் தெளிவு பெற தமிழ் எழுத்துக்கள் இதயத்தை கணிய வைக்கும் எமது இன்பத்தமிழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கையெனும் தெய்வம்

காற்றசைவில் மழைவிசும்பில் கனல்மீதும் புனல்மீதும்
நாற்றிசையும் தோற்றிடுவாய் நல்லியற்கைத் தெய்வமடா!

பொழில்மீதும் பூமீதும் பொங்கிவரும் நிலவினிலும்
எழிலாக நிற்பவளே இயற்கையெனும் தெய்வமடா!

பகலாகி இரவாகிப் பறவைகளின் ஒலியாகிப்
புகலரிய நாடகங்கள் புதுக்குவதே தெய்வமடா!

குழந்தைகளின் மழலையிலே குலமகளிர் கற்பினிலே
அழகொளிவரும் தெய்வமது ஆடுவதும் காண்கிலையோ?

பார்க்கின்ற இடத்திலெல்லாம் படர்ந்திருக்கும் தெய்வநிலை
சேரக்கின்ற கரங்களிலே சிறைப்படுத்தக் கூடுவதோ?

### காடு

கல்தோன்றி மண்தோன்றிக் கடினமாகிக்
காசினியை உருச்செய்த பின்னர்ப் பச்சைப்
புல்தோன்றிச் செடிதோன்றிக் கொடியும் தோன்றிப்
பூதமென வளர்ச்சியுள்ள மரமும் தோன்றி
எல்லாமொன் றாய்ச்சேர்ந்து வீசுங் காற்று
எரிகதிரோன் குளிர்நிலவாள் நுழையா வண்ணம்
வல்லடர்த்தி இருள் சேர்ந்த தென்பாம் காடே!
மனிதகுல முதல்தலையோர் வாழ்ந்த வீடே!

காட்டிலுள்ள நன்மரங்கள் வீடாய் மாறும்
கனிகளெலாம் நமக்குணவாய்ச் சுவை கொடுக்கும்!
பாட்டிசைக்க நமக்கெல்லாம் கற்றுத்தந்த
பறவை வருந்தும் தம்மின் கூட்டில் வாழுந்து
ஆட்டத்தை மயில் பாம்பு மானின் கூட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றிடம் நாம் கற்றோமே: எண்ணிப்பார்த்தால்
காட்டிலுள்ள ஒவ்வொன்றும் பயனை நல்க
நாட்டிலுள்ள நாம்யார்க்கும் பயனற்றோமே!

நன்பகலில் காடுபெறும் இருளே இன்று
நந்தமிழின் இருளாம் நள்ளிரவுப் போதில்
சொன்ன அந்த காட்டினிலே சேரிருட்டுத்
துயருறு நம் தமிழ்க்குலத்து வாழ்விருட்டே!
நண்பகலில் நள்ளிரவில் அமைதியின்றி
நடுக்காட்டில் பல சத்தம் கேட்டல் போல
ஒன்றுபடும் குணமில்லாத்தமிழ் மக்கள்
உறையுமிடத்தில் நாளும் சத்தம் கேட்கும்

பெண்ணவளின் மேனியிலே சேர்ந்த ஆடை

பிடிப்பாக உடல் தழுவி இருத்தல் போன்று
வன்மரத்தோடிணைந்தபடி கொடிகள் ஏறும்
வளர்ந்தபெரு மரங்களின் வேர் நீண்ட பக்கம்
நின்றிருக்கும் மர வேரில் நன்றாய் பின்னும்
நினைத்த படி தரையிற் படர் கொடிகளுள்ளே
சென்று விளையாடும் சில உயிர்கள்! தாயைச்
சேர்ந்திருக்கும் பிள்ளை விளையாடல் போன்று!

மானமுள்ள வாழ்க்கைக்குக் கவரிமானே
வாய்த்திடு நல் உவமை யென்பார்! அஞ்சாமைக்குக்
கானகத்துப் புலி சிங்க வாழ்வைச் சொல்வார்!
காதலுக்கும் கற்பிற்கும் அன்றில் பண்பே
வானகத்தார் பண்பினுக்கும் மேலாம் என்பார்
மானிடர்க்கு வாழ்வுநெறி கற்றுத் தந்த
கானகமே! என்னகமே! குளிர்ந்த நெஞ்சால்
கவின்தமிழால் வாழ்த்துகின்றேன் வாழ்க! வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02. வரலாற்றுக்கு முன்னர் இந்தியக்காட்சி

"உலக அலுவல்களிலிருந்து ஒய்வு பெற்று தம் முழு நேரத்தையும் மெய்யியல் துறைகளிலும் இலக்கியத் துறைகளிலும் செலவழிக்கும் வெறும் கல்வியறிவாளரான ஒருவரை இந்தியாவில் வாழும் ஐரோப்பியரிடைக் காண்பதரிது." (Asistick Researches)

இந்தியாவில் வரலாற்றுக்காலம், வரலாற்றுக்கு முந்திய காலம் என்பவற்றுக்குள்ள வேறுபாடு தனிமுறையில் மயக்கம் தரும் ஓர் அம்சமாகும். என்று பேர் சொல்வது போல் "இந்தியாவில் பல சம்பவங்கள் நடந்ததுண்மை. ஆயின் அங்கு வரலாறென்பதில்லை" என்று ஒருவர் சொல்லலாம். பதிவு செய்யப்பெற்ற இந்தியா வரலாற்றுக் காலம் என்று சொல்லப்படும் பருவங்களுள் இயைபுடைய ஒரு கால வரன்முறை அமைப்பொன்றை ஆக்க முயலும் போது மேற்கூறிய பொதுப்பாடான கூற்றின் உண்மையை ஒருவர் உணர்வர். எனினும் எவ்வகை இலக்கியப் பதிவுகளிலும் அகப் பட முடியாப் பண்டை இந்தியப் பண்பாட்டுப் பருவங்கள் உள்ளன. பொதுவாக, மேற்காசியாவின் வரலாற்று முற்காலம் கி.மு 3000 பின் உடன் தொடர்ந்த நூற்றாண்டுகளில் மெசப்பொற்றே மியா, இரானின் அயற்பகுதி, எகித்து முதலிய இடங்களில் எழுதுங்கலை தோன்றவும் முடிகின்றது. எழுதுங்கலையுடன் குல முறைப் பதிவுகள், அரசர் வரிசைகள் அவை போன்றவை தோன்றுகின்றன.

இவை பற்றிய விவரங்களில் பிணக்குகளிருப்பினும், கிறித்து ஊழிக்கு முந்திய செவ்விய ஆண்டுகள் வரிசையிலமைந்த, ஓரளவு நம்பிக்கைக்குகந்த, காலவரன்முறைக்கு ஓர் ஆதாரமாக இவை உள்ளன என்ற அளவில் இவற்றிற்கு நாம் விளக்கமளிகலாம். ஆயின் இந்தியாவில் கி.மு. இரண்டாம் மூன்றாம் ஆயிரத்தாண்டுகளில் எழுதுங்கலை அறியப்பட்டுப் பயிலப்பட்டு வந்ததாயினும் குறித்த எழுத்துமறை இன்னும் தெளிவுபடுத்தப்படாதுளது. இதைப் படைத்த நாகரிகமும் மினோன்கிறீற்றைப் போல் வரலாற்றுக்கு முந்தியது. இதுவும் எழுத்தறிவுடையதாயிருந்ததெனினும் வாசித்து விளங்க முடியாத ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்து முறையைக் கொண்டிருந்தது. இவ்விந்திய எழுத்துமறை கி.மு.1500 வரை பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஆயினும் இதன் பின் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட அசோகன் பொறிப்புக்கள் வரையுள்ள காலம் கல்லிலோ தொடர்புகளில் நாம்தங்கியிருக்க வேண்டியிருக்கிறது. இங்கு பதிவு செய்யப்பெற்ற வரலாறு அறிவறிந்து கடைப்பிடிக்கப் பெற்ற ஓர் ஒழுங்கு முறையாயிருந்தது. இதில்லா வேளைகளில், நாம் பல நூற்றாண்டுக்காலமாக வாய்முறையாக வந்த தொல் கதை இலக்கியங்களில், அல்லது வழிபாட்டு இலக்கியங்களில், தங்கியிருக்க வேண்டியுள்ளது.

எனவே வரலாற்றுக்கு முந்திய இந்தியா எனும் பொழுது, அது அதன் விரிவான பொருளில், பழைய கற்காலந் தொடங்கி கிறித்தூழிக்கு அண்மையிலுள்ள காலம் வரை இவ்வுபகண்டத்திலிருந்த எல்லா மனித சமுதாயங்களையும், சில வேளைகளில. இவ் வெல்லைக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களிலிருந்தவரையும் அடங்கும். எனவே இந்தியாவின் வரலாற்று முன்னரைக் கண்டறிவதும் விளக்கம் அளிப்பதும், பதிவு செய்யப்பெற்ற வரலாறு தோன்று முன் ஐரோப்பாவின் மனித வளர்ச்சியை ஆராய்வதற்கு எடுத்துக்கொண்ட வழிகளைப் பின் பற்றியமைதல் வேண்டும்.

இவ் வரலாறு இயல்பாகவே இப் பிரதேசம் உரோமப் பேரரசுடன் இணைக்கப்பெற்ற பின்னரே தொடங்குகிறது. தொல் பொருளியல் கலை நுண்மைகளான இவ் வழிவகைகள், இன்று அவை உள்ள தெளிவான விஞ்ஞானப்பாங்கில் மிக அண்மையில் தோன்றியனவாம் எனினும் இவற்றுட் பல வழி வகைகளைப் பதினெட்டாம் நூற்றாணடுக்குப் பின்னர் தொடங்கி ஆங்கிலேயர் அறிந்திருந்தனர். வரலாறு பற்றிய எண்ணக் கரு, வரலாற்றுராய்ச்சி முதலியவை உட்பட ஐரோப்பியச் சிந்தனை முறைகளை இந்தியாவுட் புகுத்தினேரின் தலையாயபற்று, கலவியோடியைந்தாயிருக்கவில்லை.

எனினும், இத்தகைய துறைகளின் பயனை நயக்கவும், கடினமான கால நிலை இயைந்த இடத்தில் இலுவல் மிகுந்த தம் தொழில் வாழ்வில் வரும் ஓய்வு நேரங்களில், அத்துறைகளில் தாமே ஈடுபடவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கல்வி கூடிய அளவில் விரிவான ஒன்றாயிருந்ததுண்மையே. சேர்வில்லியம்சு யோன்சு, சிராம்பூர் கேரி போன்ற பெரியார், கீழைநாட்டு மொழிக்கல்வி, ஒப்பியல் மொழி நூல் துறைகளுக்கு ஆற்றிய பெரும் பணி ஓரளவில் தொழின் முறையானதே ஆயினும் முறையானதே ஆயினும் தூய கல்விப் பண்பு அதில் உளங்கொளப்படாதிருக்கவில்லை.

தொழின் முறையானதென்பது இங்கு விவிலிய நூலை மொழிபெயர்த்ததும் இந்துச்சட்டத்தைக் கற்றறிந்ததுமாம். வங்காள ஆசிய சங்கத்தை நிறுவியது இந்நியாவில் பழைமை பாராட்டுதலுக்கு ஓர் நிறுவகம் அளித்ததாகும். அதல்லாமலும் இது அக்காலத்தில் மெய்யியல் என்று வகுபடக்கூடிய ஆய்துறை அம்சங்களுக்கும் ஓர் இடம் அளித்தாகிறது. இப்பழைமை பாராட்டல் இந்தியாவின் எப்பண்பாட்டைப் பகுதியையும் வரலாற்று அல்லது வரலாற்று முன்னர் பகுதியையும் ஆராயும் சிந்தை கொண்டிருந்தது. ஆயின், பண்டைய பிரிட்டிசுக் குடியிருப்புக்கள் வங்காளத்திலிருந்தமையாலும், இப்பகுதி வரலாற்றுக்கு முந்திய தொல்பொருள் களவில் அக்காலத்தில் முற்றும் அறியப்படாத ஒரு கபுதியாக விளங்கினமையாலும், சிதைவுகள் யாவற்றையும் இங்குள்ள இயற்கைத் தாவரவளம், ஒரு பத்தாண்டுக் காலத்துள் புலப்படத வாறு செய்தமையாலும், வெளிப்புலங்களிலிருந்த இந்தியத் தொல் பொருள்களை ஆராய்வதற்கு மக்களிடை ஆர்வம் இல்லாமற்போய் விட்டது.

இதனால் வங்காளத்திருந்த பழம்பொருள் கல்லூரியின் பெரும்பணி என்றும் மொழிக்கல்வியில் ஆற்றிய அளப்பரும் தொண்டாவேயிருக்கும். வெளிப்புலத்துத் தொல்பொருளியலளவையும், தொன்மையான நினைவகங்களை, அவை வரலாற்றுக்கு முன்னராள மண்வேலைகளாயிலென் நடுக்காலக்கோயில்களாயிலென், பதிவு செய்தலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கற்றறிவாளரான ஆங்கில மேன்மக்களின் பொழுதுபோக்காக இருந்தன. எனினும் இந்தியா இங்கிலந்தன்று. மேற்குக் கோட்டு மலைகள் வில்சயரிலிருந்து மென்னையான மேய்ச்சல்சாரல்களல்ல. இங்குபிரயாணம்இடர்தருவதாயும் அபாயம் நிறைந்ததாயுமிருந்தது. நாடு அளந்து படம் வரையப்படாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுயிருந்தது. நகரிடைத் தூரங்கள் மிக நீண்டனவாயிருந்தன. எனவே படைஞரிடையும் கம்பனிச் சேவையாளரிடம் இத்தகைய துறைகளில் கவற்சி கொண்டோர்இருந்தரெனினும், சூழ்நிலைகள் மாறிவரும் வரைக்கும் தொல் பொருளியல் புலவேலை பொறுத்திருக்க வேண்டியிருந்தது என்பதில் ஆச்சியமொன்றுமில்லை.

வட மேற்கிந்தியாவின் வரலாற்றுக்கு முன்னரான பெரும் நாகரிகம் அக்காலத்திற்கே சிறப்பாக உரிய எந்திரத்தொழிலான இரும்புப்பாதை அமைத்தலில் காட்டப்பெற்ற விக்ரோறியா காலத்து ஊகினுள் தற்செயலாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இது ஓர் அதிசயமே தற்செயலாகவே அச்சந்தர்ப்பங்களையும் நாம் அறிந்தோம். அவற்றைஇங்கு கூறுதல் பயனுடைத்து. 1856 இல் இரு சகோதரர்கள் கராச்சியிலிந்து இலாகூருக்குரிய கிழக்கிந்திய இரயில் பாதை அமைத்தலில் ஈடுபட்டிருந்தார்கள். யோான் என்பவரும் வில்லியம் பிறன்றன் என்பவருமே இவர்கள். யோான் தென்பகுதிக்குப் பொறுப்பாயிருந்தார். மற்றையவர் பஞ்சாபில் முல்தானிலிருந்து வடக்கு நோக்கிச் சென்ற பகுதிக்குப் பொறுப்பாயிருந்தார்.

ஓய்வு பெற்ற பின் யோான் என்பார் தம் பேரப்பிள்ளைகளுக்காகதம் பழம் நினைவுகளை 1812 இலிருந்து 1899 வரை நடந்தவற்றை எழுதிவைத்தார். இதில் அவர் தாம் அமைத்த இருப்புப் பாதையிலிருந்தும் பிராமயபாத் என்னும் இடிந்த பழைய நகர் ஒன்று அண்மையிலிருந்ததென்று கேள்வியுட்டதாகக் கூறுகின்றார். இருப்புப் பாதைக்கு எவ்வாறு அடி அணைப்பு அமைக்கலாம்மென்று நான் மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். நான் கேட்டதெல்லாம் உண்மையாயின் செங்கட்டிகளால் கட்டப்பெற்ற இந்நகர் இவ்வடியரண்அமைப்பதற்கு ஏற்ற ஓர் சுரங்கமாக அமையும்.' எனறு அவர் எழுதியிருந்தார். எனவே கடுக்காலத்திற்குரியதான பிராமினபாத் எனும் இந்நகர் உண்மையில் ஈவிரக்கமில்லா இந்த ஆங்கிலேய எஞ்சினியரால் இருப்புப்பாதை அமைப்பதற்காகக் கொள்ளையடிக்கப்பெற்றது.

முதல்தான் இலாகூர் இரும்புப்பாதை பிறிதொரு பண்டைய நகரிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையிலேயே இருந்தது. இது அப்பொழுது ஒரு வடிவமுமில்லாத பாரியதூசு படிந்த திடற்கும்பமாக விளங்கியது. இதன் ஒரு பகுதியிலிருந்த செங்கட்டிகள் அத்தலத்திலேயே, இப்பொழுது அரப்பா எனப்படும் நகர் கட்டுவதற்காகக் கொள்ளையடிக்கப்பட்டன. இருப்புப்பாதைக்கு அடியரணமைப்பதற்கு எவ்வாறு பொருள் பெறலாமென்னும் அற்புதமான கருத்தை வில்லியத்திற்கு யோன் கூறியிருத்தல் வேண்டும். வரலாற்றுக்கு முன்னர் உரிய பஞ்சாபின் ஒரு நகரான அரப்பா பிரமினபாத் போல் ஈவிரக்கமின்றிக் கொள்ளையடிக்கப்பட்டது. இதன் புகை வண்டிகள் நூறு மைலுக்கு மேலான தூரம் மூன்றும் ஆயிரத்தாண்டிற்குரிய செங்கட்டிகளால் அமைக்கப்பெற்ற ஓர் உறுதியான அடிப்படையில் ஓடுகின்றன. செங்கட்டிகளால் அமைக்கப்பெற்ற ஓர் உறுதியான அடிப்படையில் ஓடுகின்றன.

செங்கட்டிகள் களவெடுக்கப்பட்ட காலத்தில் பல்வகைப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றுள் மிக விசித்திரமானவற்றை வேலையாட்களளும் எந்திரிகளும் தம்முடன் வைத்துக்கொண்டனர். தொல்பொருளியலளவையோடு பிறன்றன் கொண்ட தொடர்பு இத்துடன் நிற்கவில்லை. கராச்சியில் பிறன்றன் விழைந்தோர் படைக்குத் தலைவனாக விளங்கினார்.

தாமே குறிதவறா வீரனாக விளங்கிய படியால் மிகத்திறனை துவக்குப் படையொன்றை அவர் அமைத்தார். இவர் படை அங்கிருந்த தொல்படையினருடன் பல முறையும் போட்டியிடுவதுண்டு. இத் தொல்படையின் ஆணையாளரான தளபதி, விழைந்தோர் படை பலமுறையும் போட்டியில் வெற்றி ஈட்டியதைக் கண்டு சிறிது மனம் வெதும்பியதுண்டு. இவர் பெயர் கன்னிங்ஙாம் ஆகும். இவர் 1861 இல ஓய்வுபெற்ற பின் வட இந்தியப் பகுதிக்குத் தொல்பொருளியலவை இயக்குநர் நாயகமாக நியமிக்கப்பட்டவர். பத்தொன்பதாம் நூா ற்றாண்டிற்குரிய இந்தியத் தொல் பொருளியலளவையில் பெரும்புகழ் பெற்றவருள் தளபதி கன்னிங்ஙாமும் ஒருவர்.

பிறன்றனின் கொள்ளை நடைபெற்றுக் கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமான 1856 இல் கன்னிங்காம் அரப்பாவைச் சென்று பார்த்தார். வேலையாட்களிடமிருந்து இவர் பல பழம் பொருள்களை சேர்ந்தார். இவற்றுள் பொறிப்புக்கள் கொண்ட சுதீற்றைற்று இலச்சினைகளும் இருந்தன. இவற்றின் வகையினவே வரலாற்றுக்கு முன்னரான இந்து நதி நாகரிகம் பஞ்சாப் நாகரிகம் ஆகியவற்றிற்குச் சிறப்பானவையென்று இப்பொழுது பலராலும் கொள்ளப்படுபவை. இவ்விலச்சினைகளில் தெளிவில்லா ஓர் எழுத்து முறையும் எருத்துருவும் காணப்பட்டன. இவ்விலச்சினைகள் தாம் அறிந்த இந்தியப் பழம்பொருள்களின்றும் புறம்பானவையென்பதைக் கன்னிங்காம் உணர்ந்தார். இவை மிகப் பழையவை என்றும் முக்கியம் வாய்ந்தவையென்றும் அவர்க்குப் புலப்பட்டது. இதன் பின் எழுபது ஆண்டுகளுக்குப் பின்னரே இவற்றின் சிறப்பு உணரப்பட்டது. அரப்பாத்தலத்தினுல் பெயர் கொண்ட நாகரிகம் யாதென உணரப்பட்டுத் தெளிவாக்கப்பட்டது.

1859 இல் கன்னிங்காம் அரப்பாவைச் சென்று பார்த்தபின் இடாவின் எழுதிய 'இனங்களின் தோற்றம்' என்னும் நூல் வெளியிடப்பட்டது. அதே ஆண்டில் சேர் யோன் எவான்சு புவிவரலாற்றியலாளரான பல்கனர், பிரஸ்ரவிக் ஆகியோருடன் அபேவில் எனும் இடத்தைப் பார்க்கச் சென்றனர். இங்கு இறந்தொழிந்த முலையூட்டிவகைகளுடன் காணப்பட்ட மனிதனால் செய்யப்பட்ட தீக்கல் உபகரணங்கள் புவி வரலாற்றியன் முறையில் தொன்மைவாய்ந்தன என்பதில் அவர்கள் உறுதியாய் நம்பினர். 1863 இல் லயல் என்பார் 'மனிதனின் தொன்மைக்குரிய புவி வரலாற்றில் சான்று' என்னும் தம் நூலை வெளியிட்டார். ஐரோப்பாவில் பழஞ்சில மனிதன் என்பான் ஒருவன் இருந்தான் என்பது உணரப்பட்டது. ஆயின் அவ்வாண்டிலேயே புவிவரலாற்றியலாளான புறூசு புட் என்பார் இந்தியாவின் முதல் பழஞ்சிலை உபகரணத்தைச் சென்னைக்கண்மையில் கண்டார்.

பழைய உலகின் முன்னைக் கற்காலப் பண்பாடுகள், அடிப்படையில், ஒற்றுமையான பண்புகள் கொண்டவை என்னும் கருத்திற்கு ஆதாரமான முதற்சான்று இதிலிருந்தும் உதயமாயது. இதன் பின்னரும் தொடர்ந்து பல கண்டுபிடிக்கப்பட்டன. இவையும், அக்காலத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவிய புவிவரலாற்றியலறிவு தொல்பொருளியலறிவு ஆகியவற்றிலிருந்து அளவிற்கேற்ப மதிப்பிடப்பட்டு அவ்வளவில் போற்றப்பட்டன. இன்று நாம் இந்தியாவிலிருந்த மிக முன்னைய கல்லுபகரணங்கள் ஏறக்குறைய நான்கு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தன என்று கூறின் அது ஓரளவிற்கு நிகழ்வுடையதாயிருக்கும்.

புட் என்பார் தென்னிந்தியாவில் ஆராய்ச்சி செய்து பழங் கற் காலம் ஒன்றிலிருந்து என்று நிறுவினர். கன்னிங்காம் வட இந்தியாவில் ஆராய்ச்சி நடத்தி பதிவு வரலாற்றிலகப்படாத பண்டை நாகரிகங்கள் அங்கிருந்திருக்கலாம் எனக் காட்டினார். இதனால் இந்தியாவின் வரலாற்று முன்னரைப் பற்றிய அறிவு ஆரம்பமாயது. இதன் பின்னர் இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பழம் பொருள் ஆய்வு, வரலாற்றூழிகள் எனப்படுவனவற்றைச் சார்ந்த மிகச் சிக்கலானவற்றை விளக்குவதில் ஈடுபட்டது. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவினுள் போக்குவரத்து நல்நிலைமையடைந்து அரசியல் நிலைமை அமைதி பெற்றதெனினும் தொல்பொருளியலளவை வேலைகள் வளர்ச்சியடைவதற்குப் பதிலாகக் குன்றின.

இந்தியாவிலிருந்த பிரிட்டிசாருள்ளே சேர் வில்லியம் யோன்சு, கன்னிங்காம் போன்றரின் திறனும், பல்வேறுப்பட்ட மன நாட்டமும் உடையவர்கள் இருக்கவில்லை. ஒரு நூற்றாண்டோ அதனிலும் கூடிய காலத்திற்கு முன்னரே இருந்த தலையானோரின் தொல்பொருளியல் முயற்சிகளெல்லாம் ஆங்கிலேயன் ஒருவன் ஊக்கா குடிப்பதைப் போலவும் நாட்டான் ஒருத்தியைக் காமத்திக்கிழக்கிந்தியாய்க் கொண்டது போலவும் காலத்திற்கியையாதனவாகவும் வெறுக்கத்தக்கனவாகவுமாயின போல் தோன்றின.

தொல் பொருளியல் வேலைகளெல்லாம் நல்நிதி பெற அரசுத்திணைக்களம் ஒன்றினுல் வழிநடாத்தப்பெற்றன. இங்கிருந்த பணிப்பாளர் சிலரே இவர்களின் வினை நுண்மையும் ஐரோப்பிய முன்னேற்றத்தைப்பற்றி ஒன்றும் அறியாத இயல்பினதாயிருந்தது. இந்தியத் தொல்பொருளியலளவைத் திணைக்களம் தான் வரையறுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்துள், தன் காலத்தின் முதற் கால் நூற்றாண்டுப் பகுதியில், இந்தியப் பழம்பொருள்கள் பற்றி நல்லளவு ஆராய்ச்சிகள் நடாத்தியது. எனினும் ஆயிரத்துதொளாயிரத்து இருபது வரை அரப்பாவின் சான்றினைக்கொண்டு, கன்னிங்காம் அவர்களால் இருக்கக்கூடும் என்று கருதப்பெற்ற வரலாற்று முன்னர்த் தலங்களைப் பற்றி, அதிகம் அத்திணைக்களம் அக்கறை கொள்ளவில்லை.

1922 இல் அரப்பாவோடு இணைந்த சிந்திலுள்ள மொகஞ்சோதாரோ நகர் என்பதொன்று உளது என்பதை அறிந்து அவ்வாண்டில் அங்கு பொருளியலளவைத் திணைக்களத்தைச் சார்ந்த காலஞ் சென்ற திரு. ஆர்.டி.பனேர்சி அவர்களுக்கே உரித்தாம். அரப்பாவில் ஈர் ஆண்டுகளுக்கு முன் தயாராம் சகாணி நெறிப்படுத்த வேலைகள் ஆரம்பமாகியிருந்தன. இவ்வீர் இடத்து வேலைகளையும் அக்காலத்தில் இந்தியத் தொல்பொருளியல் இயக்குநர் நாயகமாயிருந்த சேர் யோன் மாசல் அவர்கள் இணைத்து நடாத்தினார்கள்.

மொகஞ்சோதாராவிலும் அரப்பாவிலும் அகழாய்வுகள் தடைப்பட்டு பல பருவங்கள் தொடர்ந்து நடைப்பெற்றன. சிந்துத்தலத்தில் 1922 இலிருந்து 1931 வரை நடைப்பெற்றன. பஞ்சாபிலுள்ள மிக வடபாலிருந்த தலத்தில் 1920 இலிருந்து 1921 வரையும் பின்னர் 1933 இலிருந்து 1934 வரையும் நடைபெற்றன. பெருமளவில் நடைபெற்ற இவ்வேலைகளோடு, மேற்காசியர்வில் பேரகழ் வாய்வுகள் நடாத்திய காலஞ் சென்ற சேர் ஓரல் ஸ்ரீன் என்பார் பிரிட்டிசு இந்தியாவின் மிக மேற்குக் கோடியிலிருந்தும், நன்கறியப்படாது இருந்ததுமான, பலுக்கித்தானத்தில் வரலாற்று முன்னர்த் தலங்கள் இருந்தனவோ என்றறிய ஆய்ந்தறிய முயன்றார்.

1926-27 வரை உள்ள காலத்தில் அவர் வடபலுக்கித்தாத்திற்கும் 1927-28 வரை உள்ள காலத்தில் தெற்கு பலுக்கித்தாத்திற்கும் பயணஞ் செய்து வட கிழக்கிந்தியாவின் வரலாற்று முன்னரை, இரான் மெசப்பொற்றேமியா ஆகிய இடங்களிலிருந்த பண்டை நாகரிகப்புலங்களோடு இணைப்பதற்கு மிக முக்கியமான சான்றுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கக்கூடிய பல தகவல்களைச் சேர்த்தார்.

ஸ்ரீன் மேற் கொண்ட பயணங்கள் யாவும் முக்கியமாக உளவறிவதற்காகவே நடைப்பெற்றன. இங்குமாங்குமாய்ச் சிற்றகழிகள் தோண்டியதைத் தவிர அவர் வேறு பெரும் அகழ்வுகள் நடாத்தவில்லை. அப்பொழுது பழைய குடியிருப்புகளைச் சுட்டிக்காட்டுவனபோல் மேற்பரப்பில் காணப் பெற்ற பொருள்களையே அவர் சேகரித்தார். இவை பெரும்பாலும் மிக முக்கியமாக விளங்கிய கல ஓடிசல்களே. இவை தொல்பொருளியலார் பண்டைக் கிழக்கை அறிவதற்குப் பெரிதும் உதவின. ஆயினும் ஆகிரிவ்சு என்பார் 1925 பலுக்கித்தானில் ஓர் இடுக்காட்டையும் ஒரு குடியிருப்பையும் பாத்தளவில் அகழ்ந்தாய்ந்தார். இவ்வகழ்வில் அகப்பட்ட சான்றுகள் ஸ்ரீன் அவர்கள் கண்ட வியக்கத்தக்க முடிவுகளுக்கு ஆதாரமாயமைந்தன.

இந்தியாவில் தொல்பொருளியல் வெளிப்புலவேலை குறைபாடுடையதாக விளங்கவில்லை. நற்றிறன் வாய்ந்த இளந்தொல் பொருளியலாளரான என.சி.மசூம்தார் அவர்கள் 1927 இலிருந்து 1931 வரை உள்ள காலத்தில சிந்திலும் இந்துநதி வெளியிலும் மிக விரிவான அளவைகள் நடாத்தினார். அப்பொழுது அவர் அரப்பா, மொகஞ்சோதாரா ஆகிய இரு நகர்களினது ஆதிக்கத்திற்கு உட்பட்ட பிரதேசத்துள் இருந்த சிறு வரலாற்று முன்னர்க் குடியிருப்புக்களின் பரப்பினை வரையறுத்து, முக்கிய சில அகழாய்வுகளையும் நடத்தினார். 1938 இல் அவர் புதிய வெளிப்புல வேலை நடாத்தும் பொழுது கிர்தார் மலைப்பகுதியில் கொள்ளைக்காரரால் கொலை செய்யப்பட்டார்.

இன்னொரு பெரிய அகழாய்வு வடமேற்கு இந்தியாவிற்குரிய ஒரு வரலாற்று முன்னர்தலத்தில் மேற்கொள்ளப்பட்டது. இது சிந்திலுள்ள சானுதாரோ எனுமிடமாம். இங்கு தோண்டல் நடாத்தியவர் காலஞ்சென்ற ஏணசு மக்கி ஆவார். இவர் 1935-36 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பிந்திய அகழாய்வுகளுக்குப் பொறுப்பாயிருந்தார். அரப்பா நாகரிகத்தின் இறுதி நிலை பற்றியறிவதற்கு மிக முக்கிய சான்றுகள் இங்கு கிடைக்கப்பெற்றன. இவ்விடத்து நாகரிகம் இப்பொழுது அரப்பா நாகரிகம் என்ற பெயரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது.

1930 இன் பிற்பகுதியில் வட மேற்கிந்தியாவின் வரலாற்று முன்னர்க் காலம் பற்றிய அறிவு இவ்வாறைய நிலையிலிருந்தது. பஞ்சாப்பிலும் சிந்திலும் இரு பெரிய நகர்களில் மிக விரிவான அகழாய்வுகள் நடைபெற்றன. ஒரு சிறு நகரிலும் இவ்வாய்வு நடைபெற்றது. மசூம்தார், ஸ்ரீன் ஆகிய இருவரின் ஆய்வுகளின் பயனாக பல்வேறு வரலாற்று முன்னர்ப் பண்பாடுகளுக்கு உரிய புவியியல் பரப்பைப் பற்றி நல்லதொரு அறிவு தோன்றியது. 1939-45 வரை நடந்த போரின் முற்பகுதிக் காலத்தில் இராசபுதனத்திலும் லசுபேலாவிலும் ஸ்ரீன் இன்னும் பல கண்டுபிடித்தார் இதன் பேறாக, பல்வகைப் பிரதேசப் பண்பாடுகளின் பரவல் பற்றிய எம் அறிவு விரிவடைந்தது.

இடர் நிறைந்த சூழலில், நிலவுதற்குரிய தரையில் நடாத்திய வெளிப்புல வேலைகளில் வெற்றியீட்டியமை என்றும் புகழ்ச்சிக்குரிய செயலே. ஆயினும் எங்கள் ஆய்விற்கு வேண்டிய பிற்களச் செய்திகளை அளித்திருக்க வேண்டிய அகழாய்வுகளைப் பற்றி நாம் அவ்வாறு சொல்வதற்கில்லை. இந்தியர் ஈட்டிய செய்திகளைச் செவ்விய முறையில் மதிப்பிட வேண்டுமெனில் குறை நிறை கூறுதல் தவிர்க்க முடியாதது மன்றி இன்றியமையாததுமாம்.

மொகஞ்சோதாரோவிலுள்ள நகரமைப்பு, வீதிகள், வீடுகள், வடிகால்கள் முதலியவை பற்றிய பொது உண்மைகளுக்கு, அவை பற்றிய விவரங்கள் நிறைவற்றவையாயினும் எங்களிடம் ஏராளமான சான்றுகள் உள்ளன. அல்லாமலும் அங்கு கடைப்பிடித்த அகழாய்வுகளுக்குரிய பெருவளவிலான வழிமுறைகளில்லாவிடின் இந்து நதிப் பள்ளத்தாக்கின் பெருநகர் நாகரிகத்தைப் பற்றிய அறிவு உதயமாயிருக்க முடியாது. ஆயின் 1931 இலிருந்து 1943 வரையுள்ள காலத்தில் அரப்பா, மொகஞ்சோதாரோ, சானுதாரோ பற்றி மனங் கவரும் எட்டு குவாட்டோத் தொகுதிகளில் வெளியிடப்பெற்ற பதிவுகள் 1890 இல் ஐரோப்பியத் தொல்பொருளியலவையில் ஏற்படுத்தப் பெற்று 1920 தொடக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாகப் பயின்றுவரும் தொல் பொருளியல் நியமங்களை அணுக என்று நாம் சொல்வதில் இழுக்கின்று. ஐரொப்பிய வினை நுண்மைகளின் உயர் நியமங்களில் துறை போகியவரும் அவற்றை நன்முறையில் கடைப்பிடிப்பவருமான ஒரு தொல்பொருளியலார் அண்மையில் இந்தியாவில் நடாத்திய அகழாய்வுகளில் இவ்வகை நியமங்களையும் வழிவகைகளையும் கடைப்பிடிப்பதில் இடர்பாடுகள் இல்லையென்பதை சிற்றளவில், எனினும் நன்முறையில், எடுத்துக்காட்டியுள்ளார். 1945 இலிருந்து 1948வரை உள்ள காலத்தில் பேராசிரியர் ஆர்.இ.மோட்டிம வீலர் இந்தியத் தலங்களில் நடாத்திய அகழாய்வுகளில் பழைய முறைகள் அறவே கைவிடப்பட்டன.

இதனால் படையாக்கங்களைக் கணிப்பில் எடுத்துக் கொள்வது கைவிடப்பட்டு குறித்த ஒரு தரவு மட்டத்திலிருந்து அளவெடுத்து மட்டங்கள் இமைக்கப்பெற்றன. வீலரின் சொற்களில் கூறுவதனால் இந்நம்பரும் முறையினுள் இந்துநதிப் பள்ளத்தாக்கின் படையாக்கங்கள் எனப்படுபவை. உள்ளிடத்து நோக்கலினாலன்றி வெகுதூரத்திலிருந்த கராய்ச்சிக்கடல் மட்டத்தினுல் ஆட்சிப்படுத்தப்பட்டன.

படையாக்கம் என்பது நன்முறையில்லா ஆட்சிப்படுத்தப்படாத பெருவகழ்வாய்வுகளில் செவ்விய நோக்கலைக் கைக்கொள்ள முடியாமற் போனதற்காக, எகிப்து, மெசப்பொற்றேமியா ஆகிய நாடுகளின் பெரும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளின் வண்ட ல்மண் வெளிகளில் கண்டுபிடித்துக் கடைப்பிடித்த ஒரு பழம் முறையாகும். இப்பொழுதுள்ள வெளிப்புலத் தொல்பொருளியளவையின் வினை நுண்மையில் இதற்கிடமில்லை அரப்பா நகரிணிலே இதுவரை அறியப்படாத காப்புக்களே 1946 இல் அகழ்ந்தாய்ந்த பொழுது நகரைப் பற்றிப் புதுக்குறிப்புக்கள் தோன்றலாயின. இவவாய்விலிருந்து இத்தலத்தின் படையமைவு பற்றிய தெள்ளிய உண்மைகள் முதன் முதலாக நிறுவப்பட்டன.

தொல்பொருளியலில் என்ன செய்யலாம் என்பது பலுக்கித்தானுக்பும் இந்தியாவிற்கும் செய்து காட்டப்பட்டது. புதியவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி வகைகளில் ஓரளவிலாகுதல் பயிற்சி பெறும் வருங்காலப் பணியாளர் இந்தியாவில் இம்மரபினைத் தொடர்ந்து பேணி வருவார்களென எதிர்பார்க்கின்றோம். இவ் வழிவகைகள் இந்தியாவிற்குப் புதியனவாயினும் எங்களுக்குப் பரிச்சயமானவையே. ஐரொப்பியத் தொல் பொருளியலாளரும் கீழைநாட்டுத் தொல்பொருளியலாளரும் தம்முள் பணியாளரையும் கருத்துக்களையும் அடிக்கடி பரிமாறிக் கொள்வதாலேயே நிறுவப்பெற்ற நியமனங்கள் பேணப்பெற்று காலத்திற்கியைந்தனவாய்ப் போற்றப்படலாம். பண்டைநாளில் இந்தியத்தொல்பொருளியளலவைத் திணைக்களத்திற்குப் போதிய நிதி உதவாமைக்கும், அகழாய்வு வினை நுண்மை வளர்ச்சிகளை திணைக்களம் நேர்வற அறிய வைப்பதற்கும் பிரிட்டிசாரே பெருமளவிற் பொறுப்பாவர்.

இந்தியாவிலும் பலுக்கித்தானத்திலும் பொருள்களைச் சேகரிக்கும் முயற்சி நடந்த காலத்திலேயே மேற்காசியாவிலுள்ள மற்றை நாடுகளில் புதிய வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. குறிப்பாக ரானில் 1930 இல் பிரேஞ்சுக்காரரும் அமெரிக்கரும் நடாத்திய அகழாய்வுகளினுல் ரானின் வரலாற்று முன்னர்க்குரிய மறை நிகழ்ச்சிகள் அம்பலமாயின. இக்காலத்தில் இவ்வயரா உழைப்பாளியான சேர் ஓரல் ஸ்ரீன் என்பார். பார்சிலிருந்து ஊர்மியா வாவிவரை குறிப்பிடத்தக்க பல புதிய உளவுகள் கண்டுபிடித்தார். இவை அகழாய்வுகளின் படையாக்கங்களில் காணப்பெற்ற பண்பாட்டுப்பரவலைப் பற்றியவேண்டிய. பல புவியியல் அம்சங்களுக்கு இன்றியமையாச் செய்திகளை, அளிப்பவையாயிருந்தன. ஏலவே 1933 அளவில் பேராசிரியர் கோடன் சைல்ட் என்பார் வடமேற்கு இந்தியாவில் பெற்ற பொருள்களையும் செய்திகளையும், மிகத் தொன்மையான கீழைநாட்டு மற்றைப் பண்பாடுகளோடு கொண்ட உறவுகளோடு சார்த்தி, மிக நுண்முறையில் தொகுத்து விளக்கம் அளித்தார்.

பத்தாண்டுகளின் பின் போரினுல் எழுந்த எதிர்பாரா நிகழ்ச்சிகள் என்னைப் புததில்லிக்கு இட்டுச் சென்றன. இதனுல் சைல்ட் அவர்களின் அடிப்படை வேலையை, இடையிட்ட பத்தாண்டுகளில் ஈண்டிய புத்தறிவினைக் கொண்டு நான் புதிதமைக்க வேண்டியிருந்தது. போரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் இப்பணியைச் சிகாகோவிலுள்ள கீழைநாட்டு நிறுவகத்தைச் சார்ந்த கலைநிதி தொனுவ் மக்கவுன் அவர்கள் தொடர்ந்து நடாத்தி வருகிறார்கள்.

புறாசு புட் அவர்கள் நடாத்திய தலையாய பணியின் பின், 1930 வரை இந்தியக் கற்காலத்தைப் பற்றிய ஆய்வு புறக்கணிக்கப்பட்டு வந்தது. இதன் பின் திரு.மைல்சு பர்கிற்று என்பார் சில தென்னிந்தியப் பொருள்களைப் பற்றி விளக்கமளிக் முயன்றனர். இவர் பணி செய்த காலத்திலேயே வேறு பணியாளர் வட மேற்கில் பழைய கற்கைத்தொழிற் பொருள்களையும் புவிவரலாற்றியல் தோற்றப்பாடுகளையும் ஆராய்ந்து கொண்டிருந்தனர். இதன் பயனாக 1935 யேல் பல்கலைக்கழகமும் கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகமும் கூட்டாக புலஆய்வு நடாத்தச் சென்றன. இவ்வாய்விற்கு டி தெரா என்பாரும் பற்றேசன் என்பவரும் தலைமை வகித்து நடாத்தினர். இவர்கள் வேலைக்கு இவரின் பின் ஆய்வு நடாத்திய மோவியசு என்பாரதும் கிருஷ்ணசுவாமி என்பாரதும் பணி துணையாக அமைந்தது. இவ் வாய்வாளரின் ஆய்வின் பல புவிவரலாற்றியல் அடையல்களோடியமைந்த பழங் கற்கால மனிதனின் மிக முக்கியமன கைத்தொழிற் பொருள்களைப் பற்றி நாம் அறியக்கூடியதாயிருந்தது. இவை இமாலயப் பிரதேசத்தின் ஆற்றுத்தளவரிசைகளில் காணப்பட்டவை. எவ்வகையினும், வட ஐரோப்பாவில் கண்டறிந்த கிரமவரிசையோடு மிக இணைப்புடையன போல் தோன்றுகின்றன.

ஆயினும் இந்தியாவின் வரலாற்று முன்னரைப்பற்றிய எம் அறிவில் ஆங்காங்கு அறியாப் பெரும்பகுதிகள் பல உள்ளன. இப்பொழுது நாம் கூறிய பழங்கற்காலத்துக்கும் பலுக்கித்தானத்தின் மிக முன்னைய குடியிருப்புக்களின் காலத்திற்குமிடையிலுள்ள பகுதி அறியப்படாத பகுதிகளுள் மிகப்பெரியதும் இருள் நிறைந்ததுமாகும். கி.மு இரண்டாம் ஆயிரத்தாண்டின் நடுப்பகுதியில் அரப்பாப் பண்பாடு ஒழிந்து வீழ்ந்தபின் நடைபெற்ற நிகழ்ச்சிகளும் ஒத்த அளவில் இருள் நிறைந்தனவே. இப்பருவமே ஆரியர் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் இந்தோ ஆரியமொழிபேசும் கிளையினர் இங்குற்ற பருவம் என்று மரபுரை பொதுவாகக் கூறும். ஆயின் இந்நிகழ்ச்சிக்கு நேரிய தொல்பொருளியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றில்லை. எனினும் புதிய வேலையும் இற்றை நாள்வரை படைத்துக் கொண்ட வினை நுண்மைகளும் மீண்டும் எம் அறிவெல்லையை விரிவுபடுத்தும் முன், இதுவரை ஆய்ந்தவற்றைத் தொகுத்துக் காணவும் இந்திய வரலாற்று முன்னர் பற்றி இப்பொழுதுள்ள எம்மறிவை மதிப்பிடவும் இக்காலம் நல்ல தருணமாம்.

## குறிப்புக்கள்

இந்தியாவில் நடந்த தொல்பொருளியல் பற்றிய பொதுவான விவத்திற்கு பார்க்க, Revealing India's Past (ed. J.Cumming. 1939) பழஞ்சிலைக்காலம் பற்றிய முன்னே வேலை பற்றி, கிருஷ்ண சுவாமி, Ancient India இல் எண். 3 (1947), 13, குறிப்பிட்டுள்ளார். John Brunton's Book என்பது பேராசிரியர் யே.எச்.கிளபம் என்பாரால் திருத்தி 1939 இல் வெளியிடப்பெற்றது. இந் நூலில் பின்னர் குறிப்பிடப்படும் அகழாய்வுகள் பற்றிய சிறப்பறிக்கைகளை விட இந்தியத் தொல்பொருளியளவையினர் நீள்வரிசையான Memoirs, Annual Reports என்பனவும் வெளியிடப்பட்டுள்ளார்கள். பிற் கூறிய தொடரின் வெளியீடு இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பதிலாக Ancient India எனும் வெளியீடு 1946 இல் தொடங்கி நான்கு பகுதிகள் வெளியாகி உள்ளன. இந்திய, பாக்கித்ததான் அரசுகள் அமைத்தபின் எதிர்காலத்துத் தொல் பொருளியளவை வெளியீடுகள் பற்றி ஒன்றும் அறிவிக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சோழ மன்னன்



இலங்கை மன்னன் இராவணன்



இராவணனுடைய புஸ்பக விமானம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. மன்னன் இராவணன்

இந்தியாவில் நடந்த முந்திய அகழ்வுகளின் நியமம் பற்றி விரிவான விமரிசம் யுஉெடநைவெ ஐனெயைஇ எண் 3, (1947) 143-149 இல் எள்ளது. இதை எழுதியவர் பேராசிரியர் ஆர்.இ.எம். வீலர் ஆவர். இவர் அக்காலத்தில் இந்தியாவில் தொல்பொருளியலளவை இயக்குநர் நாயகமாக விளங்கியவர். இதில் சானுதாரோவைப் பற்றி நான் எழுதிய குறிப்பும் ஒன்று உள்ளது.

இலங்கை வரலாற்றில் பொலன்னறுவை ஆட்சிக் கால கட்டமானது. இலங்கை சமூக சமய கலை பொருளாதாரம் ரீதியில் பரஸ்பர புரிந்துணர்வுக்கு வித்திட்ட வழி வசித்த காலப்பகுதியாகும். இலங்கை வரலாற்றில் அனுராதபுரம் ஆட்சிகாலத்தில் பிற்பகுதி இலங்கையில் சோழ சாம்ராஜ்சியம் காவடியெடுத்து ஆதிக்கம் செய்ய வழி வகுத்த காலப்பகுதியாகும். கி.பி. 993 ஆம் ஆண்டு சோழர் ஆட்சி இலங்கைய ஸ்திரப்படுத்திய சோழர் கால கிரமத்தில் பொலனறுவையை தமது நிர்வாகத் தலைநகரமாக்கி இலங்கையின் பெரும்பாலான பகுதியினை அடிபணிய வைத்தனர் சோழர் பொலன்னறுவையை தம் ஆட்சிப்பிடியில் வைத்திருந்த காலகட்டத்தில் திராவிட மன்னர்களான சோழர் ஜெயந்த மாங்களம் எனச் சிறப்பு பெயரிட்டு ஆட்சி செலுத்தினர் சோழர் இலங்கையில் தம் ஆதிக்கத்தை அரசியல் ஆட்சியினை தென் இந்தியாவின் தஞ்சாவூரின் உயரிய சீரிய வகையில் அரக்சாண்டார்.

ஆட்சி காலம் கி.பி. 1017 தொடக்கம் கி.பி. 1055 காலப்பகுதியாகும் சோழர் சாம்ராஜ்யமானது இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே காலகட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய காலப்பகுதியாகும்.

**பாடல்**

எழுந்துவா மன்னா இராவணா
விழுந்தவன் என்ற எண்ணம்
ஓடவே எழுந்துவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிரவும் வைகறையும் கைகலக்கும்
நேரம் ஒரு சின்ன மணி விளக்குச்
சித்திரப்பூப் பூத்தது போல் எழுந்துவா

மின்னும் விடிவெள்ளி விட்டொளிரல்
காணிரோ சன்னல் திரையில்
சல சலக்கும் பூந் தென்றல்லே எழுந்து வா

இன்னே எழுப்பும் இயல்பறிய மாட்டிரோ
கன்னல் கலிமாவின் கற்பூரச் செஞ்சுடரே
மின்னு விழிப்பாவை விளக்காகக் எழுந்து வா

கன்னியரே காளையரே கண்மலர்வீர்
கண்மலர்வீர் தேடுகின்ற மெய்யறிவும்
மெய்யுணர்வும் நாடுகின்ற தமிழ் மகனே எழுந்து வா

மணியின் ஒளியாய் மாலைத்
தென்றலாய் சத்தியம் நேர்மை சமத்துவம்
சகலமும் தானெனச் சாற்றிடும் தமிழ் மகனே எழுந்து வா

மன்னர் இராவணன் உலகின் பலபாகங்களுக்கும் புஸ்பக விமானத்தில் தான் சென்று வருவார்.

| | |
|---|---|
| இராவணன் தகப்பன் | விஸ்ரவசு முனிவர் |
| தாய் | கைகேகி |
| மனைவி | மண்டோதரி |
| தாய் மாமன் | மாயன் (திருக்கேதீஸ்வர ஆலயத்தை கட்டி |
| வித்தவர்.) | |
| இராவணன் பாட்டன் | புலத்திரின் |
| பாட்டி | தாடகை |
| இராவணனின்தங்கை | சூர்ப்பநகை |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மகன் | நீலமேகம் |
| மகன் | இந்திரஜித் |
| மகன் | அட்சன் |

இவர்கள் யாவரும் விமானத்தில் தான் பிரயாணம் செய்வார்கள்.
(ஆதாரம் வால்மீகி இரமாயணம்)

என்னையே இராவணன் தங்கை
என்ற பின் அன்னையே என்றபடி
வணங்கல் அன்றியே உன்னையே
எண்ணுமோ ஒருவரால்
தன்னையே அறிந்தனள்
தான் என்றார் சிலர். (கம்பர்)



இராவணன் தங்கையை பார்த்து மக்கள் தாயே உன்னை வணங்க நாம் தவம் பெற்றவர்கள் என்றார். சிலர் சூலிய புன்னகை உடையவள் சூர்ப்பனகை சிவனை வணங்கும் குலத்தவர் சிவகுல தலைவன். இராவணனுடைய தாய் கைகேசி, சூர்ப்பனகை தங்கை சிவனுக்கு பூசை செய்கிறார்கள் திருகோணமலை ஆலயத்தில்.

திருகோணமலை நகரத்தில் இருந்து வவுனியா செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையில் கன்னியா வெந்நீரூற்றைத்தாண்டி வரும் பெரியகுளம் பகுதி வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பிரதேசமாகும். திருகோணமலை சோழருடைய ஆட்சியின் கீழ் வந்த பின் இதன் பெயர் இராசராசப் பெரும்பள்ளி என மாற்றப்பட்டிருக்கிறது. இங்கு கிடைக்கப் பெற்ற அதிகளவான அறக்கொடை சாசனங்கள் தமிழ் மொழியில் இருப்பதும் தொன்மையான நாதனார் ஆலயம் அமையப் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது. தற்போது அதை காணவில்லை. திராவிடர் கட்டிடப் பாணியில் அமையப்பெற்ற இக்கட்டிடம் கி.பி. 3ஆம் நூற்றாண்டின் காலப்பகுதியாகும்.

இராவணன் கட்டிய கோயில்களில் ஒன்றாக காணப்படும் சோழநாதர் சிவன் கோயில் இந்தியாவிலுள்ள குஜராத்தின் மேற்கு கரையோரத்தில் "வேரவல்" என்னுமிடத்தின் அருகில் கடலோரத்தில் அமைந்துள்ளது. கி.பி. 1225ல் பாடப்பட்ட செய்யுள்கள் கூறும் ஆலய வரலாற்றில் மன்னன் கஜனி முகமது கொள்ளையடித்த மாபெரும் ஆலயம் இதுவாகும். சோமநாதர் ஆலயம் இராவணனால் வெள்ளியால் கட்டப்பட்டுள்ளது எனவும், இதன் அடிப்படையில் இராவணன் உலகிலேயே மிகப்பெரிய வெள்ளி சுரங்களின் அதிபதியாக இருந்தான் என்பதும் புலனாகிறது. கி.பி.1665 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை இவ் ஆலயம் ஆறு தடைவைகள் முற்றாக அழிக்கப்பட்டு பீனிக்ஸ் பறவை போல் மீண்டும் மீண்டும் எழுந்தது.

மன்னன் இராவணனின் தந்தை விஸ்வரசு முனிவரின் தலைநகரம் வெஸ்ஸகிரிய. இது அநுராதபுரத்தின் காட்டுப்பகுதியில் அமைந்துள்ள பழங்காலத் துறவிகள் மடமாகும். இசுறுமுனிய தேவாலயத்தில் இருந்து அரை மயில் தொலைவில் இது அமைந்துள்ளது.

## பொலநறுவையில் சிவன் ஆலயம்

பொலநறுவையில் கண்டு எடுக்கப்பட்ட இந்து மதவழிபாட்டுச் சிற்பங்கள் சிலவற்றில் ஆங்காங்கே சிங்கள பௌத்த ஆதிக்கத்தை காணமுடிகிறது. தென் இந்தியாவில் சோழர் கால சிற்பங்களை ஒப்பீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து நோக்கும் போது பொலநறுவையில் இந்து சிற்பங்கள் அழகுணர்ச்சியும் இலாவண்யமும் மேல் ஓங்கி காணப்பட்டது. மாந்தோட்டத்திலும் பல அரிய சிவன் மற்றும் உலக மாதாவாகிய பார்வதி தேவிக்கும் கோயில் அமைக்கப்பட்டிருந்தன. கந்தளாயில் 1ம் விஜயபாகு மன்னனால் சிவாலயம் ஒன்று அமைக்கப்பட்டதாகவும் அவ்வாறே விஜயபாகு மன்னனின் மகன் விக்கிரமபாகு மன்னன் உயர்ந்த சிவ பக்தனாக விளங்கினான் எனவும் வரலாறு எடுத்தியம்புகிறது.

"முற்றிய ஞானத்தில் நிலை பெற்றவன் செயல் முற்று முழுமையாய் மேன்மை பெறும் நிறைந்த செயலாற்றுபவன் தீமையை அடையமாட்டான்".

**பாடல்**

தாய் சுமந்த பின் தலைமேல் சுமந்திட்ட
தாய் தமிழ்ப் பாக்கள் தொடர்ந்தினிது
நேயமிக்க நம்மக்கள் காப்பார், நயந்தென்றன்
கைப்பட்டே இராவணா உன் பெயரைச்
சொல்லும் உவந்நது ஈழ மன்னர் இராவணா.

**சிவன்**

திங்களோடு கங்கை முடி சேர்ந்த சிவன் நீயே
திரிபுரங்கள் நீறுபடப் பார்த்த சிவன் நீயே
அண்டத்தை கையில் தாங்கிய சிவன் நீயே
சூசமுதனைப் போரிலுயிர் வாங்கிய சிவன் நீயே
நங்கை கலை மங்கை தவழ் நாவிலயன் நீயே
சிவனார் உந்திரு பூவிலன் நீயே
எங்கும் மூள பரம்பொருளே என்றுமுள
யானை முகப் பொருளே
வந்தேயெனக் கருளே.

(கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமயணக் காலத்தில் மன்னன் இராவணன் திருகோணமலையை தலை நகரமாக கொண்டு இலங்கையை ஆட்சி செய்தான்.

ஞானம் என்பது தெளிவு
தெளிவு என்பது வாழ்வு
வாழ்வு என்பது உண்மை
உண்மை என்பது கடவுள்
கடவுள் என்பது முழுமை
முழுமை என்பது ஞானம்

இவருடைய ஆட்சிக்காலத்தில் இலங்காபுரியில் நீதி வழுவாத மன்னராக இராவணன் ஆட்சி செய்தான். திருக்கோணேஸ்வர ஆலயத்தை தரிசித்தான்.

அற்புத விழிகளாலே
அச்சுதன் முகந்தன் மேனி
அப்படி காண்பதுண்டு
ஆனந்தம் கொள்வதுண்டு
இப்பொழுது அந்த கண்ணை காண
என்னிடம் திருப்பு சிவனே
இருமையும் செழித்து வாழ
இகத்தினில் அருள்வாய் ஈசா
எப்பொழுதும் உன்னை வணங்க
அருள் புரிவாய்

சிவம் செம்மையானது. சைவம் சிவமானது. சிவனையே முழுமுதற் கடவுளாக கொண்ட மன்னர் ஆட்சியில் தமிழிற்கு அமுதென்று பேர். அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிரிற்கு நேர்.

மன்னார் இராவணன் அவர் மனைவி மண்டோதரி மூத்தமகன் இந்திரஜித் இளையமகன் சுகன், அட்சகன் ஆகியோர் ஆலயத்திற்கு சென்று சுவாமி தரிசனம் செய்து விட்டு தன்னுடைய மாளிகைக்கு வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர் இராவணன் வருகை பார்த்து அவர் தம்பி விபிஷணன் மாளிகை வாசலில் நின்று வரவேற்பு நடைபெற்றது.

பாதத்தை கமலம் தாங்க
பல்லுயிர் காற்பாய் நாதத்து
நெடியோன் கொண்ட மன்னர்
இராவணா போற்றி பாதத்தில்
சிரசை வைத்து பணிகின்றேன்
மாதத்தில் ஒரு நாள் கூட மறந்திடேன்
மன்னா போற்றி போற்றி

என்று பாடி அழைத்தனர். அன்று இரவு விருந்து ஒன்று மாளிகையில் நடைபெற்றது. மன்னர் இராவணன், மனைவி மண்டோதரி, மகன் இந்திரஜித், மகன் சுதன், இராவணனுடைய தாய் கைகேயி, படைத்தலைவன் ஜம்புமாலி, மண்டோதரியின் தந்தை மாயன், மாயங்களில் வல்லவனான வித்யுசிகன், பெண்களில் முதன்மையானவள் திரிசடை இவர்களுடன் இன்னும் முக்கியமானவர்களும் விருந்துண்டனர். அன்று முழுநிலா எழுந்து இரவை பகலாக்கியது.

மன்னர் இராவணனின் மாளிகை பொன்னாலான மாளிகை, அங்கு அவன் செந்நிறப் பட்டுடையில் நின்றிருந்தான். இதனை வால்மீகியே சொல்கிறார். மன்னர் இராவணனின் ஆட்சிக் காலத்தில் இலங்கை திருநாடு மிகவும் சிறப்பாக இருந்தது.

இங்கு பத்து தலை என்பது மன்னர் இராவணன் எப்பொழுதும் பத்து விதமாக சிந்தித்து தீர்மானம் எடுப்பதனை வைத்து கூறப்படும் ஓர் உவமையாகும். இவனது படையில் மிக சிறந்த வீரர்களான கரன், தூஷணனும் இவனின் பாதுகாப்பு வீரர்களாவர். அருவுருவத் திரு மேனியான சிவலிங்கத்தையும், கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்க நெறியையும் கடைபிடிப்பவன் இவனாவன். எப்பொழுதும் தனது மூத்த அமைச்சன் சுபர்ஸ்வரன் வார்த்தையை தட்டறியாதவன். அப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவமாக நடப்பவன் மன்னர் இராவணன்.

மாலன் மார்பில் கிறக்கும்
மாங்கலக் கமலச் செல்வி
மரகத மலரில் மொய்க்கும் மாணிக்கச்
சுரும்பு போன்றாய் நீலாமேகம்
போல நிற்கின்ற திருமாலுந்தன்
நேயத்தால் மெய்சிலிர்ந்து
நிகரில்லாச் செல்வம் கொண்டான்
மன்னன் இராவணன்

இராமயணம் குறிப்பிடும் இலங்கை வேந்தனாகிய இராவணன் சிறந்த சிவபக்தனாக விளங்கியவன். இவன் பல ஆண்டுகள் தவம் செய்து சிவ பக்தனாக மாறி பல நல்ல காரியங்கள் செய்தான். அதில் ஒன்று திருகோணமலை சிவ ஆலயம். இவன் சிவபெருமானிடத்தில் கொண்ட பக்தியைப் போன்று தனது தாயாகிய கைகேயிடத்திலும் மிகுந்த அன்புடையவனாக விளங்கினான். இவருடைய தாய் சிறந்த சிவபக்தையாக விளங்கினார். நாள்தோறும் மாவினால் சிவலிங்கங்களை செய்து பூஜிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தாள். இதை கண்ட இராவணன் திருக்கைலாயத்தில் இருக்கும் சிவபெருமான் ஆலயத்தில் பெருமானை தரிசித்து விட்டு சிவலிங்கத்தை பெற்று வந்து தனது தாய் வழிபடுவதற்கு உதவி செய்ய எண்ணினான்.

இலங்கை திருநாட்டின் இராவணன் ஆட்கொண்டு
அருள் செய்யும் சிவனே உன் பாதம்
பணிந்து போற்றி போற்றி
தேனாய் இன்னமுதாய் தித்திக்கும்
சிவபெருமான் போற்றி போற்றி

தாமரை மலர் போன்ற தங்கத் திருமேனியே
போற்றி போற்றி தங்கத் திருமேனியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி போற்றி தங்கச் சூரியனே
தமிழ் வளர்ந்த தகப்பனே போற்றி போற்றி
சோதியாய் நின்றவனே போற்றி
உலகை ஆளும் உத்தமனே போற்றி
உன் அருள் எனக்கு வேண்டும் போற்றி

என்று சிவனை வழிபட்டு இலங்கை திருநாட்டை வந்தடைந்தார். இராமயணக் குறிப்பின்படி இராவணன் மாத்திரமின்றி அவனது மனைவியாகிய மண்டோதரியும் சிறந்த சிவபக்தையாக விளங்கியதை அறிந்து கொள்ள முடிகின்றது. மண்டோதரியின் தந்தையாகிய மாயன் என்பவனால் தான் திருக்கோணேஸ்வர ஆலயம் பரிபாலனம் செய்யப்பட்டதாகவும் மண்டோதரி திருக்கோணேஸ்வரப் பெருமானை அனுதினமும் வழிபட்டதாகவும் அறிய முடிகின்றது. இதை உத்ரகோசமங்கை தலபுராணம் குறிப்பிடுகின்றது. இத்தகைய மண்டோதரியின் சிவபக்தியை அறிந்த சுவாமி மாணிக்கவாசகர் தனது குறிப்பில் கிழ் வருமாறு குறிப்பிடுகின்றார்.

ஏர் தரும் ஏழலதேத்த எவ்வுரு
வந்நன்னுரவாய ஆர்கலி சூழ்
தென்னிலங்கை யழகமர் மண்டோதரிக்கு
பேரருள் இன்பமளித்த பெருந்துறை
மேய பிரானை சீரிய வாயாற்
குயிலே தென் பாண்டி நாடனைக்
கூவாய்

சுவாமி மாணிக்க வாசகர்

இராவணன் சிவன் மீது கொண்ட பக்தியை கண்டு வியந்த திருஞானசம்பந்தர் திருநீற்று பதிவத்திலே "இராவணன் மேலது நீறு" என்று குறிப்பிடுவதன் மூலம் அவனது சிவபக்தியின் உன்னத நிலையை அறிய முடிகிறது. தனது தாயாகிய கைகேயி இறந்த செய்தி கேள்விபட்டு வருந்தி தாயின் அந்தியேட்டிக் கிரியைகளை நிறைவு செய்வதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்ணியாவின் ஏழு வெந்நீர் கிணறுகளை அமைத்து.கிரியைகள் மிக சிறப்பாக செய்தான்.

நீராவி யான நிழலே போற்றி
தேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற கரு முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி
என் தாய் கைகேயியே போற்றி போற்றி
உன் நாமம் ஆயிரத் சிவ நாமம் போற்றும்
போற்றி போற்றி

மன்னர் இராவணன் காலத்தில் இலங்கையில் தமிழ்மொழியை போற்றியும் ஏற்றியும் வழிபடப்பட்டது. இறைவன் விருப்பு வெறுப்பு இல்லாதவர்.

நலமிலன் நண்ணார்க்கு
நண்ணமினார்க்கும் நல்லான்
சலமிலன் பேர் சங்கரன்

என்று மன்னர் இராவணன் எண்ணினான்.

இராவணனுடைய மனைவிக்கும் அவளது பாட்டனுமான மாயவானுக்கும் புத்திமதி சொல்லும் போது புத்திசாலிகள் எப்போதும் தங்களை விட ஆற்றல் மிக்க பலசாலிகளுடன் சண்டை செய்ய மாட்டார்கள் என்று கூறுவான்.

இராவணன் நகரத்தின் நான்கு வாயில்களுக்கும் தளபதிகளை நியமித்தான். கிழக்கு வாயிலுக்கு பிரகஸ்தனும் மேற்கு வாயிலுக்கு பார்சுவனும் நியமிக்கப்பட்டார்கள். படைகளுக்கும் நகரின் மையப்பகுதிக்கும் விருபாட்சன் தலைவனாக நியமிக்கப்பட்டான்.

திருகோணமலையில் இருந்து பார்க்க தெரிவது திரிகூடம் மலை. அதன் உச்சியில் இராவணனின் பொன் வேய்ந்த மாளிகை அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் கொடிகள் விண்ணுலகத்தை தொடுவது போலிருந்தது. அங்கே வடக்கு கொத்தளத்தில் மன்னர் இராவணன் செந்நிறப் பட்டுடையில் நின்றிருந்தான்.

அப்பர் பாசுரத்தை கொண்டு
பெருங்கோயிற்
கரக்கோயில்
ஞாழற்கோயில்
கொகுடிக்கோயிலஇளங்கோயில்
மணிக்கோயில்
ஆலயக்கோயில்

முதலான பலகைக் கோயில்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிவதுடன் கோட்டம், நகரம், மன்றம், ஆலயம், தனி பொதியில் அம்பலம், பள்ளி தானம் முதலிய பல பெயர்களும், ஆலயத்தின் பெயர்களாகக் குறிப்பிடப்படுகின்றன. மன்னர் இராவணன் இலங்கை மண்ணில் பல சிவ ஆலயங்களை அமைத்தான்.

| | |
|---|---|
| கர்ப்பக்கிரகம் | தலை |
| அர்த்தமண்டபம் | கழுத்து |
| மகாமண்டபம் | மார்பு |
| யாகசாலை | நாடி |
| கோபுரம் | பாதம் |

சிவ வழிபாடு உலகம் தோன்றிய நாள் முதலே உண்டாயிற்று என்று ஆய்வாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். சேக்கிழார் பெருமான் சாக்கிய நாயனார் வரலாற்றில் சிவலிங்கத்தின் பெருமையை பாராட்டி உரைத்துள்ளார். சுயம்புலிங்கம் எவரும் உருவாக்காமல் தானாகவே உருவாகியது. இவன் இமயமலை முதல்

இலங்கை கதிரைமலை வரை சிவலிங்கத்தை வழிபட்டான் என்பது வரலாறு. இராவணனின் ஆட்சிக் காலத்தில் இலங்கை முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயமாக இருந்ததாக பல ஆய்வு கட்டுரை மூலமாக காண்கின்றோம்.

திரிகோணத்தின் மூலையில் அக்கினி, சந்திரன், சூரியன் இவை முக்கோணத்தின் மூன்று ரேகைகளாக குறிக்கப்படுகின்றன. முதலாகவுள்ள பதினாறு மெய்களும் இரண்டாவது ரேகையாயிருக்கின்றன. தகரம் முதலாகவுள்ள பதினாறு மெய்களும் மூன்றாவது ரேகையாயிருக்கின்றன. இதனாலேயே திரிகோணம் என பெயர் பெறுகின்றது. இதுவே திரிகோணமலையாக பெயர் பெற்றது. இராவணன் தன் தம்பி விபிஷணனிற்கு ஒரு முறை புத்தி சொல்கின்றபோது. "உலகம் கோபத்திற்கு கொடுக்கிற மரியாதையை பொறுமைக்கு கொடுப்பதில்லை. இதை நீ புரிந்து செயல்படு" என்றான்.

போர்வீரன் அகம்பனன், தளபதி பிரகஸ்தன், அட்சன், கும்பகர்ணன், அதிகாயன், இராவணனின் தந்தை விஸ்வரசு முனிவர், தாய் கைகேயி, தங்கை சூர்ப்பனகை யாவரும் வெஸ்ஸகிரிய சிவாலயத்திற்கு போகபுறப்பட்டார்கள். படைவீரன் தூமராக்கன் பக்கத்தில் நின்றான். வீரன் வஜ்ரமிஷ்டிரன் அமைதியாக இருந்தான்.

இராவணன் தூர இடங்களுக்கு செல்லும் போது புகூஷ்பக விமானத்தில் சென்று வருவார். இலங்கையில் பல பிரதேசங்கள் இராவணனின் ஆட்சிக்கு உட்பட்டதேயாகும். இராவணன் கடவுளை காண வேண்டுமென்று கசிந்து கண்ணீர் மல்கி சிவன் நாமத்தைக் கூறி அழைத்த அவனுக்கு சிவ தரிசனம் கிடைத்தது. எவ்வுலகுக்கும் இறைவனாய் வீற்றிருக்கும் இறைவனது திருவடியையும் கண்டான். இராவணன் எக்கலையையும் எளிதில் கற்க்கும் வல்லமையைப் பெற்றிருந்தான்.

இராவணனுடைய மகன் வில்லாளனார்க்கெல்லாம் மேலானான் மேகநாதன், சுயம்புலிங்கத்தை தனது தந்தையின் நற்பலனிற்காக நிறுவினார். ஸ்ரீசிவபாலயோகிகள் இக்கோவிலைத் ஸ்தாபித்த போது இலங்கை வானொலிக்கு விடுத்த செய்தியில் இவ் ஐதீகம் மெய்யானதென உறுதிப்படுத்தி உள்ளார்கள். இவ்விடத்தையும் ஆசிர்வதித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தாரெனவும் இவ்விடம் இன்றும் காக்கப்படுகின்றது எனவும் நூரளைபில் நிலவும் ஓர் ஐதீகம் கூறுகின்றது. இராவணன் வழிவந்த மேகநாதனால் புனிதமாக்கப்பட்ட இலங்காதீஸ்வரர் ஆலயம்

பால்புரை பிறை நுதல்
பொழிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன்
போல மன்னுக பெரும நீயே!

புறநானூறு பாடல் (91)

இதில் பால் போன்ற வெண்ணிறமுடைய பிறை சந்திரனைத் தலையில் அணிந்த மணி போன்று கறுத்த கண்டத்தை உடைய ஒருவன் சிவனே என்று பாடுகிறார்.

மனித வாழ்வு கடவுள் அளித்த ஒரு ஒப்பற்ற பரிசு, இது மனித உடல் செய்யும் புனித யாத்திரை. இதனாலே இராவணன் பல தீர்த்த தலங்களுக்குச் சென்று வந்தான். ராஜகுணம் உடையவர் நமக்குத் தெரிவிக்கின்றனர். தர்மம், ஞானம், யோகம், தவம் எனும் நான்கினுள் எதை ஏற்றுக் கொண்டாலும் ஒருவன் உயர்நிலையை அடையலாம் என்பதை இராவணன் கடைபிடித்தான்.

சிவ வழிபாடு உலக வரலாற்றில் மிக பழமையானது என்பதற்குரிய சான்றுகளை உலகம் முழுவதும் காண முடிகிறது. பல நாடுகளிலும் சிவலிங்க உருவங்கள் அமைத்திருப்பதன் மூலம் சிவ வழிபாட்டினை முன்னோர்கள் மிகப் பழங்காலத்தில் செம்மையாகப் போற்றி வந்தனர் என்பதை அறியலாம். மொகஞ்சதாரோ, கரப்பா போன்ற இடங்களில் அகழ்வாராச்சியின் மூலம் சிவலிங்கங்கள் பழமை அறியமுடிகிறது.

சிவன் தான் அழியாதவன் அழிக்க முடியாதவன்
நான் உயிருக்கு உயிராகியவன்
நான் ஒப்பிலா ஆனந்தம் நிறைந்தவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுக் கூறப்படுகின்றது. நாகரிகம் கிளர்ந்தெழுந்தும் புதிய பண்பாடுகள் கலாசாரங்கள், வழிபாடுகள் தோன்றுகின்றன. இலங்கையில் இராவணன் ஆட்சி காலத்தில் யாழ்ப்பாணத்தில் நகுலேஸ்வரம், திருகோணமலையில் கோணேஸ்வரம், மேற்கே மன்னாரில் திருக்கேதீஸ்வரம், சிலாபத்தில் முன்னேஸ்வரம், தெவிநுவரவில் திருதொண்ரீஸ்வரம். பொலநறுவையில் இலங்காதீஸ்வரர், கொழும்பு மாவட்டத்தில் இரத்மலானை என்ற இடத்தில் திருநந்தீஸ்வரம் போன்றவற்றைக் கூறலாம். இவையாவும் இராவணன் காலத்தில் பண்டைய சிறப்பைகாட்டுகின்றது. இரத்தினபுரி சிவாலயம் இக்கோயில் விபூஷணனால் கட்டப்பட்டது. இராவணன் குடும்பம் சிவ பக்தியுள்ள குடும்பமாக இலங்கையில் ஆட்சி புரிந்தார்கள். இராவணனின் தங்கை பேரழகான பெண் சிவ குலத்தில் பிறந்தவள் சூர்ப்பனகை.

என்னையே இராவணன் தங்கை
என்ற பின் அன்னையே என்றபடி
வணங்கல் அன்றியே உன்னையே
எண்ணுமோ ஒருவரால் இவள்
தன்னையே அறிந்தவனள் தான் என்றார்

சிலர் இராவணன் கட்டிய கோவில்களில் சோமநாதர்சிவன்கோவில் இந்தியாவிலுள்ள 12 ஜோதிலிங்கத் தலங்களில் முதலாவதாக போற்றப்படும் திருத்தலமாகும். மேற்கிந்திய மாநிலமான குஜராத்தின் மேற்குக் கரையோரத்தில் உள்ள வேரவல் என்னும் இடத்தின் அருகில் அரபிக் கடலோரத்தில் இவ் ஆலயம் அமைந்துள்ளது. இராவணன் இக்கோயிலை வெள்ளியால் கட்டியதாகவும் ஆலய வரலாறு கூறுகிறது. இராவணனால் கட்டப்பட்ட கோயில்கள் செங்கற்களாலும் கல்லாலும் மரம் இது போன்ற பொருளை வைத்தே கோயில்கள் கட்டப்பட்டன. விமானம் திராவிடம் நாகரம வேஸரம் என்றும் அழைக்கப்படும்.

பொன்னொளி பரப்பியே வந்தனன்
கதிரோன் மண்ணில் பூத்த மல்லிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணம் பரப்புமாம் மன்னவர்க் கெல்லாம்
தலை சிறந்த மன்னர் இராவணன்
தென்னிலங்கை வேந்தன் தமிழ் குலத்தின்
மூத்தவன் செந்தமிழ் மொழியை சிறப்புற
வழி சமைத்த சீராலன்

உலகில் க்ஷார்கான் ஆட்சி கி.மு.2279 லிருந்து 2334 வரை 55 ஆண்டுகள் நீடித்தன. இந்த காலகட்டத்தில் முன்பே இராவணன் திகோணமலையில் சிவன் ஆலயத்தை அமைத்தார்.

கி.மு. 1751 ல் மொசபெத்தேமியா பிரதேசத்தில் உள்ள எல்லா ராஜ்ஜியங்களும் கமுராபியின் ஆட்சிக்குள் வர உலகின் முதல் பாபிலோனியா சாம்பிராஜ்ஜியம் உருவானது. வால்மீகி இராமயணம் இரு பக்கம் தான் நல்ல வார்த்தைகளை கூறுகின்றன. மற்ற பக்கம் இராவணனை தூஜித்து அவமானப்படுத்துகின்றன. இதுவா தர்மம்?
கம்பர் கூறுகிறார் சர்வ லட்சணங்களும் பொருந்திய இராவணன் சிம்மாசனத்தில் கம்பீரமாக அமர்ந்திருப்பான். கயிலை மலையிலே சிவன் ஆலயத்தில் கிடைத்த வாள் அவனது கையில் எப்பொழுதும் இருக்கும். இவன் தனது மாமன் மாரீசனிடம் அடிக்கடி ஆலொசனை செய்வான். மாரீசன் தனியே ஓர் ஆசிரமம் அமைத்து வாழ்ந்து வந்தான். சிவலிங்க பூஜைக்கு வேண்டி மலர்கள் சேகரிப்பதே திர்சிரனும் தூஷணனும் தான். இவர்கள் கொண்டு வரும் மலர்களை வைத்து சிவலிங்கத்திற்கு பூஜை செய்வான்.

இப்படிபட்ட இராவணனின் ஆட்சிக் காலத்தில் தனது தாய் நோயுற்று இருந்த போது கைகேயியே "அன்னையின் மடியில் பாலகனாக இருந்த போது அமுதை ஊட்டி வளர்த்தவள் என் தாய். சுகம் பெற ஆறு கால பூஜை செய்வேன். அதில் அண்டமும் ஈன்ற ஆதி பரம் பொருளே. என் உயிர் காத்த அன்னை உயிர் வாழ வைப்பது உன் கடன். வினையை நீக்க விளங்கிய முன்னவன் நீ என்னை காத்தருளும் அருள் அகம் புறம் முக்தியாகும். இன்னுமா தயக்கம்! ஏன் இறைவா! திருகோணமலையானே!." என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் உருகிப் பாடினான்.

இராவணனின் ஆட்சி சிறப்பை அறிந்த வட நாட்டு மன்னர்கள் போர் புரிந்து ஆட்சியை இல்லாமல் செய்தார்கள். நோக்கிகின் தென்திசையல்லது நோகுறான் என்னும் பாடலில் நாம் காண்கின்றோம். கம்பரின் பாடல் தென் தமிழ் உரைத்தோன் முன்னாத் தீதுதீர முனிவர் யாரும். இராவணன் தமிழ் வளர்த்த மன்னர் என்று தானே பொருள். "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடா"," குலாவி" என்ற பாடலுக்கு முன்னைய. "ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே "இதன் பொருள் இலங்கை நாட்டில் இராவணன் ஆட்சிக்காலத்தில் தமிழ் சிறப்பாக இருந்ததாக பொருள் கொள்வோம்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயின் குமுண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்
மனிகப் பிறவியும் வேண்டுவதோ இந்த மாநிலத்தே
என்கிறார் அப்பர் சுவாமிகள்

பொன்னின் ஒளியும் பூவின் மணமும்தேனின் சுவையும் இன்பத் தமிழ் கவதையும் சேரப் பெற்று ஓர் வடிவமாக இராணன் நின்றான். இன்றும் சில இந்திய கிராமங்களில் சில மக்களுக்கு சிவ பக்தனான இராவணன், கும்பகர்ணன், மேகநாதன் போன்றோர் தெய்வமாகவே விளங்குகிறார்கள். மேலும் இராவணனுக்கு கோவில் கட்டி வழிபாடும் நடத்துகின்றனர். மற்றொரு சிறப்பு இராவணன் வேதங்களை கற்றுத் தேர்ந்த விற்பன்னன் சிவபெருமானின் மிகப் பெரிய பக்தர் என்பதாலும் மஹராஜ் குரபிரசாத் சுக்கிலா என்பவர் 1890 ஆம் ஆண்டில் இந்த கோவிலை நிறுவினார். இதே போன்று மகாராஸ்ரா மாநிலத்திலுள்ள தாங்கோலா கிராமத்திலும் இராவணன் வழிபாடு சிறப்பாக நடக்கிறது. இராவணனை தெய்வமாகவே பார்க்கின்றோம் என்றனர் இக்கிராம மக்கள்.

சோமநாதர் ஆலயம் கி.பி. 470 முதல் 767 வரை வல்லாபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராச்சியத்தை ஆட்சி செய்த மைத்திர வம்ச மன்னர்களில் பரமேஸ்வரன் எனவும் மகாராஜாதிதிராஜ பரம பதர்க்கன் எனவும் போற்றப்பட்ட சக்கரவர்த்தி 4 ஆம் தனசேனன் எனும் மன்னனால் இவ்வாலயம் கட்டப்பட்டதாக குறிப்புக்கள் கூறுகின்றன.

இவ்வாலயம் முதன் முதலில் சோமனால் தங்கத்தாலும் இராவணனால் வெள்ளியாலும் கட்டப்பட்டுள்ளது. கி.பி. 825 இல் சிந்து மாநிலத்தின் இஸ்லாமிய ஆளுனராக இருந்த ஜினையத்துள் அப்பாஸி என்பவனால் பெரும்படை அனுப்பப்பட்டு சோமநாதர் ஆலயம் முதன்முதலாக தாக்கப்பட்டது. இதன் பின் மேற்கிந்தியாவை ஆட்சி செய்த கூர்ஜரபிரத்திஹர வம்சத்தை சேர்ந்த இரண்டாம் நாகவந்தன் மன்னனால் இவ்வாலயம் கி.பி. 830 ஆம் ஆண்டளவில் சிவப்பு மணற்கற்களைக்கொண்டு முற்றாகக்கட்டப்பட்டது. இது இராவணன் கட்டிய கோவில்களில் ஒன்றாக காணப்படும் சிவன் கோவில்.

இலங்கையை ஆட்சி புரிந்த இராவணன் கோணேஸ்வர பெருமானை நாள்தோறும் வழிபட்டு வந்தான். இராவணனின் மாமனாகிய மாயன் கட்டியதே திருக்கேதீச்சர ஆலயம் ஆகும். வங்கம் மலிக்கின்ற கடல் மாதோட்ட நன்னகரில் உன்னத நிலையினையும்அங்கே தமிழர் செறிந்து வாழ்ந்து தனியரசு நடத்தியவரலாற்றினையும் நாம் ஓரளவு கற்பனையும் நாம் ஓரளவுகற்பனை செய்து பெருமிதம் கொள்வதற்கு உதவி புரிவது இராஜரத்னாகரம் எனும் நூலாகும்.

உலகிலுள்ள மொழிகளுக்கெல்லாம் மூல மொழியாகத் திகழ்ந்தவைகள் ஆறு மொழிகள்

1. எபிரேய மொழி
2. கிரேக்க மொழி
3. லத்தீன் மொழி
4. தமிழ் மொழி
5. சமஸ்கிருத மொழி
6. சீன மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.மு 800 க்கும் 1200 இடைப்பட்ட காலத்தில் ஆரிய ரிஷிகளால் இருக்கு வேதங்கள் எழுந்தன. ஆரியர்களின் இந்தியா வருகை காலங்களில் இங்கு வாழ்ந்த திராவிட மக்களை பற்றி இவ்வேத நூல்களில் பல்வேறு சம்பவங்கள் காணப்படுகின்றன. கறுப்பு இனத்தவராகவும் தடித்த உதடுகளாகவும் சப்பையான மூக்குகளைக் கொண்டவர்களாகவும் காணப்பட்ட இவர்கள் சிவ லிங்கத்தை வழிபடுபவர்களாகவும் காணப்பட்டனர்.

திராவிடர் வழியில் வந்தவன் இராவணன். இதனால் திராவிடம் பாரியளவில் வியாபத்திருந்ததை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது என்கிறார் சமஸ்கிருத பேராசிரியரான தோமஸ் பரோ. அத்தோடு இக்காலத்தில் வல்லமை வாய்ந்த விருத்திரன், சுசுணன், அகி, சாம்பரன், யாதுமதி, வீரதாசப், சுவசன், வலன் போன்ற ஆதி திராவிட தலைவர்களின் பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன. அதுமட்டுமல்லாது நமுசி, சுமரி ஆகிய பெயர்கள் கி.மு. 300ஆம் ஆண்டு காலத்தை சேர்ந்த சுமெரிய சாசனங்களிலும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்குவாய் கோபுர வாசல்
தெள்ள தெளிர்ந்தார்க்குச் சீவன் லிங்கம்
கள்ளப்புலனைத்தும் காளாமணி விளக்கே

இலங்கை மன்னன் இராவணனுடைய வரலாற்றுக்குப் பின் சோழப் பரம்பரையில் வந்த குளக்கோட்டு மன்னன் இற்றைக்கு 1700 வருடங்களிற்கு பிறகு திருகோணமலையில் கோணேசப் பெருமானுக்கு கோவில் எடுத்து திருப்பணி நிறைவேற்றினான். ஆலயத்தை பரிபாலனம் செய்வதற்காக குளக்கோட்டு மன்னன் திட்டமொன்றை வகுத்தான். அதுவே கோணேசர் கல்வெட்டு எனப்படுவது.

அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சிந்து நாடு மருங்கூர் காரைக்கால் என்னும் இடங்களிலிருந்து குடிமக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்து வந்து திருகோணமலை பகுதியிலுள்ள கட்டுக்குளம் கொட்டியபுரம் தம்பலகாமம் என்னும் இடங்களில் குடியமர்த்தினான். திருகோணமலையின் சிறப்புக்கு இதுவே காரணம். கண்ணியா. வெருங்கல், தம்பலகாமம், கந்தளாய், பதவியா போன்ற நகரங்கள் திருகோணமலை வட்டாரத்தில் இருந்த இடங்களாகும்.

சேந்தர் பின்னர் மறையோர்கள் கோனை நாதன்
திருப்பூசை வெகு காலம் செய்யு மந்தாள்
மாநதளிர் போல் மேனியுடைய பறங்கி வந்து
மாகோணப் பதியழிக்க வரு மந் நாளில்
வேந்ச தென்பால் பழனிமலை யொன்றுண்டங்கு
வீசனுக்கு ஆலயம் இயற்றிப் பின்னர்

கோந்தறை சேரொல்லாந்த பிடிக்கு மந்நாட
குலவு சிங்க இரவி குலம் குறைந்து போகும்

கோணேசர் கல்வெட்டு இராவணனது காலத்திற் யுகப் பிரளயம் இயற்கை அழிவுகளால் கடல் கோளினால் தமிழும் சைவமும் தாக்கமுற்றது. கி.மு 545 இல்

"வணங்குமரன் பூசை முன்போல் நடக்கும் காலம்
மகாவிலங்கை பதியாளும் வாலசிங்கன்
மிணங்கு மண் இரத்தினத்தால் பொன்னால்
முத்தால் ஈசனுக்கு ஆயம் அமைக்கும் காலம்
சுணங்கவில்லை மானிடர்க்குத் தூக்கமில்லை

சோம்பலில்லை நிதம் போக சுகமே
துய்ந்து மணங்கமழும் நிதம் போக சுகமே
துய்ந்து மணங்கமழும் திருகோணமலை பெருமான்
பாதம் மனந்திருத்திப் பக்தியோடு வாழ்வார் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேசர் கல்வெட்டு

மானிலம் புகழும் வீர வரராஜசிங்க
னென்னும் மேன்மைகொள் வேந்தன்
றன்பால் விழி துயில் கனவில் மேவி
வானவர் முனிவர் காண மலரடியுடையோனான
இனியன கூறலானான்
திரிகோணகலப் புராணம்
தம்பை நகர் படலம்
ஆர்கலி சூழ் தென்னிலங்கை
அழகுமலர் வண்டோதரிக்குப்பேர்
அருள் இன்பம் அளித்த
பெருந்துறை சிவமேய பிரானை

என்று குயில் பந்தியில் கூறுகிறார்.

மன தோன்றி மனு தோன்றா காலத்தே சிவன் ஊன்றி அருள் புரி இவ்வையத்துள் எஞ்ஞான்றும் மேன்மை கொள் எங்கள் நீதி. இலங்கை வரலாற்றில் பெரிதும் பேசப்பட்ட தமிழ் மொழியே கி.மு 258 இல் இதற்குரிய கல்வெட்டொன்று தெளிவாக உரைப்பதாக தமிழ் நாட்டில் பௌத்தம் பற்றிய தனது ஆய்வு கட்டுரையில் பேராசிரியர் ஹிகோசகே குறிப்பிடுகிறார்.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை மணிபல்லவம் நயினாதீவின் சிறப்பை மிக சிறப்பாக கூறுகின்றது. இதை விடவும் வீரசோமியம் என்ற இலக்கண நூலானது தமிழ் மொழி பற்றி வாழ்வு பற்றியும் புத்தமித்திரர் என்பரால் சோழர் காலத்தில் எழுதப்பட்டமையும் நாம் அறிவோம்.

இராவணன் சம்பந்தப்பட்ட யக்கலை, மாத்தளை புகழ் பெற்ற பிரதேசமாகும். இங்கு இறத்தோட்டை ஒட்டி யக்கலை என்ற உயரமான மலை இருக்கிறது. இது 6248 அடி உயரமுடையது. இம்மலை உச்சியின் மீது இராவணன் தனது புட்பக விமானத்தில் வந்திறங்கி அங்கிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலைக்கு நாள்தோறும் சென்று சிவ பூஜை செய்துவிட்டு திரும்பியதாக கூறப்படுகின்றது. இதற்கேற்றபடி இராவணனைக் குறிக்கும் சின்னங்களும் பெயர்களும் இங்கு இருப்பதை குறிப்பிடுகிறார்கள்.

**பாடல்**

ஒருவனோ உலகம் மூன்றிற்கும்
ஓங்கு ஒரு தணவன் ஊங்கில்
ஒருவனோ குபெரன் நின்னோடு
உடன் பிறந்தவர்கள் அன்னார் இராவணன்

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் திருக்கோணேஸ்வரப் பெருமானை தனது தேவார திருப்பதிகம் மூலமைதுதித்துப் பாடியுள்ளார்.

**பாடல்**

கரைகெழு சந்துங் காரகிற்
பிளவும் அளப்பெருங் கனமணி வரன்றிக்
குறை கடலோத நித்தலங் கொழிக்குங்
கோணமலை யமர்ந்தாரே
கோணேசர் கல்வெட்டு
குளக்கோட்டன் மன்னர் காலத்தில்
உன் கடன் பணி செய்து கிடப்பதே
தன் கடன் அடியாரையும் தாங்குதல்
தமிழோடு இசை பாடல்
மறந்தறியேன்

என்று பாடிய அப்பர் அடிகளின் உயரிய குறிக்கோள்.

கி.மு 4000 இல் தொடங்கி மேர்கள் மக்கள் தென் ரஷ்யா, ஆப்கானிஸ்தான்ஈராக் மற்றும் சிந்து சமவெளி பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். பிறகு வந்த எல்லா நாகரீகங்களுக்கும் அடிப்படை ஆமர்கர் தான் மேற்குறிப்பிட்ட கலாசாரங்கள் அனைத்திலும் அக்கினி வழிபாடு அடிப்படையாகப் பின்பற்றப்பட்டது. பண்டைய எகிப்திய நாகரீகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திராவிட ஆரிய பாதிப்புக்கள் இருப்பதாகவும் இதற்கமைவாக கடவுள்களான விசன் போன்றவர்களுக்கு இணையான கடவுள்கள் எகிப்திலும், பாபிலோனியாவிலும் உண்டு என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மொஹன்ஜதாரோவிலும், ஹரப்பாவிலும் மற்ற சிந்து நாகிகப்பகுதிகளும் ஏராளமான முத்திரைகள் கிடைத்திருக்கின்றன. அந்த முத்திரைகளில் வித விதமான உருவங்கள் கலை உணர்வோடு செதுக்கப்பட்டிரக்கின்றன. எருது, பசு, புலி, காண்டாமிருகம், யானை, மரம், விசித்திரமான மூன்று தலை மிருகம், விசித்திரமான மூன்று தலை மிருகம், பசுபதி, சிவன் இப்படி பல உருவங்களோடு சில எழுத்துக்களும் உண்டு. இந்த எழுத்துக்கள் தான் உலகத்துக்கே சவால் விட்டுக் கொண்டிருக்கின்றன.

உலகில் முதன் முதல் பூந்தோட்டம் உண்டாக்கி பூக்களால் இறைவணக்கம் செய்தது திராவிட இனம்தான். இலங்கை மன்னன் இராவணனால் பூசைக்கு பூக்கள் பறித்து பூசை பயன்பட்டது என்பது வரலாறு. கும்பகர்ணனின் மகன் மூலகன் இவன் சிவனை நோக்கி கடும் தவம் செய்து மலர்களை வைத்து பூசை செய்தான் என்பது வரலாறு.

புதைபொருள் ஆராச்சியாளரான சேர் ஜோன் மார்ஷல் சிந்துவெளி பள்ளத்தாக்கிலும் ஜோர்ஜ் பர்பிரே ஏனையோரும் மோல்டா மடகாஸ்கர் கிரீட் முதலிய இடங்களிலும் நடத்திய சிவன் முழுமுதற்கடவுளாக வழிபட்டுவந்தமை புலனாகிறது.கி.மு மூன்றாம் நூற்றாண்டிலிருந்து மாதீர்த்தம் என்றழைக்கப்பட்டதென அறியக்கிடைக்கின்றது.

முப்புறமும் கடல் சூழ்ந்து அலைமோதும் ஒப்புமை ஏதுமில்லா எழில் நாடு இலங்கை நாடு நன்மை பெருக்கி உயர்ந்த நாடு பொன்மொழியாம் எங்கள் தமிழ் புகழ் சார்ந்ததென்று புலம்புவதால் தமிழ் வளர்ந்து பூத்திடுமா? ஆண்டாண்டு காலமாய் நாட்டை ஆண்ட அருந்தமிழர் கூட்டம் தான் மாமன்னர் இராவணர் செங்கோல் வளையது திரு நெறி பிழையாது பெரும் தொண்டாற்றி உயிர் நீத்த இராவணன் பேசரும் புகழொடு திகழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கோன் வாழிய வாழிய.

நீ ஒரே தாரையாக வருவாயானால் நான் உன்னுடைய வேகத்தை தாங்க முடியாது. தர்ம கங்கை இந்த வேண்டுகொளை ஏற்றுக்கொண்டு அதன்படியே ஏழு தாரைகளாக வந்து கலந்தது. ஏழு தர்மங்கள் கீழ் கண்டவாறு வெளியிடப்பட்டுள்ளது.

1. சாபி தர்மம்
2. சனாதன வைதீக தர்மம்
3. பௌத்த தர்மம்
4. யூதர்களுடைய தர்மம்
5. பாரசீக தர்மம்
6. கிறிஸ்தவ தர்மம்
7. இஸ்லாமிய தர்மம்

பிரம்மானவர் நாரதருக்கு இந்த விருத்தாந்தத்தை கூறினார். "நாரதரே நான் உத்தம தர்மத்தை வர்ணிக்கிறேன் கேட்கவும். நான்கு விதமா தீர்த்தங்கள் உள்ளன நான்கு யுகங்கள் உள்ளன மூன்று குணம் மூன்று புரசர் மற்றும் சனாதன தேவதைகள் தான் உள்ளனர்.

சம்ருதிகளுடன் கூடிய நான்கு வேதங்கள் தெரிவிக்கின்றன. புரசார்த்தங்களும் நான்கு வாக்குகளும் நான்கு இவையெல்லாம் சமமானது. தர்மம் என்பது எல்லா இடத்திலும் ஒன்றே ஏனெனில் அது சனாதனமாகும் அதன் லட்சியங்களையும் சாதனைகளையும் பொறுத்து அதற்கு அனேக உருவங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டது. தர்மத்திற்கு இரண்டு ஆதாரங்கள் தேசமும் காலமும் ஆகும். காலத்தை ஆதாரமாகக் கொண்ட தர்மமானது குறைந்தும் ஏறியும் மாறுபடும் யுகங்களுக்கு தக்கபடி அதில் ஒவ்வொரு பாதம் குறைகிறது. காலத்தைச் சார்ந்த தர்மம் கூட தேசத்தில் எப்போதும் நிலைத்து நிற்கிறது. யுகங்கள் தணித்த போதிலும் தேசத்தைச் சேர்ந்த தர்மங்கள் மாறுவதில்லை. எந்த தர்மம் இரண்டையும் சாரவில்லையோ அது மறைந்துவிடுகிறது. எனவே தேசத்தை ஆதாரமாகக் கொண்ட தர்மமானது தன்னுடைய நான்கு பாதங்களுடனும் நிலைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கிறது. தேசத்தை சார்ந்த தர்மமானது தனித்தனியான தேசங்களில் தீர்த் ரூபமாக இருக்கிறது. யுகத்தில் தர்மம் தேசம், காலம் இரண்டையும் ஆதாரமாகக் கொண்டது.

## துளசிதாஸ் வர்ணித்த இரகசிய மதம்

மகாகவி துளசீதாஸர் ராமசரிதமானஸம் உத்தர காண்டத்தில் பகவான் வாய்மொழியாகவே இந்த ரகசிய மதத்தைப் பற்றி வெளிப்படுத்தியுள்ளார்

ஒரளவு ஏக்குடபுத மத ஸபஹிம் கஹேறவும் கர ஜோரி
சங்கர பஜன பிநா நர பகதி ந பாவாயி மோரி 45
கஹவு பகதி பத கவன பிரயாஸா ஜோக் நமக் ஜப தப
ஸரல சுபாவ நமன குடிலாயி ஜதா லாப ஸந்தோஷ
மோர தாஸ கஹயிநர ஆஸா கரயிதௌ கஹஹீ
பஹீத் கஹ்வும் கா கதா படாயி ஏஹி ஆசரன பஸ்யஸம்
பைர ந பிக்ரஹ ஆஸ் ந த்ராஸா ஸீகமய தாஹி ஸதா ஸப்
அனாரம்ப அநிகேத அமானி அநக அரோஷ தச்ச
பரீதி ஸதா ஸஜ்ஜன ஸம்ஸர்கா
த்ருனசமவுக்ஷய ஸ்வர்க அய்வர்கள்
பக்தி பச்ச ஹடநஹிம் சடதாஜி
துஸ்ட தர்கசய தூரி பகாயி

சந்தர்ப்பம் - பகவான் ராமர் தன்னுடைய குரு, பிராம்மணர்கள் மற்றும் நகரவாசிகளை எல்லாம் ஒன்று கூட்டி "மக்களே என் வார்த்தையை கேளுங்கள்! உங்களுக்கு எது நன்மையோ அதையே நான் சொல்கிறேன். யார் என்னுடைய கட்டளையை மதிக்கிறானோ அவனே எனக்குப் பிரியமான சேவகன். நான் எது சொன்னாலும் தாங்கள் பயமில்லாமல் என்னைத் தடுக்கலாம். தேவைகளுக்கு கூட கிடைப்பது துர்லாபம் எளிது அல்ல. கஜரந்தங்களில் கூறப்பட்டுள்ள மனிதப்பிறவி நமக்குப் பாக்கியத்தால் கிடைத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது உங்களுக்கு மற்றொரு ரகசிய மதம் பற்றிக் கூறுகிறேன். சங்கரனை பூஜிக்காமல் எந்த மனிதனும் பக்தியை அடைய முடியாது. இவ்விடம் பகவான் சங்கரனுடைய அநேக சின்னாங்களையும் திரிபுரம் சம்பல தபோரியா அருணச்சலம் முதலிய இடங்களையும் நன்கு ஆராய்ச்சி செய்வாயாக என்பது உட்பொருளாகும். பின்பு மக்கள் அவரை "அது எந்த மதம்? அதை எப்படி அடையாலம்? என்று கேட்டனர்." (ஏனெனில் பகவான் சங்கரின் ஆராதனை அந்தச் சமயம் வழக்கிலிருந்தும் கூட ரகசியமான பத்திமார்க்கம் என்று ஏன் கூறினார்.

இராமன் கூறுகிறார் அந்த பக்தி மார்க்கத்தில் யோகமோ யக்ஞம் ஜபம் தபம் மற்றும் உபவாசம் முதலியவைகளின் அவசியம் இல்லை. அதற்கு எளிய சுபாவம் இருக்கவேண்டும். மனதில் குறுகிய மனப்பான்மை இருகக் கூடாது. கிடைத்ததை கொண்டு சந்தோஷப்படும் குணம் இருக்கவேண்டும். இந்த மாதிரியான மனிதன் என்னுடைய தாஸன் என்று அழைக்கப்படுவான். அவனுடைய நடத்தை இந்த மாதிரியெல்லாம் இருந்தால் நீங்கள் நம்புவீர்களா? நான் இதை சுரக்கமாக கூறுகிறேன். விரிவாக என்ன கூறுவேன்? கீழ்கண்ட நடத்தை உள்ளவனுக்கு நான் வசப்படுவேன்

"எவன் எவருடனும் பைரபாவம் கொள்ள மாட்டான், யாருடனும் சண்டையிட மாட்டான், யாரையும் துன்புறுத்த மாட்டான். அவன் எந்த சூழ்நிலையிலும் சந்தோஷமாகவே இருப்பான். அவன் தன்னுடைய (ஜன்ம குடும்பம், குலம், ஜாதி, வம்சம்) பற்றியோ இடம் கிராமம் நகரம், மாகாணம் மற்றும் தேசம் பற்றியோ கர்வம் கொள்ள மாட்டான். அத்பரனாக இருப்பான் (சோம்பேறியாக இராமன்) விஞ்ஞானத்தில் கூறியபடி நடந்துக்கொள்ள (குரூட்டு நம்பிக்கையும் மூடப்பழக்கவழக்கங்களையும் விட்டு விஞ்ஞானம் தர்க்கம் இவைகளை ஆதாரமாக வைத்து வாழ்க்கை நடத்துவான் எப்பொழுதும் நல்ல மனிதர்களின் சேர்க்கையே விரும்புவான். எல்லா விஷயபோகங்களையும் துரும்பாக எண்ணுவான். எப்போதும் பரமாத்மாவிடம் பக்தியுடையவனாக இருப்பான். (நாஸ்திகனாக இருக்க மாட்டன்) ஒருபோதும் பிடிவாதம் பிடிக்கமாட்டான். யாரிடமும் மரியாதை இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து கொள்ள மாட்டான். எல்லா விதமான குதர்க்கங்களையும் விலக்கி விடுவான். இதுவே அந்த நடத்தையாகும்.

வாசகர்கள் இந்த வர்ணனையுள்ள ஒவ்வொரு பதத்தையும் கூர்ந்து படித்து இவ்விதமான நடத்தை முன்காலத்தில் நடக்க முடியுமா? என்பதை சிந்திக்க வேண்டும். எவன் ஸம்ஸ்த உலகத்தையே தன்னுடைய வீடாகவும் எல்லா மனிதர்களையும் தன் குடும்பத்தினராகவும் நினைக்கிறானோ அவன் தான் இவ்விதமாக நடந்து கொள்ள முடியும்.

அயம் நிஜ: பரோவேதி குணனா லகு சேத ஸாம்<br>
உதார சரிதானாம் து பஸ தைவ குடும்பகம்<br>
பஞ்சதந்திரம்

சிறியவர்கள் இது என்னுடையது. இது என்னுடையது என்று பிரித்து சிந்திக்கிறார்கள். சமதர்சிகளான பெரியவர்கள் அகில உலகையும் தன்னுடைய குடும்பமாகப் பாவிக்கிறார்கள். நலம் விரும்பும் தேசிய விருதுபெற்ற டா.பூமால் பிரஸாத் ஷர்மா எம்.ஏ., பி.எச்.டி வியாகரணசார்ய, ஸாஹித்யரத்ன தலைமையாளர். சம்ஸ்க்ருத பிரிவு ஹீப்பலால் காலேஜ், ஆக்ரா இராமனின் அழகிய திருவடிகள் அந்த ஆஸ்ரமத்தில் பட்டதும் அகலிகை சாபம் நீங்கி தனது சுய வடிவம் பெற்றாள். ஒளி சிந்தும் நெருப்போல் அவளுடைய திருமேனி மாசு மருவுற்று காணப்பட்டது. ஆயிரம் ஆண்டுகள் புரிந்த தவத்தாலும் இராமனின் கருணையாலும் அவள் பூரணப்பொலிவுடன் விளங்கினாள்.

வால்மீகி இராமயணம் தசரதர் மன்னர் இராமனின் தந்தையின் வார்த்தைகள் எப்பொழுதும் பணிவுடையவனாயிரு, புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள கோபத்தை தவிர்த்து விடு அளவற்ற செல்வங்களையும் தானிய வளங்களையும் பெற்றிடு உன்னுடைய சபையிலுள்ளவர்களை சந்தோஷமாய் வைத்திரு என்று தசரதர் மகனை ஆசிர்வதித்து அனுப்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமன் சூரியன் தனது கதிர்களை
இழக்கச் சம்மதிக்குமா போர் புரிய

இராமன் சம்மதிக்க மாட்டார்
சாக வரமருள்வாய் ராமா
சதுர்மறை நாதா சரோச பாதா
வள்ளல் பெருமானே
இராமன் மறைந்து வாலியை தாக்க
வேண்டிய அவசியமில்லை
தந்தையின் வார்த்தையை மீற மாட்டார்
இராமன் சத்தியத்தை கடைபித்தவர்

இராமபிரான் இராவணனிடம் போர் புரியவில்லை என்பது புலனப்படுகின்றது. இலங்கை மண்ணில் தமிழர் ஆட்சி கி.மு 215 தொடக்கம் 237 வரையான காலப்பகுதியில் சூர்திகன் என்னும் தமிழ் மன்னான் தன் சகோதரனான சேனன் என்பவனுடன் இணைந்து அக்காலப்பகுதியில் அனுராதபுரத்தினை ஆட்சி செய்தான்.

சிங்கை கண்டி நகரை தலைநகராக கொண்டு ஆட்சி செய்த உக்கிரசிங்கன். மன்னன் மாருதவல்லிக்கும் மகனாக பிறந்தவன் வாலசிங்க நகரை ஆண்டு வந்தான். இந்த நிலையில் திருமணம் செய்யும் வகையில் சோழநாடு சென்று சோழநாட்டு அரசனான குமாராங்குசன் மன்னனின் மகளான சீர்பாததேவியை திருமணம் செய்தான்.

கி.மு 3ம் நூற்றாண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு நகரத்தை அமைத்ததால் வீரர்முனை என அழைக்கப்படுகின்றது. எனவே வீரர் முனை என்கின்ற இடமானது மக்கள் குடியிருப்புக்களை வசதி வாய்ப்புக்களையும் கொண்டதொரு இடமாகக் காணப்பட்டது. சீர்பாததேவியுடன் சோழநாட்டில் இருந்து கப்பலில் வந்த அரச பரம்பரையினர் தான் ஆலயம் அமைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமரித்து சிறப்பிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அரச பரம்பரையினை சேர்ந்த சிந்தன் காங்கேயன் காலதேவன் பெண்பழச்சி முழவன் வெள்ளாயி நரையாகி கண்ணப்பமுதலி என்னும் வேளாளர் முத்து நாயக்க செட்டி சதாசிவச்செட்டி சங்கரசெட்டி போன்ற செட்டிமார்களும் சந்திர சேகர ஐயங்கார் எனும் அந்தணர்கள் மற்றும் அவர்களின் மனைவிமார்களின் போன்றோரையும் வீரர்முனை கிராமத்தில் குடியமர்த்தி ஆட்சி செய்தார் வாலசிங்கன்.

இவ்வாறாக தமிழ் மணமும் செல்வச் செழிப்பும் நிறைந்த வாலசிங்கனின் அரண்மனைக்கு சோழ நாட்டினைச் சேர்ந்த இரண்டு கண்களும் குருடான கவிவீரராகவன் என்னும் யாழ்பாடி என அழைக்கப்படுகின்றன. பாணன் ஒருவன் வருகை தந்தான். அக்காலத்திலே சிறப்புத்தேர்ச்சியினைப் பெற்ற கலைஞர்கள் தாங்களின் கலை ஊடாக மன்னர்களைப் புகழ்ந்து கொள்வது வழக்கமாயிருந்தது. அந்த வகையில் வந்த பாணனும் சிங்கை அரசன் வாலசிங்கன் பெயரில் பிரபந்தம் பாடியவாறு யாழ் வாசித்துக் காட்டினான்.

பட்டம் பரிசில்கள் வழங்குவதில் பெயர் போன வாலசிங்கன் யாழ்பாடியின் திறமைக்கு பரிசாக ஏதாவது வழங்க வேண்டுமென நினைத்து இலங்கையின் வடதிசையிலே உள்ள மணல்திடல் என்னும் இடத்தினை பரிசாக வழங்கினான். அன்று வாலசிங்கன்பரிசாக வழங்கி அந்த மணல் திடல் என்னும் இடம் அந்த யாழ்பாடியின் பெயரால் இன்று யாழ்ப்பாணம் என அழைக்கப்படுகிறது.

சோழ மன்னனான குமாரங்குசனின் மகளான சீர்பாததேவியின் ஓவியத்தினை பாணன் வாலசிங்க மன்னனுக்கு பரிசாக வழங்கிச் சென்றிருந்தான். வாலசிங்க மன்னவனுடைய உள்ளத்தில் நிரந்தரமாக கூடு கட்டி குடி புகுந்த அந்த அழகி இளவரசி சீர்பாததேவி தான் என்ற உண்மையினை வாலசிங்கனின் தலைமை அமைச்சர் அவனுக்கு கூறினார். இதன் பின்பு அரசியாரின் விருப்பின் படி சோழநாட்டு மக்கள் அனைவரும் வீரர்முனையிலே குடியமர்த்தப்பட்டனர். இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்பாததேவியின் வரலாற்று உண்மைகளை சீர்பாதகுலச் செப்பேடு திருகோணமலைச் செப்பேடு. திருக்கோவில் செப்பேடு போன்றவை குறிப்பிடுகின்றது.

ஹபோர்த்துகெயரின் வருகைக்கு முற்பட்ட அதாவது 1505ற்கு முற்பட்டகால இலங்கைத்தீவின் வரலாற்றில் தமிழர் இருப்பு தொடர்பான வரலாற்றுப் பதிவுகள் இடம்பெறவில்லை. அதுவும் வரலாற்றுப் பாடக்குறைவாகும். கி.மு. 543ம் ஆண்டில் இலங்கைத்தீவில் விஜயன் ஒதுங்கினான். அவனுடன் எழுநூறு தோழர்களும் வந்தனர். அவர்களில் ஒருவனாக உபதிஸ்ஸன் என்ற பிராமணன் இலங்கையின் நாலாபக்கங்களிலுமிருந்து ஐந்து சிவாலயங்களைச்சென்று வழிபட்டதாக மகாவம்சம் போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. அதை சேர் போல் ஈ. பீரிஸ் என்ற வரலாற்றாசிரியரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஐந்து சிவாலயங்களும் விஜயன் வருகைக்கும் முற்பட்டது. அதாவது 2561ஆண்டுகளுக்கு முற்பட்டது. விஜயன் வருகைக்கு 236 ஆண்டுகளுக்குப் பின்பே அதாவது 2325 ஆண்டுகளுக்கு முன்பே தேவநம்பியதீசன் காலத்தில் மஹிந்ததேரரினால் பௌத்த சமயம் முதன்முதல் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. பௌத்த சமயம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும் முன்பே இலங்கையில் இந்து சமயம் சிறப்புற்றிருந்தது என்பதற்கு உபதிஸ்ஸனின் யாத்திரையே சான்று பகிர்கின்றது.

குறித்த உபதிஸ்ஸன் என்ற பிராமணன் வடக்கே யாழ்ப்பாணத்திலிருக்கும் நகுலேஸ்வரம். கிழக்கே திருகோணமலையில் உள்ளகோணேஸ்வரம், மேற்கே மன்னாரிலுள்ள கேதீஸ்வரம் மற்றும் சிலாபத்திலுள்ள முன்னேஸ்வரம் என்பவற்றுடன் இன்று விஷ்ணு கோயிலாக மாற்றமடைந்துள்ள தெவிநுவரவில் உள்ள தொண்டீஸ்வரத்தையும் சென்று வழிபட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இது இலங்கைத்தீவில் அடியெடுத்து வைத்த நிலைமையை தெளிவாக வெளிப்படுத்துகின்றதல்லவா? குறித்த ஐந்து சிவாலயங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களின் வரலாற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளாகக் கொள்வதில் ஏன் தயங்க வேண்டும்? ஏழாம் நூற்றாண்டில் திருக்கோணேஸ்வரம் மீதும் திருக்கேதீஸ்வரம் மீதும் பாடப்பட்ட தேவாரத் திருப்பதிகங்கள் பதினான்கு ற்றாண்டுகளுக்கு முன்பு இலங்கையின் இந்துத் தமிழர்களின் வரலாற்று இருப்பை வெளிப்படுத்துகின்றது.

அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு கி.மு 240 கி.மு 261 வரை ஆட்சி செய்த எல்லாளன் தமிழன் என்று கொள்ளும் போது அவனின் வரலாற்றை தமிழர் வரலாற்றிலிருந்து ஒதுக்கமுடியுமா? எல்லாளனுக்கு முற்பட்ட பந்துகாபயன், மூத்தசிவன், தேவநம்பியதீசன், உத்திகன், மகாசிவன் போன்றோர்கள் தமிழர்கள் இல்லையா? அண்மையில் பேராசிரியர் புஞ்சிபண்டார ஏக்கநாயக்க என்பவர் சிங்களமொழி உருவாகி ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளே ஆகின்றன என்று கூறியிருந்தார். அவ்வாறாயின் சிங்கள மொழி உருவாவதற்கு முற்பட்ட காலத்தின் இலங்கையரின் மொழி எது என்ற கேள்வியெழுகின்றது. இதை விதண்டாவாதம் என்று எவரும் கூற முடியாது. உண்மையை ஆராய வேண்டும்.

ஏழு நூற்றாண்டுகளுக்கு முன் தம்பதெனிய இராச்சியத்தை கி.பி 1236 முதல் கி.பி 1273 வரை ஆட்சி செய்த நான்காம் பராக்கிரமபாகுவின் அரசசபையில் தேநுவரப்பெருமாள் என்ற தமிழ் பண்டிதரால் சரசோதிமாலை என்ற வெண்பா வடிவிலான தமிழ் நூல் அரசன் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் இன்றைய குருநாகல் மாவட்டத்தில் தமிழ்மொழியும், தமிழர்களும் பெற்றிருந்த சிறப்பு வெளிப்படுவதுடன் அரசனும், அரசசபையிலிருந்தோரும் தமிழ்ப்புலமை பெற்றவர்களாக இருந்துள்ளனர் என்பது வெளிப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தின் தென்பகுதியில் இரத்மலானை என்ற இடத்தில் திருநந்தீஸ்வரம் என்ற சிவாலயம் உள்ளது. அதன் வரலாறு மேற்கிலங்கையில் தமிழரின் இந்துக்களின் பண்டைய இருப்பை, சிறப்பை பெருமையை வளத்தையும் கட்டியும் கூறி நிற்கின்றது. கி.பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1518 இல் போர்த்துக்கேயரால் சிதைக்கப்பட்ட இவ்வாலயம் பற்றி தனது சிங்கள மொழியிலான காவியமான சலலிஹினி சந்தேசய என்ற நூலில் தொட்டகமுவே ராகுல தேரர் என்ற நூலில் தொட்டகமுவே ராகுல தேரர் என்ற பிக்கு இவ்வாலயத்தில் ஈஸ்வரனுக்குச் செய்யப்படும் பூசைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மக்கள் விரும்பும் இனிய தமிழ் மொழியில் தோத்திரம் பாடுவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். குறித்த காவியநூல் கி.பி 1454 இல் ஆக்கப்பட்டது.

தோண்டைத் தோண்ட புதையல் கிடைப்பது போல் இலங்கையின் தமிழர் வரலாற்றை ஆழமாக ஆராயும் போது பல விடயங்கள் வெளிவரும். தமிழர்களின் பண்டைய வரலாறும் உறுதிப்படுத்தப்படும். ஆனால், அதற்கான முயற்சியில் வரலாற்றை கற்று பல்கலைக்கழகங்களில் துறைசார் அறிஞர்களாகவுள்ளோர் துணிந்து ஈடுபடாமலிருப்பது வேதனையானது. மஹிந்தபால குறிப்பிடுவது போல் பெரிய வரலாற்று இடைவெளியொன்றை எதிர்நோக்கியுள்ள தமிழ் வரலாற்றியலாளர்கள் தங்களது அகம்பாவமான அரசியலையும் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையும் செல்லுபடியானதாக்குவதற்கு தமிழ் வரலாறு ஒன்று இல்லையென்பது குறித்து மனம் நொந்து கொண்டார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

தமிழருக்கென்று இந்த நாட்டில் தெளிவான இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு உள்ள போது தமிழர் தரப்பினர் மனம் நோவது ஏன்? சிந்திக்கவேண்டும். நம்மை நமது வரலாற்று இருப்பை, வளத்தை, பெருமையை நாம் வரலாற்று ரீதியாக அறியத்தடையேன்? தயக்கமேன்? உலக மொழிகளுக்கெல்லாம் அன்னையாக விளங்குவது நம் தமிழ் மொழிதான். மொழி எனப்படுவது இலக்கணமா? இலக்கியமா? அல்லது எண்ணங்களையும் இடல்களையும் பரிமாற்றிக்கொள்ள பயன்படும் தொடர்புக் கருவியா? இவற்றில் எதுவுமே இல்லை! மொழி எனப்படுவது ஓர் இனத்தின் அடையாளம் - பயன்பாடு – வாழ்வியல் - வரலாறு – எல்லாமே! மொத்தத்தில் ஓர் இனத்தின் உயரும் - உயிர்ப்பும் மொழியே ஆகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இனம் அழியாமல் இருக்க அந்த இனத்தின் மொழி உயிர்ப்போடும் இருத்தல் வேண்டும். அந்த வகையில் பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு வகையான தடைகளை கடந்து தமிழ் இன்றளவும் உயிரோடு இருப்பதே நமக்குப் பெருமை தரக்கூடிய வரலாறாகும். காலத்ததால் தொன்மையும், தெய்வத்தன்மையும் பெற்று இருப்பதால் தான். நாடோ. அரசோஆட்சியாளரால் இல்லாத நிலையிலும் தமிழும் தமிழினமும் இன்றும் நிலைத்திருக்கின்றன.

## இராவணனின் தந்தை விஸ்ரவசு முனிவர் தங்கி இருந்த இடம்

மன்னர் இராவணனின் தந்தை விஸ்ரவசு முன்னிவரின் தலைநகரம் வெஸ்ஸகிரிய இலங்கையின் உள்ள பல பிரதேசங்கள் தமிழர்களால் கை விட்ட பின்னர் அவற்றை சிங்களவர்கள் உரிமை கொண்டாடிய வரலாறுகள் அதிகம். வெஸ்ஸகிரி எனப்படுவது காட்டுப்பகுதியில் அமைந்துள்ளது. பழங்காலத்து துறவிகள் மடமாகும். இது அனுராதபுரத்தில் அமையப்பெற்றுள்ளது இசுறுமுனிய தேவாலத்தில் இருந்து அரை மைல் தொலைவில் அமைந்துள்ளது.



பொலன்னறுவையில் கண்டேடுக்கப்பட்ட இந்து மத வழிபாட்டுத் சிற்பங்கள் சிலவற்றில் ஆங்காங்கே சிங்கள பௌத்த ஆதிக்கத்தை காணமுடிகின்றது. தென் இந்தியாவின் சோழர் கால சிற்பங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிட்டு எடுத்து நோக்கும் போது பொலன்னறுவையில் இந்து சிற்பங்கள் அழகுணர்ச்சியும் இலாவண்யமும் மேலோங்கி காணப்பட்டகாலப்பகுதியில் மாதோட்டத்திலும் பல அரிய சிவன் மற்றும் உலகமாதாகிய பார்வதி தேவிக்கும் கோயில் அமைக்கப்பட்டிருந்தன. கந்தளாயில் முதலாம் விஜயபாகு மன்னனால் சிவாலயம் ஒன்று அமைக்கப்பட்டதாகவும் அவ்வாறே விஜயபாகு மன்னனின் மகன் விக்கிரபாகு மன்னன் உயர்ந்த சிவபக்தனாக விளங்கினான் என வரலாறு எடுத்தியம்புகின்றது.

முற்றிய ஞானத்தில் நிலை பெற்றவன் செயல் முற்று முழுமையாய் மேன்மை பெறும் நிறைந்த செயலாற்றுபவன் தீமையை அடைய மாட்டான்.

## குறிஞ்சி நிலப்பகுதி

குறிஞ்சி நிலப்பகுதியிலிருந்து வந்தவர் முருகனை தன் குல தெய்வமாக வழிபடும் இவர்கள் முருகனின் அம்சமாக வழிபடும் இவர்கள் வீரபாகுத் தேவரின் வழிவந்தவர்கள் இதனாலோ என்னவோ வரலாற்றில் மிகவும் புகழ்பெற்ற படைவீரர்களாக திகழ்ந்தனர். மூவேந்தர்களிடமும் மிகவும் நம்பிக்கைக்குரிய அந்தரங்க படைவீரர்களாய் இருந்த இவர்கள் வரலாற்றில் முக்கிய இடம் பிடித்தனர். வாள் தாங்கிய கைக்கோளர் என்று கல்வெட்டுக்களில் உள்ள செய்தியால் இவர்கள் ஈட்டி மட்டும் அல்ல வாள் பிடித்தும் போரிட வல்லவர் என்று அறிகின்றோம்.

திருசெந்தூர் முருகன் கோயிலில் நடைபெரும் திருவிழாவில் பன்னிரண்டாம் நாள் திருவிழா செங்குந்தர் குலத்தவரின் மண்டகப்படியாக இன்றும் நடைபெறுகின்றது. தமிழ் இந்திய மாநிலமான தமிழ் நாட்டின் ஆட்சி மொழியாக உள்ளதுடன் இந்திய அரசியலமைப்பின் கீழ் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இலங்கையிலும் தமிழ் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக அங்கிகாரம் பெற்றுள்ளது. சிங்கபூர் நாட்டிலும் தேசிய மொழிகளுள் ஒன்றாக தமிழ் இடம் பெற்றுள்ளதுடன் தென்னாபிரிக்காவிலும் தமிழ்க்கு அரசியலமைப்பு அங்கிகாரம் உள்ளது. இந்திய அரசினால் தமிழ் ஒரு செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிபோர்னியாப்பல்கலைக்கழகத்தின் தமிழ்துறை தலைவரான ஜார்ஜி எல் ஹார்ட் போன் தலைமை வகிக்கிறார். செந்தமிழுக்கான இலக்கண விதிகள் இறைவனால் உருவாக்கப்பட்டதாக நம்பப்படுவதால் செந்தமிழே சரியான மொழியாகக் கருதப்பட்டது கலைஞர் மறைமலை அடிகள் முதலான தூய்மை வாதிகள் தமிழ்மொழி வளர்ந்துவர உழைத்தார்கள். வீரமானிவரின் அறிவுரைப்படி இரட்டை கொம்பு போன்ற மாற்றங்கள் தமிழ் எழுத்துக்களில் செய்யப்பட்டன.



சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே தமிழகத்தில் உள்ள ஒரு இனம் செங்குத்தர் என்றழைக்கப்படும் கைக்கோளர் எனும் பெயர் செங்குந்தர் என்ற பெயரோடு சேர்ந்து வழகத்தில் வர ஆரம்பித்து சுமார் 1200 ஆண்டுகளாக இவர்கள் தமிழகத்தின் பல பகுதிகளில் குறிப்பாக சேலம், ஆத்தூர், தர்மபுரி, ஈரோடு, கோயம்பத்தூர், ஆள்காடு காஞ்சிபுரம், ஜெயங்கொண்டம், திரு பழபாடி, தஞ்சை, சென்னை, மதுரை ஆகிய இடங்களிலும் இலங்கையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு வன்னி, திருகோணமலை போன்ற இடங்களிலும் மிகுதியாக வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வருகின்றனர். இவர்களின் தொழில் நெசவாக இருந்தாலும் ஏராளமானோர் வணிகர்களாகவும், மற்ற தொழில்களிலும் ஆண்டாண்டு காலமாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

**பாடல்**

கூவிளம் இதழி தும்பை
கொண்டார்ச்சனை செய்தபேர்க்கு
தேவ நாடாளவைக்கும் திருகுகைவேல்
செங்குந்தம் துணை செங்குந்தர் சதகம்
முருகனை தன குலதெய்வமாக வழிபடும்
செங்குந்தர்.

## வேத நாயக மாதவா!

சோழர் மன்னர் தமிழ் திராவிட இனத்தின் அடையாளம்




**வேலாயுத பந்தம்**

வேல நாயக மாதவா
வாத தீத போதவா
வாத போத தீதவா
வாத மகாய நாதவே

1. கீழிருந்து மேல்நோக்கி நடுக்காம்புவரை வாசிக்க முதல் வரியும்.
2. விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்கி வலமாகச் சென்று கீழிறங்க இரண்டாம் வரியும்.
3. மீண்டும் விடுபட்ட இடத்திலிருந்து இடமாகச் சென்று வலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழிறங்க மூன்றாம் வரியும்.


4. விட்ட இடத்திலிருந்து மீண்டும் கீழே வருமாறு படிக்க நான்காம் வரியும் அமைதல் காண்க.

இச் சித்திரகவி மாலைமாற்றுமாகும்.

மாலைமாற்று – பாடல் இறுதி தொடங்கிப் படித்தாலும் பாடல் அமைவது.

**சிங்கார வேலனூர் தேர்**

சோழர் மன்னர் ஒரு வரலாற்று பேழை



**இரதபந்தம்**

கார்வந்தே யியாரூர்க் காவலவனூங்கருளாற்
பார்வந்தே சிற்பநூற் பாவலர்ப்பேர்ச் - சீர்பெறவே
சிங்கா புரிவளரச் செய்தார்காண் பேரோங்கு
சிங்கார வேலனூர் தேர்.

கீழ் இடமிருந்து வலமாகத் தொடர்ந்து மேல்நோக்கிச் சென்று உச்சியிலிருந்து நேர் செங்குத்தாகக் கீழே வரும்படி படிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி பிள்ளையார் ஆலயத்திற்க்கு சுமார் 100 யார் தூரத்தில் கோயிலுக்குக்குரிய இரண்டு கிணறுகள் உள்ளன. இக் கிணறுகள் எக்காலத்திலும் வற்றுவதில்லை என இப்பகுதி மக்கள் கூறுகின்றனர் இப்பிரதேசங்களில் இயக்கர் நாகர் அவர்கள் வழி வந்த ஆதித் திராவிடர்கள் வாழ்ந்தனர். இந்து மத வழி பாடு நிலவிய இவ்விடங்களில் பிற்காலத்தில் பௌத்தம் புகுத்து கொண்டது.

அம்பாந்தோட்டை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கி.மு 8 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 8 ஆம் நூற்றாண்டு வரை தோன்றிய பிராமிக் கல்வெட்டுக்கள் இவ்வுண்மையை நிரூபிக்கின்ற கண்டி பண்டைய வரலாறு தமிழர்கள் வாழ நிலங்களை இழந்து வாழ்கிறார்கள். அக்காலத்தில் ஈழத்தின் வடக்கு கிழக்கு தெற்கு கரையோரப் பிரதேசங்கள் தமிழர் வாழ்ந்ததும் நாக வழிபாட்டு தொடர்பு உடையவர்கள் கதிர்காமம் என்பதும் ஆய்வுகள் மூலம் தெரியவருகின்றன.

உலகத்தில் தோன்றியுள்ள எல்லா மதங்களுக்கும் ஆதி மதமாகத் தோன்றியுள்ள இந்து மதம் எப்பொழுது தோன்றியது என்பதை வரையறுத்துக் கூற முடியாது. 40000 வருடங்களாக நமது இந்து கலாச்சாரம் இவ்வுலகில் நிலவிவருவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்து மதம் எண்ணற்ற ரிஷி முனிவர்களின் ஆன்மீக

அனுவங்களை அடிப்படையாகக் கொண்டது. இலங்கை வரலாற்றில் மன்னர் இராவணன் 12 சிவ ஆலயாங்களை அமைத்தார் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றது. குளக்கோட்டன் என்ற மன்னர் சோழ மன்னான் மகன் பழம் பெருமைகள் இலங்கை தமிழர் வரலாறு பற்றி முன்னேஸ்வர கல்வெட்டு சாசனத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துளர் அறிஞர் பௌலர; (FOWLER) ஆங்கிலேயர். கி.பி. 1410 – 1462 ம் ஆண்டு

ஒரு நாகரிகத்தின் சிறப்பும் மேன்மையும் தொன்மையான வரலாற்றையும் செழுமையான மொழியையும் வளமான பண்பாட்டையும் கொண்ட தமிழினமானது தமக்கென ஒரு சுதந்திர அரசை அமைப்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிக் கொள்ள முடியாமல் அல்லற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து தனது பண்பாட்டை பாதுகாப்பது அவசியம் இலங்கையின் வரலாற்றுப் போக்கை உன்னதமான புதிய பாதையில் வடிவமைக்க வேண்டியது தமிழ் மக்களின் கடமை. பண்டை தமிழர் தலை, இடை, கடை என முச்சங்கங்களைக் கண்டு தமிழரை வளர்த்தனர் என்பது வரலாறு இறையனார் களவியல் உரை கண்ட நக்கீரர் தம் உரையில் முச்சங்க வரலாற்றைத் தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளார். இலங்கை மண்ணில் ஆட்சி செய்த தமிழ் மன்னர்கள் 1798ல் கண்ணசாமி எனும் இளவரசன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் என்ற பெயரின் அரசனாகினான் 1798 – 1815 வரை ஆட்சி செய்தான்.



கண்டி (நாயக்கர்)

1815.02.10 ஆம் திகதி கண்டியை பிரித்தானியர் கைப்பற்றினர் மார்ச் மாதம் 2ம் திகதி கண்டி ஒப்பந்தத்தின் மூலம் கண்டி அரசு பிரித்தானியருக்கு கொடுக்கப்பட்டது. 1832 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாள் தனது 52 ஆவது வயதில் காலமானார் கண்ணுச்சாமி விக்கிரம ராஜசிங்கன்.



மனைவி ரங்கம்மாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கண்ணசாமி விக்கிரம ராஜசிங்கனின் மனைவி ரங்கம்மாள் மகன் ரங்கராஜன் ஆகியோரை நாடு கடத்தி திகதி 1815.03.2திகதி இவர்கள் தமிழ் நாட்டில் வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். 1832ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் நாள் தனது 52 வது வயதில் மன்னர் காலம்மானார். இதன் பின்பு விக்கிரமராஜ சிங்கன் மன்னருக்கு கலைஞர் கருணாநிதி 1990 ல் முதலமைச்சராக இருந்தபோது இலங்கையை ஆண்ட கடைசி தமிழ் மன்னனுக்கு கவின்மிகு முத்துமண்டபம் கட்டி அழகுபடுத்தினார். தற்போது ஒவ்வொரு ஆண்டும் 30திகதி ஜனவரி மாதம் குரு பூசை நடைபெறுகிறது. வாழ்க தமிழ் மன்னன் வாழ்க வாழ்க - கண்ணுசாமி தந்தை ஸ்ரீ வெங்கட பெருமாள் அரச பரம்பரை சேர்ந்தவர்கள் 1798ல் பிலிமத்தலாவையின் ஆதரவுடன் அரசனாகினான்.

நாயக்க பிரதானிகளுக்கு கூடிய சலுகைகளை வழங்கினான் சிங்கள பிரதானிகளின் சலுகைகளைப் பறித்தான் திசாவனிகளைப் பிரித்து வழங்கினான். 1812ம் ஆண்டிற்க்குப் பின் மன்னனின் நடவடிக்கைகளால் சிங்கள பிரதானிகளின் வெறுப்பு அதிகரித்தது இதன் பின்பு பிலிமத்தலாவின் உதவியுடன் பிரித்தானியர் அரசை கைப்பற்றினர்.



1815ல் 2ம் மாதம் 10ம் திகதி கண்டியை ஆண்ட மன்னர் கண்ணுசாமி விக்கிரம ராஜசிங்கன் கை ஒப்பமிடும் காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கிலி மன்னனின் மாளிகை**




மன்னர் பரராஜசேகரனின் வழித்தோன்றியவர்களான சங்கிலி மன்னன் ஆட்சியாளனாக சிறந்து விளங்கினார். பதினைந்தாம் நூற்றாண்டின் விஜயநகர சாம்ராச்சியமத்துக்கு யாழ்ப்பாணம் அடிபணிந்தது என ஆலம் பூண்டி சாசனத்தில் எழுதப் பட்டுள்ளது.

16ம் நூற்றாண்டின் ஆரம்பமான போர்துக்கெயர் கடற்படை அதிகாரணமாக சங்கிலி மன்னனுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டது. கி.பி. 1561ல் சங்கிலி மன்னர் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டார். கி.பி. 1619ல் தமிழ் மன்னர் ஆட்சி வீழ்ச்சியடைந்தது அன்று தொடக்கம் இன்று வரை தமிழ் மக்கள் துன்பக்கடலில் நீந்துகிறார்கள் உலகின் திராவிட வரலாறு தமிழர் வரலாற்றில் அவன் விட்டுச்சென்ற வரலாற்றுச் சின்னங்கள் அவனுடைய காலடி தடங்களே தொல்பொருள் ஆய்வாளர்களால் இன்றும் கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுக்கு முற்பட்ட காலம் புராதன கற்காலம் யாழ்ப்பாணவைபவ மாலையில் கி.பி. 1202 முதல் ஆரிய சக்கரவர்த்தி இராஜ வம்சமாக இருந்ததாக அறியமுடிகிறது. 1435ல் இந்திய சோழர் காலமென்றில் யாழ்ப்பாணம் என எழுதப்பட்டுள்ளது. 16ம் நூற்றாண்டில் நல்லூர் இதன் தலைநகராக இருந்துள்ளது.

## மன்னர்கள்

விஜய குலசேகரன், குலசேகரன், விக்கிரமன், விரேதய, வார்ணா நா, சாதன சுதம்பை, விரேதய, ஜயவீர, சகுமா வீர, சந்தியாஆலி, பரராஜசேகரம், சங்கிலி மன்னர் நல்லூர் கந்தசாமி கோவில் உட்பட பல கோவில்கள் குலசேகரன் மன்னர் காலத்தில் கட்டப்பட்டது. சென்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய போது அங்கு கனக சூரிய சிங்கை ஆரியன் இருந்தான். 1469ல் சென்பகபெருமாள் ஆறாவது புவனேகபாகு என்ற மன்னர் கோட்டை இராச்சியத்துக்கு மன்னனானான். இது வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சந்திர குப்த மௌரியரின் மகன் பிந்து சாரரின் மறைவுக்குப் பிறகு கி.மு. 273ல் பட்டத்துக்குப் வந்த அசோக வர்த்தனா (அசோகர்) மகத சக்கரவத்தியாக முடி சூட்டிக்கொண்டார். கி.மு. 269ல் தான் இந்த நாலாண்டு காலத்தால் தம் தான் வரலாற்று அறிஞர்களிடையே பல ஊகங்களுக்கும், கற்பனைகளுக்கும் இடம் கொடுத்து விட்டது.

பிற்காலத்தில் புத்த மதம் வெகுவாக வேரூன்றிய இலங்கையில் அசோகர் பெரிதும் உணர்ச்சி பூர்வமாக மதிக்கப்பட்டார். இங்கே சில வரலாற்றுப் புத்தகங்களிலும் பௌத்தமத நூல்களிலும் அசோகரின் ஆரம்பகால ஆட்சி பற்றிய தகவல்கள் காணப்படுகின்றன. ஊகங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட அந்த வரலாற்றுக் குறிப்புகளில் காணாமல் போனது வரலாறு மட்டுமே. பௌத்த மதத்தை சேர்ந்த சிங்கள வரலாற்று நூலாசிரியர்கள் அசோகரின் ஆரம்பகால வாழ்க்கையைப் பற்றி எழுதிய கற்பனை நாவல் அசோகர் பட்டத்துக்கு வந்த போது சராசரியான இந்து ராஜாவாகத்தான் இருந்தார் என்பது தான் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அசோகச் சக்கரவர்த்தியின் மகள் சாங்கமித்திரை**



கி.மு 257ல் அசோகர் முழுமையாக புத்த மதத்தில் சேர்ந்து துறவியானார் அவர் துறவியாகவும் மன்னராகவும் அது அசோகரின் ஆணையின் பேரில் பௌத்த மதக் கோட்பாடுகளைப் படித்துத் தேர்ந்த தூதுவர்கள் பல நாடுகளுக்கும் சென்றார்கள். மேற்கு ஆசியா கிழக்கு ஐரோப்பியா வட ஆபிரிக்கா கிரேக்கமும் பர்மா இலங்கை சுதந்திர நாடுகளாக இருந்த சோழ நாட்டுக்கும் பாண்டிய நாட்டுக்கும் தூதுவர்கள் சென்று சந்தித்தார்கள் இலங்கையில் போதி அரச மதத்தினை அசோக சக்கரவர்த்தி தங்கை சங்கமித்தை அன்று அநுராதபுரத்தில் நாட்டினார் உலகம் முழுக்க புத்த மதம் பரவியதற்கு இசோகச் சக்கரவர்த்தி என்கிற மன்னரே காரணம் என்பதில் சந்தேகம் இல்லை.



**நந்த வம்சத்தைப் பூண்டோடு அழித்த சாணக்கியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்சசீலத்திலிருந்து பாடாலிபுத்திற்க்கு வந்த சாணக்கியர் அறிவாற்றலைக் கண்ட நந்த மன்னர் தனநந்தர் தன்னுடைய தன்சாலைக்கு (நீதி விலகா) பொறுப்பாளராக அவரை நியமித்தார். போக போக சாணக்கியரை மன்னருக்குப் பிடிக்காமல் போயிற்று சற்றே கர்வமான சாணக்கியரின் அணுகுமுறையும் காரணமாக இருக்கலாம் நிதி விஷயத்தில் ஏதோ சிறு தவறு நிகழ்ந்ததை சாக்காக வைத்து சாணக்கியர்க்கு மரண தண்டனை விதித்தார். நந்தர் சிறையில் அடைக்கப்பட்ட சாணக்கியர் சந்நியாசி போல வேஷம்மிட்டு தப்பித்து வெளியேறினார். நந்த மன்னருடன் நடந்த யுத்ததில் லட்சக்கணக்கான வீரர்களும், பத்தாயிரம் யானைகளும், பல்லாயிரக்கணக்கான குதிரை வீரர்களும் கொல்லப்பட்டதாக ஒரு பௌத்த நூல் தெரிவிக்கிறது சாணக்கியர் அமைதியடைந்தது நந்த வம்சம் பூண்டோடு அழிந்த பிறகு தான் அமைதியடைந்தார். (இதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. தென்னாட்சித் தமிழன்

### லெமூறியாவை ஆண்டவர்கள்பாண்டியர்கள்

உலகம் கண்டு வியந்த வன விலங்குகளையும், பறவைகளையும் வான்நோக்கி வளர்ந்த மரங்களையும், செடிகளையும் உலகம் கண்டுபிடித்த, கண்டுபிடிக்காத உலோக தங்கங்களையும், தாதுக்களையும், உலகத்தால் முன்னதான நாகரித்தையும், உலகத்தில் முன்னோடியாக விளங்கிய மொழிகளையும், முதல் தமிழ் சங்கம் முழுமை பெற்று திகழ்கிறது.

அகப்பொருள் வரைந்து இறையனாரும் ஆயிரம் ஆயிரம் புலவர்களும் அங்கம் வகித்த தமிழ் சங்கம் தமிழன் உயிரை ஒழுங்குபடுத்திய தமிழ் சங்கம். தற்காலத்தில் செம்புக்கும் இரும்புக்கும் தாவிய மனிதன் லெமோரியா விண்ணியல் அறிவு எவ்வளவாக வளர்ந்தாலும் மண்ணியல் அறிவு தொடங்கிய இடம் என்று விஞ்ஞானிகள் ஒப்புக்கொண்ட இடம் அது தான் லெமூறியா அக்காலத்தில் சூரிய பகவானே மக்களின் இஸ்டதெய்வமாக வழிபட்டனர். எரேபியம் என்பது எகிப்து எரேபிய நாகரிகம் திராவிட நாகரிகம் பழமையானதும் பெருமைமிக்கதும் எகிப்திய மன்னர் பரம்பரை 6000 ஆண்டுகளுக்கு மேல் அந்த பரம்பரைக்கு வயது உண்டு என்று ஆய்வில் கூறப்படுகின்றன.

குமரிக்கண்டத்தை சிலந்தருவில் பாண்டியன் ஆண்ட போது எபிரியத்தை ஆண்டவன் செமோசி லெமூறியா மக்களின் பழக்கவழக்கங்களும் ஒன்றாகவே இருந்தன. எபிரியத்திற்கும் தமிழ் நாட்டிற்குமிடையே நெடுங்காலம் நடந்த வாணிபத்தில் அரிசி, ஏலக்காய் மயில் தோகையாகும். ஏரெபிய மொழியில் மயில் தோகைக்கு தோகை என்ற பெயர் இன்றும் வழங்கப்படுகின்றது.

லெமோரியாவிலிருந்து இரும்புத் தாதுக்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைச்சிகளையும், விலங்குகலையும் கொண்டு சென்றார்கள். அதற்கு பண்டமாற்றுப் பொருளாக அங்கிருந்து முரட்டு பரவிகளை கொண்டு வந்தார்கள். எரேபிய மன்னரின் தம்பி அபிராசிய வாணிபத்தை நடத்தினார். உலகெங்குமே நாகரிகங்கள் தளிர்த்து வேரூன்றியவுடன் ஏதோ வாழ்தோம் போனோம் என்று மனிதன் சும்மாயிராமல் இலக்கியம் சிற்பம், ஓவியம் என்று ஏராளமான கலைகளில் ஏக ஆர்வத்துடன் செயற்பட்டார்கள்.

முயற்சியும் சாதனையும் மனித வாழ்க்கையோடு பின்னிப்பினைந்து மாறாமல் இருந்து வந்த மனிதன் என்பவன் வித்தியாசமாவன் என்பதை நிர்ணயித்து வருகின்றது. இந்த வகையில் பபிலோனியர்கள் உருவாகிய தில்கமெஸ் காப்பியம் உலகின் மிகச்சிறந்த இலக்கியப்படைப்புகளில் ஒன்றாக கருதப்படுகின்றது. வரலாறு என்பது என்றுமே பின்னோக்கிப்பாய்வதில்லை கடந்தகால வரலாற்றோட்டத்தை நிகழ்கால நடத்தைகளோடு பொருந்தி - எதிர்வரும் காலத்திற்கான பாதையை செப்பனிடுவதே தான் மனித குலத்தின் விதிமுறைகளையும் தொகுத்தும் கண்டறிய வேண்டியது அறிவார்ந்த சமூகத்தின் கடமை.

கி.மு. 8000 உலக வரலாற்றில் மிக முக்கியமான மைல் கல்லாக அமைந்தது. மனித இனம் மேற்கொண்ட மிகப்பெரிய புரட்சி ஆடு மாடுகளை மனிதன் வளர்க்க ஆரம்பித்ததும் கி.மு. 8000 க்குப் பிறகு தான் உலகின் மையத்தில் ஏதோ ஆதார சக்தியைப் போல நாகரிகம் நிகழ்வதில்லை. அங்குமிங்கும் ஏதேதோ மூலை முட்களில் தான் நாகரீகங்கள் கிளர்ந்தெழுந்திருக்கின்றன. அதைத் தொடர்ந்து மனித சமுதாயம் பல மடங்கு வேக நடைபோட ஆரம்பிக்கிறது. நாகரிகங்கள் கிளர்ந்தெழுந்ததும் புதிய பண்பாடுகள் கலாசாரங்கள் வழிபாடுகள் தோன்றுகின்றன. மொழி, கட்டடக்கலை, ஓவியம், இசை, சிற்பக்கலை, தத்துவம், இலக்கியம், சட்டம் எல்லாமே ஏககாலத்தில் தலை நீட்டுகின்றன. இன்றைய ஆபிரிக்கா, இந்தியா, தென்கிழக்காசியா, ஆஸ்திரெலியா ஆகியவற்றை உள்ளடக்கிய நிலப்பகுதியே பண்டு இலேமேரியா என வழங்கப்பட்டது. இதையே குமரி கண்டம் என்கின்றனர். இங்கேயே முதல்மனிதன் பிறந்தான் என்பர். மக்கள் பிறப்பகம் என்று வலியுறுத்தியுள்ளனர். இங்கு தோன்றி வளர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனே நாகரிகம் பெற்ற முதல் மனிதன் என்று முக்கடல் புதிர் என்னும் நூலில் சோவியத் அறிஞர் எடுத்துக் காட்டுகின்றனர்.

**பாடல்**

நினைத்தாலே நெஞ்சினிக்கும் அந்தக் காலம்
நிலவிற்கும் கவிதைக்கும் உறவுக் காலம்
பனித்துளியில் ஓவியப்பூ மலர்ந்த காலம்
பண்பாட்டுக் களஞ்சியங்கள் நிறைந்த காலம்
தனித்தொருவன் வாழாத கூட்டுக் காலம்
சமூதாயத் தழுவலியே தெரிந்த காலம்
கனைத்தோடும் குதிரைகளின் சக்தி பெற்ற காலம்
தமிழர் நல்லாட்சி புரிந்த காலம்.

இயம்பவள் நெடுசேரலாதன் இமையம் வரை படையெடுத்து வென்றான் என்பதனை அவன் பெரே சுட்டுநிற்கிறது. அவன் மகன் செங்குட்டுவன் தமிழர் வீரத்தினை இகழ்ந்துரைத்த கனகர்வியசர் எனும் வடபுல மன்னரை வென்று அவர் தலையிற் கல் சுமத்தி கொணர்ந்து பத்தினி தெய்வம் சண்ணதிக்கும் கோயில் கட்டிச் சிறப்பித்தான். ஆசியப் படை கடந்த நெடுஞ்செழியன் வடக்கே படை நடத்திச் சென்று ஆசிரியரை வென்றான். கரிகாற் சோழன் இமையத்தில் கொடியைப் பொறித்தான் தமிழ் நாட்டு வரலாறு தொல் பழங்காலம்.

## மகான்களின் வாழ்க்கை வரலாறு

### உத்தமர் கௌதம புத்தர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதகண்டம் என்றும் ஆரிய வர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது நமது பாரததேசம். இங்கு 'கொகனா' என்று வழங்கப்படும் உரோகிணி நதியின் கரையிலுள்ள உத்தரகோசல தேசத்தில் இசஷ்வாகு வம்சத்தில் வந்த அரசனின் பெயர் சுத்தோதனன். இவரது காலம் 2200 வருடம் முன் எனக் கருதப்படுகிறது. இவருக்கு நான்கு சகோதரர்கள், இரண்டு சகோதரிகள். இவர் வாழ்ந்த நகரம் உத்தரகோச தேசத்திலுள்ள கபிலவாஸ்து என்னும் நகரம். கபிலர் எனும் முனிவர் தவம் செய்த இடமாதலால் கபில வாஸ்து - கபிலவாஸ்து (வாஸ்து - இடம்) என்றாகிற்று. பழந்தமிழ் நூலான 'நீலகேசி'யில்சுத்தோதனன். கோலிபதேசத்து மன்னனான அஞ்சனன் என்பவருடைய மகள்மாரான கௌதமியையும், மாயாதேவியையும் மணம் செய்து கொண்டான். திருமணமாகி பல வருடங்களாகியும் குழந்தைப்பேறு இரு மனைவிக்கும் இல்லை.

தெய்வ லோகங்கள் ஆறினுள் நான்காவது தெய்வலோகமான துவிதலோகத்தில் இருப்பவனான பிரபாலரென்னும் போதிசத்துவர் கனவில் தோன்றி மாயாதேவிக்கு மகனாகத் தான் பிறக்கப்போவதை மாயாவதிக்கும் சுத்தோதனனுக்கும் தெரிவித்தார். பின்பு மாயாதேவி கருத்தரித்தாள். அப்போது அவளது வயது நாற்பத்தைந்து தன் சகோதரி மட்டும் கருத்தரித்தது ஆனால், தான் அந்த பேறு இடையாளத்தை எண்ணி வருந்திய கௌதமி தன் சகோதரியின் மேல் பொறாமை கொண்டாள். ஆனால், பின்பு மனம் மாறினாள்.

குழந்தை பேறுகாலத்தில் கபிலவாஸ்துவுக்கு அருகிலுள்ள (உ) லும்பினி எனும் இடத்தில் நந்தவனத்தில் தங்கியிருந்த மாயாதேவிக்கு நந்தவனத்தைச் சுற்றிவரும்போது அசோக மரத்தடியில் நின்றிருந்த போது பிரசவவலி ஏதும் இல்லாமல் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. குழந்தை பிறந்தது ஈசான சகாப்தம், 68 – ஆம் ஆண்டு வைகாசி மாதம் பூர்ணிமையும் விசாக நட்சத்திரமும் கூடிய வெள்ளிக்கிழமை. போதிசத்துவரே புத்தராகப் பிறப்பார் என்பது பௌத்தமத நூல்களில் காணப்படும் உண்மை. 'நாலாயிர திவ்யப்பிரபந்தம்' என்னும் வைஷ்ணவ நூலில் நாராயணனின் அவதாரமாக புத்த அவதாரம் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. குழந்தை பிறந்த ஏழாம் நாள் மாயாதேவி இறந்துவிட கௌதமியே குழந்தையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்து வந்தாள். குழந்தைக்கு சித்தார்த்தன் எனப் பெயரிடப்பட்டது. சித்தார்த்தன் எனும் பெயர் "விருப்பத்தை நிறைவேற்றியவன்" என்று பொருள்படும். சித்தார்த்தன் என்று பெயரிட்டாலும் கௌதமன் என்றே குலப்பெயரால் அழைக்கப்பட்டான்.

சித்தார்கனைக் கண்ட ஒரு பிராமணன் இந்தக் குழந்தை பிற்காலத்தில் துறவியாகும் என்றும், தர்ம உபதேசத்தினை நாடெங்கும் செய்வனென்றும் கூறினான். தனது மகன் துறவியாவான் என்பதைக் கேள்வியுற்ற மன்னன் மனம் மிகச் சோர்ந்தது. தனக்குப்பின் இந்த ராஜ்யத்தை ஆள்வது யார்? மேலும் பல வருடங்கள் கழித்து பிறந்துள்ள இந்தக் குழந்தையையும் இழப்பதென்றால் எப்படித்தான் மனம்வரும். எவவே, தன் மகனுக்கு இந்த உலகம் சொர்க்க பூமியாக காட்சி தர வேண்டும் என்று எண்ணினான். அதனால், தனது மகனை பதினைந்து வயதிலேயே இளவரசனாக ஆக்கினான். பின்பு அவனது பத்தொன்பதாம் வயதில் தனது மைத்துனனாகிய சுப்பிரபுத்தனுடைய மகள் யசோதரையை மணமுடித்து வைத்தான்.

தன் மகன் சிற்றின்பங்களில் மூழ்கினால் துறவற எண்ணம் வராது போகும் என்பதால் தன் மகனுக்கு வேனிற்காலம், மழைக்காலம், பனிக்காலம் என முக்காலத்து தனித்தனியாக தங்கி போகத்தினை அனுபவிக்க மாளிகைகள் கட்டிவைத்தான். இந்த சுகபோகம் வாழ்க்கை முழுவதும் இருக்கும் என்றும் மூப்பு, பிணி, மரணம் இவை கிடையாது என்று எண்ணுமளவு சித்தார்த்தன் வளர்க்கப்பட்டான். ஆனால், எத்தனை நாட்கள் உண்மையை மறைக்க முடியும்.

உலும்பினி அரண்மனையில் வந்து தன்னை சந்திக்கும்படி அரசன் சித்தார்த்தனுக்கு ஓலை அனுப்பினான். அரசனைக்காண சித்தார்த்தன் புறப்பட்டான். அமங்கலக் காட்சிகள் ஏதும் வீதியில் இளவரசன் காணக்கூடாது என்பதை அறியும் படி செய்தனர். காவலாளிகளும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். ஆனால், மனித முயற்சி எப்பொழுதும் எல்லாக் காலமும் வெற்றி பெற முடிவதில்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூனல் விழுந்த முதுகு. நடப்பதற்கு உற்ற துணையாக கையில் ஒரு கொம்பு. சுருக்கம் விழுந்த தோல். சில அடிகள் எடுத்து வைப்பதற்குள் பல முறை தடுமாற்றம். நடக்கப் பயன்படும் அந்த கொம்பினைப் பிடிக்கவே கையில் நடுக்கம் இப்படிப்பட்ட குறைபாடுகளுடன் மெல்ல அந்த உருவம் நடந்துகொண்டிருந்தது.

இதுவரையில் பார்த்திராத காட்சியினைக் கண்டான் சித்தார்த்தன். அது என்ன விசித்திரமாக உள்ளதே என்று உடன் வந்த குதிரைக் காப்பானாகிய சந்தகனிடம் கேட்டான் (தோழன் உதாயியென்றும் கூறப்படுகின்றது.)

"அவன் வயது முதிர்ந்த கிழவன். அதனால், அப்படியுள்ளான்" என்றான்.

"எல்லோருக்கும் இந்நிலை வருமா? இல்லை இந்த மனிதனுக்கு மட்டும் தான் இந்த நிலை உள்ளதா? " என்றான் சித்தார்த்தன்.

"மனிதனாய்ப் பிறந்த எல்லோருக்கும் இது தான் முடிவு. இதில் அரசனுக்கும் ஆண்டிக்கும் வித்தியாசமில்லை" என்று எண்மையை மறைக்க முடியாத நிலையில் பதிலளித்தான் சந்தகன்.

இந்த அனுபவம் சித்தார்த்தனை யோசிக்க வைத்தது. வாழ்வின் நிலையாமைபற்றி சிந்திக்க வைத்த முதல் நிகழ்ச்சி இதுதான். இன்று பட்டாடையும் இளமையும் பின்னிப் பிணைந்துள்ள தனக்கும்தன் மனைவிக்கும் கூட வயோதிகத்தன்மை உண்டு என்பதை எண்ணிய போது சித்தார்த்தனால் உறங்கமுடியவில்லை. இதனைத் தவிர்க்க முடியாதா? சிந்தனை வலுவானது.

வயோதிகனின் காட்சியைத் தன் மகன் கண்டுவிட்டான் என அறிந்த மன்னனுக்கு பெரும் கோபமும் கவலையும் உண்டானது. இனி தன் மகன் அமங்கலமான காட்சிகளைக் காணக்கூடாது என்பதற்காக பாதுகாப்பு ஏற்பாடுகளைக் பலமாக்கினான் அரசன். இளவரசன் தேர் செல்வதற்கு முன்பு அந்தப் பாதையை காவலர்கள் வேகு பார்த்து வர வேண்டும். இளவரசர் வருகையை குதிரை வீரன் ஒருவன் உரத்தகுரலில் அறிவித்தபடி செல்ல வேண்டும் என ஏற்பாடுகள் பலமாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது முறை சித்தார்த்தன் நகர்வலம் வந்தான் தெருவோரம் ஒருவன் உரத்த குரலில் வேதனையால் அலறிக் கொண்டிருந்ததான். அவனது குரல் கேட்கும்போதே மனவேதனையை உண்டாக்கியது.

"இது என்ன? அந்த மனிதன் ஏன் அப்படி குரல் எழுப்புகிறான்? அவனது நிலைக்கு காரணம் என்ன? " என்று சந்தகனிடம் கேட்டான்.

உண்மையை மறைக்க இயலாத நிலைக்குஆளாகிய சந்தகன் "தாங்கமுடியாத நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ளான் அந்த மனிதன். அந்த வலியே அவனது அலறலுக்கு காரணம்" என்றான்.

"இத்தகைய துன்பம் எல்லோருக்கும் வருமா? "

"ஆண்டி முதல் அரசன் வரை அனைவருக்கும் பொதுவானது."

தேரினைத் திரும்ப அரண்மனைக்கு ஓட்டச் சொன்னான் சித்தார்த்தன். இந்த முறை தான் கண்ட காட்சியை தன் தந்தையுடன் பகிர்ந்து கொள்ளாமலேயே இருந்தான். மூன்றாவது நகர் பிரவேசம் துவங்கியது. வழக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்த முறை சித்தார்த்தன் கண்ட காட்சி சற்று புதுமையானது. ஒரு மனிதனைப் படுக்க வைத்து படுக்கை போன்ற ஒன்றில் நால்வர். தூக்கிச் சென்றனர். இந்தக் காட்சியை கண்டு

"என்ன புதுமை, ஏன் அந்த மனிதனை நால்வர் தூக்கிச் செல்கின்றனர்? "

கண்ணெதிரே கண்ட காட்சியை மறைக்க இயலாத சந்தகன் "மனிதனாய்த் தோன்றிய ஒவ்வொருவருக்கும் மரணம் என்ற ஒன்று உண்டென்றும், அது எப்பொது, எங்கு என்று தெரியவில்லை என்றும், ஆனால், மரணம் எல்லோர்க்கும் பொதுவானது" என்றான்.

"பட்டாடை உடுத்தி இளமை வனப்பால் உல்லாச வாழ்க்கையில் நாட்டையே ஆளப்போகும் தனக்கு இந்த மரணம் உண்டா? " என்றான் சித்தார்த்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இளவரசே! ஆண்டியானாலும் அரசனானாலும் எல்லோரையும் பாகுபாடின்றி பார்ப்பது இந்த மரணம் தான். இதற்கு நல்லவன், கெட்டவன், பணக்காரன், ஏழை என்ற பேதங்கள் இல்லை."

இந்தக் காட்சியைக் கண்டவுடன் அரண்மனை திரும்பிய சித்தார்த்தன் எதிலும் நாட்டமற்றவனாய் மரணம் என்பதை வெல்வது எப்படியென்று யோசிக்கத் துவங்கினான்.

நான்காவது முறை நடந்த நகர்வலத்தில் சித்தார்த்தன் கண்ட காட்சி ஒரு துறவியினுடையது. சராசரி மனிதனிடமிருந்து விலகி மாறுபட்ட தோற்றம், ஒளிவீசும் முகம் கொண்ட அந்த மனிதரை அழைத்து "நீங்கள் யார்? " என்றான்.

இந்த உலகில் உண்டாகும் இன்ப-துன்பம் இரண்டாலும் பாதிப்படையாதவன் தான் என்றும், எப்பொழுதும் நிலையானது எதுவோ அதை நோக்கிச் செல்கின்ற பாதையில் நடப்பவன் என்றும் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார் அந்த துறவி. தனது கேள்விகள் சந்தேகங்கள் இவற்றுக்கு விடை கிடைத்துவிட்டது போல மகிழ்ந்தான் சித்தார்த்தன்.

சித்தார்த்தன் கண்ட காட்சிகளான 'வயோதிகனின் உருவம்', 'நோயாளியின் உருவம்', 'ஒரு பிணம்', மற்றும் 'துறவி' இவைகள் சுத்தாவா தேவர்களுள் ஒருவரே இவ்வாறு காட்சியளித்தார் என்றும் இந்தக்காட்சிகள் ஒரே நாளில் சித்தார்த்தனுக்குக் கிடைத்தது என்றும் சில நூல்கள் உரைக்கின்றன. இந்த நான்கு காட்சிகளையும் கண்டு பின்பு அரண்மனை திரும்பிய சித்தார்த்தனுக்குக் கிடைத்த செய்தி அவனுக்கு ஆண் குழந்தையொன்று பிறந்திருப்பது என்பது தான்.

தன் மகனுக்கு இராகுலன் என்று பெயர் சூட்டினான். இளவரசருக்கு குழந்தை பிறந்த செய்தி தேசமெங்கும் இன்பவிழாவானது. மக்கள் அனைவரும் இன்புற்றனர். சித்தார்த்தன் மனமோ எதிலும் ஈடுபாடு இல்லாதிருந்தது. அரண்மனையில் நாட்டியம், இசை என இன்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளமாயிருந்தது.

இரவு நேரம், மீண்டும் மீண்டும் தான் கண்ட காட்சிகளில் நான்கும் சித்தார்த்தனுக்கு நினைவில் வந்தன. அதற்கான விடைதேடும் முயற்சிக்கு தயாரானான். எல்லாவற்றையும் துறந்து உண்மையைத் தேடும் பயணத்தினைத் துவங்கினான். அரண்மனையை விட்டு அரச பதவி, மனைவி – மக்கள், மற்றைய செல்வம் என எல்லாவற்றையும் துறந்து சித்தார்த்தன் புறப்பட்டது ஈசான சகாப்தம் 96 – ஆம் ஆண்டு வெள்ளிக்கிழமை. சித்தார்த்தனுக்கு அப்போது வயது இருபத்தியெட்டு கடைசிமுறையாகத் தன் குழந்தையையும் மனைவியையும் ஒரு முறை கண்டான். தன் குழந்தைக்கு ஒரு முத்தம் தந்து பிரிந்து செல்ல முடிவு செய்தான். ஆனால், தாயின் அணைப்பிலிருந்த குழந்தையை முத்தமிட்டால் தாயுமல்லவா விழித்துக்கொள்வாள். தனது பயணத்துக்கு தடைவருமே என்று எண்ணி அதையும் துறந்தான்.

நள்ளிரவில் குதிரைகளை இளவரசர் தயார் செய்யச் சொல்ல அதற்கு மறக்கவும் முடியாத, காரணத்தினையும் கேட்க இயலாத நிலையில் குதிரைகளைத் தயார் செய்தான் சந்தகன்.

வெகுதூரம் சென்ற பின் தன் நகையொன்றினைக் கழற்றி சந்தகனுக்கு அன்பளிப்பாகத் தந்து, பின்பு மற்ற அணிகலன்கள், மணிகள் இவற்றையும் தந்து "அரசனிடம் இவற்றைக் கொடுத்து எனது துறவுச் செய்தியைக் கூறு" எனக் கூறி சந்தகன் பலவாறு தடுத்தும் கேளாது விடைபெற்றான் சித்தார்த்தன். பின்பு தன் தலைமுடியை கத்தியால் மழித்துக்கொண்டு எதிரே வந்த வேடனிடம் தனது பட்டாடைகளைக் கொடுத்து அவனது பழைய ஆடைகளை தான் உடுத்திக்கொண்டான்.

பின்னர் பல துறவிகளைச் சந்தித்து துன்பங்களிலிருந்து விடுபடும் வழியைக் கேட்டான். பாண்டாரமலையில் உள்ள குகையில் தவம் செய்துகொண்டிருந்த அராளராம முனிவரைக் கண்டு அவரிடம் உபதேசம் பெற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனை திரும்பிய சந்தகன் நடந்தவற்றைக் கூற தன் மகன் துறவியாவான் என்பதை முன்பே சோதிடர்கள் மூலம் அறிந்திருந்தாலும் மகனின் துறவு அரசனையும், சிதார்த்தனின், மனைவியையும் நாட்டு மக்களையும் பலவாறாக துயர் கொள்ளச் செய்தது. காலகட்டத்தில் எல்லாத் துயரங்களுக்கும் ஆறுதல் உண்டுதானே! இராசபுரோகிதர் மந்திரியுடன் சென்று அராளராம முனிவரின் தவச்சாலையில் சித்தார்த்தனை சந்தித்து அழைத்தார். ஆனாலும் அவரது முயற்சி வெற்றி பெறவில்லை.

பிச்சை எடுத்து உண்பதற்காக இராசகிருக நகரத்திற்குச் சென்ற சித்தார்த்தன் பிம்பிவம்சத்தினர் வழிவந்த பிம்பிஸாரன் பல பசுக்களைக் கொன்று யாகம் செய்வதைக் கேள்வியுற்று அந்த யாகசாலைக்குச் சென்று பசுவதையைத் தடுத்து நிறுத்தினார். சித்தார்த்னால் மனம் மாறினான் பிம்பிஸாரன். இது முதல் கொண்டு சித்தார்த்தன் "கௌதம ரிக்ஷி" என்னும் பெயர் உண்டானது.

அராளராம முனிவர் வழி செய்த உபதேசத்தால் உண்மையை உணரமுடியாத புத்தர் பின்பு உருத்திகர் என்னும் முனிவர் வழியிலும் அதன் பின்பு 'குலபுத்திரர்', தசபலகாசியபர்', 'பாக்ஷ்பர்', 'அசுவஜித்', 'புத்திரர்', எனும் ஐந்து முனிவர்கள் தவம் செய்து வந்த ஞானாரண்யம் எனப்படும். 'உருவவோலா வனத்தையும் அடைந்தான்.

இவர்கள் வழியிலும் முயன்று உண்மையை உணரமுடியாது 'நைரஞ்சரை' நதிக்கரையில் அரசமரத்தடியில் அமர்ந்து தவம் செய்தார். இவ்வாறு தவம் செய்த நாட்கள் 28 என்றும், சில நூல்கள் 49 என்றும் கூறிகின்றன. இருபத்தொன்பதாம் நாள் 'ஸீஜாதை' என்னும் பெண் தனது தெய்வத்துக்கு நிவேதனம் செய்த பாலினை ஊட்டிட அதனை உண்டு ஒளியாய் விளங்கினார் என்று அறியமுடிகிறது. தவமிருந்த நாட்களில் மன்மதன் காமம், வெகுளி, மயக்கம் இவற்றினை உண்டாக்க முயன்று தோற்றான். பழைய பிறப்பினை அறிந்து, பழைய பிறவியில் செய்த பாவம் இப்பிறவியில் வருத்தத்தைத் தருகின்றது எனும் உண்மையை உணர்ந்தான். துக்க நிவாரணமார்க்கமான நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நன்முயற்சி, நற்கணப்படி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல் உள்ளத்தோர் என்னும் எட்டினையும் ஆராய்ந்தறிந்தான். 'சத்திய சதுக்ஷ்ட்ய ஞானம்' என்னும் துக்கம், துக்கோத்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரணமார்க்கமான நல்வழிகள் எட்டினையும் பெற்றதன் மூலம் கௌதமர் 'புத்தரானார்'. இவ்வாறு கௌதமர் 'புத்த'ராக ஞானம் பெற்ற தினம் ஈசான சகாப்தம் 103 - ஆம் ஆண்டு விசாக நட்சத்திரமும் பௌர்ணமியும் கூடிய புதன் கிழமை. அப்போது புத்தருக்கு வயது 35.

ஞானம் பெற்று புத்தரானவுடன் மஹாப்பிரம்மா தோன்றி "கவலையால் வாடுகின்ற மனிதர்கள் மேல் இரக்கம் காட்டு, சுயநலமுடன் வாழும் உலகத்தினருக்கு தர்ம உபதேசம் செய்து அவர்களை மாற்று" என்றார். தான் கண்ட உண்மையினை தனது குருவாக இருந்த அராள முனிவருக்கும், உருத்திகருக்கும் சொல்ல எண்ணினார். ஆனால், அதற்குள் இவ்வுலக வாழ்வினை விட்டு அவர்கள் மேலுலகை அடைந்திருந்தனர். பின்பு தம்முடன் தவம் செய்த ஐந்து முனிவர்களுக்கும் தான் கண்ட உண்மையைக் கூறி தன் வழிக்கு அவர்களை மாற்றினார்.

காண்பவர்களை வசீகரிக்கும் இனியதான அழகிய பார்வை கொண்ட முகம், கேட்பவர்களை மயக்கும் இசைக்குரல், இன்சொல் கொண்டவரான புத்தர் சாதிவேற்றுமையோ, ஆண், பெண், அலி என்ற பாலின வேறுபாடு பார்த்தோ அல்லது பகைவர், நண்பர் என்ற வேற்றுமையைக் கண்டோ பிரித்துப்பாராது எல்லோருக்கும் ருகதாவனத்திலிருந்தபடி தனது சித்தாந்தத்தை உபதேசிக்கத் துவங்கினார்.

குசீ நகரத்திலிருந்த 'யசன்' என்னும் செல்வந்தன் புத்தரின் பெருமையைக் கேள்வியுற்று தனது நண்பர்கள் 54 பேருடன் பிட்சுவாகி பௌத்த சங்கத்தில் சேர்ந்தான். புத்தர் ஞானோதயம் பெற்ற ஐந்து மாதங்களுக்குள் 60 பேர்இல்வாழ்க்கையைத் துறந்து பௌத்த சங்கத்தில் சேர்ந்தனர். பின்பு தனது சிஷ்யர்களை மக்களின் துயர் துடைக்க தமது சித்தாந்தத்தை பரப்ப அனுப்பினார்.

யசன் காசியிலிருந்தும் மற்றவர்கள் பல திசை சென்றும் பிரசாரம் செய்தனர். மழைக் காலத்தில் சிஷ்யர்களை தம்மிடம் வரவழைத்துக்கொண்டும் மற்ற காலங்களில் உபதேசம் செய்ய வெளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பியும் தமது சித்தாந்தத்தை பரவச் செய்தார் புத்தர். காசியப்பர், பிம்பிசாரன் முதலானோர் புத்தருக்கு சிஷ்யர்களாயினர். கபிலர் என்பவரின் மாணவனான சாரீரபுத்திரன் என்பவன் புத்தரின் பெருமைகளைக் கேள்வியுற்று புத்தருக்கு சிஷ்யனானான். இவனோடு பலர் சிஷ்யராயினர்.

கபிலவாஸ்துவுக்குச் சென்ற புத்தர் தனது தந்தையான சுத்தோதனால் உபசரிக்கப்பட்டு நகருக்குள் சென்றார். ஆனால், உற்றார் உறவனர் யாரும் பிட்சை அளிக்காததால் தன் சிஷ்யர்களுடன் பிட்சை எடுப்பதற்காக வீடு வீடாகச் சென்றார். தன் மகன் பல வீடுகளில் பிட்சை எடுக்கும் செய்தியைக் கேட்ட மன்னன். நீ இவ்வாறு செய்வது எங்களை அவமதிப்பது போலாகும். உங்கள் அனைவருக்கும் நானே பிச்சை செய்கிறேன் என்று வருத்தமுடன் கூறினான்.

"எங்களது தர்மம் இப்படி பிச்சை எடுத்து உண்பது தான். இதற்கு முன்பு பிறந்த, இதற்குப் பின்பு பிறக்கப்போகிற புத்தர்களுக்கும் உரிய மரபு இதுதான்" என்றார். "புதையலை எடுத்தவன் தன் தந்தைக்குத் தருவது கடமை. அதை நானும் செய்கிறேன்" என்று கூறி தனது பிச்சைப் பாத்திரத்தை ஏற்ற மன்னன் புத்தரையும் அவருடன் இருந்த சிஷ்யர்கள் 1500 துறவிகளுக்கும் பிச்சை கொடுத்து சிறப்பித்தான். தன் மகன் துறவியானதால் அது அவமானம் என எண்ணிய மன்னனுக்கு தனது பெருமையை உணர்த்தி தர்ம உபதேசம் செய்தார் புத்தர். பின்பு தனது மனைவி மிக்க வைராக்கியத்துடன் வாழ்வதைக் கேள்வியுற்று அவளுக்கும் தர்மோபதேசம் செய்தார்.

சில தினங்களுக்குப் பின்பு தன் மகன் இராகுலனை அழைத்து "உன் தந்தையிடம் சென்று உனக்குத் தரவேண்டிய செல்வத்தினைக் கேள்" என்றாள் அவனது தாய். "என் தந்தை யார்? " என மகன் கேட்க புத்தரைக் காட்டி "இந்தத் துறவிதான் உன் தந்தை" என்றாள். தன் தந்தையை வணங்கி "எனக்குத் தரவேண்டிய செல்வத்தைத் தருக!" எனக் கேட்ட எட்டு வயது மகனையும் தன் சங்கத்தில் சேர்த்துக் கொண்டு 'இதுவே உனக்கான செல்வம்' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தரின் தந்தையாகிய சுத்தோதனனின் மற்றொரு மனைவியான கௌதமிக்குப் பிறந்த நந்தன் என்பவனையும் தன் வழிக்கு அழைத்து துறவியாக்கினார் புத்தர். தனது மகன்களும் பேரனும் துறவு மேற்கொண்டதைக் கண்ட சுத்தோதனன் "எனது முதுமைப் பருவத்தை நான் எப்படி, யார் உதவியினால் கடப்பேன்? பரந்து விரிந்த இந்த தேசத்தை இனியார் ஆள்வது? " என்று வருந்திக் கலங்கினான். "எனது மகனையும் பேரனையும் இழந்து நான் வருந்துவது போல வேறு யாரும் வருந்தக்கூடாது" என சுத்தோதனன் வேண்டுகோள் விடுத்தான். அது முதல் பெற்றோர் விருப்பமின்றி பிள்ளைகள் துறவிகள் ஆவது கூடாது எனும் விதி புத்தரால் உண்டாக்கப்பட்டது.

பின்பு பல இடங்களில் பலரை தனது வழியில் ஈர்த்த புத்தர் அவர்களுக்கு ஞானவழியினைக் காட்டித் தந்தார். தனது தந்தை இறக்கும் தருவாயிலிருப்பதைக் கேள்வியுற்று அவர் இறக்கும் வரை அருகில் இருந்து இறுதிச் சடங்குகளைச் செய்து முடித்தார். பின்பு மகாவனத்திலிருந்த கூடாகார விகாரத்தில் தங்கி மேலும் பலரைத் தன் வழியில் சேர்த்தார். முதன் முதலில் புத்தர் சங்கத்தில் சேர்ந்த பெண், புத்தரின் தந்தையாகிய சுத்தோதனின் மற்றொரு மனைவியான
கௌதமி தான்.

கௌசாம்பி நகரத்தில் தமது சங்கத்துடன் இருக்கும்போது மௌத்கலி எனும் சிஷ்யனால் சங்கத்தில் குழப்பம் ஏற்பட கலகம் உண்டானது. புத்தர் சமாதானம் செய்வதும் கலகம் அடங்கவில்லை. இதனால் தனது சிஷ்யர்களை விட்டுத் தனியாகப் பிரிந்து சென்ற புத்தர் பாரியலேயகம் என்னும் காட்டில் காட்டுவாசிகள் அமைத்துத் தந்த குடிசையில் வாழ்ந்தார். பின்பு மனம் திருந்திய கலக்காரர்கள் புத்தரை அழைத்து மன்னிப்பு கேட்க சிஷ்யர்களுடன் மீண்டும் சேர்ந்தார்.

மகாதேசம் சென்ற புத்தர் அங்குள்ள இராஜகிருகா என்னும் நகரத்துக்கு அருகேயுள்ள கிராமத்தில் உழவுத்தொழில் செய்து வந்த பாரத்துவாஜன் என்னும் பிராமணனை அணுகி பிச்சை கேட்டார். "நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழுகிறேன், விதைக்கிறேன். அதனால் விளையும் பலனை அனுபவிக்கிறேன். நீங்களும் என்னைப் போல் இருக்கலாமே" என்றார் பாரத்துவாஜன்.

"நானும் உழவன் தான்" என்றார் புத்தர்.

"அப்படியானால் உங்களது கலப்பை எங்கே? மாடுகள் எங்கே? "

"எனது விதை சிரத்தை, மழை நற்காரியம்,
வயல் தருமநூல், கலப்பை அங்கங்கள்,
அறிவு வணக்கம், கலப்பையின் கைப்பிடி தர்மம்,
எருது விடாமுயற்சி, எருதுக்கான கயிறு மனம்,
எருதுக்கான தாற்றுக்கோல் ஊக்கம்,
பயிருக்கு இடையூறானவைகள் மயக்கம்,

எனது இந்த விவசாயம் நிர்வாணம் எனும் பலத்தை அளித்து துக்கத்தினைப் போக்குகிறது" என்றார். இந்த இனிய உபதேசம் பாரத்வாஜனை சிஷ்யனாக்கியது. தனது மகன் இராகுலனுக்கு பதினெட்டு வயதாகும் போது தர்மோபதேசம் செய்தார். பின்பு "இராகுல ஸீத்ரம்" என்னும் இக் காலத்தில் உள்ள நூலை உபதேசித்தார்.

கிருசாகௌதமி என்பவள் தனது குழந்தை இறந்துவிட்டதை எண்ணி மனம் வருந்தி தன் மகனை மீண்டும் பிழைக்கவைக்க வேண்டுமென பலரிடம் வேண்டி பின்பு புத்தரிடம் வந்து கேட்டாள். "உன் மகனைப் பிழைக்க வைக்க ஒரே ஒரு மருந்து தான் உள்ளது" என்றார் புத்தர். "அது எதுவானாலும் கொண்டுவருகிறேன்" என்றாள் அந்தப்பெண்.

"கடுகு ஒரு கைப்பிடி அளவு வேண்டும். ஆனால், யார் வீட்டில் இதுவரையில் எவரும் இறக்கவில்லையோ அவர்களது வீட்டிலிருந்து ஒரு கைப்பிடி அளவு கடுகு வேண்டும்" என்றார். பல வீடுகளில் தேடியும் 'யாரும் இறக்காத வீடு இல்லையென்பதால் மீண்டும் புத்தரிடம் திரும்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அவளுக்கு தர்மோபதேசம் செய்தார் புத்தர். புத்தரின் ஞானபதேசம் அவர் காட்டிய வழியில் கௌதமியைத் திருப்பியது.

புத்தரது உபதேசங்கள் அவர் பேசி வந்த பாலீயமொழியில் இருந்தனவென்றும், பின்னாட்களில் பல தேசத்தினர் தத்தமது மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்து கொண்டதாகவும் கூறப்படுகிறது.

ஞானோதயம் பெற்று 45 வருடம் கழித்து 'பெலு' என்னும் கிராமத்தில் தங்கியிருந்த போது அவரது உடல்நிலை நோயினால் பாதிக்கப்பட்டதென்றும், பின்பு வைசாலி நகரத்து சோலையொன்றில் தங்கியிருந்த போது மாரன் அவரிடம் வந்து "எண்ணியபடி எல்லாவற்றையும் செய்துவிட்டீர்கள். இனி நிர்வாணமடையவாம்" என்றான். அப்போது பூமி நடுங்கியது. அதைக்கண்ட ஆனந்தன் என்னும் பிரதான சிஷ்யன் பூமி நடுக்கத்தின் காரணம் கேட்டபோது, "நான் இந்த பூமியை விட்டுச் செல்லப்போகிறேன். அதனால் தான்" என்றார் புத்தர்.

குசீ நகரத்திற்குச் செல்லும் வழியில் பாவா நகரத்தில் மல்லர்கள் என்னும் ஒருவகைச் சாதியினர் அளித்த சோலையில் தங்கி சந்தன் என்பவன் அளஜத்த விருந்தினை ஏற்றார். அவ்வுணவில் பன்றியிறைச்சி கலக்கப்பட்டிருப்பதால் புத்தரது உடல் நிலை மேலும் மோசமானது. அதுவே அவர் உண்ட கடைசியுணவு. அப்போது புத்தரது வயது 80 ஆகும். சந்தன் அளித்த உணவே புத்தரது உடல் நிலையை பாதித்தது என பலர் கூறினர். ஆனால், புத்தரோ ஆனந்தனை அழைத்து நான் ஞானமடையும் போது சுஜாதை அளித்த பாலும் (நிருவாணமடைய முன்பு), இப்போது சந்தன் அளித்த உணவும் எல்லாவற்றுக்கும் மேலானவை என்று கூறினார். பிறகு ஹிரண்யவதி நதிக்கரையிலிருந்து இரட்டை சாலமரத்தின் நடுவில் சுத்தம் செய்து பாய் விரித்து "இன்று நடு இரவில் நிருவாணம் அடைவேன்" என்று கூறினார்.

வடக்கே தலை வைத்து படுத்துக்கொண்டு தாம் நிருவாணமடைந்த பின்பு என்னென் செய்ய வேண்டுமென்பதைக் கூறினார். தனக்குப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிஷ்யர்கள் செய்யவேண்டிய, கடைப்பிடிக்க வேண்டியவற்றைக் கூறினார். "நான் அறிந்த எல்லாவற்றையும் அறிந்தவன் ஆனந்தன். அதனால் என்னால் அறிய வேண்டியவற்றை இனி அவன் மூலம் அறிந்து கொள்ளலாம்" என்றார். தனது நிருவாண காலம் நெருங்கிவிட்டதை மல்லர்களுக்குக் கூறியனுப்பும் படி ஆனந்தனிடம் கூறினார். அழுது புலம்பியபடி மல்லர்கள் வந்தனர். "துன்பம் கொள்ளாதீர்கள். இது மகிழ்ச்சிக்குரிய காலம். இந்த உயர்ந்த நிலையை அடைய எண்ணித்தான் இவ்வளவுகாலம் முயன்றேன்" என்று கூறி தமது சிஷ்யர்களையும் மல்லர்களையும் தேற்றினார்.

புத்தர் நிருவாணம் அடையும் வேளையில் சிறந்த நூலறிவு பெற்ற சுபத்திரர் என்னும் குசீ நகரத்தினைச் சேர்ந்த பிராமண சந்நியாசி புத்தருடன் இச் சமயத்தில் வாதம் செய்ய வந்தார். இச்சமயத்தில் வாதம் செய்ய வந்துள்ள துறவியை அனுமதிப்பது சரியல்ல என எண்ணிய ஆனந்தன் தடுத்தான். ஆனால் துறவியின் வருகையை அறிந்த புத்தர் துறவியை வரவழைத்து தனது சித்தாந்தைப் பற்றிக் கூறினார். நிருவாண நிலையில் உள்ள புத்தரினை மரணம் தழுவுவதைக் கண்டு சகிக்காது பிராமணத்துறவி அந்த இடத்திலிருந்து வேறு இடம் சென்றனர்..

இரவின் முதல் பாகம் சென்றது. அமைதி எங்கும் குடி கொண்டது. பறவைகள் ஓசையற்று இருந்தன. மரங்கள் அசையவில்லை. எங்கும் அமைதி நிலவியது. புத்தர் மகாநிருவாணம் அடைகிறார் என்பதால் மனம் கலங்கி நின்றனர் சீடர்கள். "தகாகதன் சொல்லியவற்றில் ஏதேனும் சந்தேகமுண்டா? இருக்குமானால் சொல்லுங்கள்" — புத்தரின் குரல் அமைதியாய் ஒலித்தது. புத்தர் ஞானோதயம் பெற்ற பிறகு "ததாகதர், புத்தர், ஜீனர்" என்னும் காரணப்பெயர்கள் உண்டானது. புத்தர் 'நான்' என்று சொல்ல வேண்டிய இடத்திலெல்லாம் 'ததாகதர்' என்றே தன் பெயரைக் குறிப்பிட்டார் என்று கூறப்படுகிறது.

அனிருத்தன் எனும் சிஷ்யன் "தகாகதர் ஏன் இவ்வளவு சீக்கிரம் நிருவாணமடைய வேண்டும்? " என்று கேள்வி எழுப்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தரின் பிரிவினால் அவனுக்கு ஏற்பட்ட வருத்தத்தினை அந்த கேள்வி புலப்படுத்தியது. அவனுக்கு பலவாறாக சமாதானம் கூறிய புத்தர், "பிறப்புக்குக் காரணம் எதுவோ அதுவே இறப்பிற்கும் காரணம். இந்த உண்மையை மறக்காதீர்! இதை எப்பொழுதும் மனதில் கொள்க. இனி என்னிடமிருந்து உபதேசங்கள் வெளி வராது" எனக் கூறி மௌனமானார். எல்லாவற்றையும் ஒழித்தவராய் உலகில் துன்பத்தால் அல்லல்படும் மக்களுக்கு பாதைகாட்டி அவர்களை நல்வழிப்படுத்தியவரான அந்த உத்தமர் நிருவாணமடைந்தார். பழுத்த அந்தக் கனிமரத்திலிருந்து உதிர்ந்த நாள் ஈசான சகாப்தம் 148-ம் ஆண்டு வைகாசி மாதம் பூர்ணிமையும் விசாக நட்சத்திரமும் கூடிய செவ்வாய்க்கிழமை எனப்படுகிறது.

மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பொன்னாலான பல்லக்கில் புத்தரது உடல் சுமந்து செல்லப்பட்டு ஹிரண்யவதி நதியைக் கடந்து சென்று முன்பு புத்தர்கள் சைத்தியமான இடத்தில் தீ மூட்டி எரிக்கப்பட்டது. பின்பு எஞ்சிய எலும்புகளைக் கலசத்தில் சேர்த்து ஒரு கோபுரத்தின் மேல் வைத்து பூசித்து வந்தனர். புத்தரது எலும்புகளைக் கேட்டு மகதநாட்டரசன் மற்றும் எழுவர் மல்லர்களுடன் போரிட்டான். பின்பு 'சுபத்திரன்' எனும் பிராமணனால் சமாதானம் ஏற்பட்டு எட்டுப் பாகமாக்கப்பட்ட புத்தரது எலும்புகளை அனைவரும் பிரித்துக் கொண்டனர்.

புத்தரது பாதச்சுவடுகள் பூம்புகார் (காவேரிப்பூம் பட்டினம்) அருகிலுள்ள உவனத்திலும், இலங்கைத்தீவிலுள்ள (இரத்தினத் தீவில்) சமந்தம் அல்லது சமனொளி (ஆடம்ஸ் பீக்) எனும் மலை உச்சியிலும் இருந்தனவென்றும் இவைகள் பௌத்தமதத்தினரால் புத்தராகவே வணங்கப்பட்டது என்கிறது மணிமேகலை.

காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே முப்பது யோசனைத் தூரத்தில் கடலிலுள்ளதாகிய மணிபல்லவம் என்னும் சிறிய தீவில் புத்ததேவன் இருந்ததாகத் தெரிவிக்கும் இந்தினத்தால் அமைக்கப்பட்ட ஆசனமொன்று இருந்ததென்றும், அது தீவகதிலகையென்னும் தெய்வ மாங்கையால் காக்கப்பட்டதென்றும், தன்னை தரிசித்தவர்கட்கு அவர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய பிறப்பில் நிகழ்ந்த செய்தியைத் தெரிவித்து தன்னுடைய தெய்வத் தன்மையைப் புலப்படுத்தியதென்றும் அதனால் பலதேசத்திலுள்ள பௌத்தர்களால் வணங்கப்பட்டதென்றும் 'மணிமேகலை' விளக்குகிறது.

புத்தர் பிறந்தது அசோக மரத்தடியில் வைகாசி பௌர்ணமியன்று ஞானம் பெற்று அரசமரத்தடியில் புத்தரானது வைகாசி பௌர்ணமியன்று. எண்பதாவது வயதில் நிருவாணமடைந்ததும் சாலமரத்தடியில் வைகாசி பௌர்ணமியன்று தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. யாழ்ப்பாணத் தொன்மையும், ஆட்சியும்

### யாழின் பொது நோக்குப் பார்வை

இலங்கையில் தமிழ்ச் சமூகங்களை சேர்ந்த நாம் எமது வரலாற்று ஆவணங்களை மீளாய்வு செய்ய வேண்டிய ஒரு கடமைப்பட்டாலும், காலகட்டத்திலும் உள்ளோம் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். இதில் நாம் ஏற்கனவே பதிக்கப்பட்ட பல புத்தகங்களை பார்வையிட்ட போதும் அ.முத்துப்பிள்ளை அவர்கள் எழுதிய யாழ்ப்பாணச்சரித்திரம் என்ற நூல் மிக முக்கியமானதும் அதிக வரலாற்றுத் தகவல்கள் நிறைந்ததாகவும் பல்துறைசார் விற்பனர்களால் மீண்டும் மீள் வாசிப்புக்கும் விமர்சனத்திற்கும் உட்படுத்தப்பட வேண்டியதாகவும் கருதப்படுகின்றது.

யாழ்ப்பாண வரலாற்றினை முழுமையாகவும் உண்மையாகவும் எடுத்துக்கூறும் நூல் எதுவும் இதுவரை பதிப்பிக்கப்படவில்லை என நாம் துணிவுடன் கூறலாம். இதற்கு முக்கிய காரணங்களாக யாழ்ப்பாண வரலாறானது இதுவரை விடுவிக்கப்படாத வெளிப்படுத்தப்படாத பல சிக்கல்கள் நிறைந்த கால கட்டங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதும் பலரும் ஏற்கனவே தவறுகளின் அடிப்படையில் எழுதப்பட்ட பல மூல நூல்களை ஆதாரமாகக் கொண்டு வரலாற்றை எழுத முற்பட்டதுமேயாகும்.

இது மட்டுமன்றி பலரும் தாம் வரித்துக் கொண்ட அரசியல், சமூக நிலைப்பாடு காரணமாக உண்மைகளை அறிந்திருந்தும் அதனை வெளிப்படுத்தும் துணிவற்றிருந்ததும் ஒரு காரணமாகும். இவைகளைத் தொடர்ந்து அ.முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் ஆனது முற்றிலும் வேறுபட்ட வடிவத்தையும் கொண்டுள்ளது. ஏனெனில் இது யாழ்ப்பாண வைபவமாலையையிட்டு வேறுபட்ட கருத்தினைக் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணப் பூர்வ சரித்திதிற்கு ஆதார நூல்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதுள்ளன. வைபவமாலை, கைலாசமாலை அவையும் சொரூபம் திரிந்து விட்டனவாய்த் தோன்றுகின்றன, என்று யாழ்ப்பாண வைபவமாலையை விமர்சிக்கும் முத்துதம்பிப்பிள்ளை எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் ஆதாரங்களையும் தனது பதிப்புரையில் எடுத்துரைக்கிறார்.

மருதங்கட வெளியிலே ".று.னு கிளாக்காயிருந்த அம்பலவாணர் செக்கரியாக் கிராமத்திலே ஒரு சிங்கள வீட்டிலிருந்து எடுத்த கடலோட்டுக் காதைப்பிரதி, 1887 ஆம் வருடம் காஞ்சிபுரத்தில் வசித்த ஸ்ரீமத் மாசிலாமணி தேசிகரிடத்தில் யாழ்ப்பாணக் குறிப்புக்கள் அடங்கிய 27 ஏடுகள் அடங்கிய பழைய பிரமாணக் குறிப்பேடுகள் வரிசைகள் பற்றிய குறிப்புகள் அடங்கிய அச்சங்குளம் உடையார் சிறி மணியரத்தினம் அனுப்பிய ஏட்டுப்பிரதி என்று பலவேறுப்பட்ட ஆதாரங்களை முன் வைக்கிறார்.

## யாழ்ப்பாச் சரித்திரம் கூறும் வரலாறு

இந்நூலானது கி.மு 161 இலிருந்து அரசு செய்த ஏலெலன் (எல்லாளன்) காலம் முன் தொடங்கி இது அச்சேறிய காலப்பகுதியான, கி.பி. 1912 வரையான காலப்பகுதியை உள்ளடக்கிய வரலாற்றை தெளிவுபடவும் ஆதார பூர்வமாகவும் விபரிக்கின்றது. மணற்றி என்ற பூர்வ நாமம் கொண்ட பிரதேசம் எப்படி சரித்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் பெறும் இடமாக மாறுகின்றது என்பது பற்றியும் பல விளக்கங்களை அளிக்கின்றது.

இலங்கை ஈழமேயாயினும் வடபாகமும் கால்ப்பாகத்திலொரு பகுதியும் ஈழமண்டலமெனப்படும் யாழ்ப்பாணம் ஈழமண்டலத்திலொரு பகுதியாகும். சேர, சோழ, பாண்டி மண்டலங்களோடு ஈழமண்டலமும் மொன்றாகும். சேர சோழ பாண்டி மண்டலங்களில் இருந்தும் சனங்கள் ஈழ மண்டத்தில் குடியேறுவராயினர்.

இவர்கள் குடியேறமுன் இவ்ஈழ மண்டலத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கொண்டிருந்தவர்கள் நாகர்கள். சங்கப் புலவர்களில் ஒருவராயிருந்த முடி நாகராயர் என்பவரும் இந்நாகர் குலத்தவரே என்பர். அவர்கள் ஒரு ஜாதி மனுக்ஷர். அவர்களை வென்று ஈழநாட்டை கைக்கொண்டவர்கள் சேர, சோழ, பாண்டிய மண்டலங்களென்னும் தமிழ் நாட்டிலிருந்து வந்த தமிழர் அவர்கள் தமக்கு இராசதானியாக கொண்ட நகரம் மாதோட்டம் என விபரிக்கும் இந்நூலானது "அவர்கள் ஒரு ஜாதி மனிஷர்" என நாகர்களை சொல்வதின் மூலமும் அவர்களை வென்று இம் மண்டலத்தை கைக்கொண்டவர்கள் தமிழர்கள் என்று சொல்வதின் மூலம் நாகர் வேறு தமிழர் வேறு என்று குறிப்பிடுகின்றது.

ஆனால் அது பற்றிய மேலதிக விபரங்கள் இந்நூலில் இல்லை. இதனை தொடர்ந்து எல்லாளன் ஆட்சி பற்றி விபரிக்கும் ஆசிரியர் அவனது நீதி வழுவாது ஆட்சி பற்றி விபரித்து அந்நாட்களில் தொண்மை நாட்டிலிருந்து வந்த கவிவீரராகவன் எனும் யாழ் வல்லாள் ஒருவன் அரசன் மனங்குளிர யாழ்பாடி, மணற்றி எனும் பிரதேசத்தை பரிசாகப் பெற்று பின் அதனை யாழ்ப்பாணமாக மாற்றிய வரலாற்றை சுவைபட தகுந்த ஆதாரங்களுடன் விபரிக்கின்றார்.

## தெலுங்கர் வருகையும், கோவியரும்

இதே காலப்பகுதியில் உப்பு வியாபாரம் செய்ய மரக்கலங்களுடன் வந்த தொண்டமான் எனும் பிரதானியும் அவன் கூட வந்த சனங்களும் வடமராச்சியில் குடியேறிய வரலாற்றையும் அவர்கள் அமைத்த தொண்டமனாறு என்னும் கால்வாயைப் பற்றியும் இந்நூல் விரிவாக விபரிக்கின்றது.

மேலும் தொண்டமான் கருமமாக சனங்கள் பெரும்பாலும் தொண்டை நாட்டின் வடபாகத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் குடிகொண்ட பகுதி வடமராச்சி எனப்பட்டது. அவர்கள் பாஷை தெலுங்கு அது பற்றியே யாழ்ப்பாணத்தில் கடவு, பிச்சுவாய்க்கத்தி முதலிய தெலுங்கு சொற்கள் வழங்குவதாயிற்று. அவர்கள் விஷ்ணுவை வழிபடுவோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபற்றி வல்லிபுரம் என்னும் குறிச்சியிலே ஒரு விஷ்ணுவாலயம் உண்டாவதாயிற்று. வல்லியதேவன் அதிகாரம் செய்த இடம் வல்லிபுரமென்னப்பட்டது.

தெலுங்கு பாஷையும் தெலுங்கு நாடும் வடு எனப்படும். அது பற்றியே அந்நாட்டில் இருந்து வந்து குடிகொண்ட வடமறை வடுகர் என்று கூறுவர். அவ்வடுகருள்ளே போகியர்ஒரு தொகையினர். இடையராகிய கோபிகர் பெரும்பாலார் கோபிகர் பிற்காலத்திலே கோவியர் எனப்பட்டார்கள். என்ற உரையின் மூலமும் மேலும் பல ஆதார பூர்வமான தகவல்கள் மூலமும் ஆசிரியர் யாழ்ப்பாணத்திலே தெலுங்கரது குடியேற்றங்களையும் இத்தெலுங்கரே கோவியரென யாழ்ப்பாணத்தில் அழைக்கப்படும் சாதியரெனக்கூறுகின்றார். இதுவே இன்றும் கூட தமிழகத்தில் தெலுங்கரை வடுகர் என்று அழைப்பதன் மூலமும் யாழ்ப்பாணத்தில் மற்றைய சாதியினர் கோவியரை வடுகர் என்று அழைப்பதன் மூலமும் கோவியர் என்பார் தெலுங்கரே என்ற ஆசிரியரின் கூற்றின் உண்மைத்தன்மையினை பறை சாற்றி நிற்கின்றது. வன்னியர் யார்?

வன்னியர் பற்றியும் இந்நூலானது மிகவும் விரிவானதும் ஆதார பூர்வமானதுமான தகவல்களை வழங்குகின்றமையினைக் காணலாம். மனுநீதி கண்ட சோழனின் மகன் குளக்கோட்டன் என்பவன் திரிகோணமலையில் உள்ள சுவாமியை தரிசனம் செய்ய அங்கே சென்றான்.

அப்பொழுது மலை மேலிருந்த அவ்வாலயம் பழுதுற்று இருந்தமையால் அதைப் புதுப்பித்து கோபுரங்களை திருத்தி அநேக மண்டபங்களையும் கட்டி அற்புத அலங்காரமான ஆலயமாக்கினான். அவ்வாலய நித்திய நைமித்தியங்களுக்கு முட்டுற்று இருந்தமையால் இதற்கு வேண்டிய விலை நிலங்களை அமைத்து அந்நிலங்கள் நீர்வளம் பொருந்தி எக்காலமும் விளைவு கொடுக்குமாறு மகத்தான ஓர் ஏரிகளையும் கட்டினான். அவ்வேரியாற் பாயுநிலம் 1700 மீற்றர் மன்ன விதைப்பாடு. இத்துணைப் பெரிய கிராமத்தை விளைவிக்க மருதங்கூர் முதலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களில் இருந்து ஐம்பத்தொரு வன்னிய ஜாதி குடும்பத்தவர்களையும் அவர்க்குத் தலைவனாக தனியுன்னாப்பூ பாலவன்னியனையும் அழைத்து அங்கு குடியேற்றினான். இது நிகழ்ந்தது கலியுகம் 512 இடபமாதம் 10ந் திகதி திங்கட்கிழமை (பக்கம் 24).

யாழ்ப்பாணத்திற்கு உட்படாத இடங்கள் ஆதலால் அவை அடங்காதப் பற்றெனப்பட்டன. இவ் வன்னியர்கள் மதுரை, திரிசிபுரம், தஞ்சை முதலிய இடங்களில் இருந்து நாளா சாதியிலும் வறியவர்களாயிருந்த குடிமக்களை வரவழைத்து குடியேற்றினார்கள்.

உக்கிரசிங்கன் கதிரமலையை (கந்தரோடை) விட்டு தனது தலைநகரை சிங்கைநகரிற்கு (பூநகரி) மாற்றிக் கொண்டமைக்காக காரணங்களை தெளிவானவை. கந்தரோடைப் பிரதேசம் பௌத்தமத மக்களது முக்கிய பிரதேசமாக மாறியிருந்தது. அத்துடன் சங்கமித்த தேவியின் வருகைக்கும் மக்களது முக்கிய பிரதேசமாக மாறியிருந்தது. அத்துடன் சங்கமித்தெரியின் வருகைக்குப் பின்னர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த பௌத்த யாத்திரிகர்கள் ஜம்புக்கோலப்பட்டினம் (திருவடி நிலை) ஊடாக வந்திறங்கினர். ஜம்புக்கோலப்பட்டினத்தில் விகாரையொன்றும் அதனைவிட க்ஷாலிப்பத விகாரை, திஸ்ஸ விகாரை என்பனவும் நாக தீவில் அமைந்திருந்தன. கந்தரோடையோடு வல்லிபுரத்திலும் பௌத்த மத மக்களும் பரவியிருந்தனர்.

பௌத்தம் நாகதீபப் பிரதேசத்தில் பரவியிருந்த ஒரு கால கட்டத்தில் சிங்கள ஆட்சியாளரின் ஆதிக்கத்திலிருந்து உக்கிரசிங்கன் விடுவித்திருந்தான். தீவிர சைவனாக இவன் விளங்கியுள்ளான் என்பதை இவன் ஆற்றிய திருப்பணிகள் நிருபிக்கின்றன. எனினும் பௌத்தரது செல்வாக்கு கந்தரோடை, வல்லிபுரப் பகுதிகளில் நிலைகொண்டிருந்தது. அதாவது நாகதீபத்தின் மேற்பகுதி, கிழக்குப்பகுதி என்பன வேற்று மத ஆதிக்கத்தில் இருந்த தென்பகுதி யாழ்ப்பாண மக்கள் விரும்பிக் குடியேறியிலாத பிரதேசமாக விளங்கியது. இந் நிலையில் தனது தலைநகரை இடம் மாற்றுவதற்கு உக்கிரமசிங்கன் விரும்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவம் சிறப்புறக் கூடிய புதியதொரு பிரதேசத்தை அவன் தெரிவு செய்ய விரும்பியதன் விளைவே சிங்கை நகர் (பூநகிரி) புதிய தலைநகராக மாறியது.

கன்னடர் குடியேற்றம் மேலும் பல நூற்றாண்டுகள் கழித்து கி.மு. 1260களில் நடந்த கன்னடர் குடியேற்றம் பற்றி இந்நூல் தெரிவிப்பது தொடர்பாக ஆராயுமிடத்து இவனுடைய (குணவீர சிங்கையாரின்) வீரத்திறனைக் கேட்க, அங்கும் ஒரு படைத்துணையை அனுப்பி அவனுக்கும் வெற்றிமாலை சூட்டி அதற்காக பெருந்திரவியமும் கன்னடர் சிலரையும், சிவிகையர் சிலரையும் மறவர் சிலரையும், வில்லியர் சிலரையும், வேடர் சிலரையும் பெற்றான். மறவரை மறவன் புலத்தில் இருத்தினான்.

வேடுவரை வேடுவங்கண்டில் இருத்தினான். இவ்வரசனே தனது நகரத்திற்கும் நாட்டுக்கும் அவசியமான அநேக தொழிலாளரை கொணர்ந்தவன். கன்னடர் இருந்தவிடம் மாவட்டபுரத்திலே கன்னடியதெரு என வழங்குகின்றது. இலங்கை மன்னர்கள் இந்தியாவின் பலம் வாய்ந்த கலிங்க பாண்டிய நாடுகளுடன் கொண்டிருந்த திருமணங்கள் தொடர்பாக 4ம் மகிந்தன் இந்தியா நாட்டுடன் விரிவாக உறவை ஏற்படுத்தினான். முதலாம் விஜயபாகு மன்னன் இளவரசி திரிலோக சுந்தரியைத் திருமணம் செய்தான். இவனது சகோதரி மித்தாவை பாண்டிய இளவரசனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான். முதலாம் பராக்கிரமபாகு பாண்டிய இளவரசி லீலாவதியைத் திருமணம் செய்தான். நிஸங்கமல்லன் கலிங்க சுப்திரா மற்றும் கல்யாணவதி ஆகியோரை திருமணம் செய்தான். (மகாவம்சத்தில்)

பண்டுகாபயனின் மாமன் திரிகண்டசிவன் இலங்கைத் திருநாட்டில் விவசாய நடவடிக்கைக்கு நெற்செய்கையில் ஈடுபடுத்தினான். மாடு வளர்ப்போருக்கு ஒதுக்கப்பட்ட இடம் கோபாலகம் பற்றி கல் வெட்டுக்களிலும் உண்டு. திரிகண்டசிவன் நடத்திய அறுவடை விழாவில் எருதுகளை மஞ்சள் நீரால் நீராட்டி கொம்புகள் வெள்ளி தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டிருந்ததாக வரலாறு. இன்றும் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டில் தைப்பொங்கல் நாளில் மாடுகளுக்கு இம்மாதிரியான வைபவம் நடைபெறுகின்றன.

13ம் நூற்றாண்டு வரை இந்த நாட்டில் செயற்பட்ட வர்த்தக நிறுவனங்கள் பற்றித் தமிழ் கல்வெட்டுக்களில் குறிப்பிப்பட்டுள்ளது. நானா தேசிகா வலஞ்சியார் ஐந்நூற்றவர் என்பவை அவற்றில் சிலவாகும். காலியில் கண்டெடுக்கப்பட்ட மும்மொழிக் கல்வெட்டும் தமிழ் சீன பாரசீக மொழி தமிழர் வர்த்தகச் செல்வாக்கினைக் காட்டுகின்றது. சிவ என்னும் பெயரிலான மன்னர்களின் பெயர்கள் கி.மு. 3ம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உதாரணம் :- மூத்தசிவ திரிகண்டசிவ மகாசிவ
மாதோட்டத் துறைமுகம்
கோணேஸ்வர துறைமுகம்
ஐம்புகோள துறைமுகம்

அனுராதபுரத்தில் எல்லாள மன்னர் ஆட்சியில் இந்து மதம் சிறப்புப்பெற்றது. பொலன்னறுவை இராச்சியத்தில் 1ம் சிவன் கோயில்கள் இருந்துள்ளன. அனுராதபுரத்தில் சிவலிங்க கோயில்களின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக எச்.சி.பி.பெல் என்ற ஆய்வாளர் கூறியுள்ளார். சீகிரியா நகர் கி.பி. 5ம் நூற்றாண்டில் கட்டியெழுப்பப்பட்டது. மன்னன் காசியப்பன் மிகப்பெரியதொரு தனிக்குன்றை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டது. 200 அடி உயரமான குன்றின் உச்சியில் அரசமாளிகை அமைந்திருந்தது. அரச மாளிகையின் இடிபாடுகள் மூன்று ஹெக்டெயர் பரப்பளவில் காணப்படுகின்றன.

மலைக்குன்றை அடிப்படையாகக் கொண்டு கிழக்கு, மேற்கு பிரதேச பாதைகள் முறையே 40 முதல் 90 ஹெக்டெயர் பரப்பளவைக் கொண்டவை. சீகிரிய நகரைச் சுற்றி 10 கிலோ மீற்றர் நீளமான பாதுகாப்பு மதில் அமைக்கப்பட்டுள்ளது. சீகிரியாக் குன்றைச் சுற்றி அமைக்கப்பட்ட நீர் எட்டு கிலோ மீற்றர் நீளமானது. இலங்கைத் திருநாட்டில் கி.மு. 47 – 42ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுலா என்ற அரசி நான்கு மாதம் ஆட்சி புரிந்தாள்.

இரண்டாவது அரசியான சிவாலியின் ஆட்சி கி.மு. 35ம் ஆண்டில் அரசுரிமைப்படி அமைந்திருந்தது. சிவாலி மரணத்தின் பின் கி.பி. 1196ல் லீலாவதி அரசியானாள். இதன் பின்பு நிஸங்கமல்லனின் மனைவி கல்யாணவதி அரசியானாள்.

புறத்திரட்டு என்ற நூலில் இடம் பெற்றுள்ளது. இதனுடைய காலம் முப்பெரும் மன்னர்களின் காலத்தின் பாற்பட்டது. அகமும் புறமும் பற்றிய வாழ்வின் சிறப்பைக் கூறும் இந்த நூல்.

**பாடல்**

முப்புறமும் கடல் சூழ்ந்தே அலைமோதும்
ஒப்புமை ஏதும் இல்லா எழில் நாடு
ஈழ நட்புறவுபல நாட்டிடை வைத்து
நன்மை பொருந்திய நன்நாடு
நம் நாடு ஈழ நாடு நமது நாடு
பல்வகைப் பொருள் கொண்டு பலாச்சுளை
மாங்கனிக் கீற்று செம்மாதுளை முத்து
நம் நாடு

## யாழ்ப்பாண இராச்சியம் பற்றி அறிய உதவும் நூல்கள்

யாழ்ப்பாண வைபவமன மயில்வாகனப் புலவர் இந்நூல் யாழ்ப்பாண அரசின் சிறப்பினை சீரினை மாண்பினை மன்னர்கள் பட்டியலை சாதனைகளைக் கூறும்.

செகராசசேகர மாலை - சோமவர்மன்
வையா பாடல் - வையாபுரி ஐயர்
கைலாய மாலை - முத்துக்கவிராயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியச் சக்கிரவர்த்திகள் பன்னிருவர் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்ததாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. யாழ்ப்பாண இராச்சியத்தை முதல் மன்னனாக விஜயன் ஆட்சி செய்ததாக நாம் அறிகின்றோம்.

யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலி மன்னனுக்கும் போர்த்துக்கீசியர் பல தொல்லைகள் கொடுத்தனர். அதனால் இரகுநாதரின் உதவியை நாடினான். அவனுக்கு உதவியாகத் தம் படைகளை மும்முறை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி உதவி செய்தார். இவர் கிருக்ஷ்ணதேவராயருக்கு இணையாகப் போற்றப்படுகிறார். இவர் இசையில் வல்லவர். அதனோடு பல இலக்கியங்களையும் படைத்துள்ளார்.

தஞ்சை நாயக்கர் காலம் கி.பி. 1532 — 1675.
நாயக்கர் ஆட்சிக்குப் பின் மராத்தியர் காலம் கி.பி. 1736 – 1856 வரை.
ஆங்கியேர் காலம் 1801 – 1947. 15ம் நூற்றாண்டின் பின்பகுதியில் மேலை நாட்டார் இந்தியா - இலங்கை போன்ற நாடுகளுக்கு புதிய கடல்வழி கண்டு பிடித்தனர். போர்த்துக்கீசிய மாலுமி வாஸ்கொடகாமா கடல்வழிப் பயணம் செய்து கி.பி. 1468 இல் மலையாளக் கடற்கரையிலுள்ள கள்ளிக்கோட்டையை அடைந்தார். அவரைத் தொடர்ந்து டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர், இந்தியர்கள் இலங்கைக்குள் புகுந்தனர்.
1630 இரந்தெனிவெல யுத்தத்தில் இராஜசிங்கன் போர்த்துகேயரைப் படுதோல்வியடையச் செய்தமை.

## இரண்டாம் இராஜசிங்கன் கி.பி.1635-1678 எதிர்நோக்கிய சவால்கள்.

1638ல் இராஜசிங்கன் ஒல்லாந்தருடன் மேற்கொண்ட உடன்படிக்கை நியதிகளை ஒல்லாந்தர் மீறியமை.

இரண்டாம் விமலதர்ம சூரியனின் ஆட்சி கி.பி. 1687 – 1706 வரை. ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் கி.பி. 1707 — 1739 வரை ஆட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தான். கி.பி. 1782ல் கீயூபொயிட் தலைமையில் ஆங்கிலேயத் தூதுக்குழு இலங்கைக்கு வந்தது. இவனது ஆட்சியின் போது 1796ல் ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றினார். ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் கி.பி. 1798 – 1815 வரை. பிலிமத்தலாவையின் ஆதரவுடன் கண்ணுசாமி எனும் இளவரசன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் என்ற பெயரில் அரசனாகினான்.

1815 பெப்ரவரியில் ஆங்கிலேயர் கண்டி மீது படையெடுத்து மன்னனையும் இவனது மனைவி ரங்கம்மாளையும் கைது செய்தனர். ஆங்கிலேயரிடம் கைதியாக இருந்த மன்னன் வேலூருக்கு நாடு கடத்தப்பட்டான். இராஜசிங்கன் சைவ சமயத்தை தழுவியமை பௌத்த எதிர்ப்புக் கொள்கையை மேற்கொண்டது இராஜசிங்கன் அடிக்கடி போர்களில் ஈடுபட்டதால் இராச்சியத்தின் பொருளாதாரம் நலிவடைந்தது. இராஜசிங்கனின் தூரநோக்கற்ற செயற்பாடு.

யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயர் கவனம் செலுத்தியமைக்கு காரணங்கள் கி.பி. 1519ல் பரராஜசேகரனைக் கொலை செய்து யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி புரிந்த சங்கிலி மன்னன் பாக்குநீரிணையில் விபத்துக்குள்ளாகும் போர்த்துக்கேய வர்த்தகக் கப்பல்களின் உரிமையைக் கோரியமை.

யாழ்ப்பாண இராச்சியத்தில் கத்தோலிக்க மதப்பிரசாரத்திற்கு எதிராக சங்கிலி மன்னன் மலையக மன்னர்களுக்கு உதவியமை. 1543ல் மாட்டின் அபொன்சோ டி சூசாவின் தலைமையில் இராச்சியம் மீதான முதலாவது படையெடுப்பு நடைபெற்றது.

சங்கிலி மன்னன் போர் செய்யாது வருடாந்தம் 5000 பாகர் கறுவாவும் இரண்டு யானைகளைக் கப்பம் செலுத்தவும் கத்தோலிக்க மத பிரசாரத்திற்கும் உடன்பட்டான். கி.பி. 1560ல் கொன்ஸ்னரன்டி பிரகன்ஜாவின் படையெடுப்பு நிகழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படையெடுப்பிற்கான காரணங்கள்**

பிரான்ஸிஸ் சவேரியரின் சீடர் மன்னாரில் கிறிஸ்தவ மதப்பிரசாரம் செய்தமை. கோயில் அர்ச்சகர்கள் சங்கிலி மன்னருக்கு முறையிட்டமை.

சங்கிலி மன்னன் மன்னாருக்குப் படையனுப்பி மதம் மாறியவர்களைத் தமது பழைய சமயத்திற்கு மாறும்படி எச்சரித்தமை எச்சரிக்கை மீறியவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டமை.

பிரான்ஸிஸ் சேவியர் சங்கிலியைத் தண்டிக்கும்படி கோரியமை
கி.பி. 1548ல் சங்கிலி மன்னர் மாயாதுனையுடன் கூட்டு சேர்ந்தமை விதி பண்டாரனைச் சங்கிலி ஆதரித்தமை போர்த்துக்கேயருக்கு ஆத்திரத்தை ஊட்டியது.

**நிபந்தனை**

விதிய பண்டாரன் விட்டுச் சென்ற பொக்கிஷங்களைக் கொடுத்தல்.
கிறிஸ்தவ மதப் பிரசாரத்திற்குத் தடை விதிக்காதிருத்தல்.
முன்னைய நிபந்தனைகளை ஏற்று நிறை செலுத்துதல்.

சங்கிலி மன்னன் குறிப்பிடத்தக்களவு நிலம் முத்துக்குளித்தல் வருமானத்தையும் இழந்தான். கி.பி. 1561 மக்கள் கலகம் செய்தனர். சங்கிலி மன்னன் மரணத்தின் பின் போர்த்துக்கேயரின் அரசியல் தலையீடுகள் அதிகரித்தமை. பலம் பொருந்திய மன்னர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்காமை. புவிராச பண்டாரனை மன்னரை நீக்கிவிட்டு காசிநைனார் ஆட்சிக்கு வந்தமை.

கி.பி. 1570ல் காசிநைனார் மன்னரைப் போர்த்துக்கேயர் கொலை செய்து பெரியபிள்ளை என்பவனை அரசனாக்கினர். 1582ல் புவிராசபண்டாரன் மன்னர் மகன் பரராசபண்டாரன் மன்னர் மகன் பரராஜசேகரன் மன்னார் கோட்டையைத் தாக்கியபோது தோல்வியுற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 1591ல் கோவாலிருந்து மென்ரோசா தலைமையிலான படை பிரிவு வந்து கொழும்புத் துறையில் படையிறங்கியது. நல்லூரில் நடைபெற்ற யுத்தத்தில் புவிராசபண்டாரன் அவனது மகன் படைத்தளபதி ஆகியோர் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரின் கட்டுப்பாட்டில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போரில் பெரியபிள்ளையின் மகன் எதிர்மன்ன சிங்கன் வீரமாகப் போராடி வீழ்ந்தான். நல்லூர் மகாநாடு கி.பி. 1591ல் யாழ்ப்பாணம் முக்கிய பிரதானிகளை நல்லூருக்கு வரவழைத்து போர்த்துக்கல் மன்னனே. யாழ்ப்பாணத்துக்கு அரசனெனவும் யாழ்ப்பாணச் சட்டங்களும் மரபுகளும் தொடர்ந்து பேணப்படும் எனவும் உறுதியளித்தான். அமைச்சர்கள் எதிர்மன்ன சிங்கனைத் தேர்ந்தெடுத்தனர். இவன் 1596ல் முடிசூட்டப்பட்டான். கி.பி. 1615ல் எதிர்மன்ன சிங்கன் இறக்க மருமகனான 2ம் சங்கிலி ஆட்சிப் பொறுப்பை ஏற்றான்.

சங்கிலி மன்னனின் நடவடிக்கைகள் போர்த்துக்கேயருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. ஒல்லாந்தருடன் தொடர்பு கொள்ள முயற்சித்தமை. தஞ்சாவூர் நாயக்க மன்னரின் உதவியை நாடியமை. இவற்றால் ஆத்திரமுற்ற போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியம் மீது படையெடுத்தனர். கி.பி 1961ல் பிலிப்தஒலிவேறா தலைமையில் படையெடுப்பு சங்கிலி மன்னனைத் தோற்கடித்து அவனது குடும்பத்தைக் கைது செய்து சங்கிலி மன்னன் கோவைக்கு நாடு கடத்தப்பட்டான். இதன் பிறகு –கி.பி. 1621ல் போர்த்துக்கேயர் நேரடி ஆட்சி யாழ்ப்பாண இராச்சியத்தில் உதயமானது. தமிழ் இராச்சியம் என்பது ஆன்மா பயணிக்கும் பாதை. ஒரு தலைமுறை அடுத்த தலைமுறை தன் பண்பாட்டை எடுத்துச்செல்லும் வழி.

தமிழ் மன்னன் ஆட்சி இழந்தபோது நாம் வழியை இழந்தோம். நம்முடைய சங்கிலி மன்னன் தமிழ் நாட்டு மண்ணுக்கு நாடு கடத்தப்பட்டான். இது வரலாறு. இரண்டாயிரம் ஆண்டு கால தமிழன் எழுச்சி வீழ்ச்சி வெளிச்சம் இருட்டு மேடு பள்ளம் இவற்றை உற்றுப்பார்த்தல் ஒரு உண்மை தெரியவரும். பாரதி கண்ட கனவு தேமதுரத் தமிழோசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமெல்லாம் பரவ வகை செய்தல் வேண்டும்.

**பாடல் (புறநானூறு)**

அணில் வரிக் கொடுங் காய்
வாழ் போழ்ந்திட்ட காழ் பேணல்லிளர்
நறு நெய் திண்டாடு
அடையிடைக் கைபிழி பிண்டம்
வெள்ளட் சாந்தோடு புளி பெய்து
அட்டன வேளை வெந்த வல்சியாக
நீபரந்பெய் பள்ளிப்பாய் இன்று வதியும்
இப்படி வாழ்ந்த இனம் தமிழ் இனம்.

கிறிஸ்தோபர் கொலம்பஸ் - இத்தாலியர்

ஸ்பானிய மன்னன் பேடினந்து அரசி இஸ்பெலா ஆகியோரின் அனுசரணையுடன் கடற் பயணங்களை மேற்கொண்டார். கி.பி. 1493, 1498, 1503 ஆகிய ஆண்டுகளில் கடற்பயணங்களை மேற்கொண்டு முறையே என்பலின் தீவுகள் ரினிடாட் தீவு நிக்கோபார் தீவையும் கண்டுபிடித்தார். 1492 ஒக்டோபர் 12ம் திகதி அமெரிக்காக் கண்டத்திற்குரிய ஸ்பானியாலோ தீவில் (மேற்கிந்தியத் தீவுகள்) கால் பதித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. வன்னி வாழ்வும், வரலாறும்

தென்னகத்திலும், ஈழத்திலுமிருந்த இராணுவ அமைப்புக்களில் வன்னியர் சிறப்பிடம் பெற்றிருந்தனர். கல்லாடச் சொல்வது போல நாற்படையிலும் வன்னியர் சேவை புரிந்து வந்தபோதும் படைகளிலிருந்து வன்னியருல் பலர் வில்லாளிகளாகவே இருந்தனர்.

வன்னியப் படைகளில் தலைவராயிருந்த, வன்னியநாயகன் என்ற சிறப்புப் பெயரினைப் பெற்ற பிரதானிகள் சோழப் பேரரசின் சமாந்தரராகி, அப்பேரரசு தளர்வுற்ற காலத்திலே குறநிலமன்னராக எழுச்சிபெற்றனர். பன்னிரண்டாம் நூற்றாண்டிலே தோன்றிய தென்னக வன்னிமைகள் பதினாறாம் நூற்றாண்டுவரை நிலைபெற்று வந்தன. விஜயநகர மன்னரான கிருஷ்ணதேவராயாரின ஆட்சியிலே தொண்டை மண்டலத்திலுள்ள வன்னிமைகள் அழிந்தொழிந்தன.

**சோழர்**

பொலநறுவைக் காலத்திலும் (993 – 1215) அதன்பின்பும் தென்னகத்திலிருந்து வன்னியர் ஈழநாட்டிற்கு வந்தனர். ஈழத்தில் வன்னியர் வசமிருந்த படைப்பற்றுக்கள் பல வன்னிமைகள் தோன்றுவதற்கு ஏதுவாயிருந்தன. பொலநறுவை அரசு அழிவுற்றதும் வன்னியநாடுகள் என வழங்கிய பல குறுநில அரசுகள் எழுச்சிபெற்றுப் பல நூற்றாண்டுகளாக ஈழ வரலாற்றிலே சிறப்பிடம் பெற்றிருந்தன. இவை வட இலங்கையிலும் மேற்கிலே சிலாபம், புத்தளம் முதலிய இடங்களிலும் கிழக்கிலே திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் வளர்ச்சியடைந்திருந்தன.

தமிழ்பேசும் மக்கள் இன்று ஈழத்தின் பல பாகங்களிலும் வாழ்கின்றனர். இவர்கள் ஈழத்தின் தொல்குடி மக்களாக இருந்தபோதும் இவர்களது வரலாறு இதுவரை ஒழுங்கான முறையில் எழுதப்படவில்லை. தமிழர் அரசர்களாகவும் குறநில மன்னராகவும் ஈழத்தில் ஆட்சிசெய்து வந்திருக்கின்றனர். இங்கு ஆண்ட குறநிலமன்னரில் வன்னியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கவர்.

இவ்வன்னியர் பற்றிச் சில நூல்களிலுமிருந்த வன்னிமைகள் பற்றி ஆராய்ச்சிநூல் ஒன்றும் எழுதவில்லை என்பது குறிப்பித்தக்கது. அடங்காப்பற்று வன்னியர் மட்டும் வன்னியர் அல்லர், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் போன்ற வேறு பிரதேசங்களிலும் வன்னியர் ஆட்சி இருந்து வந்திருக்கின்றது. மேலும், வன்னியர் தமிழகத்திலிருந்தே ஈழத்திற்கு வந்தனர். தமிழக வரலாற்றினை எழுதிய ஆசிரியர்கள் கூட அங்கிருந்த வன்னியர் பற்றி ஆராயவில்லை என்பது தெரியவந்துள்ளது. அவர்கள் அங்கு படைத் தலைவராக இருந்து குறுநில மன்னராக விளங்கிச் சுயாட்சியும் செய்து வந்திருக்கின்றனர். இந்த வரலாறு எந்தந் தென்னிந்திய வரலாற்று நூலிலும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தகக்கது.

தமிழகத்திலும் ஈழத்திலும் உள்ள வன்னியர் வரலாறு நான்கு இயல்களில் அமைந்துள்ளது. இவர்களின் தோற்றம் பற்றி இலக்கியம் கொண்டும் தென்னிந்திய வரலாறு கொண்டும் ஆராய்ந்து சிறந்தது. கல்லாடம், சிலை எழுபது, வன்னியர் குல நாடகம், வன்னியர்குலக் கலியானக்கொத்து என்னும் நூல்கள் வன்னியர் தோன்றினரெனக் கல்லாடம் கூற, ஏனைய நூல்கள் வன்னியரை அக்கினி குலச் சத்திரியர் என்றும் யாக அக்கினியிலிருந்து தோன்றினரென்றும் கூறுகின்றன.

விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சியின் பின், ஒவ்வொரு சமுகத்தினரும் தத் தம் சமுகத் தொன்மையும் சிறப்பையும் நிலை நாட்ட இதிகாச புராணக் கதைகளைக் கொண்டு நூல்கள் இயற்றினார்கள் என்றும், வன்னியர் தம் பழைய வரலாற்றை நிலைநாட்ட இயற்றிய அத்தகைய நூல்களே மேலே கூறப்பட்ட நூல்கள் என்றும் கலாநிதி பத்மநாதன் கருதுகின்றார். எனினும் அவற்றை ஓரளவு ஆதரமாகக் கொண்டு வன்னியரின் தோற்றத்தை விளக்கலாமென ஆசிரியர் கொள்கிறார்.

படைக்கலப் பயிற்சியைச் சிறப்புத் தொழிலாக உடைய மக்கள் கூட்டமாகவும் குறுநில மன்னராகவும் இருந்தமையாலேயே அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்கள் சத்திரெனக் கூறின. காடவர் எனக் கருதப்படும். வன்ய என்ற வடசொல்லிருந்தே வன்னியர் என்ற சொல் தோன்றிருக்க வேண்டுமென்றும். ஆதிகாலத்தில் வன்னியர் காடுகள் நிறைந்த முல்லை நிலத்தில் வாழ்ந்தார்கள் என்றும் ஆசிரியரால் கருதப்படுகிறது.

தமிழகத்து வன்னியர் பற்றி தென்னிந்திய வரலாற்றில் வன்னியர் என்ற பிரிவில் ஆசிரியர் கூறுகின்றார். இவர்களின் ஆதி இருப்பிடம் தொண்மை மண்டலம் என்பது அவர் கொள்கை. இதற்கு ஆதாரமாக வன்னியர் வரலாற்றைக்கூறும் நாடோடிக் கதைகளையும் கல்வெட்டுக்களையும் காட்டுகின்றார். காஞ்சியிலிருந்து ஆண்ட பல்லவரின் படைகளிற் காடவராகிய வன்னியர் தொழிலாற்றி இருக்கலாமென ஆசிரியர் ஊகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. சோழப் பெருமன்னர் காலத்திலேயே இவர்களைப் பற்றிய விரிவான சான்றுகள் கிடைத்துள்ளன எனலாம்.

வன்னியர் பற்றியும், வன்னியப் பற்றுக்கள் பற்றியும் பல குறிப்புக்கள் சோழப்பெருமன்னரின் ஆவணங்களிற் காணப்படுகின்றன. இராணுவ சேவையிலிருந்த வன்னியப் படைகளுக்குச் சீவிதமாக விடப்பட்ட நிலங்களே வன்னியப்பற்று என ஆசிரியர் கூறுகின்றார். வேளைக்காரப் படைகளின் தலைவர்களே வன்னிய நாயகன் என்ற பட்டத்தைப் பெற்றனர் என்பதற்குச் சோழப் பெருமன்னர் காலத்துக் கிழியூ 10 மலையமான்களின் கல்வெட்டுக்களை ஆசிரியர் தருகின்றார்.

சோழப்பெருமன்னர் காலத்திற் படைத்தொழிலிற் சிறப்புற்று விளங்கியது போல விஜயநகர மன்னர் காலத்திற் சிறப்புடன் விளங்க வன்னியரால் முடிவில்லை. காரணம், விஜய நகர மன்னர் கன்னட தெலுங்குப் படைகளையே கூடுதலாகப் பயன்படுத்தினர். எனவே, சூழலுக்கு ஏற்ப வன்னியர் விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கினர்.

தென்னகத்து வன்னிமைகள் எனப் பெயரிட்ட இரண்டாம் இயல், தமிழகத்திலிருந்த வன்னிமைகளைப் பற்றிக் கூறுகின்றது. முதலாம் இராஜேந்திரன், இரண்டாம் இராஜேந்திரன் ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டுக்களிலிருந்து வன்னியர்கள் பிரதானிகளாக இருந்தனரென அறியலாம்.

இரண்டாம் இராஜராஜன் மூன்றாம் குலொத்துங்கன் ஆகியோர் கல்வெட்டுக்களில் வன்னியர்கள் பற்றிய குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. இவர்கள் வேளைக்காரரின் படைத்தலைவராக இருந்தனரென்றும், பெரிய உடையான், சேதியராஜன், சற்றுக்குடாதான் போன்ற விருதுகளைப் பெற்றிருந்தனரென்றும் கல்வெட்டுக்களால் அறியலாம். இவர்கள் குறுநிலமன்னராகி, முதலாம் குலொத்துங்க காலத்துக்குப்பின் பெருமளவு ஆதிக்கம் பெற்று விளங்கினர். சோழப்பெருமன்னர் காலத்திலே, கிழியூர் மலையமன்னர், பாங்கலநாட்டுக் கங்கர், சாம்புவராயர் ஆகிய மூன்றும் குலத்துக் குறுநிலமன்னர் வன்னிய நாயகன் என்ற விருதுடன் ஆட்சி செலுத்தினரென இக்கல்வெட்டுக்களின் துணைகொண்டு ஆசிரியர் நிறுவியுள்ளார்.

வன்னியர்களின் அதிகாரம் தலைமுறை தலைமுறையாக வளர்ந்துவந்தது. சோழப் பேரரசு நலிவுபெற்ற காலத்தில், குறுநில மன்னராகிய வன்னியர்கள் சுதந்திரமாக ஆளத்தொடங்கினர். சோழராட்சிக்குப் பின் இரண்டாவது பாண்டியப்பேரரசு நிலைப்பெற்ற காலத்தில் வன்னியர் பாண்டிய ராட்சிக்கு உட்பட்டிருந்தனர். பாண்டியப் பேரரசு தளவுற்ற காலத்தில், பாண்டியர்மேல் ஆதிக்கம் செலுத்திய மூன்றாம் வல்லாளதேவனாகிய கொய்சளமன்னனின் ஆணைக்குக் கட்டுப்பட்டிருந்தனர். வன்னியர் போர் நிகழ்த்தித் தோல்வியுற்றனரென ஆசிரியர் பல சான்றுகள் காட்டுகின்றார். கிருஷ்ணதேவராயர் காலத்தையொட்டித் தமிழகத்து வன்னிமைகள் அரசியல் ஆதிக்கத்திலிருந்து அழிந்தொழிந்தன.

ஈழத்து வன்னிமைகள் இரு பகுதிகளாக இரண்டு இயல்களில் அமைந்துள்ளன. தமிழ் சிங்கள அரசுகளில் வன்னிகள், வன்னி நாடுகளின் தோற்றம், திருமலை வன்னிமைகள், முக்குவ வன்னிமைகள் என நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. முதற்பகுதி, இப்பிரிவுகளில் முக்குவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிமை என்ற பிரிவு மட்டக்களப்பு வன்னிமை, புத்தளத்து வன்னிமை என்ற இரு உட்பிரிவுகளாக அமைந்துள்ளது.

ஈழத்து வன்னிமைகள் முதலாம் பகுதிகளில் தமிழ் சிங்கள அரசுகளில் வன்னிகள் என்ற பிரிவில் ஈழநாட்டு வரலாற்றில் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வன்னி நாடுகள் சிறப்பிடம் பெற்றிருந்தமையை ஆசிரியர் கூறுகிறார். பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ஈழம் முழுவதினையும் ஒரே மன்னர் ஆண்ட வரலாறு பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஏற்பட்ட கலிங்கமன்னனின் படையெடுப்போடு முற்றுப்பெறுகின்றது. அதன்பின் வடக்கிலே ஓர் அரசும், தெற்கிலே ஓர் அரசும் பல குறுநில அரசுகளும் தோன்றின. மாகனுக்குப்பின் வட இலங்கையிற் பாண்டியர் ஆதிக்கம் இடம்பெற்றுப் பதின்மூன்று நூற்றாண்டின் இறுதியில் ஆரியசக்கரவர்த்திகளின் ஆட்சி ஆரம்பமாகியது. அதன் விளைவாக இடம்பெற்றதே யாழ்ப்பாணப்பட்டினம் என்ற தமிழரசு. இத்தமிழரசின் காலத்திலே பல வன்னிநாடுகள் இருந்தன.

இதே காலத்தில் ஆட்சிக்குப்பின் பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சிங்கள அரசர் முதலிலே தம்பதெனியாவிலிருந்தும் பின் குருநாகல், கம்பளை, கோட்டை முதலிய நகர்களிலிருந்தும் ஆட்சி செய்தனர். அவ்வாட்சியிலும் வன்னி எனப்பட்ட குறநில அரசுகள் வளர்ச்சியடைந்திருந்தன.

இவ்வாறு பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஈழத்தில் வன்னிடைகள் பல காணப்பட்டபோதும், அந்நூற்றாண்டுகளுக்கு முன்பே வன்னிமைகள் தோன்றியிருந்தன என்பதனை வன்னி நாடுகளின் தோற்றம் என்ற பிரிவு விளங்குகின்றது. ஈழத்து வன்னிமைகளின் தோற்றத்தை வேளைக்காரப்படையின் வரலாற்றோடு ஆசிரியர் இணைத்து நோக்குகின்றார். வேளைக்காரப் படைகள் ஈழத்தின் சில பகுதிகளிற் சுயாட்சி நடத்தியமையை நாம் காணலாம்.

வேளைக்காரருக்குக் கொடுக்கப்பட்ட படைப்பற்றுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிமைகள் உருப்பெறுவதற்குக் காலாக இருந்தன. சோழராட்சிக் காலத்திலும் அதற்குப் பின்பும் வன்னிப் பற்றுக்கள் பல தோன்றிப் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வளர்ச்சியடைந்திருந்தன என ஆசிரியர் கூற்றுக்களால் அறியக் கிடக்கின்றது.

இவ்வாறு வளர்ச்சியுற்ற வன்மைகளில் ஒன்றைப்பற்றி திருமலை வன்னிமைகள் என்ற பிரிவு கூறுகின்றது. கவிராசர் பாடிய கோணேசர் கல்வெட்டினையும், திருமலைக்கோட்டையின் முன்பாக இருக்கும் கற்றூ ணிலுள்ள மொழித் தொடர்களையும் அக்கோட்டையிலுள்ள வடமொழிக் கல்வெட்டினையும் ஆதாரமாகக் கொண்டு குளக்கோட்டனாகிய சோழகங்கன் காலத்திலேயே திருமலையில் வன்னிமை இருந்தமையை ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார். கங்குவெலிக் கல்வெட்டு. திருமலை வன்னியனாரைக் குறிப்பிடுகின்றது.

வெருகல்வெட்டிலிருந்துகயிலைவன்னியகார்கோட்டியாரம்பத்தை ஆண்டமை புலனாகின்றது. பதினான்காம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் திருகோணமலை வன்னியர் மேல் ஆதிக்கம் செலுத்தியமையையும் பதினைந்தாம் நூ ற்றாண்டுகளில் இம் மன்னர்கள் திருமலை வன்னியரோடு திருமணத் தொடர்பு கொண்டமையும் ஆசிரியர் ஆதாரங்களுடன் நிறுவியுள்ளார். யாழ்ப்பாணத்தரசரும் திருமலை வன்னியிலும் போத்துக்கேயரை எதிர்ப்பதில் ஒருவருக்கொருவர் துணையாயிருந்தனர். சங்கிலி அரசனின் மரணத்துக்குப் பின் கண்டியரசனின் ஆதிக்கம் திருகோணமலை வன்னியிலே இடம்பெறலாயிற்று.

முக்குவன் வன்னிமைகளை மட்டக்களப்பு வன்னிமை, புத்தளத்து வன்னிமை என பிரிவுகளாக வகுத்தான் என ஆசிரியர் கூறுகிறார். பதின்மூன்றாம் நூற்றாண்டில் கலிங்க மன்னன் மாகன், முக்குவரை மட்டக்களப்புக்கு அழைத்து வந்து அவர்களின் படைத்தலைவருக்கு வன்னிபம் என்ற பட்டத்தை அளித்தானென மட்டக்களப்புக்குச் சென்று குடியேறிய இஸ்லாமிய குடும்பங்களின் வரலாற்றைக் கூறும் ஓரேட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதி, மட்டக்களப்பில் அதிகாரம் செலுத்திய ஏழு வன்னியர் பற்றிக் குறிப்பிடுகின்றது. தேசாதிபதி பான் கூன்ஸஸின் அறிக்கையையும் ஆசிரியர் ஆதாரமாகக் காட்டுகின்றார்.

புத்தளத்து வன்னிமை என்னும் பிரிவு, ஒல்லாந்தராட்சிக்காலம் வரை புத்தளத்திலிருந்த முக்குவ வன்மைபற்றிக் கூறுகின்றது. ஆறாம் பராக்கிரபாகுவின் ஆட்சிக்காலந்தொட்டு புத்தளத்து வன்னிமை பற்றிக் கிடைத்துள்ள குறிப்புக்களை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இவ்வரசன் (1413 – 1467) புத்தளத்து வன்னிமையைக் கைப்பற்றிய வரலாறு முக்கர ஹடன என்ற நூலில் விவரிக்கப்படுகின்றது. பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு செப்பேடுகளை ஆதாரமாகக் கொண்டு புத்தளத்தை ஆண்ட நவரத்தின வன்னியன் பற்றியும், நீதிமன்றத்தில் அங்கம் வகுத்த வன்னியர் பற்றியும் வன்னியர் பெற்றிருந்த சிறப்புரிமைகள் பற்றியும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நான்காவது இயலாக அமைந்துள்ள ஈழத்து வன்னிமை இரண்டாம் பகுதி, யாழ்ப்பாணப் பட்டினம் என வழங்கிய தமிழரசில் அடங்கிய வன்னிமைகளைப்பற்றிக் கூறுகின்றது. யாழ்ப்பாண அரசு உள்ளடக்கியிருந்த வன்னிநாடு மன்னாரிலிருந்து திருகோணமலைவரை பரந்திருந்ததென்றும், அதன் எல்லை சிலாபம் வரை இருந்ததென்றும் சான்றுகள் தரப்படுகின்றன. பனங்காமம், முள்ளியவளை, கருநாவல்பற்று, கிழக்கு மூலை என்பன யாழ்ப்பாணத்து வன்னிக்குடியேற்றங்களில் முக்கியமானவையென குவேறோஸ் கூறுகின்றார். இரு வன்னிக் குடியேற்றங்களைப் பற்றி யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது.

இரண்டாவது வன்னிக் குடியேற்றம் பாண்டிநாட்டிலிருந்து வந்த 59 வன்னியரின் வருகையோடு ஏற்பட்டது. யாழ்ப்பாண வைபவமாலை கூறும் இக்குடியேற்றம் பற்றியே வையாபாடல் என்னும் நூலும் கூறுகின்றது.

வையாபாடல் வன்னியர் குடியேற்றம் பற்றிக் கூறுவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கோளாகக் காட்டி அமைந்ததே அடங்காப்பற்றில் வன்னியர் குடியேற்றம் என்னும் பிரிவு வையாபாடல் கூறுவதை முற்றாக ஏற்காது விட்டாலும், வன்னியர் பலர் தென்னகத்திலிருந்து வந்து வன்னிப் பிரதேசங்கள் பலவற்றைக் கைப்பற்றி ஆண்டதை வரலாற்று நிகழ்ச்சியாக ஆசிரியர் கொள்கின்றார். வையா பாடலில் வரும் நிகழ்ச்சிகள் முதலாம் ஆரியர் சக்கரவர்த்தி காலத்தினை யொட்டியவையெனக் கருதுகின்றார். இவ்வன்னியர் செயவீரசிங்கையாரின், வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்டசிங்கையாரியன், சங்கிலி போன்ற பலம் வாய்ந்த யாழ்ப்பாண மன்னருக்குத் திறைகொண்டுத் ஆண்டனர். எனினும் வன்னியர்கள் சுயாட்சி செலுத்தி, அதிகாரிகளை நியமித்து இறைவரிகளையும் பெற்றிருந்தனர்.

இந்நூலிற்குத் தனிச் சிறப்பும் மதிப்பும் அளிப்பது இதன் இரண்டாம் பகுதி, நூல் ஆக்கத்திற்குதவிய ப்ட்டயாங்களும் ஆவணாங்களும் இப்பகுதிகளில் அடங்கியுள்ளன. முதலிரு பட்டயாங்களையும் முதன் முதல் வெளியிடும் பெருமை ஆசிரியருக்கே உரியது. அப்பட்டாயங்கள் பரராசசேர மகாராசாவின் பட்டயமும், கயிலாய வன்னியனார் மட தர்ம சாதனப் பட்டயமும் ஆகும். இவ்விரு செப்பேடுகளும் படம்பிடித்துப் பிரதி செய்து அச்சில் வெளியிடப்பட்டுள்ளன. அத்துடன் அவற்றை இக்கால முறையிற் குறியீடுகளுடன் பிழைகள் நீக்கிப் பதிப்பித்திருக்கிறார். அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள வரலாற்று ஆய்வு விளக்கவுரைகள் மிகவும் பயனுள்ளன.

புதிய உலகம் என வர்ணிக்கப்பட்ட அமெரிக்காவைக் கண்டுபிடித்த பெருமை கொலம்பஸ்சையே சார்ந்தது. அமெரிக்காவை கண்டுபிடிக்கும் முன்னமே தொல்காப்பியர் காலத் தமிழகம் ஈழநாட்டுடன் வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்தமிழ்கூறு நல்லுலகத்து எனும் பனம்பாரனார் பாடிய தொல்காப்பியர் பாயிர வரிகள் தொல்காப்பியர் காலத்துத் தமிழக எல்லையைச் சுட்டுகின்றன.

வன்னி என அழைக்கப்படும் பிரதேசமானது முல்லைத்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா மாவட்டங்களையும் கிளிநொச்சி மாவட்டத்தின் பகுதியான ஆனையிறவுக்குத் தெற்கேயுள்ள பகுதியையும் உள்ளடக்கியதாகும். ஜே.பி. லூயிஸ் என்பவரின் கருத்துப்படி "வன்னியின் எல்லைகளாக வடக்கே யாழ்ப்பாண ஏரியும், தெற்கே அருவி ஆறும் நுவரகலாவிய மாவட்டமும், கிழக்கே திருகோணமலை மாவட்டமும், மேற்கே மன்னார் மாவட்டமும் அமைந்துள்ளன. வடக்குத் தெற்கே நீளம் 71 மைலும், கிழக்கு மேற்காக அகலம் 60 மைலும் ஆகும்." சி.எஸ். நவரத்தினத்தின் கருத்துப்படி "வடநாட்டில் யாழ்குடா நாட்டிற்கும் நுவரகலாவிய மாவட்டத்திற்கும் இடைப்பட்ட பகுதியாகும்.

இது கிழக்கில் திருகோணமலையையும் மேற்கில் மன்னாரையும் எல்லையாக உடையது. தென்னமர வாடி, முள்ளியவளை, கருணவால்பற்று குதிரைமலை, செட்டிக்குளத்தின் ஒரு பகுதியையும் இது அடக்குகின்றது. இதன் பரப்பு 3,000 சதுர மைல்"எல்லை வடக்கில் எழில்யாழ் பரவுகடல் பல்லோர் புகழருவி தெற்கெல்லை – நல்ல திருகோணமலை கீழ்பால் கேதீச்சரம் மேற்கில் மாணத் திகழ்வன்னி நாடு. லூயிஸ் என்பவருக்கு முன்பு வாழ்ந்த ரெனென்ற் கருத்துப்படி வன்னிப்பிரதேசம் முன்னர் யாழ்ப்பாணம், அநுராதபுரம் ஆட்சிக்கு அடங்காமல் இருந்த பிரதேசமாகையால் அடங்காப்பற்று எனப்பட்டது.

ஜே.பி. லூயிஸ் என்பவரும் வன்னி என்ற பெயர் வருமுன் யாழ்ப்பாணம், அநுராதபுரத்தின் தலையீடின்றி சுதந்திரமாக இருந்தமையால் அடங்காப்பற்று எனப் பெயரிடப்பட்டது என்றார். வன்னி என்ற சொல்லிற்கு தமிழ்நாட்டின் வன்னியர் என்ற வீரமரபினரின் வழி வந்தவர் என்பார் ஜே.பி. லூயிஸ். வன்னி என்ற சொல்லால் குறிப்பிடப்படும் அக்கினியின் மரபில் உதித்தவர்கள் என்பார் சிலர். வனம் சார்ந்த பகுதியாதலால் வன்னி என பலராலும் அழைக்கப்பட்டது. எனினும் வன்னி என்பது விளை நிலத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது எனலாம். விளை நிலத்திற்கு அவசியம் நீர். இங்குள்ள கிராமங்கள் எல்லாம் நீரைத்தரும் குளங்கள், மடுக்கள், மோட்டைகள், கேணிகள், முறிப்புக்கள், வாய்க்கால்கள் என்பவற்றை பெயராகக் கொண்டுள்ளதை ஈண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கலாம்.

அடங்காப்பற்றான இந்த வன்னி நாட்டின் கடைசி மன்னன் குலசேகர வைரமுத்து பண்டாரவன்னியன் ஆவான். இவன் வாழ்ந்த காலம் அந்நிய ஆதிக்கத்தார் தமது ஆதிக்கத்தை ஈழத்தின் பல பகுதிகளில் நிறுவ முற்பட்ட காலம். இவனது காலத்தில் ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிப்பகுதியும் ஆங்கில ஆட்சியின் முற்பகுதியுமாக அமைகின்றது. இவனது இராசதானி பண்டாரி குளம் என்னுமிடத்தில் அமைந்திருந்தது. இது ஒட்டுசுட்டானிலிருந்து நான்கு மைல் தூரத்தில் ஒட்டுசுட்டான் - நெடுங்கேணிப்பாதையில் அமைந்துள்ளது. கட்டழகனாக இருந்தபோது குரவிச்சை வன்னிச்சி என்ற ஒரு அழகியைக் காதலித்தான். இக்காதலி, காதலியார் சமளங்குளத்தில் வாழ்ந்ததாள். இதுவும் ஒட்டுசுட்டானிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் ஒட்டுசுட்டான் நெடுங்கேணிப்பாதையில் அமைந்துள்ளது. இவனது சகோதரியின் பெயர் நல்லாநாச்சான் வன்னிச்சி. இவள் கண்டியில் நுவர வன்னியனின் மூத்த மகனான குமாரசிங்க வன்னியனை மணமுடித்தாள். வன்னிப்பிரதேசம் ஏனைய பிரதேசங்களின் ஆட்சிக்கு அடிபணிந்து அடங்காப் பற்றாக தலை நிமிர்ந்து இருந்த வேளை அன்னிய ஆட்சிக்கு அடங்க நேரிட்டபோது அதன் விடுதலைக்காக இறுதி மூச்சு வரை போராடிய மாமன்னன், மாவீரன் பண்டாரவன்னியனே.

இம்மன்னன் வன்னியில் வாழ்ந்த மக்களை உணவு உற்த்தியில் ஈடுபடுத்தி தனது முன்னோர்களிலும் பார்க்க உர்ச்சாகமூட்டினான். விவசாயம், கடல்வளம் மிக்கதாக, வளம் பொருந்திய பிரதேசமாக வன்னிப் பிரதேசத்தை திகழச் செய்தான். குளங்கள் அருகே நெற்பரப்புக்களும், அடர்ந்த காடுகளிலே விலங்கினங்களும், கடலிலே மீன்களும் பொருளாதார வளத்திற்கு உரமூட்டின. இதனாலன்றோ அன்னியர் இப்பிரதேசத்தில் தமது நாட்டத்தைச் செலுத்தினர். தேக்கு, யானைத்தந்தம், சாயவேர், கருங்காலி, பனைதரும் பொருட்கள், மரக்கறி, பால், தயிர், நெய், தேன், இறைச்சி, மீன், நெல் ஆகியவற்றை உற்பத்தி செய்ததனால் அன்னிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் வன்னியைக் கைப்பற்ற ஏவினர். இதனை விளக்கும் ஒரு நாட்டார் பாடல்

வன்னி நாடு வளர் சோலை நாடு
வரியம் மூன்று விளைவுள்ள நாடு
கன்னி நாடு கதிர் சோலை நாடு
காரளர் வாழும் கன்னியர் நாடு

ஜே.பி. லூயிஸ் என்பவர் "வன்னி மக்கள் சிறுபோகத்தின் போது ஓட்டை வாலன், சரளி, காடைக்களுத்தன், வன்னன, பானன்கலியன், சிறுவெள்ளை, முப்பன்க், சவரக்குரன், வட்டுப்பித்தன், கருன்குழவாலி, முரங்கன், மலையழகன், முல்லைநெல்லு, அடுக்குவெள்ளை முதலான நெல்லு வகைகள் விதைக்க காலபோகத்தின் போது குளவாழை, வெள்ளை நெல்லு, கறுத்த இளங்கலையன், வெள்ளை நெல்லு, பச்சப்பெருமாள், வெள்ளைச்சீனட்டி முதலான நெல்லுவகைகள் விதைக்கப்பட்டன" எனக் கூறினான். உணவுக்களஞ்சியமாக போஷாக்குத்தரும் உணவு வகைகளாக, இன்று காணமுடியாத இவற்றை உணவுக்களஞ்சியம் உணவுப்பஞ்சமின்றி வளமிக்க பிரதேசமாகத் திகழ்ந்தது.

அடிமை கொள்ள யாருக்குத்தான் ஆசைவராது? நாட்டைச் சூறையாட முற்பட்ட அன்னியருக்கு வன்னியைச் சுகமாக செலவின்றி அனுபவிக்க வழிவகுத்தது. இதனாலன்றோ இதைக் கைப்பற்ற அந்நியர் ஆசைப்பட்டனர்.

வன்னி மன்னன் பண்டாரவன்னியரிடம் ஒல்லாந்தர் சாயவேரை திறையாகத திரட்ட முற்பட்டபோது அதை முழுதாக எதிர்த்து திறை திரட்டி வழங்காத மன்னன் இவனே. இதை சி.எஸ். நவரத்தினம் என்பவர் "இவனொரு திடகாத்திரமான, சுதந்திர இளவரசனெனவும் ஒருமுறை ஒல்லாந்தர் சாயவேர் விநியோகிக்கும்படி பணித்தபோது அவன் முழுமட்டமாக நிராகரித்தான்" எனக் கூறினார். ஒல்லாந்தருக்கு ஏனைய பிரதேச மன்னர்கள் திறை சேர்த்துக் கொடுத்த போதும் அவர்களுக்கு திறை சேர்த்துக் கொடுக்காது, அடிபணியாது வணங்காமுடியாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்ந்தவன் பண்டார வன்னியனே. இதற்கு இந்த நாட்டார் பாடல் நல்ல உதாரணமாகும்.

கறுவா வாங்க வந்தார் - இன்று
கப்பம் ன்ெறு கேட்டால்
உறவார் துன்பம் ஈனர் - துரை
உணர வேண்டும் இன்றே

இது பண்டாரவன்னியனின் எச்சரிக்கையை எடுத்து காட்டுகின்றது. 1803 ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி முல்லைத்தீவிலிருந்து ஆங்கிலேயரின் அரசாங்க இல்லத்தைத் தாக்கி அங்கு கப்டன் வொன்டிறிபேகக்கின் தலைமையில் இருந்த படைப்பிரிவைப் பின்வாங்கச் செய்தான். கப்டன் வொன்டிறிபேக் தனது படைகளுடன் வள்ளங்களில் ஏறி யாழ்ப்பாணத்திற்குத் தப்பிப் போனான் முல்லைத்தீவின் அருகேயுள்ள குதிரை சாய்ந்த இறக்கம் இதனை இன்றும் புலப்படுத்துகிறது. பண்டாரவன்னியனும் அவனது படைவீரர்களும் மூன்று பீரங்கிகளைக் கைப்பற்றிச் சென்றனர். இந்த அபார வெற்றியின் மூலம் பண்டார வன்னியன் வன்னி வரலாற்றில் ஒரு முத்திரை பொறித்துள்ளான். மேலும் அன்னிய ஏகாதிபத்தியவாதிகளை எதிர்க்கத் தனக்கு உதவியாக அயற் பிரதேசமான நுவலகலாவிய திசாவையின் ஆட்களையும் சேர்த்துக் கொண்டே இம்முற்றுகையில் ஈடுபட்டான். துப்பாக்கிகள், பீரங்கிகளுடன் படைவீரர்களையும் கைது செய்தான். அவனது இரங்கிய மனம் பின்னர் கைது செய்யப்பட்ட அந்நியருக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து திருப்பி அனுப்பியது.

இந்த வெற்றியில் முல்லைத்தீவு கோட்டை துண்டுதளாகியது இன்றும் இதன் எச்சத்தை காணக்கூடியதாகவுள்ளது. பின்னர் திருகோணமலையிலிருந்து எட்வேட் மெட்சின் தலைமையில் 19ம் படைப்பிரிவைச் சேர்ந்த படை முல்லைத்தீவை மீளக்கைப்பற்றியது. இந்தப் போரிலே பண்டார வன்னியனுக்கு உதவிய குற்றத்திற்காக, குமாரசேகர முதலியாரும் அவருடைய சில நண்பர்களும் இராசத்துரொக குற்றத்திற்காகத் தூக்கிலேற்றப்பட்ட வேதனை தரும் நிகழ்வும் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது. அவர்கள் தூக்கிலேற்றப்பட்ட இடம் "தூக்கு மரத்தடி" என அழைக்கப்படுகின்றது. நேருக்குநெர் பண்டாரவன்னியனுடன் நின்று மோதமுடியாது தத்தளித்த ஆங்கிலேய படை மும்முனையில் தாக்குதலை நடத்த உத்தேசித்தது.

இதற்கு உறுதுணையாக கரிக்கட்டுமூலை அரசன் காக்கைவன்னியனை நாடி பண்டாரவன்னியனையும் அவன் படையினரையும் காட்டித்தரும்படி ஆசைவார்த்தை கூறினார். அந்நியரது செல்வாக்கைப் பிரயோகித்து முன்னணிக்கு வர உத்தேசித்திருந்த காக்கைவன்னியனுக்கு இது உற்சாகத்தை ஊட்டியது. 1803ம் ஆண்டு 19ம் படைப்பிரிவு ஒன்று தளபதி ஜோண்டியுவெலின் தலைமையில் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு அனுப்பப்பட்டது.

இப்படை வீடுகளைத் தீக்கரையாக்கி, மாடுகளை கொள்ளையடித்து வன்னியில் பெருத்த அட்டகாசத்தை புரிந்தது. திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவிற்கு திரு.எட்வேட் மெட்சின் தலைமையில் ஏற்கனவே ஒரு படை அனுப்பப்பட்டு இருந்தது. மன்னாரிலிருந்து கப்டன் வொன்றிபேக் தலைமையில் ஒரு படை தரைமார்க்கமாக அனுப்பப்பட்டு இருந்தது. இந்த மும்முனைத்தாக்குதலை எதிர்கொள்ள வேண்டிய அபாய நிலைக்கு பண்டாரவன்னியன் உந்தப்பட்டிருந்தான். எனினும் ஆங்கிலேயரது சூழ்ச்சி வலையில் வீழ்ந்த காக்கைவன்னியனுக்கு முன்கூட்டியே இந்த மும்முனைத் தாக்குதல் பற்றி தெரிந்திருந்தது இருந்தும் மன்னாரிலிருந்து வரும் படை பற்றி பண்டாரவன்னியனுக்குத் தெரியாமல் இவன் மறைத்து வைத்திருந்தான். எனவே திருகோணமலையிலிருந்து வரும் படை குமாரசிங்க வன்னியனின் தலைமையில் ஒரு படையைத் திரட்டி எதிர்க்க விட்டான். யாழ்ப்பாணத்திலிருந்து வந்த படையை தானே தலைமை தாங்கி எதிர்த்தான்.

ஆனால் மன்னாரிலிருந்து வரும் படைபற்றி இவன் எதுவும் அறிந்திருக்காததால் அதை எதிர்க்கும் ஆயத்தங்களில் இவன் ஈடுபட்டிருக்கவில்லை. இப்படியாக முற்கூறிய இரண்டு படைப்பிரிவுகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொண்டு இருக்கும் வேளையில் மன்னாரிலிருந்து வந்த படை 1803ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ம் திகதி அதிகாலை 5 மணியளவில் நித்திரையில் ஆழ்ந்திருந்த பண்டாரவன்னியனைத் தோற்கடித்தது. இதனைக் கற்சிலைமடுவில் உள்ள ஒரு நடுக்கல்லில் "பண்டாரவன்னியன் வொன்றிபேக்கினால் தோற்கடிக்கப்பட்டது 31ம் திகதி ஒக்டோபர் 1803" என பொறிக்கப்பட்டுள்ளது.

பண்டாரவன்னியனிடமிருந்து கண்டி மன்னனின் முத்திரை பொறிக்கப்பட்ட பீரங்கி ஒன்று ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. இதன் மூலம் ஆங்கிலேயரை எதிர்க்க கண்டி அரசனுடைய ஒத்துழைப்பையும் இவன் பெற்ற ஈண்டு நோக்கத்தக்கது. பண்டாரவன்னியனைத் தோற்கடித்தமைக்கு பரிசாக பண்டாரவன்னியனுக்கு சொந்தமான பண்டாரிக்குளம் கப்டன் வொன்றிபேக்கிற்கு பரிசாக அளிக்கப்பட்டிருந்தது. 1865ம் ஆண்டு வரை றிபேக் சந்ததியினர் அச்சொத்துக்களை பராமரித்து வந்துள்ளனர்.

பண்டாரவன்னியன் 1803ம் ஆண்டில் தோற்கடிக்கப்பட்டு வன்னியை விட்டு விலகியபோதும் மீண்டும் வன்னியைக் கைப்பற்றும் நோக்கத்துடன் 1801ம் ஆண்டில் மே மாதத்தில் கண்டி பிரசைகளுடன் கிழக்கு மூலை, தெற்கு மூலை பகுதிகளில் தனது எதிர்ப்பை பலமாக தெரிவித்தான். இவன் அருகில் இருந்த ஒரு கிராமத்தை கொள்ளையடித்துச் சென்றதாக ஆங்கிலேயர் அறிக்கைகள் கூறுகின்றன. இப்படையெடுப்பில் பண்டாரவன்னியனிடம் 14 வீரர்களே இருந்தனர்.

எனினும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இப்படையின் வலிமை கண்டு கதிகலங்கினர். கண்டி இராச்சியத்தின் எல்லைப்பகுதிகளான வெடிவைத்தகல், வவுனியா ஆகிய இடங்களில் கடுமையான பாதுகாப்புக்கள் நிறுவப்பட்டு இருந்தன. 1810ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கண்டித் திசாவையின் உதவியுடன் மீண்டும் தாக்க இருப்பதாக கலெக்டர் ரேணருக்கு மேற்பற்று கிழக்கு முதலியார் கதிர்காமநாயகத்திடம் இருந்து செய்தி கிடைத்தது. உடனே கலெக்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேணர் வன்னிப்பாதுகாப்பை அதிகரித்தார். ரேணரின் விண்ணப்பத்தின் பேரில் யாழ்ப்பாணம், திருகோணமலை முதலிய பிரதேசங்களிலுருந்து படைகள் அனுப்பப்பட்டன.

மீண்டும் மும்முனைத் தாக்குதல்களாக திருகோணமலையில் எட்வேட் மெட்சின் தலைமையில் ஒரு படையும், மன்னாரிலிருந்து கப்டன் வொன்றிபேக் தலைமையில் இன்னொருபடையும், யாழ்ப்பாணத்தில் இருந்து சேனாதிபதி யூபெல் தலைமையில் இன்னொரு படையும் அனுப்பப்பட்டன. இவர்களுக்கு வன்னியில் பலத்த எதிர்பாரா எதிர்ப்புக்கள் இருந்தன. திருகோணமலையில் இருந்து வந்த படையை நல்ல நாச்சான் வன்னிச்சியும், மன்னார் எல்லையில் பனங்காமம் பகுதியை பாதுகாத்த தங்கை உமாச்சிய வன்னிச்சியும், எதிர்த்துப் போராடினார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த படையை மாங்குளத்திற்கும் முரகண்டிக்கும் இடையில் 18ம் போர் என்னுமிடத்தில் முன்னேறிச் சென்று பண்டாரவன்னியன் எதிர்த்தான். இந்த மிகப்படை மும்முனைத்தாக்குதல் கடுமையாக இருந்ததனால் பண்டாரவன்னியனனின் படைகளால் சமாளிக்க முடியாமல் போயிற்று. 1811ம் ஆண்டு உடையாவூர் என்னுமிடத்தில் கடைபெற்ற போரில் பண்டாரவன்னியன் காயம் அடைந்தான். இவனது படைவீரர்கள் இவனை பனங்காமத்திற்கு எடுத்துச் சென்றார்கள். அடுத்த நாள் அவனது ஆவி பிரிந்தது. 34 வயதிலே தன்னிகரில்லாது போரிட்ட அம்மாமன்னன் இறக்க நேரிட்டது.

இத்துடன் வன்னியரின் எதிர்ப்பும் மறையலாயிற்று. பண்டாரவன்னியன் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்ட செய்தி கேட்டதும் அவனது காதலி குரவிச்சை வன்னிச்சியும், இவனது சகோதரி நல்லநாச்சான் வன்னிச்சியும் கார்த்திகைகிழங்கை உட்கொண்டு மரணமாயினர். இவர்களது பூதவுடல்கள் பன்னாடையில் வைத்து ஒட்டுசுட்டான் நெடுங்கேணி பாதையில் உள்ள குரவிச்சை ஆற்றில் இருக்கக் காணப்பட்டது.

இப்படியாகத் தங்களுக்கு வேண்டியவர்கள் மரணிக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்கட்டை ஏறுவது வன்னியர்களின் இயல்பு. இறுதி மூச்சுவரை ஒல்லாந்தரையும், ஆங்கிலேயரையும் வன்னியைப் பிடிக்க விடாது. விரட்டமுற்பட்டவன் பண்டாரவன்னியன் என்னும் மாவீரனே தனது நாட்டின் அந்நிய ஏகாதிபத்திய ஒழிப்பிற்காகவும் இவன் வன்னிப்பிரதேசத்திலே தனித்தும் ஒருமித்தும் சுதந்திரத்திற்காக போராடினான் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒப்பற்ற மாவீரனின் நினைவுச் சின்னங்களாக கிழக்குமனை பண்டாரவன்னியன் கிணறும் பண்டாரவன்னியன் வளவும் அமைந்து இன்றும் பெருமை தருகிறது. புகழை நாட்டார் பாடல் வருணிக்கிறது.

அன்னை பூமியெனும் அடங்காற்றும்
வன்னி மண்ணின் மாணத்தைக் காத்திட
தன்னுயிர் கொடுத்து புகழ் கொண்ட மா
மன்னன் மாவீரன் பண்டாரவன்னியன்.

சந்திரகுப்தர்

அந்தக் காலத்தில் பாடலிபுத்திரம் 'புகூஷ்பபுரம்' என்றும் இந்திய மக்களால் அழைக்கப்பட்டது. கணவர் கொல்லப்பட்ட பிறகு சந்திரகுப்தரின் தாய் தப்பித்துச் சென்றது அந்த ஊருக்குத்தான் எதிர்காலத்தில் மகன் நிலைநாட்டப் போகும் சாம்ராஜ்ஜியத்தின் தலைநகரமாக பாடலிபுத்திரம் புகழ்பெறப் போவது முன்கூட்டியே அந்தத் தாய்க்குத் தெரிந்திருக்குமோ!குழந்தை பிறந்த உடனே அதற்கு ஆபத்து வரக்கூடாது என்று எண்ணி இடையர் குலத்தைச் சேர்ந்த ஒருவரிடம் ஒப்படைத்தாள் அந்தத் தாய் துறுதுறுவென்றிருந்த அந்தக் குழந்தையை பிறகு வேடுவர் குலத்தைச் சேர்ந்த ஒருவர் வாங்கியதாகக் கூறப்படுகிறது. ஒரு நாள் சிறுவன் சந்திரகுப்தன், கிராமத்தில் மற்ற சிறுவர்களோடு 'ராஜா விளையாட்டு' விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது அந்த வழியே வந்து கொண்டிருந்த ஒரு பிராமணரின் கவனம் அந்தச் சிறுவன் மீது விழுந்தது. அந்தப் பிராமணர் சாணக்கியர்! கி.மு. – கி.பி. 171 சிறுவர்கள் அப்போது தமாஷாக ஒரு நாடகம் போட்டுக் கொண்டிருந்தார்கள். 'நான்தான் ராஜாவாக நடிப்பேன்!' என்று அடம் பிடித்தான் அந்தச் சிறுவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களின் நாடகம் தான் என்றாலும் ஆரம்பித்த கொஞ்ச நேரத்திலேயே, ஒதுங்கி நின்று கவனித்துக்கொண்டிருந்த சாணக்கியரின் கண்கள் அகல விரிந்தன. ஒரு நிஜ அரசரின் வசீகரமும் கம்பீரமும் மிடுக்கும் சந்திரகுப்தனிடம் இருந்ததைக் கண்டு வியந்துபோன சாணக்கியர், சிறுவனின் தந்தையை தேடிக் கண்டுபிடித்து 'உங்கள் பையனை என்னோடு அனுப்புங்கள். அவனுக்கு நல்ல கல்வியைக் கற்றுத் தந்து சிறந்த முறையில் வளர்க்கிறேன்' என்று வற்புறுத்தினார்.

ஏதோ கடன் தொல்லையிலிருந்த அந்த வளர்ப்புத் தந்தை 'எவ்வளவு பணம் தருவீர்கள?' என்று கேட்க, கையிலிருந்த ஆயிரம் பொற்காசுகளையும் அவரிடம் தந்து சந்திரகுப்தனை விலைக்கு வாங்கினார் சாணக்கியர்! பிறகு, சந்திரகுப்தனைத் தன் சொந்த ஊரான தட்சசீலத்துக்கு அழைத்துச் சென்று அங்கே எட்டாண்டுகள் கல்வி மற்றும் போர்ப் பயிற்சியும் தந்து மாவீரனாக வளரத்தார் சாணக்கியர்.

இந்தியா மீது படையெடுத்த அலெக்ஸாந்தர், தட்சீலத்துக்கு விஜயம் செய்த போது தெருவின் இரு புறமும் அந்த கிரேக்க வீரனைப் பார்க்க ஆயிரக்கணக்கில் மக்கள் கூடினார்கள். சந்திரகுப்தரும் ஒரு மண்டபத்தின் மீது ஏறி நின்று குதிரையில் கம்பீரமாக அமர்ந்து வந்த அலெக்ஸாந்தரை ஆச்சரியத்துடன் பார்த்ததாக ஒரு தகவல் உண்டு. சாணக்கியரின் இதயத்தில் கொஞ்சகாலமாகக் கனன்று கொண்டிருந்த ஒரு தீ பாடலிபுரத்தில் அமர்ந்து ஆட்சிபுரிந்து வந்த நந்த வம்சத்தை அடியோடு அழிக்கவேண்டும் என்று ஒவ்வொரு விநாடியும் சாணக்கியருக்கு நினைவூட்டிக் கொண்டிருந்த தீ அது! அந்தக் கோபத்துக்குப் பின்னணி உண்டு!

தட்சசீலத்திலிருந்து பாடலிபுத்திரத்துக்கு வந்த சாணக்கியரின் (கௌடில்யர்) அறிவாற்றலைக் கண்ட மன்னர் தனநந்தா, தன்னுடைய தன சாலைக்கு (நிதி இலாகா!) பொறுப்பாளராக இதுவரை நியமித்தார். போகப் போக சாணக்கியரின் அணுகுமுறையும் காரணமாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதி விஷயத்தில் ஏதோ சிறு தவறு நிகழ்ந்ததைச் சாக்காக வைத்து அரசசபையில் எல்லோர் முன்னிலையிலும் சாணக்கியரை மன்னர் அவமானப்படுத்த – சாணக்கியரும் சற்று அகம்பாவத்துடன் பதில் சொல்ல, மன்னருக்குக் கோபம் தலைக்கேறியது.

சாணக்கியருக்கு மரண தண்டனை விதித்தார் நந்தர். சிறையில் அடைக்கப்பட்ட சாணக்கியர் ஒரு சந்நியாசி போல சடாமுடி வேஷம் தரித்து நாட்டை விட்டுத் தப்பித்து வெளியேறினார். தனக்கு நடந்த அந்த அவமானத்தை அவரால் மறக்க முடியவில்லை. 'உன்னுடைய நந்த வம்சத்தை பூண்டோடு அழிப்பேன்!' என்று மன்னருக்குத் தகவல் அனுப்பினார். 'வாளைக் கூடத் தூக்கத் தெரியாத ஒரு பிராமணரின் திமிர்ப்பேச்சு' என்று நந்த மன்னர் அந்த எச்சரிக்கைக் கடிதத்தைத் தூக்கி குப்பைத் தொட்டியில் எறிந்தது தவறாகப் போய்விட்டது! சந்திரகுப்தரை வளர்த்து பெரும் வீரராக உருவாக்கிய சாணக்கியர் ஹிமாசல மற்றும் பஞ்சாப் ராஜ்ஜியங்களின் மன்னர்களைச் சந்தித்துப் பேசி, சந்திரகுப்தருடன் கூட்டணி அமைக்க ஏற்பாடுகள் செய்தார். போர் மூண்டது!

நந்த மன்னருடன் நடந்த யுத்தத்தில் லட்சக்கணக்கான வீரர்களும் பத்தாயிரம் யானைகளும், பல்லாயிரக்கணக்கான குதிரை வீரர்களும் கொல்லப்பட்டதாக ஒரு பௌத்த நூல் தெரிவிக்கிறது. சாணக்கியர் அமைதியடைந்தது, நந்த வம்சம் பூண்டோடு அழிந்த பிறகுதான்! பிறகு சந்திரகுப்த மௌரியரின் மகத சாம்ராஜ்ஜியம் தெற்கே கர்நாடகம் வரை பரந்து விரிந்தது. தன் கடைசிக் காலத்தை சந்திரகுப்தர், கர்நாடகத்தில் ஸ்வரவண பெல்கோலாவில் கழித்தாகவும், அவர் இறந்து மைசூருக்கு அருகில் என்றும் சமனநூல் ஒன்று தெரிவிக்கிறது! அசோகர் ஒரு கல்வெட்டில் 'தன் அண்டை மன்னர்கள்' என்று சோழர்களையும், பாண்டியர்களையும் குறிப்பிடுகிறார். ஆகவே, கர்நாடகம் மௌரிய சாம்ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக இருந்திருக்க வேண்டும் என்று பல நூலாசிரியர்கள் கூறுகிறார்கள். சில பழம்பெரும் சங்க நூல்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌரியர்கள் படையொன்று திருநெல்வேலி வரை வந்து போனதாகத் தகவல் உண்டு!

## கி.மு. - கி.பி. 173

இந்திய சாம்ராஜ்ஜியத்தை நிறுவிய முதல் சக்கரவர்த்தி சந்திரகுப்தரின் இருபத்திநான்கு ஆண்டுகால ஆட்சிக்குப் பிறகு அவருடைய மகன் பிந்துசாரர் (முழுப்பெயர் பிந்துசார அமிர்தகதா) கி.மு.298–ல் ஆட்சிக்கு வந்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். அவரைப்பற்றிய தகவல்கள் மிகச் சொற்பமாகவே நமக்குக் கிடைத்திருக்கின்றன.

அவருடைய ஆட்சிக்காலத்தில் சிரியாவை ஆண்டு வந்த செ ல்யூகஸ் நிகேடார் இந்தியாவுக்கு டெமாச்சோஸ் என்னும் தூதுவரை, பரிசுகளுடன் அனுப்பிய தகவல் ஒன்று உண்டு. கி.மு.280ம் ஆண்டில் ஸெல்யூகஸ் நிகேடார் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார்.

சில மாதங்கள் சிரியாவில் கலவரமான சூழ்நிலை நீடித்த பிறகு, ஸெல்யூக்கஸின் மகன் ஆண்டியோகஸ் அரியணை ஏறினார். அவர் பட்டம் சூட்டிக் கொண்ட பிறகு செய்த முதல் காரியம் நமது நாடுகளுக்கிடையே உள்ள நட்புறவு நீடிக்கப்பட வேண்டும் என்கின்ற கடிதத்துடன் பிந்துசாராரின் அரசவைக்கு ஒரு தூதுவரை அனுப்பியதுடன் பிந்துசாராரும் சிரிய (கிரேக்க) மன்னருக்கு வாழ்த்துச் செய்தியும் பரிசுகளையும் அனுப்பினார்.

கிரேக்க தூதுவரைத் தொடர்ந்து டாலமி ஆட்சி செய்து கொண்டிருந்த எகிப்திலிருந்து டயோனிஸியோஸ் என்னும் தூதுவர் பாடலி புத்திரத்துக்கு வருகை தந்தார். இப்படியாக மௌரிய ஆட்சியின் போது இந்தியாவை பெரும் வல்லரசாக அண்டை நாடுகள் ஏற்றுக்கொண்டு மிகுந்த மரியாதையுடன் நடத்தின!.

பிந்துசாரைத் தொடர்நது மகத சாம்ராஜ்ஜியத்தின் சிம்மாசனத்தில் அமர்ந்தவர்தான், பிற்பாடு உலகப்புகழ் பெற்ற அசோக வர்த்தனன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கமாக அசோகர். பிந்துசாரரின் மகனான அசோகர் அரியணையில் ஏறிய விதம் குறித்து சில வரலாற்று ஆசிரியர்கள் இகழ்ச்சியோடு தாக்கி எழுதியிருக்கிறார்கள். பிந்துசாரர் இறந்தது கி.மு. 273ல் அதைத் தொடர்ந்து நான்காண்டுகள் கழித்துத்தான் அசோகர் மகத சாம்ராஜ்ஜியத்தின் சக்கரவர்த்தியாக பட்டம் சூட்டிக்கொண்டார். அந்த விழாவை நான்காண்டுகள் தள்ளிப் போட்டதின் காரணம், அரண்மனையில் ரத்த ஆறு ஓடியதால்தான் என்று சில நூல்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் உண்மை என்ன?

## 174 - மன்னர் அசோகர்!

சந்திரகுப்த மௌரியரின் மகன் பிந்துசாரரின் மறைவுக்குப் பிறகு கி.மு. 273ல் பட்டத்துக்கு வந்த , அசோகவர்த்தனா (அசோகர்) மகத சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொண்டது கி.மு. 269ல் தான். இந்த நாலாண்டு காலத் தாமதம் தான் வரலாற்று அறிஞர்களிடையே பல ஊக்கங்களுக்கும் கற்பனைகளுக்கும் இடம் கொடுத்துவிட்டது!

பிற்காலத்தில் புத்த மதம் வெகுவாக வேரூன்றிய இலங்கையில், அசோகர் பெரிதும் உணர்ச்சிப்பூர்வமாக மதிக்கப்பட்டார். அங்கே சில வரலாற்றுப் புத்தகங்களிலும், பௌத்த மத நூல்களிலும் அசோகரின் ஆரம்பகால ஆட்சியைப் பற்றி விஸ்தாரமான 'தகவல்கள்' காணப்படுகின்றன. ஊக்கங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட அந்த வரலாற்றுக் குறிப்புகளில் காணமல் போனது வரலாறு மட்டுமே!பௌத்த மதத்தைச் சேர்ந்த சிங்கள வரலாற்று நூலாசிரியர்கள் அசோகனின் ஆரம்பகால வாழ்க்கையைப் பற்றி எழுதிய கற்பனை நாவல் என்ன சொல்கிறது?!

## கி.மு. - கி.பி. 175

அதாவது, பிந்துசாரர் மறைவுக்குப் பிறகு மிகக்கொடூரமான தொரு வாரிசுப் போட்டி நடந்ததாகவும் (பிந்துசாரருக்கு நிறைய மனைவிகளும், ஏராளமான மகன்களும் இருந்தனர்!), நாலாண்டுகள் நடந்த அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோஷ்டிச் சண்டையின் விளைவாக அரண்மனையில் ரத்த ஆறு ஓடியதாகவும், கடைசியில் அந்த ரத்தத்தில் காலடிச் சுவடுகளைப் பதித்து அசோகர் அரியணை ஏறினார் என்பது சிங்கள ஆராச்சியாளர்களின் கருத்து.

பிந்துசாரருக்கு (கௌரவர்கள் போல) நூறு மகன்கள் இருந்ததாகவும் தொண்ணூற்று எட்டு சகோதரர்களை அசோகர் வாள்மனையில் தீர்த்துக் கட்டிய பிறகுதான் அவரால் மகுடம் சூட்டிக்கொள்ள முடிந்தது என்றும் பௌத்த வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன! இலங்கையில் புத்த மதத்தைப் பரப்பிய ஒரு மன்னரைப் பற்றி இந்த ரீதியில் அவர்கள் எழுதக் காரணம் என்ன? அவர்களுடைய கோணம் வேறு!

அசோகர் பட்டத்துக்கு வந்தபோது சராசரியான 'இந்து ராஜா' வாகத்தான் இருந்தார் (மெரியர்கள் சிவ வழிபாடு செய்ததாகக் கூறப்படுகிறது). பிற்பாடு கலிங்கப் போருக்குப் பிறகே அவர் மனம் மாறி பௌத்த மதத்தில் சேர்ந்தார். அதாவது, சிறந்த பண்பாடுகளுடன் கூடிய மன்னராக அசோகர் மாறியது அதற்குப் பிறகுதான் என்று சொல்ல விரும்பிய சிங்கள வரலாற்று நூலாசிரியர்கள், 'அசோகருக்கு மனமாற்றம் ஏற்படுவதற்கு முன்பு கொலைவெறி பிடித்த கொடுங்கோல் அரசராக இருந்தார்' என்று அதீத ஆர்வத்துடன் ஒரு கற்பனை கதையை வரலாற்றுக்குள் புகுத்தினார்கள்!

இதற்கு சரித்திரச் சான்றுகள் எதுவும் கிடையாது என்பதே உண்மை. தவிர, பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அசோகரின் பல கல்வெட்டுகளில் அவருடைய சகோதரர்கள் பற்றிய கனிவான குறிப்புகள் கண்டெடுக்கப்பட்டன. எப்படியெல்லாம் அவர்கள் பௌத்த மதத்தின் தூதுவர்களாக பல நாடுகளுக்குச் சென்று செவ்வனே செயல்பட்டார்கள் என்று அசோகரே பெருமிதத்துடன் பல கல்வெட்டுகளில் குறிப்பிடுகிறார்!

பொய்யான இடைச் செருகல்களுக்கெல்லாம் காரணம் -அசோகரின் ஆரம்ப கால ஆட்சியைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் மிகச் சொற்பமாகவே இருப்பதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக ஏன் அசோகர் அரியணையில் அமர்ந்து நான்கு ஆண்டுகள் கழித்தே பட்டாபிஷேகம் நடந்தது என்பதற்கான நிஜக் காரணம் இன்றுவரை தெரியவில்லை. அவர் ஆட்சிக்கு வந்தபோது எவ்வித கலவரமான சூழ்நிலையும் மகத சாம்ராஜ்ஜியத்தில் இல்லை. சந்திரகுப்தர் நிறுவிச் சென்றது கச்சிதமான நிர்வாகத்துடன் கூடிய கட்டுக்கோப்பான ஓர் ஆட்சி. ஆகவே அசோகர் பட்டம் சூட்டிக்கொண்ட போது எந்த ஓர் எதிர்ப்பும் வெடித்திருக்க வாய்ப்பில்லை.

ஓர் ஆச்சரியமான திகைப்புட்டும் விஷயம் - கிறிஸ்து பிறந்து நூற்றாண்டுகள் வரையிலும் அசோகர் என்கிற மன்னர் இந்தியாவை ஆண்டார் என்பதே இந்தியர்களுக்குத் தெரியாது! ஒவ்வொன்றாகப் பிற்பாடு கண்டெடுக்கப்பட்ட அசோகரின் கல்வெட்டுகளில் அவர் பெயர் இல்லை! தேவனாம்பியா, பியதாஸி என்கிற அடைமொழிகள் தான் காணப்படுகின்றன. தேவனாம்பியா என்றால் 'தேவர்களின் பிரியத்துக்கு உகந்த' என்றும், 'பியதாஸி' என்றால் 'மகிமை பொருந்திய' என்றும் அர்த்தம்! நேரடியாக மன்னரின் பெயர் குறிப்பிடாமல் போனதற்கு அசோகரே கூட ஒரு விதத்தில் காரணமாக இருந்திருக்கலாம் (பின்னே? கல்லின் மீது கட்டுரை எழுதி விட்டு கீழே பெயரைப் போட்டுக் கொள்ளா விட்டால் எப்படி?!) பிறகு அவருக்கே இது உறைத்திருக்க வேண்டும்!

மெல்ல மெல்ல 'தேவனாம்பியதாஸ அசோகர்' என்று அவருடைய முழுப்பெயருடன் கல்வெட்டுகள் தலைநீட்டி நம்மையெல்லாம் காப்பாற்றியது! ஒரு கல்வெட்டு கி.மு. 269-ல் 'நெய் அபிஷேகம்' எல்லாம் நடத்தி பிரமமாண்டமான யாகம் வளர்த்து அசோகரின் பட்டாபிஷேகம் நடந்ததாகத் தெரிகிறது. அதைத் தொடர்ந்து அசோகர் மது, அந்தப்புரம், வேட்டை, விளையாட்டு எல்லாவற்றிலும் நாட்டம் செலுத்திய ஜாலியான சராசரி அரசராகத்தான் ஆட்சியைத் தொடக்கினார் என்று கூறப்படுகிறது. உடனடியாக பெரிய போர்களில் ஈடுபட வேண்டிய அவசியமும் மன்னருக்கு ஏற்படவில்லை. ஆப்கனிஸ்தான் முழுவதும் உட்பட ஓர் அகண்ட இந்தியா மௌரியர்களின் கைப்பிடியில் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கே சோழ நாடும் பாண்டிய நாடும் சுதந்திர தேசங்களாக இருந்ததை அசோகர் ஏற்றுக்கொண்டார். (அசோகர் சக்கரவர்த்தியிலிருந்து மொகலாயர்கள் வரை ஏனோ எவருமே தமிழ்நாட்டையும் கேரளா நாட்டையும் கைப்பற்றுவதில் நாட்டம் செலுத்தவில்லை. அதனால் தான் என்னவோ ஆங்கிலேயர்கள் எடுத்த எடுப்பில் சென்னையிலிருந்து தங்கள் பிரவேசத்தைத் தொடங்கினார்களோ!)

ஆனால், ஒரே ஒரு நாடு மகத ராஜ்ஜியத்தில் இணையாமல் முரண்டு பிடித்தது. அது மகாநதிக்கும் கோதாவரி நதிக்கும் இடையே, வங்காள விரிகுடாக் கடலையொட்டியிருந்த கலிங்க நாடு! (இன்றைய ஒரிஸ்ஸா!) அசோகர் அரியணையில் அமர்ந்து பதின்மூன்றாண்டுகள் கழித்து (கி.மு. 261-ல்) மௌரியப் பெரும் படை கலிங்கத்தை நோக்கிப் புறப்பட்டது.

கலிங்கத்துப் படை மௌரியப் படையை எதிர்த்து எல்லையில் நிற்க, நடந்தது ஒரு மாபெரும் கொடூரமான போர்! கிரேக்கர்களையே விரட்டியடித்த ராணுவம் அசோகருடையது. ஏராளமான வசதிகளும், போர்ப் பயிற்சியும் கொண்ட மௌரியப்படை கொஞ்ச காலமாகவே யுத்தங்களில் ஈடுபடாததால், கிடைத்த இந்த வாய்ப்பை நழுவவிடாமல் புகுந்து விளையாடியது!

லட்சக்கணக்கானவர்கள் போரில் பலியானவர்கள். 'சரண் அடைந்த ஒன்றரை லட்சம் கலிங்கத்து வீரர்கள் கொல்லப்பட்டதாகவும், ஒரு லட்சம் வீரர்கள் கொல்லப்பட்டதாகவும்' அசோகரே ஒரு கல்வெட்டில் குறிப்பிடுகிறார். துவண்டுபோன கலிங்க நாடு மௌரிய மன்னரின் காலடியில் மண்டியிட்டது. மயான பூமியாக மாறிய அந்தப் போர்க்களத்தைப் பார்வையிடச் சென்ற போது தான் அசோகரின் மனத்துக்குள் தாங்க முடியாத துக்கம் வந்து ஆக்கிரமித்தது. பேதறிவ் நிகழ்ந்த கொடுமைகளையும் அழிவையும் நேரில் கண்ட அசோகர் இடிந்து போய்விட்டார் என்பதற்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டில் காணப்படும் சக்கரவர்த்தியின் பிரத்யேக விவரிப்பே சாட்சி! அசோகர் அடியோடு மனம் மாறியது அந்தத் தருணத்தில்தான்!

### கி.மு. - கி.பி. 179

கலங்க வைத்த கலிங்கத்துப் போர்! அசோகர், கலிங்கத்துப் போர் முடிந்த கையோடு பாடலிபுத்திரத்துக்குத் திரும்பிய போது அந்த நெடும் பயணத்தில் வெற்றிக் கொடிகள் பறந்தாலும் சக்கரவர்த்தியின் கண்கள் சோகத்துடன் வெறித்த வண்ணம் இருந்தன! யாரிடமும் அவர் கலகலப்பாகப் பேசாதது குறித்த அவரது பிரதான தளபதிகள் கவலையுற்றார்கள் தலைநகர் திரும்பிய உடனே இறுக்கமான முகத்துடன் மன்னர் 'டிக்டேட்' செய்ய, ஒரு கல் வெட்டு தயாரானது.

'பட்டாபிஷேகம் நடந்து எட்டாண்டுகளுக்குப் பிறகு மகிமை பொருந்திய சக்கரவர்த்தி கலிங்க நாட்டை வெற்றி கொண்டுள்ளார். லட்சக்கணக்கான வீரர்கள் அப்போரில் சிறை பிடிக்கப்பட்டார்கள். போர் என்பது நிகழும் போது எத்தனை கொலைவெறி தாண்டவமாடுகிறது! இது தாங்கமுடியாத துக்கத்தையும் வருத்தத்தையும் மாட்சிமை தாங்கிய சக்கரவர்த்திக்குத் தந்திருக்கிறது. இதே போன்ற கொடுமை நூறில் ஒரு பங்கு. ஏன், ஆயிரத்தில் ஒரு பங்கு.

### கி.மு - கி.பி. 181

மறுபடி நிகழ்ந்தாலும் சக்கரவர்த்தியால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. தர்மம், சமாதானம், அமைதி - இதுவே இனி மன்னரின் குறிக்கோளாக இருக்கும்' - இப்படியாக ஆரம்பிக்கிறது அசோகரின் கல்வெட்டு! கலிங்கப் போர். அசோகர் மகுடம் சூட்டிக்கொண்ட பிறகு நிகழ்ந்த முதல் யுத்தமா என்பது பற்றி குறிப்புக்கள் எதுவும் இல்லை. ஆனால் சத்தியமாக அதுவே அவர் ஈடுபட்ட கடைசிப் போர்.

கி.மு. 261-ல் கலிங்கப் போர் நடந்தது. பிறகு மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களுக்குள் அசோகர் புத்தமதக் கோட்பாடுகளைப் பின்பற்ற ஆரம்பித்தார். அதைத் தொடர்ந்து அசோகரின் கல்வெட்டுகள் ஏதோ கையெழுத்துப் பிரதிகள் போல 'காப்பி'யெடுக்கப்பட்டு இந்தியா முழுவதும் அன்பையும் தர்மத்தையும் பரப்பின.

கி.மு. 259-ல் அசோகர் 'விலங்குகளை வேட்டையாடுவதற்குத் தடை விதித்தார். வேட்டைக்குச் செல்லாத மன்னர்களே உலக வரலாற்றில் கிடையாது என்கிற நிலையில் அசோகரின் இந்த முடிவு சற்று சலசலப்பை ஏற்படுத்தியது. 'அப்படியென்றால் சக்கரவர்த்தி அரண்மனைக்குள்ளேயே முடங்கிக் கிடக்கப் போகிறாரா? என்கிற முணுமுணுப்புகள் எழுந்தன. ஆனால் சக்கரவர்த்தியோ வேட்டைக்குப் பதிலாக கோலாகலமான விழாக்களையும், ஊர்வலங்களையும் தொடங்கி அதில் நேரடியாகக் கலந்துகொண்டார். அந்த ஊர்வலங்களில் பௌத்த மதப் பிரசாரங்களும், கதாகாலட்சேபங்களும், தர்மத்தைப் போதிக்கும் நாடகங்களும் நடந்தன!

அசோகர் தன் கல்வெட்டுகளுக்கு 1,2,3... என்று 'நம்பர்கள்' கொடுத்தார். இரண்டாம் கல்வெட்டிலேயே அவர் எழுதி வைத்தது இதுதான்! 'தந்தை தாய் இருவரையும் வணங்கி இவர்களின் அறிவுரையை குழந்தைகள் பின்பற்ற வேண்டும் என்பதே அரசரின் விருப்பம். உயிரினங்களிடம் அன்பு பாராட்ட வேண்டியது அவசியம். கொல்லாமை குடிமக்களின் முக்கியமான கடமைகளில் ஒன்று. எந்த விலங்கினத்தைக் கொல்வதும் குற்றம் என்று மன்னர் தெரிவிக்க விரும்புகிறார்.

**182**

உண்மை பேசுவதை எல்லோரும் கடைப்பிடித்தல் அவசியம். ஆசிரியர்களிடம் மாணவர்கள் மிகப் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டும். வீடு தேடி வரும் விருந்தாளிகளை உபசரிக்காமல் இருப்பது மிகப்பெரிய தவறு...!' - அசோகரின் இந்தக் கருத்துக்களை யார் ஆட்சேபிக்க முடியும்?

அசோகர் இறைவழிபாட்டில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேசமயம் 'கடவுள் இல்லை' என்கிற பிரசாரம் அவருடைய எந்தக் கல்வெட்டிலும் இல்லை. கௌதம புத்தரின் 'தர்மபாதம்' கூறும் முக்கியமான விஷயம் - மனிதன் தன் சுயமுயற்சிகளால் பாவச் செயல்களிலிருந்து விடுபட்டு, பண்புள்ள மனிதனாக மாறி பேரின்பத்தை அடையவேண்டும் என்பதே!

'நாமே தான் பாவச் செயல்களைச் செய்கிறோம். நாமே அதன் புலன்களையும், வலியையும் அனுபவிக்கிறோம். நாமே தான் இந்தத் தவறுகளைத் தவிர்த்து புனிதமாக மாற வேண்டும். பாவத்தின் விளைவுகளிலிருந்து யாரும் நம்மைக் காப்பாற்ற முடியாது. நாமே தான் கல்வழிப்பாதையில் நடக்க வேண்டும். புத்தர் வழிகாட்டுவார்!' அசோகர் திரும்பத்திரும்பச் சொன்னது இதைத்ததான்!

கி.மு. 257-ல் அசோகர் முழுமையாக புத்த மதத்தில் சேர்ந்து துறவியானார். ஒருவர் துறவியாகவும் ஒரே சமயத்தில் இயங்க முடியுமா என்கிற கேள்வி எழுகிறது! ப்ளேட்டோ 'ஒரு தத்துவ அறிஞர்தான் அரசாக வேண்டும்' என்று எடுத்துச் சொன்னது பற்றி முன்னொரு அத்தியாயாத்தில் குறிப்பிட்டிருந்தோம். ப்ளேட்டோ அதை நடைமுறைப்படுத்துவதில் தோல்வியடைந்தார்.

கிரேக்க மன்னர்களுக்கும், அந்த நாட்டு மக்களுக்கும் அதற்கான பக்குவம் இல்லாததே தோல்விக்குக் காரணம். ஆனால் இந்தியாவில் அது அசோகரால் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டதற்கு இந்திய மக்களின் மென்மையான மனப்பாங்கும் காரணம் என்பதில் சந்தேகமில்லை! அசோகரைப் பொறுத்தவரையில் அரியணையில் அமரும் போது அரசனாகவும் மற்ற சமயங்களில் துறவியாகவும் சுலபமாகவே அவரால் இருக்க முடிந்தது. அதில் எந்தச் சிக்கலும் தர்மசங்கடமும் அவருக்கு நேர்ந்ததாகத் தெரியவில்லை. அரியணையில் அமர்ந்த போதும் துறவிகளுக்கான உடையைத்தான் அவர் அணிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி முறைதான் முக்கியம், அலங்காரம் அல்ல என்பதில் மன்னர் தெளிவாக இருந்தார். ஏழாம் நூற்றாண்டில் வசித்த ஜீஸிங் என்னும் எழுத்தாளரின் பயணக்கட்டுரையில் கி.பி. 502-லிருந்து 549 வரை சீனாவை ஆண்ட கௌஸீவூடி என்னும் அரசர் அசோகரைப் பின்பற்றி அதே போல துறவியாக அரசாண்டதர் என்று குறிப்பிடுகிறார்! ஒவ்வொரு நாளும் காலையில் மட்டும் உணவருந்தி, இரவில் விரதம் இருக்கும் அளவு எளிமையான வாழ்க்கையைக் கடைப்பிடித்தார் அந்தச் சீன அரசர். அதேசமயம் மிகச் சிறந்த மன்னராகவும் திகழ்ந்தார் என்கிறார் ஜீஸிங்.

பிற்பாடு இந்தியாவில் 12-ம் நூற்றாண்டில் குஜராத்தை ஆண்ட மன்னர் குமாரபாலாவும் சமண மதத்தை தழுவி 'துறவி மன்னராக' வெற்றிகரமாக அரசாண்டதுண்டு. ஆகவே ஏமாற்றத்துடன் இறந்த ப்ளேட்டோ, வானுலகத்திலிருந்து இதையெல்லாம் கண்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்க வேண்டும்.

கி.மு. 249-ல் கௌதம புத்தர் அவதரித்த லும்பினிக்கும் (நேபாளம்) விஜயம் செய்தார் அசோகர். அந்த பயணமும் ஒரு கல்வெட்டில் பெருமிதத்துடன் விவரிக்கப்படுகிறது. அடுத்ததாக, அசோகரின் ஆணையின் பேரில் பௌத்த மதக் கோட்பாடுகளைப் படித்துத் தேர்ந்த தூதுவர்கள் பல நாடுகளுக்குச் சென்றார்கள். மேற்கு ஆசியா, கிழக்கு ஐரோப்பியா, வட ஆப்பிரிக்கா, கிரேக்கம், பர்மா, இலங்கை பொன்ற பல நாடுகளுக்கு அசோகரின் தூதுவர்கள் பயணித்தார்கள்.

சுதந்திர நாடுகளாக இருந்த சோழ நாட்டுக்கும், பாண்டிய நாட்டுக்கும் விசேஷமான தூதுவர்கள் சென்று அரசர்களைச் சந்தித்தார்கள்! பிற்பாடு தாய்லாந்து, கம்போடியா, கொரியா, ஜப்பான், மங்கோலியா போன்ற நாடுகளிலும் பௌத்த மதம் பிரபலமானது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌதம புத்தர் வாழ்ந்ததும் பிரசாரம் செய்ததும் 'மகதம்' என்கிற குறுகிய ஒரு நாட்டில் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பாடலிபுரத்தின் சுற்றுப்பகுதிகளில் (இன்றைய பிகாரில் மட்டும் பரவியிருந்த புத்த மதம், ஒரு வழியாக முந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு உலகெங்கும் பரவியதற்கு அசோகச் சக்கரவர்த்தி என்கிற தனிமனிதரே காரணம் என்பதில் சந்தேகம் இல்லை!)

**184**

ஆகவே தான் கிறிஸ்து பிறப்பதற்கு முன், உலக வரலாற்றை ஜொலிக்கவைத்த மாமனிதர்களில் ஒருவர் அசோகச் சக்கரவர்த்தி என்பதை எல்லா வரலாற்று அறிஞர்களும் ஏகமனிதாக ஒப்புக்கொள்கிறார்கள்! ஐநூறாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிந்துசமவெளி நாகரிகம் தோன்றிச் செழித்து வளர்ந்தது என்றும் வரலாற்றாசிரியர் குறிப்பிடுகின்றனர்.

இன்றைய ஆபிரிக்கா, இந்தியா, தென்கிழக்காசியா, அவுஸ்திரேலியா ஆகியவற்றை உள்ளடக்கிய நிலப்பகுதியே பண்டு இலெமூரியா என வழங்கப்பட்டது. இதனையே குமரிக் கண்டம் என்கின்றனர். இங்கேயே முதல் மனிதன் பிறந்தான் என்பர்.

ஸ்காட்டு, எலியட்டு, இராலே, எஃகேல், வயவர், யோவான், வான்சு முதலான மேலை நாட்டு அறிஞரும் மறைந்த இலெமூரியவே "THE LAST OF LEMURIA" மக்கள் பிறப்பகம் என்று வலியுறுத்தியுள்ளனர். இங்கு தோன்றி வளர்ந்த மனிதனே நாகரிகம் பெற்ற முதல் மனிதன் என்பதனைக் கோந்தரகோவ் என்னும் சோவியத் அறிஞர் தம் முக்கடலில் புதிர் "வுஉ.நு சுஜனுனுடுநுளு முகு வுஉசுநுநு முஊநுயுளே" ஏனுனும் நூலில் குறித்திருப்பதனை அறிஞர் எடுத்துக் காட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணுச்சாமி கீர்த்தி ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் (1747 - 1782)

### இலங்கையை ஆட்சி செய்த மன்னன்

ஸ்ரீ விஜயராஜசிங்க மன்னனின் மறைவின் பின்னர் அவரது துணைவியின் சகோதரனாகிய கண்ணுசாமி கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன் என்னும் பெயரில் முடிசூட்டப்பட்டான். தென்னிந்திய நாயக்க வம்சத்தின் இரண்டாவது கண்டி மன்னனாகிய இக்கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன் (1747 – 1782) முடி சூட்டப்பட்ட போது மிகவும் இளவயது காரணமாக அவனுக்கு அணிவிக்க வேண்டிய திருமணவாள் (மசூல் கடுவ) நான்கு வருடாங்கள் கழித்தே அணிவிக்கப்பட்டது.

இம்மன்னனின் ஆட்சியின் போது ஆரம்பகாலத்தில் சிங்கள பிரபுக்கள் தமது அதிகாரங்களை அளவுக்கதிகமாக பிரயோகிக்கலாயினர். எனினும் நாளடைவில் அரசசபையிலும் அரண்மனையிலும் இந்திய நாயக்கர்களின் ஆதிக்கம் அதிகரிக்கப்பட்டது. காலப்போக்கில் நாயக்கர்களின் ஆலொசனைகளின் படி மன்னன் தனது முடிவுகளை மேற்கொள்ளலானான். மன்னனின் சார்பில் அதிகாரங்களை செலுத்தியவனாக நாயக்கர்களில் ஒருவனான நரேந்திரம்பா விளங்கினான். இதனால் சிங்கள பிரதானிகளும் பிரபுக்களும் ஆத்திரமடைந்தனர். இதனால் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுக்கெதிரான சதித்திட்டங்கள் தீட்டப்படத் தொடங்கின.

மல்வத்தை பீடத்தின் தலைமைப் பிக்குவின் உதவியோடு சமனக்கொடி திசாவை என்னும் பிரதானி திட்டங்களை வகுக்கலானான். வெலிவிட்ட சரணங்கர திப்பட்டுவாவே, புத்திரக்கித்த ஆகிய பிக்குகளும் மொலண்டே ரால மற்றும் அரண்மனை போஜனசாலை மன்னனாக்க வேண்டுமென இக்குழுவினர்கள் இச்சதிக் குழுவில் இடம்பெற்றனர். கண்டியின் மன்னனாக்க வேண்டுமென இக்குழுவினர் திட்டமிட்டனர்.

மன்னனின் அனுமதியோடு பௌத்த மதகுரு நிலை பதவி வழங்கும் வைபவமொன்றுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக திபெத் நாட்டு பௌத்த பிக்குகளை அழைப்பதெனவும் ஒல்லாந்தர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் கப்பல் மூலமாக இவர்களை அழைத்து வருவதாகவும் பிக்கு வேடம் தரித்த திபெத் இளவரசனையும் இவர்களோடு அழைத்து வருவதாகவும் திட்டம் தீட்டப்பட்டது. திட்டமிட்டபடி திபெத் நாட்டு பௌத்த பிக்குமார்களும் இளவரசனும் விஸயம் செய்தனர்.

இவ்வாறு வருகை தந்த திபெத் இளவரசன் அந்நாட்டு மன்னனாகிய பொரம்கொத்தின் இரண்டாவது மனைவியின் மகனாகிய க்ரீம்ஸ் பீபட் ஆகும். இது பற்றி ஏதுமறியாத மன்னன் மல்வத்தை விகாரையில் இவர்கள் தங்குவதற்கான சகல ஏற்பாடுகளையும் நிறைவேற்றினான்.

சதிகாரர்கள் மன்னனை தீர்த்துக்கட்டுவதற்காக வித்தியாசமான ஒரு முறையைக் கையாண்டனர். இராஜசிங்கன் அடிக்கடி மல்வத்தை விகாரைக்கு விஜயம் செய்வதும் பிக்குமார்களின் குறை நிறைகளைக் கவனிப்பதும் மத நிகழ்வுகளுக்கான ஒழுங்குகளை கிரமமாக மேற்கொள்வதும் வழக்கமாகும். இவ்வாறு மல்வத்தை விகாரையில் பிக்குகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட மத நிகழ்வொன்றிற்கு மன்னன் சமூகளிப்பதாக இருந்தது. அங்கு மன்னன் அமர்வதற்காக வைக்கப்படும் ஆசனத்திற்கடியில் ஆழமான குழியொன்றை வெட்டி அக்குழிக்குள் மிகக் கூர்மையான இரும்புக் கம்பிகளை நிறுத்தி அவை வெளியே தெரியாத வண்ணம் அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய துணிகளினால் மூடி வைத்தனர். மத குருமார்களின் முன்னால் மன்னன் இருக்கையில் அமர்ந்தவுடன் குழிக்குள் வீழ்ந்து கூரிய இரும்புக் கம்பிகளினால் குத்தப்பட்டு உயிர் துறக்க வைப்பதே இவர்களின் நோக்கமாகவிருந்தது.

இத்தகைய சதித்திட்டமொன்று தீட்டப்பட்டுக் கொண்டிருக்கும் போதே மன்னனுக்கு நம்பிக்கையான கலகொட திசாவை பிரதானி உளவறிந்து வைத்திருந்தான். இத்தகவலை இரகசியமான முறையில் அரசனின் செவிகளில் அவன் போட்டு வைத்திருந்தான். குறிப்பிட்ட நாளில் மன்னன் தன பரிவாரங்கள் புடைசூழ மல்வத்தை விகாரைக்கு வருகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தான். மல்வித்தைப் பீடாதிபதியின் அனுசாசன உரை நிறைவு பெறும் வரையும் அதற்கு மரியாதை செலுத்தும் வண்ணம் எழுந்து நிற்பது போல மன்னன் ஆசனத்தில் அமர்வதைத்தவிர்த்துக் கொண்டான்.

அன்றைய சகல மத நிகழ்வுகளும் நிறைவடையும் வரையிலும் இராஜசிங்கன் நின்று கொண்டே இறுதியான தமக்கு அலங்கார வேலைப்பாடுகளுடன் வைக்கப்பட்டிருந்த ஆசனத்தை நோக்கி வந்தான். தனது கையிலிருந்த பிரம்பினால் கதிரையை மூடியிருந்த அலங்காரத் துணியை தூக்கி கதிரையை நோட்டம் விட்டான். சதிகாரர்கள் குழப்பமடைந்தவர்களாக பீதியுற்றனர். மன்னனோ தாம் பார்த்தவற்றை பொருட்படுத்தாதவனாக அரச ஊழியர்களை அழைத்து இரும்புக் கம்பிகளை அகற்றி விட்டு குழியை மூடிவிடுமாறு உத்தரவு பிறப்பித்து விட்டு கதிரையில் அமர்ந்து கொண்டான். எவ்வித மாற்றத்தையும் மன்னன் முகம் பிரதிபலிக்கவில்லை. அரண்மனை நோக்கி விரைந்தான் அரசன்.

மேற்கண்ட சதித்திட்டம் பற்றிய விசாரணைகள் முடுக்கி விடப்பட்டு அரசவையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி நான்கு சதிகாரர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டனர். சமன் கொடி திசாவை மொலண்டே ரால கடுவெலரால மதினாபொல திசாவ ஆகியோரே இவ்வாறு சிரச்சேதத்திற்குள்ளானவர்களாகும்.

வெலிவிட்ட சரணங்கரதேரோவும் திப்பட்டுவாவே தேரோவும் குற்றவாளிகளாக காணப்பட்டாலும் அவர்களுக்கு மரண தண்டனை வழங்க மன்னன் அச்சம் கொண்டான். அதன் காரணமாக அவ்விரு பிக்குமார்களையும் பிந்தென்னையில் சிறையிலடைந்தான். எனினும் குறுகிய காலத்தில் அவ்விரு பிக்குமார்களையும் பிந்தென்னையில் சிறையிலடைந்தான். எனினும் குறுகிய காலத்தில் அவ்விரு பிக்குமார்களையும் விடுதலை செய்து மல்வத்தை பீடாதிபதியாகவும் தலைமை குருவாகவும் பதவிகள் வழங்கப்பட்டன.

தீபெத் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த பிக்குமார்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவித்து குறிப்பிட்ட மத வைபவத்தை இனிதே நிறைவேற்றிதோடு புதிய விகாரைகளைக் கட்டியெழுப்பியும் பண்டைய விகாரைகளை புனர் நிர்மாணம் செய்தும் இலங்கை வரலாற்றில் முக்கிய இடத்தை ஈட்டிக்கொண்டான்.

பல்வேறு விகாரைகளில் சுவரோவியங்களில் மன்னன் உருவம் தீட்டப்பட்டன. கறுத்த நிறமும் முகம் முழுவதும் அடர்ந்த தாடி மீசையுடன் இராஜசிங்க மன்னன் காணப்பட்டான். இலங்கையின் பௌத்த சமய வளர்ச்சி பற்றிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க அரசர்களின் வரிசையில் நாயக்கர் வம்சத்தவனாகிய கீர்த்தி ஸ்ரீஇராஜசிங்கனும் போற்றப்படுகின்றான்.

இலங்கையின் இனப்பிரச்சினையானது மேலோட்டமாகச் சிங்கள தமிழ் இனப்பிரச்சினையாகவே அடையாளப்படுத்தப்படுகிறது. ஆனால் இது முற்றுமுழுதாக ஏற்புடைய அடையாளப்படுத்தல் என்று கூறுவது கடினம். இலங்கையில் பெரும்பான்மை அடையாளமானது "சிங்களம்" என்ற இன அடையாளம் என்று சொல்வதை விட "சிங்கள – பௌத்தம்" என்ற இனம், மதக்கலப்பு அடையாளம் என்று குறிப்பிடுவது தான் சாலப் பொருத்தமானது.

ஏனெனில் இலங்கையின் பெரும்பான்மை இன அடையாளமாக, "சிங்கள பௌத்த" அடையாளமே கட்டமைக்கப்பட்டிருக்கிறது. இதைப் புரிந்து கொள்ள, சிங்கள இனம், சிங்களமொழி, பௌத்தம் என்பவற்றை, இலங்கையின் வரலாறு என்று பொதுவாகக் கருதப்படுவதற்கு இங்கு அவசியமாகிறது. "சிங்களம்" என்பது "சிங்கத்தின் வழிவந்தவர்கள்" என்று பொருள் தருவதாகவே பொதுவாக நம்பப்படுகின்றது. இலங்கையின் வரலாறு கூறும், பிரதான நூல் என்று கருதப்படும் "மஹாவம்சம்" பிரதானமாக சிங்களவர்களின் வரலாற்றை எடுத்தியம்பும் நூலாக அமைகிறது.

மஹாவம்சமானது விஜயனின் வருகையோடு ஆரம்பிக்கின்றது. வங்காள இளவரசியான சுப்பாதேவி ஒரு சிங்கத்தினால் கைப்பற்றப்பட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கத்தின் குகையில் அடைத்து வைக்கப்படுகின்றாள். அந்தச் சிங்கத்துக்கும் சுப்பாதேவிக்கும் ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் பிறக்கின்றன. அந்த ஆண் குழந்தையின் பெயர் சிங்கபாகு பெண் குழந்தையின் பெயர் சிங்கசீவலி சிங்கத்தின் குகையானது ஒரு பெரும் கல்லால் மூடி வைக்கப்பட்டிருந்தது. சிங்கபாகு வளர்ந்தும் தன் தாயான இளவரசி சுப்பாதேவியுடன் சகோதரி சிங்கசீவலியுடன் அந்தக் குகையிலிருந்து தப்பித்து, ஒரு கிராமத்துக்குச் சென்று வசிக்கின்றான்.

அந்தச் சிங்கம் தனது மனைவியையும் பிள்ளைகளையும் தேடியலைந்து கொண்டிருந்தது. அதன் போது பல கிராமங்களுக்குள் புகந்து பெரும் அட்டாகாசம் செய்தது. சிங்கத்தின் அட்டகாசத்தால் மக்கள் துன்புறவே, அந்தச் சிங்கத்தைக் கொல்பவர்களுக்குப் பரிசு தருவதாக மன்னர் அறிவித்தார். பரிசைப் பெறத் திண்ணம் கொண்ட சிங்கபாகு, தனது தந்தையான சிங்கத்தைக் கொல்கின்றான். பின்னர், சிங்ஹபுர என்ற இராஜ்ஜியத்தை ஸ்தாபித்து ஆட்சி புரிந்த சிங்கபாகு, தனது சகோதரியான சிங்கசீவிலியை மணந்து கொள்கின்றான்.

அவனுக்கு 16 இரட்டைக் குழந்தைகள் கிடைக்கின்றன. அந்தப் 16 இரட்டையர்களில் மூத்த இரட்டையர்தான் விஜயனும் அவன் இரட்டைச் சகோதரன் சுமித்தாவும் ஆவார். முடிக்குரிய இளவரசனான விஜயன் மிகவும் குழப்பம் விளைவிக்கும் முரட்டு இளைஞனாக இருந்தான். அவனும் அவனது தோழர்களும் மக்களுக்கு பெரும் தொல்லைகளை விளைவித்தால், அவனைத் தண்டிக்க வேண்டும் என்று மக்கள், மன்னர் சிங்கபாகுவிடம் வேண்டினர்.

தனது நாட்டில் குழப்பத்தை தவிர்க்க விரும்பிய சிங்கபாகு, விஜயனையும் அவனது தோழர்களையும் ஒரு கப்பலில் ஏற்றி வைத்தார். அந்தக் கடல் பயணத்தின் இறுதியில் இலங்கைத்தீவின் 'தம்பன்னியை'தாமிரம் (செப்பு) நிறமுடைய மணல் பூமி என்பதனால் தம்பன்னி என்றழைத்தனர் என்பார் சிலர் வந்தடைந்ததும், விஜயன் இயக்கர் குல குலவரிசியான குவெனியைக் காண்கிறான். குவேனியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணக்கும் விஜயன் குவெனியின் உதவியுடன் இயக்கர்களின் நகரமான சிறிசவத்துவை அழிப்பதோடு, தம்பன்னியில் தனது நகரை அமைத்து அங்கு குவெனியுடன் வாழ்கின்றான். அவர்களுக்கு இரண்டு குழந்தைகளும் பிறக்கின்றன. விஜயனின் தோழர்கள் அநுராதகம், உஜ்ஜியஜன், உபதிஸ்ஸகம, உருவெல மற்றும் விஜிதபுர ஆகிய நகரங்களை அமைத்து அங்கு வாழ்கிறார்கள்.

இவற்றை இணைத்து, ஓர் அரசாக்க விரும்பியர்கள் அதன் அரசனாக விஜயனை வேண்டுகிறார்கள். விஜயன் அரசனாக வேண்டுமென்றால் அரச வம்சத்தில் வந்த பெண்ணை அவன் மணக்க வேண்டும். அதற்காகக் குவெனியை அவன் விரட்டுகின்றான். குவேனி தனது பிள்ளைகளோடு விஜயனைப் பிரிந்து, இயக்கர்களின் மற்றொரு நகரான லங்காபுரவுக்குச் செல்கிறாள். விஜயனை மணக்க பாண்டிய வம்சத்திலிருந்து ஓர் இளவரசி வரவழைக்கப்படுகிறாள் அத்தோடு விஜயனின் தோழர்களும் மணப்பதற்காக பாண்டிய நாட்டிலிருந்து பெண்கள் அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

சிங்கபாகுவின் வழி வந்தவர்கள் ஆதலால் அவர்கள் தம்மைச் "சிங்களவர்கள்" என்று அடையாளப்படுத்திக்கொள்கின்றார்கள். இதிலிருந்து தான் சிங்களம் இனம் தோன்றியது என்கிறது மஹாவம்சம். இன்னொரு நூலான தீபவம்சமும் இதே கதையைச் சொன்னாலும் அதில் "குவேனி" என்ற பாத்திரம் கிடையாது. விஜயனஜன் வருகையானது கி.மு 543 இல் இடம்பெற்றதாகத் தமது ஆய்வுக்கட்டுரையொன்றில் யக்கடுவே சுகணசீல தேரரும் நிவந்தம தம்மிஸ்ஸார தேரரும் குறிப்பிடுகின்றனர்.

ஆகவே, சிங்கள இனானது கி.மு. 543 இற்குப் பின்னரே உருவாகிறது எனலாம். 38 ஆண்டுகள் ஆண்ட விஜயன் வாரிசின்றி இறந்துபோக, அவனுக்கடுத்ததாக ஆள்வதற்காக இந்தியாவில் அமைந்திருந்த விஜயனின் சொந்த நாடான சிங்ஹபுரவை, அப்போது ஆண்டு கொண்டிருந்த விஜயனின் இரட்டைச் சகோதரனான சுமித்தாவின் இளையமகன் பண்டுவாசுதேவன் இலங்கை வருகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டுவாசுதேவனோடு 32 மந்திரி புதல்வர்களும் வருகிறார்கள் பண்டுவாசுதேவனிலிருந்து சிங்கள வரலாறு தொடர்கிறது. மஹாவம்சம் கூறும் இதைக் கதையாகப் பார்த்தாலும் கவுதம் குமார் மைத்ரியா தனது ஆராய்ச்சியில் சிங்களவர்களின் மரபணுவில் 25.41 சத்வீதம் வங்காள மரபணுவின் பங்குண்டு என்கிறார். சரப்ஜித் மஸ்தானா தனது மரபணு ஆய்வில் சிங்களவர்களின் மரபணுவில் 57.49 சதவீதம் வங்காள மரபணுவின் பங்கிருப்பதாகவும் 42.51 சதவீதம் தமிழ் மரபணுவின் பங்கிருப்பதாகவும் குறிப்பிடுகின்றார். இவை எதுவும் முடிந்த முடிபுகள் அல்ல எனினும் மஹாவம்சம் கூறும் கதைக்கு வலுச்சேர்ப்பதாக உள்ளன.

## சிங்களமொழி

சிங்கள மொழியானது, இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின், இந்தோ-ஆரியமொழிப்பிரிவைச் சார்ந்தமொழியாக இன்று வகைப்படுத்தப்பட்டுள்ள மொழியாகும் சிங்களமொழியைப் பொறுத்தவரை, இதன் பிராகிருத எழுத்துக்கள் கி.மு இரண்டாம் நூற்றாண்டு அளவுக்குப் பழைமையானது என்று சொல்லப்பட்டாலும், அதற்கான வலுவான ஆய்வுச் சான்றுகளைக் காணமுடியாதுள்ளது.

சிங்களமொழியில் கிடைக்கப் பெற்றுள்ள மிகப் பழைமையான இலக்கியமானது ஒன்பதாம் நூற்றாண்டுக்குரியது என்று நம்பப்படுகிறது. ஆகவே, சிங்கள இனத்தின் தோற்றத்துக்கும் மொழியின் தோற்றத்துக்கும் இடையில் பாரிய இடைவேளிகளுண்டுமெலும், மஹாவம்சம் உள்ளிட்ட நூல்கள் பாளிமொழியில் எழுதப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் பௌத்தம்

இலங்கையில் பௌத்தமதம், மௌரியசாம்ராட்சியத்தின் சக்கரவர்த்தியாக இருந்த அசோகனின் மகனான மஹிந்ததேரரினால் கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாகச் சொல்கிறது வரலாறு. அன்று, அநுராதபுரத்தின் ஆட்சிபீடத்தில் இருந்தவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவநம்பியதீசன். இவன் ஒரு குறித்த இனத்தார் 'தூய இன' வாதத்தையும் தாம் ஒரு தனித்த கலப்பற்ற தூய இனமென்றும் தாம் மட்டுமே மண்ணின் மைந்தர்களென்றும் மற்றையோர் 'வந்தேறு குடிகளென்றும்' வாதாடும் போது, வரலாறும் அடையாளங்கள் பற்றி வாதப்பிரதிவாதமும் முக்கியம் பெறுகின்றன.

பண்டுவாசுதேவனின் மகனான அபயவின் தங்கை மகனான பண்டு காபயனின் மகனான மூத்தசிவனின் இரண்டாவது மகன். விஜயனின் வருகையிலிருந்து ஏறத்தாழ 240 வருடங்களின் பின்பு அரசனாகின்றான் தேவ நம்பியதீசன்.ஏறத்தாழ இந்த 240 வருடங்களிலும் பௌத்தம் இலங்கையில் இல்லை. சிங்கள இனம் என்று மகாவம்சம் அடையாளப்படுத்திய விஜயன் அவனது தோழர்கள் மற்றும் மதுரையிலிருந்து வந்த பாண்டிய இளவரசி மற்றும் அவர்களுடன் வந்த மதுரைப் பெண்களிலிருந்து தோன்றிய இனம் உண்டு.

சிங்கள மொழி இருந்ததற்கான உறுதியான சான்றுகள் இல்லை இந்த ஏறத்தாழ 240 ஆண்டு காலப்பகுதியில் ஒரு தனிமதத்தின் ஆதிக்கமல்லாது, பல்வேறு மதங்களும் நம்பிக்கைகளும் இருந்ததாகவும், அதிலும் குறிப்பாக தேவநம்பியதீசன் ஏறத்தாழ 40 ஆண்டுகள் ஆண்டான் என்கிறது வரலாறு. அவனுக்குப் பிறகு அவனது சகோதரன் உத்தியன் அரசனாகிறான். இவனது காலத்திலேயே மஹிந்த தேரலும் சங்கமித்தை இயற்கை எய்துகின்றனர். உத்தியன் காலத்தின் பின்னர்தான் தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்து வந்த சேனன்- குத்திகன் என்ற இரு தமிழர்கள் 22 ஆண்டுகள் ஆண்டதாகவும் பின்னர் எல்லாளன் 46 ஆண்டுகள் இலங்கையை ஆண்டதாகவும் வரலாறு கூறுகிறது.

## வரலாற்றுச் சிக்கல்

மஹாவம்சம் கூறும் சிங்கள இனம், பௌத்த மதம் ஆகிய இரண்டும் வேறுபட்ட காலங்களில் தோன்றியவை. சிங்கள மொழி அதிலும் பிற்பட்டது. அப்படியானால் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மை அடையாளமான 'சிங்கள பௌத்தம்' என்ற இன மத கலப்பு அடையாளம் எப்போது உருவாகிறது. என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

இதைவிடவும் விஜயனும் அவனது தோழர்களும் கிழக்கிந்தியாவிலிருந்து தோன்றிய வங்காளிகள் (சிங்கத்தை தவிர்த்து விடுவோம்). அவர்கள் மணந்து கொண்ட பெண்கள் மதுரையிலிருந்து வந்த பாண்டியர்கள். அதாவது தமிழர்கள் ஆகவே. சிங்கள இனத்தின் தோற்றுவாய் என்பது வங்காள இனமும் தமிழ் இனமும் தமிழ் இனமா என்ற கேள்வியும் இயல்பாகவே எழுகிறது.

இந்தக் கேள்விக்கான விடை இன்றைய இனங்களானவை காலவோட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், கூர்ப்புக்களின் விளைவாகத் தோன்றியவை என்ற நிலைப்பாடு மேம்பட்டிருக்குமானால் இந்த வரலாறு மற்றும் அடையாளங்கள் பற்றிய தேடலும் வாதப்பிரதி வாதங்களும் அத்தியாவசியம் அற்றதாகிறது. உதாரணத்துக்கு கனடா, அமெரிக்கா என்பவை, குடியேற்றங்களின் நாடு என்று தம்மை வெளிப்படையாகவே ஏற்றுக்கொள்கிறது அங்கு பூர்வீகக் குடிகளாக இருந்தது. இன்று சிறுபான்மையினராகவே உள்ள பூர்வீக குடிகளையே அந்நாட்டின் மண்ணின் மைந்தர்களாக 'முதல் தேசம்' (கனடா) என்றும் 'பூர்வீக அமெரிக்கர்கள்' (அமெரிக்கா) என்றும் அங்கீரிக்கிறார்கள்.

விஜயன் என்பவனின் வருகையோடு இலங்கையின் வரலாறு தொடங்குவதால் இது குடியேற்றங்களின் நாடு என்ற கருத்துரவாக்கம் முன்னிலை பெறுமானால், இந்த வாதப்பிரதிவாதங்கள் அவசியமற்றதாகிறது. ஆனால், ஒரு குறித்த இனத்தவார் தூய இன வாதத்தையும் 'பூமி புத்திர' வாதத்தையும் அதாவது தாம் ஒரு தனித்த கலப்பற்றதூயஇனமென்றும்தாம்மட்டுமேமண்ணின் மைந்தர்களென்றும் மற்றையோர் 'வந்தேறுகுடிகளென்றும் வாதங்களை முன்வைக்கும் போது வரலாறும் அடையாளங்கள் பற்றிய வாதப்பிரதிவாதமும் முக்கியம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாகச் சிறுபான்மை இனங்களாக அவர்கள் கருதும் இனங்களின் வரலாறு பற்றியும் பூர்வீகம் பற்றியுமான தேடல்களும் கருத்துக்களும் அவசியமானகின்றன. இந்த இடத்தில் இலங்கையின் வரலாறு பற்றிய மிகமுக்கிய ஆய்வாளர்களுள் ஒருவரான செனரத் பரணவிதான சொன்ன ஒரு விடயம் குறிப்பிடத்தக்கது. "இன்று சிங்களம் அல்லது தமிழ் பேசும் பெரும்பான்மையானவர்கள் நிச்சயமாக இந்நாட்டின் பூர்வீகக் குடிகளின் வழிவந்தவர்களாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால் அவர்களைப் பற்றி எமக்கு ஒன்றும் தெரியாது". இலங்கை வரலாற்றை ஆராய்வது என்பது இந்தத் தொடரின் நோக்கமல்ல.

ஆனால் 'சிங்கள– பௌத்தம் எதிர் தமிழ்' என்று உருப்பெற்றிருந்த இலங்கையின் இனப்பிரச்சனையைப் புரிந்துகொள்ள. இலங்கை வரலாற்றைப் பற்றிய குறைந்தபட்ச பரிச்சியமேனும் அவசியமாகிறது. சிங்கள – பௌத்தம் என்ற அடையாளப்படுத்தல்களுக்குள் தொலைந்து போன ஓர் அடையாளத்தை மறந்துபோன ஓர் அடையாளத்தைப் பற்றித் தனது சர்வகட்சி மாநாட்டு உரையில் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் கோடிட்டுக்காட்டியிருந்தார் அந்த அடையாளம் தமிழ் பௌத்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. இலங்கையின் கடைசித் தமிழ் மன்னன்

## மதுரையில் பிறந்து இலங்கையை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன்

உலகப் புகழ் பெற்ற மதுரை உமாநகரை ஆண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க வீரம் பொருந்திய மன்னர்கள் ஏராளமானோர் உள்ளனர். மதுரையில் பிறந்து இலங்கையை ஆண்ட கடைசி தமிழ் மன்னன் ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன். ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் வழிதோன்றலில் மதுரையை சேர்ந்த அசோக் ராஜா வீரசேகரிக்கு தம் அரச பரம்பரையைப் பற்றி பேட்டி அளித்தார்.

தமிழகத்தின் அரசியல், பொருளாதார, கலை இலக்கியம், கலாசாரத் துறைகள் 2500 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது. அவை சங்ககாலம், சங்க மருவிய காலம், சோழர் காலம், பல்லவர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம் மற்றும் தற்காலம் என வரலாற்று ஆய்வாளர்கள் வகுத்துள்ளனர். இவற்றில் நாயக்கர் காலம், பக்தி இலக்கிய காலமாகக் கருதப்படுகிறது. விஜயநகரப் பேரரசு ஆந்திராவில் 1365க்குள் தன் வசப்படுத்தியது.

இப்பேரரசின் மாமன்னர் கிருஷ்ண தேவராயர் ஆட்சி காலத்தில் மதுரை, தஞ்சாவூர் முதலான பகுதிகளை இப் பேரரசின் பிரதிநிதிகளாக வடுகர்கள் நியமிக்கப்பட்டனர் திருப்பதிக்கு வடக்கே இருந்து வந்ததால் இவர்கள் வடுகர், வடக்கர் என பல்வேறு பெயர்களில் அழைக்கபபட்டனர்.

சேர, சோழப் பாண்டிய மன்னர்கள் கொடி கட்டி ஆண்ட தமிழ்நாட்டில், இந்த வடுகர்கள் மூலம் நாயக்கர் ஆட்சி நிலை கொண்டதும் ஆந்திரம், கர்நாடகத்தில் இருந்து ஆயிரக்கணக்கில் வந்து தமிழகத்தில் குடியேறிய வடுகர் மத்தியில் இருந்து 214க்கு மேற்பட்ட சாதிப்பிரிவுகளில் 28 பிரிவினர் நாயக்கர், நாயுடு, தொட்டியக்காரர்கள்என அழைக்கப்பட்டனர். இவர்களில் பலர் பல ஊர்களில் பாளையக்காரர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிக்கப்பட்டனர். 21 ஆண்டுகள் பதவியிருந்த கிருஷ்ண தேவராயரிடம் களஞ்சிய பாதுகாவலராக இருந்த நாகம நாயக்கரும் பின் அவர் மகன் விஸ்வநாதருமே மதுரையில் நாயக்கர் ஆட்சிக்கு வித்திட்டவர்கள்.

முன்பு கண்டியை ஆட்சி செய்த சிங்கள மன்னர்கள் எப்போதுமே மதுரை நாயக்கர் அல்லது தஞ்சை நாயக்கர் மரபிலிருந்தே பெண் கொண்டனர். மணத்தொடர்பின் வழியாகவே இவர்களுக்கு கண்டியின் அரசுரிமை கிடைத்தது. கண்டியை ஆண்ட முதல் தமிழ் மன்னன் ஸ்ரீ விஜய ராஜசிங்கன் ஆவார். 8 ஆண்டுகள் மட்டுமே ஆட்சி புரிந்த இவர் 1747இல் இறந்தார். இவருக்கு பின் அவர் மைத்துனனும் பட்டத்து ராணியின் தம்பியுமான நாயக்கர், கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் என்னும் பெயரில் 16ஆம் வயதில் அரசுரிமை பெற்றார்.

எனினும் 18 வயது வரை காத்திருந்து 1750இல் மன்னர் ஆனார். நாயக்க மன்னர்களில் நீண்ட காலம் ஆட்சி புரிந்த மன்னர் இவர் தான் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்குப் பின் இவரது சகோதரர் ராஜாதி ராஜ சிங்கனுக்கு நான்கு மனைவிகள் இருந்தனர். எவருக்குமே புத்திர பாக்கியமில்லை. இனி அதற்கான வாய்ப்புமில்லை என்ற நிலையில் பெரிதும் குழப்பம் ஏற்பட்டது ராணிக்கு தம்பியிருந்தும் அவனை அரியணையில் ஏற்ற அவளுக்கு மனதில்லை எனவே பல நாள் சிந்தனைக்குப் பின் தனது தங்கை சுப்பம்மாளுக்கு கண்ணுசாமி என்னும் மகன் இருப்பது நினைவுக்கு வந்தது பின் இச்சிந்தனையை மன்னர் ராஜாதியிடம் கூற அவர் ஒப்புதல் அளித்தார். கண்ணுசாமியின் தந்தை ஸ்ரீ வெங்கட் பெருமாள் அரசபரம்பரை புதுக்கோட்டைப் பகுதியில் சிலகாலம் வசித்து பின் இராமேஸ்வரம் வந்து பெரிய கோவிலில் ஆன்மீக பணியில் ஈடுபட்டிருந்தார்.

1785இல் அவர் காலமான பின்னர் கண்ணுசாமியும் அவருடைய தயார் சுப்பம்மாளும் சில காலம் இராமேஸ்வரத்திலேயே வசித்தனர். கண்ணுசாமியை மன்னர் ஆக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பட்டத்துராணி 1787இல் தன் நம்பிக்கைக்குரிய சேனப்ப நாயக்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையில் சிலரை டச்சுக்காரர்கள் கொடுத்துதவிய படகில் அனுப்பி வைத்து கண்ணுசாமி மற்றும் அவருடைய தயாரையும் கண்டிக்கு அழைத்து வந்தனர்.

சிறுவன் கண்ணுசாமி வீரமிக்கவனாக இருப்பதை கண்ட ராஜாதிக்கும்,ராஜாதியின் ஆட்சிக் காலத்தில் முதல் மந்திரியாக இருந்த பிலிமத்தலாவவுக்கும் அவரைப் பிடித்திருந்தது. கண்ணுசாமியைத் தலையாட்டி பொம்மையாக்கினால் அவரை தீர்த்துக்கட்டிவிட்டுத் தானே மன்னர் ஆகலாம் என்னும் எண்ணம் பிலிமத்தலாவவுக்கு இருந்தது.

எனவே பல இடையூறுகளுக்கு மத்தியில் 1798ஆம் ஆண்டு கண்ணுசாமியை மன்னர் ஆக்கி ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கன் என பெயர் சூட்டினர். இவரது காலத்தில் இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றிய பிரித்தானியர், கண்டி அரசில் தலையிடவில்லை. ஆனால், பிலிமத்தலாவவோ பிரித்தானியருடன் மறைமுகத் தொடர்புகளை வைத்துக் கொண்டு கண்டியரசனைப் பிரித்தானியருக்கு எதிராகத் தூண்டிவிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டான். இதனால் பிரித்தானியர் கண்டியரசரைக் கைப்பற்றுவதற்கான காரணம் கிடைக்கும் என அவன் கருதினான்.

கரையோர மாகாணங்க்ளில் உறுதியான நிலையில் இருந்த பிரித்தானியருடன் போரில் ஈடுபடும்படி பிலிமத்தலாவ ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனைத் தூண்டி விட்டான். 1803 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி போர் அறிவிக்கப்பட்டது. பிரித்தானியர் எதிர்ப்புக்கள் இன்றிக் கண்டிக்குள் நுழைந்தனர். கண்டி அரசர் தப்பியோடினார். எனினும், அதில் பிரித்தானியப்படைகளைத் தோற்கடித்துக் கண்டியரசனை மீண்டும் பதவியில் அமர்த்தினான். பிலிமத்தலாவ இரண்டு முறை அரசனுக்கு எதிராகச் சதிசெய்து நாட்டைக் கவர முயன்றது கண்டுபிடிக்கப்பட்டாலும் அவன் மன்னிக்கப்பட்டான் மூன்றாவது தடவையும் அவன் மன்னிக்கப்பட்டான். மூன்றாவது தடவையும் அவன் பிடிபட்டபோது அவனை கண்டி நீதிமன்றத்தின் முன் நிறுத்தி தண்டனைக்குரியவன் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்பளிக்கப்பட்டு. கொல்லப்பட்டான். பிலிமத்தலாவவுக்குப் பதிலாக அவனது மருமகனான எகலப் பொலை அதிகாரியாக நியமித்தனர். அவனும் தனது மாமனைப் போலவே அரசனுக்கு எதிராகச் செயற்பட்டுக் குழப்பங்களைத் தூண்டி விட்டான். இக்குழப்பங்கள் அடக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து எகலப்பொலை தப்பிக் கொழும்புக்கு ஓடிப் பிரித்தானியருடன் சேர்ந்து கொண்டான்.

இவனது தூண்டுதலின் பேரில் பிரித்தானியர் மீண்டும் போர் செய்து 1815 பெப்ரவரி 10 ஆம் திகதி கண்டியை கைப்பற்றினர். மார்ச் 2 ஆம் திகதி கண்டி ஒப்பந்தத்தின் மூலம் கண்டி அரசு பிரித்தானியருக்கு கொடுக்கப்பட்டது. பிடிபட்ட ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் தென்னிந்தியாவில் உள்ள வேலூர்க் கோட்டைக்கு அனுப்பப்பட்டார். அங்கே பிரித்தானியரால் வேலூர் கோட்டையில் ஆயுள் முடியும் வரை ஒரு மன்னருக்குரிய அனைத்து வசதிகளுடன் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

1832 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாள் தனது 52 ஆவது வயதில் அவர் காலமானார். மன்னர் இறந்த பின்னும் பிரித்தாயர்கள் முதல் இலங்கை அரசு வரை மன்னருடைய வாரிசுகளுக்கு அரசு ஓய்வூதியம் வழங்கியது.

ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கன், அவர் மனைவிகள், மகன் ரங்க ராஜன் ஆகியோரின் கல்லறையும் இங்கு உண்டு. இந்த கல்லறைகள் கவனிப்பாரற்ற நிலையில் விடப்பட்டதால் நாளடைவில் கல்லறைகளைச் சுற்றிக் காடு மண்டிப் போனது அத்துடன் பல குடிசைகளும் முளைத்தன. விக்கிரமனின் கல்லறையை கலைஞர் கருணாநிதி. 1990இல் முதலமைச்சராக இருந்த போது இலங்கையை ஆண்ட கடைசி தமிழ் மன்னனுக்கு கவின்மிகு முத்து மண்டபம் கட்டி அழகுப்படுத்தினார். தற்பொழுது ஒவ்வொரு ஆண்டும் அவருடைய நினைவு நாளான ஜனவரி மாதம் 30ஆம் திகதி அவருடைய வாரிசு தாரர்களான நாங்கள் குரு பூஜை நடத்துகிறோம் என பெருமிதத்துடன் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08. பொலன்னறுவைத் தமிழ் வரலாறு

**இந்துமத வரலாற்றில் உன்னதமான பொலன்னறுவை ஆட்சிக்காலம்**

இலங்கை வரலாற்றில் பொலன்னறுவை ஆட்சிக் காலகட்டமானது, இலங்கை சமூக, சமய, கலை, கலாசார பொருளாதார ரீதியில் பரஸ்பர புரிந்துணர்வுக்கு வித்திட்ட வழிவகுத்த காலப்பகுதியாகும். இலங்கை வரலாற்றில் அநுராதபுர ஆட்சிக் காலத்தின் பிற்பகுதி இலங்கையில் சோழ சாம்ராஜ்யம் காலடியெடுத்து ஆதிக்கம் செய்ய வழிவகுத்த காலப்பகுதியாகும். கி.பி. 993 ஆம் ஆண்டு சோழ ஆட்சி இலங்கையில் ஸ்திரப்படுத்தி ஆட்சி அமைத்த காலப்பகுதியாகும். சோழர் ஆட்சியை இலங்கையில் ஸ்திரப்படுத்திய சோழர் காலக்கிரமத்தில் பொலன்னறுவையை நமது நிர்வாகத் தலைநகரமாக்கி இலங்கையின் பெரும்பாலான பகுதியினை அடிபணிய வைத்தனர்.

சோழர் பொலன்னறுவையை தம் ஆட்சிப்பிடியில் வைத்திருந்த காலகட்டத்தில் திராவிட மன்னர்களான சோழர், பொலன்னறுவையை ஜெனந்தமங்களம் எனச்சிறப்புப் பெயரிட்டு ஆட்சி செலுத்தினர். சோழர் இலங்கையில் தம் ஆதிக்கத்தை அரசியல் ஆட்சியினை ஏற்படுத்திய காலகட்டத்தில் தென் இந்தியாவில் தஞ்சாவூரில் உயரிய சீரிய வகையில் தம் ஆட்சியினை பலப்படுத்தி அரசாண்டனர். பொலன்னறுவையை ஜெனந்த மங்களம் என்றும் தஞ்சையை சோழ மண்டலம் என்றும் சிறப்புப் பெயரிட்டு அழைத்து ஆண்டனர்.தென் இந்தியாவில் சோழர் ஆட்சியானது சோழர் சக்கரவர்த்திகளின் பொற்காலம் எனப் போற்றப்பட்ட காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் தான் தஞ்சையில் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் கட்டப்பட்டது. இந்து மத ஆதிக்கம், திராவிடக் கலை, கலாசாரம் வலுப்பெற்று இருந்த காலகட்டமும் இச்சோழர் ஆட்சிக்காலமே ஆகும்.

தென்னிலங்கையில் சோழர் ஆட்சி உன்னத நிலைபெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலகட்டத்தில் இலங்கையின் வட மேற்பகுதியிலும் பல அரிய இந்து ஆலயங்கள் அமைக்கப்பெற்று இருந்தன. பொதுப்படையில் இலங்கை வரலாற்றில் பொலன்னறுவை ஆட்சிக் காலமானது கி.பி. 1017 தொடக்கம் கி.பி. 1215 ஆம் ஆண்டுவரை நீடித்த காலகட்டமாகும். அதிலும் சோழர் ஆட்சிக்காலமானது கி.பி. 1017 தொடக்கம் கி.பி. 1055 காலப்பகுதியாகும்.

சோழர் சாம்ராஜ்ஜயமானது. இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே காலகட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய காலப்பகுதியாகும் இந்த வகையில் இரு நாடுகளிலும் ஒரே காலப்பகுதியில் அவற்றின் கட்டடக்கலை வடிவமைப்பு, சமய சம்பிரதாய, கலை, கலாசார அம்சங்கள் என்பன ஏறத்தாள ஒன்றாகவே காணப்பட்டன.

பொலன்னறுவையில் ஏராளமான இந்து ஆலயங்கள் அமைக்கப் பெற்று சைவ ஆகம சாஸ்திர அடிப்படையில் உன்னத வெண்கல மற்றும் கற்வழிபாட்டுச் சிற்பங்கள் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டு வழிபடப்பட்டன. வழிபாட்டுக் கற்சிற்பங்களாவன அடிப்படையில் பல பாகுபாட்டிற்கு உட்பட்டன. அவையாவன சொந்த மண்ணுக்கே உரித்தான கருங்கற்சிற்பங்கள், சலைவக் கற்சிற்பங்கள், உலர் மண்சிற்பங்கள், சுண்ணாம்புக் கற்சிற்பங்களாகும். பொலன்னறுவையில் காணப்பட்ட வெண்கலச் சிற்பங்களாவன உலகில் காணப்பட்ட உன்னத கலைப் பொக்கிஷ வடிவங்களாக சர்வதேச நிறுவனங்களால் கருதப்படுகின்றன.

பொலன்னறுவையை அண்டிய பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்ட இந்து மத சிற்பங்கள் பொதுப்படையில் "பஞ்சதேவசபை" என்ற பாகுபாட்டிற்குள் அடக்கி ஆராயப்படுகின்றன. எது எவ்வாறாயினும் சிங்கள பிரதேசமான பொலன்னறுவையிலும், சோழர் ஆட்சியில் இந்து மதம் உயர் ஆதிக்கம் பெற்ற கேந்திரஸ்தானமாக விளங்கியது. அவற்றின் வரலாற்றுச்சுவடுகளை இன்றும் காணமுடிகின்றது. பொலன்னறுவையில் கிடைக்கப்பெற்ற வெண்கல வழிபாட்டு சிற்பங்களை தவிர இந்துமதத்தவர் சிற்பங்களும், இன்று எமக்குக் கிடைக்கப் பெற்ற உயர்கலைப் படைப்புக்களாகும். இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில், பெரிதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலன்னறுவையையும் பொலன்னறுவையை அண்டிய பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டவை ஏராளம் இந்துமத சிற்பங்கள், சின்னங்கள் இன்று நாடெங்கிலும் உள்ள பல தேசிய அரும்பொருட்காட்சியகங்களிலும், தொல்பொருள் ஆய்வு மையங்களிலும், கலாசார நூதனசாலைகளிலும் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

பொலன்னறுவையில் கண்டெடுக்கப்பட்ட இந்து மத வழிபாட்டுச் சிற்பங்கள் சிலவற்றில் ஆங்காங்கே சிங்கள பௌத்த ஆதிக்கத்தை காணமுடிகின்றது. தென் இந்தியாவின் சோழர் கால சிற்பங்களை ஒப்பிட்டு எடுத்து நோக்கும் அழகுணர்ச்சியும் இலாவண்யமும் நிறைந்தவை எனலாம். சோழர் ஆட்சி இலங்கையில், மேலோங்கி காணப்பட்ட காலப்பகுதியில் மாதோட்டத்திலும் பல அரிய சிவன் மற்றும் உலக மாதாவாகிய பார்வதிக்கும் கோயில் அமைக்கப்பட்டிருந்தன.

பொலன்னறுவையில் அமைந்துள்ள இரண்டாவது சிவனாலயம் சோழ அரசி ஒருவரின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டதாக வரலாறு சாட்சியை மொழிகின்றது. இத்திருத்தலத்தின் மூலஸ்தான மூர்த்தி சிவலிங்கமாக அமைந்த போதிலும் இத்திருத்தலமானது சோழ அரசியான "வன்னவலம் மகாதேவி ஈஸ்வர உடையார்" என்பது பெயரால் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.பொலன்னறுவை ஆட்சிக் காலத்தில் சோழர் ஆட்சிக் காலமானது, ஏறத்தாள ஐந்து சகாப்தங்களாக நீடித்தது எனலாம். அதற்குப் பிற்பட்ட காலப்பகுதி சிங்கள பௌத்த மன்னர் ஆட்சிக் காலமாகும். இச்சிங்கள பௌத்த மன்னரில் பலர் தென் இந்திய அரச வம்சாவளியினருடன் திருமண பந்தத்தில் இணைந்திருந்தனர் என்பதற்கான ஆணித்தரமான சாட்சிய பகிர்வுகளை இன்றும் காணமுடிகின்றது.

சோழர் ஆட்சிக்குப் பின் பொலன்னறுவையை ஆண்ட முதலாம் விஜயபாகு மன்னன் (கி.பி. 1070 – கி.பி. 1110) காலகட்டமாகும். இவ்வரசன் கலிங்க இளவரசி ஒருத்தியை மணந்ததாகவும் தனது சகோதரியான மித்திராவை பாண்டிய இளவரசனுக்கு மணம் முடித்துக் கொடுத்ததாகவும் வரலாறு சான்று பகிர்கின்றது. கந்தளாயில் முதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயபாகு மன்னனால் சிவாலயம் ஒன்று அமைக்கப்பட்டதாகவும் அது உரிய முறையில் நிர்வகிக்கப்பட்டதாகவும் அறிகின்றோம். அவ்வாறே விஜயபாகு மன்னனின் மகன் விக்கிரமபாகு மன்னன் உயர்ந்த சிவ பக்தனாக விளங்கினான் என வரலாறு எடுத்தியம்புகின்றது. அவ்வாறே விஜயபாகு மன்னனின் எட்டாம் ஆண்டு ஆட்சி கல்வெட்டு ஒன்றின் பிரகாரம் கால ஆமக ஈஸ்வர ஆலயத்தில் நிரந்தரமாக விளக்கு வைக்க இளவரசி ஒருவரால் காணிக்கை வழங்கப்பட்டதாக அறிகின்றோம். அவ்வாறே. முதலாம் விக்கிரமபாகுவின் மகன் இரண்டாம் கஜபாகுவினால் பொலன்னறுவையில் முதலாம் சிவனாலயம் அமைக்கப்பட்டது.

இலங்கை வரலாற்றில் பொற்காலமாக விளங்கிய பராக்கிரமபாகு மன்னன் ஆட்சிக்காலத்தில் ஏறத்தாள பதின்மூன்று இந்துக் கோயில்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டதாக வரலாறு சாட்சி மொழிகின்றது. அவ்வாறே ஏறத்தாள எழுபத்து ஒன்பது இந்து ஆலயங்கள் மீள திருத்தி அமைக்கப் பெற்றதாக வரலாறு எடுத்தியம்புகின்றது.

மேலும் பராக்கிரமபாகு மன்னன் இந்து கோயில்களில் கிரமமாக பூஜைகள் நடத்தவும் கோமயாக பூஜை வழிபாடுகளிலும் பக்தி சிரத்தையுடன் ஈடுபட்டதாக அறிய முடிகின்றது. அவ்வாறே நிசங்கமால மன்னன் தன் ஆட்சிகாலத்தில் கி.பி. 1186 – 1197 வரையான காலகட்டத்தில் பார்வதி தானசாலை ஒன்றை கந்தளாயில் நிறுவி இந்து மதத்தை வளர்த்ததாகவும் இராமேஸ்வரத்தில் நிஸங்கேஸ்வரம் என்னும் கோயிலை நிர்வகித்து பொது மக்கள் வழிபாட்டிற்கு விட்டதாகவும் இராமேஸ்வரத் திருத்தலத்தை இவ்வரசன் புனர்நிர்மாணம் செய்ததாகவும் எடுத்தியம்புகின்றன.

பொலன்னறுவையில் கண்டெடுக்கப்பட்ட வைஷ்ணவ சிற்பங்களாவன தனித்துவம் வாய்ந்தவையாகும். அதாவது, அவை சமஸ்தானத்தில் நின்ற நிலையில் காணப்படுகின்றன. எனவே, இலங்கை இந்துமத வரலாற்றில் பொலநறுவை காலகட்டமானது, உன்னத வரலாற்றுப் பின்னணியினை கொண்ட ஒரு காலப்பகுதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09. அமரர் பண்டாரநாயக்கா

**அமரர் பண்டாரநாயக்காவின் பரம்பரை தமிழ்ப் பரம்பரையே**

சிங்கள மக்களின் வரலாறு தொடர்பாக பல கதைகள் காணப்பட்ட போதிலும் அவர்களின் வட இந்தியா, தாய் தென்னிந்தியா, தமிழர்களுக்கு "தமெட" என்றே பண்டைய கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.மு 3 ஆம் நூற்றாண்டில் பௌத்த துறவிகளுக்கு கற்குகைகளை அமைத்து தானம் வழங்கிய பெருமை தமிழர்களுக்கு உண்டு. இது அந்த கல்வெட்டுக்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எல்லாள மன்னன் ஒரு சத்திரியன்.

44 வருடங்கள் சீராக நாட்டை நிர்வகித்தவன். பௌத்தம் வளர பேருதவி புரிந்தான். அவனின் மந்திரிகள், சேனாதிபதிகள், சிங்களவர்கள் அதே போல் துட்டகைமுனுவிடமும் தமிழர்கள் இருந்துள்ளனர். அவனிடம் இருந்த பத்து பலசாலிகளில் வேலுசுமணன் என்பவனும் இருந்தான். எல்லாளன் - கைமுனு யுத்தம் இனவாத யுத்தமல்ல. கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் தமிழ்ப் புத்தகோஷர் பௌத்தத்திற்கு ஆற்றிய பணிகளை அளவிட முடியாது. கோட்டை இராச்சியத்தை உருவாக்கியவர் அழகக்கோனார். 6 ஆம் பராக்கிரமபாகுவின் மகள் மணம் முடித்தது ஒரு தமிழ் அரச குமாரனையே! அவர் பெயர் நன்னூற்துணையார். அவர் ஒரு சிங்களப் புலவர், முதல் அகராதியை எழுதியவர் மன்னனின் செயலர்.

மன்னன் தனக்கு ஆண்வாரிசு இல்லாத காரணத்தால் தமிழ்ப் பிள்ளையொன்றை தத்தெடுத்து வளர்த்தான். அவனே செண்பகப் பெருமாள். பின்னர் கோட்டை அரசனாக புவனேபாகு என்ற பெயரில் அரசனானான். கோட்டையின் வீதாகமபிக்கு யாழ்ப்பாணம் சென்று தமிழில் போதனை செய்துள்ளார். அக்கால கல்விச்சாலைகளில் தமிழ் முக்கிய இடம் பெற்றிருந்தது. தட்டகமுவே, இராகுல தேரர் ஒரு தமிழ்ப் பண்டிதராவார். தம்பதெனிய கால நூலான சிதத் சங்கராவ, வீர சோழியத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது. உயிரெழுத்துக்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய் எழுத்துக்களும் தமிழில் இருந்தே சிங்களத்திற்கு எடுக்கப்பட்டது. தமிழால் சிங்களம் சிறப்புப் பெற்றது.கண்டி யுகத்தில் சிங்களப் பிரதானிகள் தமிழ் குமாரர்களையே மன்னராக்கினார். அந்த மன்னர்கள் தங்கள் மதத்தை விட பௌத்த மதத்திற்கே பேருதவி புரிந்தனர். கண்டிய இறுதி மன்னனான ஸ்ரீவிக்கிரம இராசசிங்கன் பற்றிக் கூறுவதெல்லாம் பொய்.

அவன் நீதி தவறாக மன்னன். அவன் மக்கள் பக்கம் இருந்தமையால், சிங்களப் பிரதானிகள் அவனுக்கு எதிராகச் செயற்பட்டனர். எளிமையான வாழ்க்கை வாழ்ந்த மன்னன் அவன்.எஹலேபொல நிலைமேயின் குடும்பத்தவர்களுக்கு மன்னன் கொடூரமாகத் தண்டனை வழங்கினான் என்பது பொய். தேசத்துரொக குற்றம் புரிபவர்களுக்கு கண்டியச் சட்டத்தில் வழங்கப்பட்ட தண்டனையே அது. எஹலேபொல குடும்ப விசாரணை நடைபெற்ற வேளை தேசத் துரோகக் குற்றம் புரியும் நபரின் குடும்பத்தவர்களுக்கு என்ன தண்டனை என அரச சபையிலே வினவினான்.

அவ்வேளை தியவர்தன நிலமே இரு தண்டனைகள் உண்டெனக் கூறினான். ஒன்று நீரில் அமிழ்த்திக் கொல்வது. மற்றையது இழிகுலத்தவர்களுக்கு வழங்குவது. இழிகுலத்தவர்களுக்கு வழங்க மன்னன் மனம் இடம்கொடுக்கவில்லை. அதைவிட அவன் சாவது மேல் என நினைத்து மரண தண்டனை மேலானது எனத் தீர்மானித்தான்.

மன்னன் கொடுமைக்காரன் என கரையோரத்தை ஆட்சி செய்த ஆங்கிலேயரே பிரசாரம் செய்தனர். மன்னன் பிடிபட்டு கொண்டு செல்லப்படுகையில் டொயிலி இதுபற்றிக் கேட்டபோது, கண்டியச் சட்டத்தை நான் உருவாக்கவில்லை. அது பழமையானது. நான் சட்டத்தை மீறவில்லை. தேசத் துரொகிகளுக்கான தண்டனையே வழங்கப்பட்டது என தெளிவாகக் கூறினான்.

எமது பண்டைய வரலாற்றில் இல்லை. கலப்புத் திருமணங்கள் அதிகம் காணப்பட்டன. இது ஆங்கிலேயர் காலம் வரை இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தத்தின் பாதுகாவலர் என வர்ணிக்கப்படும் அநாகரீக தர்மபால வர்த்தக சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் தன் உரையின் ஒரு கட்டத்தில் தமிழர்களையும், முஸ்லிம்களையும் வெட்டிக் கடலில் எறிய வேண்டும் எனக் கூறியுள்ளார். புறக்கோட்டை வர்த்தகத்தை சிங்களவரின் கைகளுக்கு மாற்ற வேண்டும் என்பதே அவரின் முக்கிய எண்ணமாக இருந்தது.

பண்டாரநாயக்கவை எடுத்தால் அவரின் பரம்பரை தமிழ்ப்பரம்பரையே! கதிர்காமத்தில் பூசை செய்த பூசகரின் வழித்தோன்றலே அவர். 1956 இல் அவர் தமிழர்களின் மொழி உரிமையை பறித்தார். அவர் மனைவி தரப்படுத்தலைக் கொண்டு வந்து தமிழர்களின் கல்வி உரிமையை பறித்தார். 1956 இல் தமிழர்களுக்கு எதிரான வன்முறை ஆரம்பமாகி 1983 இல் உச்சநிலையை அடைந்தது. 1972 இல் யாப்பு மூலம் ஸ்ரீமா தமிழர்களின் பல உரிமைகளை இல்லாமல் செய்தார். 1964 இன் பின் சமசமாஜனக் கட்சி ஸ்ரீமாவின் பின் நின்றது. 1971 வரை ரோஹண விஜேவீராவும் இதையே பின்பற்றினார். சர்வகட்சிப் பிரதிநிதிகள் சமர்ப்பித்துள்ள யோசனைகள் நிச்சயம் ஏடுபடாது அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேசியே இறுதி முடிவுக்கு வரமுடியும் இதுவே யதார்த்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. புதிய பார்வையில் இலங்கை வரலாறு

ஈழத்தமிழர் எனும் இலங்கைத் தமிழும் உலக அளவில் நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, மலேசியா சிங்கப்பூர், யாங்கூம் என்கின்ற பர்மா, தாய்லாந்து, தொரிஷியஸ், தென்ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வசித்துவரும் தமிழர்களும் ஒன்றல்ல என்ற உண்மை கூட நம்மில் பலர் புரியாமல் விவாதம் செய்துவருகின்றனர். மேலும் குறிப்பிட்டவர்களைப் போலக் கடந்து இரண்டு நூற்றாண்டு காலத்தில் வேலைக்காகவும் வயிற்றுழைப்புக்காகவும் இலங்கைக்குப்போய் அங்கே குடியேறியவர்கள் அல்ல ஈழத்தழிழர்கள். ஆவர்கள் அந்த தீவின் பூர்வ குடியினர், மண்ணின் மைந்தர்கள் இந்நிலையில் இலங்கைத்தமிழர் என்பவர் அந்நாட்டையே பூர்வீகமாகக் கொண்டவர் என்ற உண்மையை எடுத்துரைக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது.

பிரபாகரன் உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என்ற விவாதம் நடந்துகொண்டிருக்கின்ற நிலையில் அவர் இல்லாத ஈழமக்களும் இனிபெறப்போவது என்ன என்பதைவிட அவர்கள் எதை எல்லாம் இலந்தார்கள் என்று அறிவது அவசியம் விடுதலைப் புலிகளாகட்டுமத் இன்னபிற அமைப்புகளாகட்டும் ஆயுதம் ஏந்த வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பது குறித்தும் அறியவேண்டியது அவசியம் ஆகின்றது. இதேபோன்று இந்தியாவின் பார்வை மற்றும் பங்களிப்புத் தமிழர் தலைவர்களின் பார்வை மற்றும் பங்களிப்பு உலக நாடுகளின் பார்வை மற்றும் அதன் பங்களிப்பு குறித்தும் இலங்கைக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் அளித்த உதவிகள் குறித்தும் அலச வேண்டியதும் அவசியமாகிறது.

இன்று இலங்கை வரலாற்று ஏடுகளை பிரட்டுபவர்கள் யாராக இருந்தாலும் உண்மைக்கு மிக நெருக்கமாக இருக்க வேண்டுமென்று அவர்கள் கருதுவார்களே ஆனால் அவர்கள் இது வரை சொல்லப்பட்டு இருக்கும் இலங்கை வரலாற்றை ஒதுக்கிவிட்டு புதிய உண்மைகளின் அடிப்படையில் புதிய பார்வையுடன் இலங்கை வரலாற்றை அணுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியது அவசியம் ஆகும்.

இதுவரை சொல்லப்பட்ட இலங்கைத்தீவின் வரலாற்றுக் கற்பனையின் அடித்தலம் மீது காட்டப்பட்ட இலக்கிய ஆதாரங்களை கொண்டு எழுதப்பட்ட மாய வரலாறு என்பதற்கான ஆதாரங்கள் நிறையவே கிடைத்துள்ளன.

இன்று பல ஆராச்சி ஆளர்களின் கடுமையான உழைப்பின் மூலம் உண்மைகள் வெளிவர தலைப்பட்டு இருக்கின்றன. ஏதிர்காலத்தில் இன்னும் அதிகமான புதிய உண்மைகள் கிடைக்கலாம். மகாபாரதத்தையும், ராமாயனத்தையும் மட்டுமே துணையாகக் கொண்டு இந்தியாவின் வரலாற்றை கூறுவதும் எப்படி உண்மைக்கு புறம்பாக இருக்குமொ அதுபோலதான் சிங்களவர்களின் இதிகாசமான மகாவம்சத்தை மட்டும் வைத்துக்கொண்டு இலங்கை வரலாற்றை எழுவதும் என்பது அப்படி என்றால் உண்மையான வரலாற்றை எந்த அடிப்படையில் எழுதுவதும் பார்ப்பதும் என்ற நியாயமான கேள்வி எழுகிறது. ஊண்மையான வரலாறு என்பதுர் ஆதாரபூர்வமான உண்மைகளையும் விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வுகளையும் கொண்டுமுடிக்க வேண்டிய ஒன்றாகும் இலங்கை இன்றிருக்கும் ரணகள சூழலில், இனவாதித்தாக்குதல்கள் அத்துமீறி நடக்கும் அந்த குட்டித் தீவின் வரலாற்றுப் பின்னனியை அறிவது, இலங்கைத் தமிழர்களுக்காக மட்டும் இன்றி ஒடுக்கப்பட்ட மக்கள் எங்கல்லாம் இருக்கின்றார்களோ அவர்களுக்காக கண்ணீர் சிந்தும் ஜனநாயக உனர்பு கொண்ட ஒவ்வொருவரின் கடமையாகின்றது. அந்தக்கடமை உணர்வின் பெயரில் நிகழ்ந்த தேடல்களின் விளைவே இத்தொடர். இது இலங்கையின் வரலாற்று நூல் மட்டும் அல்ல மாறாக தமிழர்களின் போராட்ட வரலாறு தமிழர்களின் போராட்ட வரனாறே இலங்கையின் வரலாற்றோடு பின்னிப்பிணைந்துள்ளது.

எனவே தான் சிங்களவர்களை விட தமிழர்களுக்கு இலங்கையில் எந்தவிதமாக பதிபத்திய உரிமைகள் உண்டு. அவர்களது தொன்மையான வரலாறு தான் என்னவென்று அறிந்தோம். ஆனால் அரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையுமான விமர்சனத்துக்கு வழிவகுக்காது.

இலங்கையில் இப்படி ஒரு நிலைமை எதனால் ஏற்பட்டது. ஏன் ஏற்பட்டது? இலங்கையில் பிரிட்டிசுஷர்களிடம் இருந்து சுதந்திரம் பெறுவதற்கு முன்னும் பின்னுமாக இருந்த நிலைமை என்ன? இன ரீதியாகவும் சட்ட வடிவிலும் தமிழர்கள் எப்படி எல்லாம் நசுக்கப்பட்டார்கள்? என்று கேள்விகளை கேட்டுக்கொண்டு அதற்கான விடையை தேட பல நூல்களை ஆராய முயன்ற போதும் எழிதாக கிடைத்த நூல்களிலும் மற்றும் சிங்களவர்கள் பற்றிய பல நூல்களிலும் சிங்கள புத்த பிக்குகளின் ஒருதலைப்பட்சமான கருதுகோள்களே மிகுதியாக இடம் பெற்றிருக்கின்ற என்பதை அறிய முடிகின்றது. அந்தநூல்களின் ஆசிரியர்கள் மிகுந்த சிரத்தையுடன் சிங்கள மத குருமார்களுக்கே நன்றி தெரிவித்து கொண்டிருக்கின்றனர்.

சிங்கள புத்த குமாரர்களும் வரலாற்றில் தாங்கள் மதமும், இனமும் கலாச்சரமும் பழுதுபடாமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே தகவல் அளிக்கின்றனர் என்பது புலனாய்கிறது. இலங்கையில் நடைபெறும் இனமோதல்கள் பற்றி உலகப் பத்திரிகைகளில் மாறுபட்ட செய்திகள் வெளியானதால் உலக கிறிஸ்தவ ஆலயங்கள் கழகம் சார்பில் அதன் ஆசிரியர் கிளையின் பிரதி நிதிகள் இலங்கை சென்று அங்கு நடைபெறும் கொடுமைகளை நேர்டியாகப் பார்த்து மிக விரிவான அறிக்கையொன்றை (1985 இல்) வெளியிட்டனர்.

இவ்வறிக்கை இத் தொடருக்கு பேருதவியாக அமைந்தது அது போன்றே அமைப்பு வெளியிட்ட அறிக்கையிலிருந்து உண்மைக்கு நெருக்கமான சில செய்திகளை கையாண்டு இருக்கிறேன். நடுநிலை நோக்கோடு சிங்கள அறிஞர்களே ஒத்துக்கொண்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டே இத் தொடர் தொடுக்கப்பட்டுள்ளது.

நண்பர் ஓவியர் சந்தானம் ஒருமுறை சொன்னார் சாலையில் போய்க்கொண்டிருக்கிறோம் வயதான மூதாட்டி வாகனமொன்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபட்டு வீழ்ந்து விடுகிறார் கூட்டத்தை விலக்கிக் கொண்டு மூதாட்டியை பார்க்கின்றோம். அவளைக்கண்டு பரிதாபப்பட்டு நம்மால் முடிந்த உதவியை செய்கிறோம். இது மனித சுபாவம். ஆனால் அடிபட்டு விழுந்த மூதாட்டி நமது தாயாக இருக்கும் பட்சத்தில் நம் உடம்பு ஆடிப்போய்விடும் ஐயோ அம்மா உனக்கா இப்படி என்று சுற்றுப்புறச்சுழல் மறந்து வீரிடுவோம். இது மனித சுபாவம் அது போன்று ஈழமக்கள் படும் துயரை கருத வேண்டும்.

உலகில் ஏதோ ஒரு மூலையில் பெரும்பான்மையான இனமக்கள் சிறுபான்மையானவர்கள் எனும் பெயரில் நடந்தும் பேரில் நடந்தும் கொடுமைகளை கேட்டு வேதனையுறுகிறோம். நம்மால் முடிந்தவரை விமர்சித்துத் தீர்க்கிறோம். மனிதாபிமான உணர்வுள்ளவர்கள் செய்கின்ற வேலை இது. ஆனால், நமது நாட்டுக்கு அண்மையில் சற்று ஏறக்குறைய இருபதாவது மைலில் இலங்கையைப் பூர்வீக நாகக் கொண்ட நம் சகோதரத் தமிழர்கள் தாக்கப்படுகின்றன. பெண்கள் கற்பழிக்கப்படுகின்றன. சிறார்கள் தரையில் வீசி கொல்லப்படுகின்றார்கள். அவர்களின் உடமைகள் சூரையாடப்பட்டு தீக்கரையாகின்றன. பிள்ளைத்தாய்ச்சியினால் அவளது வயிற்றைக் கிழித்து தமிழ் சிசுவா தரையிலடி என்று சிசுவதை செய்யப்படுகிறது. இதை யெல்லாம் பத்திரிகைகளில் படித்தும் வானொலிகளில் கேட்டும் மானமுள்ள தமிழனால் எப்படி சும்மாயிருக்க முடியும்? அதுவும் படைப்புத்துறை சம்மந்தப்பட்ட பத்திரிகையாளன் எங்கோ எதுவோ நடக்கிறது என்றே வாளாவிருந்துவிட முடியுமா?

இந்தப் பிரச்சனையை எல்லாரும் புரிந்து கொள்ளும் அளவுக்கு உண்மை என்னவென்று விளக்கப்படவில்லையா? ஆம் என்றால் இது ஆராய்ச்சிக்குரிய விடயம்தானோ! ஆகவேதான் "ஈழத்தமிழர் போராட்ட வரலாறு" என்ற இத்தொடர் தொகுக்கப்பட்டிருக்கிறது. இலங்கையின் முழுமையான வரலாறாக முதன்முதலாகத் தமிழில் நானறிந்தவரை தொகுக்கப்பட்ட தகவல்களில் தவறு ஏதமிருக்க வாய்ப்பில்லை. மேலும் இத் தொடரின் சில தலைப்புக்களில் வெளியாகும் விடயங்களில் "கூறியது கூறல்" இருக்கலாம் ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பக் கூறினால் மனதில் பதியும்தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத்தீவு, இந்தியாவுக்குத் தென்கிழக்கில் பூமத்திய ரேகைக்கு ஐந்தாவது, ஒன்பதாவது அட்சக்கோடுகள் வரையிலும் சுமார் 79 டிகிரி கிழக்கு தீர்க்க ரேகையிலிருந்து 82 டிகிரி கிழக்குத் தீர்க்க ரேகை வரையிலும் பரவியுள்ளது. இத்தீவின் தென்வட பகுதி தாழ்ந்தும் மத்தியப்பகுதி எட்டாயிரம் அடி வரையில் உயர்ந்த மலைகளைக் கொண்டும் அமைந்திருக்கிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமுள்ள தூரம் உறுதிமிக்க மன இயல்பு கொண்டவர்களால் நீந்தியும், நடத்தும் கடக்க கூடியதாக இருக்கிறது. இத்தீவில் தற்போது சிங்களமொழி பேசும் புத்தர்கள், கிறிஸ்தவர்கள், பெரும்பான்மையாகவும், தமிழ்மொழி பேசும் சைவ இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் முதலியோர் சிறுபான்மையாகவும் வசிக்கிறார்கள். மொத்தத்தில் இருவெறு கலாசார மரபுகொண்ட இனங்களாகச் சிங்கள இனமும், தமிழ் இனமும் இருக்கிறது. பெரும்பான்மை இனம் என்கிற காரணத்தினால் நாட்டை ஆளும் பொறுப்பை சிங்களவர்கள் எடுத்துக் கொண்டனர். பெரும்பாண்மை இனமாகக் கருதப்படுகிற சிங்களவரின் வரலாறு என்பது மகாவமசம் என்னும் புத்த காப்பயத்தை அடிப்படையாக வைத்துப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் இன்றுவரை இருந்து வருகிறது.இந்த மகாவம்சம் செவிவழிவந்த நாட்டுப்புறப் பாடல்களுக்காண பரம்பரைக் கதைகள் முதலியவற்றால் ஒழுங்குபடுத்தப்பட்டது.

சிங்களவர்களின் பெருமையை மிகவும் உயர்த்திக்காட்டவென்றே எழுதப்பட்ட நூல் இது. இந்த மகாவம்சத்தை எழுதியவர் மகாநாமதேரர் என்னும் புத்தபிக்கு ஆவார். ஐந்தாம் நூற்றாண்டில் சிங்கள அரசனாக வாழ்ந்த தாதுசேனனின் (கி.பி. 463 – 479) மாமன் இவர் பாளி மொழியில், தமிழின் சில சொற்களைத் துணைகொண்டு கவிதை வடிவில் எழுதியுள்ளார். மகாநாமதேரரின் காலத்தில் வாழ்ந்த அநுராதபுரத்திலிருந்த புத்தமடத்தின் உயர்குருவான உத்தரபிரவீணா இக்காப்பியம் சிறப்புற அமைய உரிய ஆலொசனைகள் வழங்கியிருக்கிறார்.

மகாநாம தொடங்கி வைத்த இந்த மகாவம்சத்தில் சிங்கள அரசர்களின் பெருமைகளை 13,14,18ஆம் நூற்றாண்டுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வவ்போது வாழ்ந்த கவிஞர்களைக் கொண்டு சேர்ந்திருக்கிறார்களா. பல்வேறு கால கட்டங்களில் வாழ்ந்த கவிஞர்களைக் கொண்டு சேர்ந்திருக்கிறார்கள். பல்வேறு கால கட்டங்களில் வாழ்ந்த சிங்கள மன்னர்களின் வரலாறு இணைக்கப்பட்ட போதிலும் மூலநூலுக்கு ஏற்ற மொழி லாகவத்துடன் பசிறு இல்லாது ஒரே நபரால் எழுதப்பட்டதற்கான தோற்றத்தை இந்நூல் பெறுகிறது. சிங்களர் வரலாறு என மகாவம்சம் கூறுவது என்ன?

இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் வாழ்ந்த மக்களுக்குச் சொந்தமான நாட்டில் ஓர் அரசன் இருந்தான் இவன் கலிங்க நாட்டு அரசனின் மகளை மணந்தான் இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இவளுக்கு உரிய வயது வந்ததும் பூப்பெய்தினாள்.இளவரசி பருவமுற்றதும் சோதிடர்கள் கொண்டு அந்நாளைக் கணக்கிட்டு அவளுக்கு எந்த நாட்டு இளவரசன் கணவனாக அமைவான் கல்வி கேள்விகளில், வீரத்தில் அவனது தேர்ச்சி என்னவாக இருக்கும் என்று கணிக்க முற்பட்டனர். யாருக்கும் ஒழுங்கான விடை கிடைக்கவில்லை. எல்லோருக்கும் ஆச்சரியம் அளிக்கும் வகையில் "இளவரசி மிகுந்த காமவெறி கொண்டவளாயிருப்பாள். மிருகராஜனைக் கூடுவாள்" என்று தலைமைச் சோதிடர் கூறினார். இது ஒழுக்கக் குறைவானதாக, அவமானமடையதக்கதாக இருந்தபோதிலும் மன்னனிடம் உண்மையைச் சொல்வதே முறை என்று அவன் முன் தங்களது கணிப்பை எடுத்து வைத்தார்கள்.

"இளவரசி காம இச்சை மிகுந்து சிங்கத்துடன் உறவுகொள்வாள்" என்ற செய்தி கேட்ட வங்க மன்னன் தன் மகள் எப்படியோ போகட்டும் என்று விதிப்படி விட்டுவிட்டு அமைதியானான். இளவரசியின் நலனில் ஆர்வமற்றவனாக அவளது திருமண ஏற்பாடுகளில் கவனம் செலுத்தாதவனாக இருந்தான். அதுமட்டுமன்றி, அவளின் விருப்பத்திற்கு குறுக்கே நிற்காது அவள் போக்கில் விட்டுப் புறப்பட்டாள் இளவரசி. மகதநாட்டுக்குச் சென்று கொண்டிருந்த நாடோடிக் கும்பலுடன் அவர்கள் அறியாத விதத்தில் சேர்ந்து கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடர்ந்த கானகத்தை நாடோடிக் கும்பல் கடந்து கொண்டிருந்தது. பயங்கரமான சிங்கம் ஒன்று எதிர்ப்பட்டுநாடோடிக் கும்பலைத் தாக்கியது. சிங்கத்திற்குப் பயந்து அனைவரும் நாலாபக்கமும் சிதறி ஓடினார். இளவரசி மட்டும் சிங்கம் சென்ற பாதையில் சென்றாள். தனது எதிர்காலம் பற்றிச்சோதிடர்கள் கூறியது இப்போது அவள் காதில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது. அவர்களின் கூற்றுக்கு ஏற்பவே தான் வந்த நாடோடிக் கும்பலைச் சிங்கம் தாக்கியதை உணர்ந்தாள். தான் கூட வேண்டிய சிங்கம் இதுவே என்றும் நினைத்தாள். இந்த உறுதியுடன் தான் சிங்கத்தின் பாதச்சுவட்டைப் பின்பற்றி அதன் குகையை நோக்கி நடக்கலானாள். வழியில் சிங்கமோ உண்ட மயக்கத்தில் இளைப்பாறிக் கொண்டிருந்தது. இளவரசி சிங்கத்தின் எதிரே வந்ததும் அது காமம் மிகக்கொண்டு வாலை ஆட்டியது. இளவரசி சிறிதும் பயப்படாமல் அதன் அருகே சென்று உடலைத் தட்டிக் கொடுத்தாள். தன்னை உடன் அழைத்துச் செல்லுமாறும் வேண்டினாள்.

ஏற்கனவே இளவரசியைப் பாரத்த நேரத்திலேயே காமம் மிகுந்திருந்த சிங்கம் அவளைத் தன் முதுகுமீது அமர்த்திக் கொண்டு தனது குகையை நோக்கிச் சென்றது. குகையை வந்தடைந்ததும் இரவு பகல் பாராது சிங்கமும் இளவரசியும் கூடி மகிழ்ந்தார்கள். சிங்கத்தினது கூடலின் விளைவாக இளவரசி கருவுற்றாள். ஆண் குழந்தைக்கு சிங்கபாகு என்றும், பெண் குழந்தைக்கு சிங்க வல்லி என்றும் பெயரிட்டாள். மகன் சிங்கபாகுவின் கைகளும் பாதங்களும் சிங்கத்தினுடையதைப் போல அமைந்திருந்தன.

சிங்கபாகுவிற்கு பதினாறு வயதான போது தன் மனதிலெழுந்த சந்தேகம் பற்றித் தாயிடம் கேட்டான். அவன் கேட்டதும் இதுதான். "அம்மா நீயும் அப்பாவும் பெருத்த வித்தியாசத்துடன் இருக்கிறீர்களே. இதுவும் எப்படி நிகழ்ந்தது?" இளவரசி அனைத்தையும் ஒன்றுவிடாமல் சொன்னாள் சிங்கபாகு "நாம் குகையை விட்டு ஏன் போய்விடக்கூடாது?" என்றான். "போய்விடலாம் எனக்கும் அந்த எண்ணம் உண்டு. ஆனால் இந்தக் குகையின் வாயிலை உன் தந்தை பலமான பாறையினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடி இருக்கிறாரே!" என்றாள். இது கேட்டதும் சிங்கபாகு தன் பலம் முழுவதும் செலுத்தி குகையின் வாயிலை அடைத்துக் கொண்டிருக்கும் கல்லை நகர்த்தி அதைத் தன் முதகில் ஐம்பது யோசனை தூரம் சென்று எறிந்துவிட்டு வந்தான்.

பிறகு தன் தாயை ஒரு தோளிலும் தங்கையை மற்றொரு தோளிலுமாகச் சுமந்தவாறு வெளியே வந்தான். இளவரசியின் யோசனைப்படி இலைத்தழைகளை ஆடையாகத் தரித்துக்கொண்டு காட்டை விட்டு வெளியே வந்தனர். ஒரு மரத்தினடியில் படைவீரன் ஒருவன் இளைப்பாறிக்கொண்டிருந்தான். அவன் இளவரசியின் மாமன் மகனும் வங்க அரசனின் படையின் ஒரு தலைவனாகவும் விளங்குபவன் என்பதை இளவரசி கண்டு கொண்டாள்.

சத்தம் கேட்டு கண்விழித்த படைத்தலைவன் இவர்களைப் பார்த்து யாரென்று விசாரித்தான். இளவரசி தனது வரலாற்றை அவனிடம் கூறினாள். படைத்தலைவன் மிகுந்த மகிழ்ச்சியுற்று இளவரசியையும் அவளது பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு சென்றான். பிறையறிவித்து அவளை தனது மனைவியாக்கிக் கொண்டதாகவும் அறிவித்தான்.

இளவரசியும் தனது முன்னாள் கணவனான சிங்கத்தை மறந்து தனது புதிய கணவருடன் வாழ்ந்து வந்தாள். காட்டில் இரை தேடப் போயிருந்த சிங்கம் குகைக்கு வந்ததும் தனது பிள்ளைகளையும் மனைவியையும் காணாமல் எல்லையோரக் கிராமங்களுக்குச் சென்று கோபத்தில் போவோர் வருவோர் எல்லோரையும் தாக்கியது.

சிங்கம் எங்களைத் தாக்கியது. எங்களை அதனிடமிருந்து காக்க வேண்டும் என்று குடிமக்கள் மன்னனிடம் முறையிட்டனர். தன்னிடமுள்ளவர்களில் சிங்கத்தின் கொட்டத்தை அடக்கும் நபர் யார் என்று கண்டுபிடிக்க முடியாத நிலை பரிசுத் தொகையை யானை முதுகில் வைத்து "சிங்கத்தைப் பிடித்து சிங்கத்தைக் கொல்பவர்கள் இந்தத் தொகையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையலாம் என்று முரசு கொட்ட வைத்தான் அரசன்.

படை வீரர்களிலும் பொதுமக்களிலும் யாரும் முன் வராத நிலையில் பரிசுத் தொகையைப் பன்மடங்கு கூட்டினான். இந்த நிலையில் சிங்கபாகு தானே சிங்கத்தின் கொட்டத்தை அடக்குவதாக அறிவித்தான். அத்துடன் தாய் தடுத்தும் கேளாது யானை முதுகின் மேலுள்ள பரிசுத்தொகையை அரசன் முன்னிலையில் கொண்டு போய் நிறுத்தினர். "அரசனோ சிங்கத்தைக் கொன்றால் என் ராஜ்ஜியத்தையே தரச்சித்தமாயிருக்கிறேன்" என்றான். சிங்கபாகு சிங்கத்தைத் தன் தந்தையென்றும் பாராமல் அதனை வீழ்த்திக் காட்டுப்பகுதிக்குச் சென்றான். தூரத்தில் சிங்கபாகுவைக் கண்டதுமே தனது மைந்தன் வந்துவிட்டான் என்ற மகிழ்ச்சியில் நெருங்கி வந்தது. சிங்கபாகுவோ தான் எடுத்துக்கொண்ட காரியத்தை நிறைவேற்றும் எண்ணத்தில் அம்பு எய்து சிங்கத்தைக் கொல்ல முயன்றான். இரண்டு முறை முயன்றும் அம்பு சரியாக சிங்கம் மீது தைக்கவில்லை. மூன்றாவது முறையாக சிங்கபாகு எய்த அம்பு சிங்கத்தை வீழ்த்தியது. கொய்த தலையுடன் சிங்கபாகு அரன்மனையை நோக்கி வந்தான்.

பொதுமக்கள் அவனது வீரத்தைப் பாராட்டிப் புகழ்ந்தார்கள். ராஜ்ஜியத்தைத் தருவேன் என்று கூறிய மன்னன் உயிருடன் இல்லை. இருப்பினும் இளவரசி மூலம் சிங்கபாகு மன்னனின் பேரன் தான் என்பதைப் பொதுமக்களும், மந்திரிமார்களும், அறிந்த காரணத்தால் சிங்கபாகுவை அரசனாக்க முயன்றார்கள். எல்லோருடைய விருப்பத்திற்கிணங்க அரசனாகப் பதவி ஏற்றுக்கொண்டு பின் தனது தாயாரையும் அவளது புதிய கணவரையும் அழைத்து ராஜ்ஜியத்தை அவர்கள் வசம் ஒப்படைத்தான். தனது தங்கையை அழைத்துக் கொண்டு தான் வாழ்ந்த காட்டுப் பகுதிக்குச் சென்றான். அங்கே தனக்கென ஒரு நகரை நிர்மாணித்துக் கொண்டான். தங்கையை (சிங்கவல்லியை) தனது மனைவி ஆக்கிக் கொண்டான் இவர்களுக்குப் பதினாறு முறை இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. இந்த முப்பத்திரண்டு குழந்தைகளில் மூத்தவனுக்கு விஜயன் என்றும் இரண்டாமனுக்கு சுமிதன் என்றும் பெயர்களிட்டார்கள். உரிய வயது வந்ததும் விஜயனுக்கு இளவரசுப் பட்டமும் சூட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயனின் நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு மகனைக்கொன்று விடுங்கள் இல்லையெனில் அவனையும் அவனது தோழர்களையும் நாடு கடத்துங்கள் என்று முறையிட்டனர். இலங்கைத் தமிழர் போராட்டம் குறித்தும், ஈழம் குறித்தும் அங்குள்ள மக்களின் எதிர்காலம் குறித்தும் ஆதியோடந்தமாக கட்டுரைத் தொடர் வெளியிட வேண்டும் என்கிற எண்ணம் கடந்த ஆறு மாதமாகவே "தினமணி" ஆசிரியர் குழுவுக்கு இருந்து வருகிறது. இப்படி ஒரு தொடரை எழுதுவதற்கு தனக்கு எந்தவித விருப்பு வெறுப்போ, அரசியல் மூலமோ இல்லாத ஒரு பத்திரிகையாளர்தான் பொருத்தமாக இருப்பார் என்பதும் தமது தேர்ந்த முடிவு என தினமணி குறிப்பிட்டிருக்கிறது.

அதற்கு 1985 ஆம் ஆண்டிலேயே "இலங்கைத் தமிழர் போராட்ட வரலாறு" என்ற புத்தகத்தை வெளியிட்ட மூத்த பத்திரிகையாளர் பார்வை சந்திரனைவிட பொருத்தமான ஒருவர் இருக்க முடியாது என்பது தமது ஆசிரியர் குழுவின் ஒருமித்த கருத்து என்கிறது தினமணி. இனி பாவை சந்திரன் தொடர்கிறார்.

## தமிழர்களின் வீரமுனை வரலாறு

அம்பாறை மாவட்டத்தின் வீரமுனை சிந்தாயத்திரைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா 28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. இந்த வேளையில் வீரமுனை சிந்தாயத்திரைப்பிள்ளையார் ஆலயத்தின் வரலாறு அந்த ஆலயத்தில் இருந்து தோற்றம் பெற்ற கிழக்கு மாகாணத்தின் தமிழர்களின் பாரம்பரியங்கள் தொடர்பில் சற்றுபார்ப்பது பொருத்தமாகவிருக்கும்.

உக்கிரசிங்க மன்னனின் மகனான வாலசிங்க மன்னன் கண்டியை தலைநகராகக் கொண்டு செங்கோல் ஆட்சி செய்து வந்தான் என்பது வரலாறு. இவ்வாறான தமிழ் மணமும் செல்வச் செழிப்பும் நிறைந்த வாலசிங்கனின் அரண்மனைக்கு சோழ நாட்டினைச் சேர்ந்த இரண்டு கண்களும் குருடான கவிவீரராகவன் என்னும் யாழ்பாடி என

அழைக்கப்படுகின்ற பாணன் ஒருவன் வருகை தந்தான். அக்காலத்திலே சிறப்பு தேர்ச்சியினைப் பெற்ற கலைஞர்கள் தங்களின் கலை ஊடாக மன்னர்களைப் புகழ்ந்து கொள்வது வழக்கமாயிருந்தது. அந்த வகையில் வந்த பாணனும் சிங்கை அரசன் வாலசிங்கன் பெயரில் பிரபந்தம் பாடியவாறு யாழ் வாசித்துக் காட்டினான்.

பட்டம் பரிசில்கள் வழங்குவதில் பெயர் போன வாலசிங்கன் யாழ்பாடியின் திறமைக்கு பரிசாக ஏதாவது வழங்க வேண்டும் என நினைத்து இலங்கையின் வடதிசையிலே உள்ள மணல்திடல் என்னும் இடம் அந்த யாழ்பாடியின் பெயரால் இன்று யாழ்ப்பாணம் என அழைக்கப்படுகின்றது. சோழ மன்னனான குமாராங்குசனின் மகளான சீர்பாததேவியின் ஓவியத்தினை பாணன் வாலசிங்க மன்னனுக்கு பரிசாக வழங்கிச் சென்றிருந்தான். வாலசிங்க மன்னவனுடைய உள்ளத்திலே நிரந்தரமாக கூடுகட்டி குடிபுகுந்த அந்த அழகி இளவரசி சீர்பாததேவிதான் என்ற உண்மையினை வாலசிங்கனின் தலைமை அமைச்சர் அவனுக்குக் கூறினார்.

சீர்பாததேவியின் தேசமான சோழ நாட்டிலே சீர்பாததேவி வாலசிங்கன் திருமணம் இடம்பெற்று சில நாட்கள் அவர்கள் இன்பமாக கழித்த போதிலும் அவர்கள் தங்களின் திருமண வாழ்க்கையினை முழுமையாக அங்கு கழிக்க முடியாது கணவன் வீட்டில் மனைவி சென்று வாழ வேண்டிய தமிழர் பண்பாடும், சிங்கை நாட்டு மன்னவன் என்ற பொறுப்பில் வாலசிங்கன் இருப்பதனாலும் அவர்கள் இருவரும் சிங்கை அரண்மனைக்கு திரும்புவது அவசியமான ஒன்றாகக் காணப்பட்டது அங்கிருந்து கடல் வழியாகப் புறப்பட்டனர்.

தங்கு தடையின்றி கப்பல் வட இலங்கையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இவ்வாறு வட இலங்கையின் சிங்கை நகரினை கப்பல் அண்மித்த வேளையிலே சீர்பாததேவி தன் அன்பு மன்னவனிடம் ஒரு வேண்டுகோளினை முன்வைத்தாள். அதாவது சிங்கை அரசனின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசமனைத்தினையும் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையிட வேண்டுமென்பதே அந்த வேண்டுகோள். தன் மனைவி தன்னிடம் கேட்கின்ற அந்த வேண்டுகோளினை ஏற்றுக் கொண்ட மன்னவன் இளவரசியின் விருப்பத்திற்கிணங்க தன் ஆட்சிக்குட்பட்ட பிரதேசமனைத்தினையும் பார்வையிடுவதற்காக கப்பலை கிழக்குக் கரையோரமாக திருப்புமாறு கட்டளை பிறப்பித்தான் மன்னவனின் கட்டளைக்கிணங்க கப்பலும் கிழக்குக் கரையோரமாக நகர்ந்தது.

இவ்வாறு கிழக்கின் எழிலினை ரசித்தவண்ணம் உல்லாசமாக பயணித்துக் கொண்டிருந்த அவர்கள் கிழக்கின் முக்கிய இடமாக விளங்குகின்ற திருகோணமலை கடற்பிரதேசத்திலே பயணித்துக் கொண்டிருந்த போது திருக்கோணேசர் பெருமானின் ஆலயம் அவர்களின் கண்களுக்குப் புலப்பட்டது. திருக்கோணேசர் பெருமானின் ஆலயத்திற்கு கப்பலில் இருந்த அனைவரும் கோணேசப் பெருமானை மனமுருக வழிபட்டனர். இவ்வேளையில் கப்பலில் கோளாறு ஏற்பட்டது போல் கப்பல் ஆலயத்திற்கு முன்பாக தடைப்பட்டு நின்றது. கப்பலின் இவ்வாறான நிலைமை அதிலிருந்த அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியது.

கோணேசப் பெருமானை மனதிலே நினைத்துக் கொண்டிருந்த வேளையில் இவ்வாறு கப்பல் தடைப்பட்டிருப்பது இறைவனின் செயலன்றி வேறில்லை என நினைத்த இளவரசியார் கப்பலில் இருந்த தன்னுடன் வந்தவர்களிடம் கப்பல் நின்றமைக்கான காரணத்தினைக் கண்டறியுமாறு பணித்தாள். அவ்வேளையில் அங்கிருந்தவர்களில் சிந்தன் என்பவன் அதனை அறியும் பொருட்டு நீரிலே இறங்கி கப்பலின் அடியில் சென்று கப்பல் ஏதாவது பாறையில் முட்டி இருக்கின்றதா? என்பதனை ஆராய்ந்தான். எனினும் கப்பல் அப்படியான எந்த ஒரு பொருளிலும் முட்டி மோதவில்லை. சாதாரணமான நிலையிலேயே காணப்பட்டது.

அப்போது சிந்தனுடைய கண்களில் விக்கிரகம் ஒன்று தென்பட்டது. அதனை அருகே சென்று பார்த்தபோது அது ஒரு விநாயகர் விக்கிரகம் என்பது சிந்தனுக்கு தெளிவாகியது. எனவே இவ்விடயத்தினை அவன் கப்பிலே உள்ளவர்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை அறிந்த அரசியார் மீண்டும் ஒரு முறை இறைவனை தியானித்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் அவ் விக்கிரகத்தினை மேலே கொண்டு வருமாறு பணித்தான். அரசியாரின் வேண்டுகோளுற்கிணங்க சிந்தனும் அவ்விக்கிரகத்தினை நீரில் இருந்து வெளியேற்றி கப்பலிலே சேர்த்தான்.

அதனைக்கண்ட மன்னன் அரசியார் உட்பட அனைவரும் வியப்புற்றனர். எவ்வாறு இவ் விக்கிரகம் கடலில் வந்து சேர்ந்தது என பலவாறு வினாவினர். எது எவ்வாறாயினும் இறைவன் செயலாகத்தான் இவ் விக்கிரகம் தமக்குக் கிடைத்ததாக நினைத்த சீர்பாததேவியார் அவ் விக்கிரகத்தின் பால் ஒரு நேர்த்திக்கடனை முன்வைத்தார். அதாவது தாங்கள் பயணம் செய்யும் இந்தக் கப்பல் எந்த இடத்தில் தரித்து நிற்கின்றதோ அவ்விடத்தில் இவ் விக்கிரகத்தினை வைத்து பிரமாண்டமான ஒரு ஆலயத்தினை அமைப்பதாகக் கூறி கப்பலினைத் தொடர்ந்து செலுத்துமாறு கூறினார். அதன்படி கப்பலும் தொடர்ந்து பயணத்தினை ஆரம்பித்தது. பயணத்தினை தொடர்ந்து கப்பலானது மட்டக்களப்பு வாவியின் தெற்கு திசைநோக்கிப் பயணித்து வாவியின் அந்தமான வீரர்முனை என்ற இடத்தினை கரை தட்டியது. இந்த வீரர்முனை ஆதிகால ஆட்சி வரலாற்றில் முக்கியமான ஒரு இடமாகக் காணப்பட்டது. அதாவது கி.மு.237 தொடக்கம் கி.மு.215 வரையான காலப்பகுதியில் கூர்த்திகன் என்னும் தமிழ் மன்னன் தன் சகோதரனான சேனன் என்பவனுடன் இணைந்து அக்காலப்பகுதியில் அநுராதபுரத்தினை ஆட்சி செய்த "சூரதீசன்" என்ற மன்னனை போரில் வெற்றி கொண்டு அநுராதபுரத்தை ஆட்சி செய்தான் என்பதனை மகாவம்சத்தினூடாக அறிய முடிகின்றது.

கூர்த்திகன் கி.மு.3ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு நகரத்தை அமைத்தான் எனவும் வீரர்முனை என அழைக்கப்படுகின்ற இவ்விடத்தில் காவல் அரண்களை அமைத்ததாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறு போர் வீரர்கள் காவல் அரணில் அமர்த்தப்பட்டதனால் வீரமுனை என பெயர் வழங்கப்பட்டது என்பது வரலாற்று உண்மை இவ்வாறான வரலாற்று சிறப்புகள் வாய்க்கப்பெற்ற வீரர்முனையிலே சீர்பாததேவியும் அவளுடைய குழுவினரும் வந்த கப்பல் கரை தட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வீரர்முனையிலே கப்பல்கரை தட்டியது. இவ்வாறு வீரர்முனையிலே கப்பல் கரை தட்டி நின்றதும் சீர்பாததேவி மிகவும் மனமகிழ்ச்சியடைந்தார் காரணம் வீரமுனையின் இயற்கை அழகும் வளம் பொருந்திய அமைவிடமும் ஆகும். மக்கள் வாழ்கின்ற பிரதேசத்திலே ஆலயம் அமைக்கப்படுகின்ற போது தான் அவ்வாலயத்தினை பராமரித்து அபிவிருத்தி செய்ய முடியும். எனவே வீரர்முனை என்கின்ற இடமானது மக்கள் குடியிருப்புக்களை அமைப்பதற்கேற்ற அனைத்து விதமான வளங்களையும் வசதி வாய்ப்புக்களையும் கொண்டதொரு இடமாகக் காணப்பட்டது.

இவ்வாறான இடத்தில் தங்களுக்குக் கிடைத்த விநாயகர் விக்கிரகத்தினை வைத்து அழகியதொரு ஆலயத்தினை அமைத்து இவ்விடத்தின் அழகினை மேலும் செழிப்படையச் செய்யும் நோக்கோடு கப்பலில் வந்தவர்கள் அனைவரும் தங்குவதற்காக அவ்விடத்தில் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. வீரர்முனையிலே ஆலயம் அமைக்கும் பணி துரிதமாக ஆரம்பிக்கப்பட்டது. எனினும் இக்காலப்பகுதியில் வீரர்முனையிலே எவரும் குடியிருக்காமையினாலும் கப்பலில் வந்தவர்கள் ஆலயம் அமைப்பதற்குப் போதாமையினாலும் வாலசிங்கன் வீரர்முனையை அண்மித்த பகுதிகளில் வாழ்ந்தவர்களை ஆலயம் அமைக்கும் பணியில் ஈடுபடுத்தினான்.

சிறந்த தேர்ச்சி பெற்ற கட்டிக்கலைஞர்களினதும் மக்களினதும் முழுமூச்சான செயற்பாட்டினால் அழகியதும் சிறப்புமிக்கதுமான ஆலயம் அமைக்கப்பட்டது. சீபாததேவியின் நேர்கடன் நிறைடைகின்ற தருணம் நெருங்கியதைத் தொடர்ந்து அரசியாரும் மன்னனும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். ஆலயத்தின் நிர்மாண வேலைகள் யாவும் நிறைவு பெற்ற நிலையில் அடுத்த கட்டச் செயற்பாடுகளான கிரியைகள் செய்யும் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

அரசியாரின் விருப்பின்படி சோழநாட்டு மக்கள் அனைவரும் வீரமுனையிலே அனைவரும் வீரமுனையிலே மக்கள் அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமுனையிலே குடியமர்ந்தப்பட்டனர். அவர்களுக்கு நிலம் சொத்துக்கள் என்பன வழங்கப்பட்டது. அது மாத்திரமின்றி ஆலயத்திலே பூசை வழிபாடுகள் செய்து வருவதற்காகவும் அதனைப் பராமரிப்பதற்காகவும் அவ்வாலயத்தினை அண்டி வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை வளமானதாக அமையவும் நெற்காணிகளையும் வழங்கி அவர்கள் அனைவரையும் அழைத்து வாலசிங்க மன்னன் அவர்களை நோக்கி இதில் அரச குலத்தவர்கள் ,அந்தணர்கள், செட்டிமார், வேளாளர் போன்ற அனைத்து குலத்தவர்களும் ஒன்றுபட்டு நிற்கின்றீர்கள். நீங்கள் அனைவரும் உங்கள் இளவரசியின் பெயரால் சீர்பாத குலம் என ஒரு குலமாக வகுக்கின்றேன்.

இன்று முதல் நீங்கள் அனைவரும் அரசகுலத்தவர் அந்தணர், வளவேளாளர், வணிகர் என்பதிலிருந்து விலகி சீர்பாதகுலத்தவர் என்ற பெருமையுடன் எக்காலத்திலும் உங்களுக்குள் வேற்றுமை இல்லாதவர்களாய் ஒற்றுமையாக வாழ்வதோடு சிந்து யாத்திரைப் பிள்ளையாருக்காக இது முதலாவதாக வீரர்முனையிலே நிரந்தரமாக வாழ ஆரம்பிக்கின்ற நீங்கள் சாதாரணமானவர்கள் அன்று சோழ இளவரசியான சீர்பாத தேவியின் உறவினர்கள் அந்த வகையில் நீங்கள் அரசகுல கௌரவத்தினை உடையவர்கள். இதன்படியாக உங்களுக்கு அவிந்தமலர், செங்கோல், கொடி என்பன பொறிக்கப்பட்ட அரசகுல விருதினை வழங்கி உங்களை ஈழத்திலே உயர்வானவர்கள் என்ற மதிப்பினையும் அளிக்கின்றேன் என்று கூறினார். இவ்வாறான சிறப்புக்களுடன், பெருமைகளுடன் சீர்பாதகுல மக்கள் வீரர்முனையிலே தங்கள் வாழ்க்கைப் பயணத்தினை சிந்து யாத்திரைப்பிள்ளையாரின் அருள் துணையுடன் தொடங்கினர். இவர்கள் தங்களுக்கென்று சிறப்பான கலாசாரம், பண்பாடு போன்றவற்றினை தனித்துவமானதாக்கிக் கொண்டு அவற்றின் வழி உணர்ந்த பண்புமிக்க மக்கள் சமுதாயமாக உருவாக்கம் பெற்றனர்.

இவ்வாறான சீர்பாதரின் வரலாற்று உண்மைகளை சீர்பாதகுலச் செப்பேடுகளான வீரமுனைச் செப்பேடு, திருகோணமலைச் செப்பேடு, திருக்கோவில் செப்பேடு, கொக்கட்டிச்சோலைச் செப்பேடு போன்றவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றது. இவ்வாறான நிலையில் வீரமுனையில் 1990இல் ஏற்பட்ட இனக்கலவரம் தமிழர் வரலாற்றில் மிக முக்கியமானது. 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற இனப்பிரச்சினையின் போதும் மீண்டும் ஒரு முறை வீரமுனையில் பாரிய அழிவை ஏற்படுத்தி அதன் மூலம் வீரமுனைக் கிராமத்தினை அடியோடு அழிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 1990.08.12 ஆம் திகதி காலை 9.00 மணியளவில் சீர்பாத மக்களின் சிகரமாக விளங்குகின்ற ஸ்ரீ சிந்தாயத்திரைப் பிள்ளையார் ஆலயத்தில் கத்தி, வாள் போன்ற ஆயுதங்களுடன் நுழைந்து ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்த அப்பாவி பொதுமக்கள் மீது தற்கொலை வேட்டையினை அரங்கேற்றினர்.

இதன்போது சிறுவர்கள், பெண்கள் இளைஞர்கள், முதியோர்கள் என 90 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். எனினும் எத்தனை இன்னல்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு தம் பாரம்பரியத்தை பேணுமுகமாக இன்றுவரை வீரமுனை சீர்பாத குல மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களின் தைரியமும், மன உறுதியும் பூமி காலம் வரை அவர்களை வீரமுனையிலே வாழ வைக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த ஆலயத்தின் சிறப்பம்சமாக இடம்பெறும் திருவிழாக்காலங்களில் உலகெங்கும் பரந்துவாழும் சீர்பாத மக்கள் கலந்துகொண்டு சிறப்பிப்பதாகும்.

இந்தக் காலங்களில் அனைவரும் இந்த ஆலயத்தில் ஒன்று கூடி தாங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வர். பத்து தினங்கள் இடம்பெறும் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் 5ம் திகதி வேட்டைத்திருவிழாவும் அன்று இரவு சப்பிரத்திருவிழாவும் இடம்பெற்று மறுதினம் 6ம் திகதி தேர்த்திருவிழா வெகு விமர்சையாக இடம்பெறுகிறது. இந்த தேர்த்திருவிழாவின் போது பெருமளவான ஆண்கள், பெண்கள் விநாயகப் பெருமானின் தேரை இழுத்துச் செல்வது பார்ப்போரது சிந்தனையைக் குளிரச்செய்கின்றது. மறுதினம் 7ஆம் திகதி இடம்பெறும் தீர்த்த உற்சவத்துன் வருடாந்த உற்சவம் இனிது நிறைவுபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாக்கங்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு 2018

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
மற்றும்
கலாசார அலுவல்கள் திணைக்களத்தின்
இலக்கிய மற்றும் வெளியீட்டு பிரிவினால்

நூலாக்கத்தில் ஈடுபாடுள்ள எழுத்தாளர்களின்

ஆக்கத்திறமை மற்றும் மொழியாற்றலை

மேம்படுத்தும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்பட்ட

"எழுத்தாக்கங்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு" இல்

பங்குபற்றியமைக்காக

இரா. சுப்பிரமணியம் ............ அவர்களுக்கு

2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 04 ஆந் திகதி

இச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

..........................................

அனூஷா கோகுல பர்னாந்து
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின்
## பிற நூல்கள்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைத் தீவில் தனித்துவமான மொழி, கலை, கலாசாரம், சொந்த ஆட்சி, அதிகாரம் கொண்டிருந்த காலத்தில் இலங்கை வேந்தன் இராவனண் தனிச் சிறப்பாக ஆட்சி செய்த மன்னனாவான். கலாபூசணம் இரா.சுப்பிரமணியம் மன்னன் இராவணனுடைய வரலாற்று நூலை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைவதோடு அவரைப் பாராட்டுகிறேன்.

இலங்கை வேந்தன் இராவணன் ஈழத்திரு நாட்டில் பல சிவாலயங்களை உருவாக்கி மக்களை வழிபடச்செய்தார் என்பது வரலாறு. எமது ஈழ மண் எமக்கென அமைந்த பாரம்பரிய பிரதேசம் என்பதை உணர்வு பூர்வமான உண்மையாக விளங்கிக்கொள்ள வேண்டும். தமிழ்ப்பற்றும், தமிழ் தேசிய உணர்வும் உள்ள ஒரு இனமாக இத்தீவில் நாம் வாழ வேண்டும் என்பதே எனது அவா.

இந்நூல் சிறப்பாக வெளிவந்து தமிழ் கூறும் நல்லுலகெங்கும் வாழும் தமிழ் நெஞ்சங்களின் கரங்களில் தவழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துரை வழங்குவதைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

**மாண்புமிகு. எஸ்.என்.ஜி.நாதன்**
சமாதான நீதவான்
முன்னாள் நகரபிதா - வவுனியா
ஓய்வு நிலை காவற்துறை அதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org